
கல்கி
25 வது
ஆண்டு மலர்
KALKI
1·8·1965
35 காசு


ASP/GM/K-10 K TAM
ஆரா
Kolynos
கோலினூஸ்
புதியது-தூயது...
கோலினூஸின் சுவை :
காலையில் புத்துணர்ச்சியூட்டும் இனிய சுவை.
கோலினூஸின் நுரை :
துலக்குவதை எளிதாக்கும், பூரணமாகத் தூய்மைப்படுத்தும்
கோலினூஸ் கொடுக்கும் அந்த
இனிய சுவாசத்தை நீங்கள் விரும்புவீர்கள்,
மற்றவர்களும் விரும்புவார்கள்.
அந்த ஐந்தாவது மங்கைக்கு ஒரு அருமையான யோசனை: கோலினூஸ் உபயோகித்து மற்றவர்களைப்போல் புன்னகை புரியுங்கள். கோலினூஸ் டென்டல் கிரீம் மூலம் உங்கள் பற்களை நாள்தோறும் காலையிலும் இரவிலும் துலக்குங்கள். மற்றவர்கள் மத்தியில் நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோடும் உலவ உதவுவது கோலினூஸ்.
களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினூஸ் தரும் புன்னகை

கல்கி

பொருளடக்கம்


நண்பர்களே! எனக்குக் கொடுத்த நேரம் ஆகி விட்டது. இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் சிறுகதை எப்படி எழுத வேண்டுமென்பதைப் பற்றி என் அபிப்பிராயத்தை உங்களுக்குச் சொல்லி யிருப்பேன். ஆனால் அதைச் சொல்லாததினாலே உங்களுக்கு அதிக நஷ்டமில்லை. ஏனெனில் கதை எழுதுவது ஒருவரிடம் கற்றுக் கொண்டு நடக்கிற காரியமில்லை. கதை சொல்லும் ஆசை இருந்தால் அது எப்படியாவது பீறிக் கொண்டு வந்து விடும்!

22-6-1938 வானொலியில் கல்கி

விசுவாவசு ஆடி 17 — ஆகஸ்ட் 1

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சிறுகதைச் சிறப்பு மலர்


கோலா!
ஆசிரியரே, பெஞ்சமேல் ஏறுங்கள்; இல்லாவிட்டால் வகுப்பை விட்டு வெளியேறி விடுவேன்.
இந்தத் தடியால் நாயை அடிக்க இன்னும் ஏன் தயக்கம்?
இந்தியா-பாகிஸ்தான்-



மலர் 25 ★ இதழ் 1

காலம் தாழ்ந்துவிடவில்லை!

கொடுங்கோல் ஆட்சி என்று சரித்திர ஆசிரியர்கள் வருணிக்கிற எந்தப் பழைய ஆட்சியிலும் கண்டிராத அளவுக்கு மக்களின்மீது வரிச்சுமை விழுந்திருப்பதுதான் பதினோராண்டுக் காங்கிரஸ் சோஷலிஸத்தில் நாடு கண்டுள்ள அற்புதம். வோட்டு சம்பாதிக்கும் பொருட்டு, மக்களுக்கு நன்மை செய்வதாகச் சொல்லிக் கொண்டு காங்கிரஸ் போட்டு வருகின்ற 'திட்டங்களின் பலனை, அதே மக்களின்மீது விதிக்கின்ற வரிகள் விழுங்கி வருகின்றன. முன்னாட்களில் நெருக்கடி சமயங்களில் மன்னர்கள் தங்களது ஏராளமான சொந்தச் சொத்தை மக்களுக்கு வாரி வழங்குவதுண்டு. இத்தகைய நிதியம் இக்கால ஆட்சியாளருக்குக் கிடையாது. மக்களுக்குச் செய்கிற நன்மைகளுக்காகவும், இத்திட்டங்களை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்ட உத்தியோக வர்க்கப் பட்டாளத்துக்காகவும் சர்க்கார் செலவு செய்யும் தொகை அவ்வளவையும் மக்களிடமிருந்தேதான் பெற வேண்டும். இதில் விரயமாவது எவ்வளவோ! எஞ்சியதே மக்களின் நலனுக்கு உண்மையில் பயனாகிறது.

இந்த நிலையில்தான் நடைமுறையில் சிறிதும் அக்கறை செலுத்தாமல் நான்காம் திட்டம் வகுத்து அதற்காக மேலும் வரிகள் விதிக்க எண்ணியிருக்கின்றனர். மூன்றாம் திட்டத்தின் விளைவாக 'அந்நியச் செலாவணி நெருக்கடி' என்கிற இன்னல்வன்னி ஏற்பட்டுள்ளதை நிதி மந்திரி டி. டி. கே. அவர்களே ஒப்புக்கொண்ட பின், இப்போது அதைவிடப் பெரிய நான்காம் திட்டத்தை நடத்தப் பார்க்கிறார்கள். இதற்காக, இப்போதுள்ள வரிகளுக்கும் கூடுதலாக மூவாயிரம் கோடி ரூபாய்களுக்குப் புது வரிகள் விதிக்க வேண்டியிருக்கும் எனத் தெரிகிறது.

தற்போதே நம் நாட்டில் மூலதனம் உள்ளவர்கள் யாவரும் உற்பத்தியில் உற்சாகம் இழந்து போகுமளவுக்குப் பெரும் வரிச் சுமையைத் தாங்கி வருகிறார்கள். தங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகளைப் பொருட்களை வாங்கும் மக்கள் மீது தள்ளினால்தான் பிழைக்க முடியும் என்ற நிலைமை உற்பத்தியாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இவர்கள் மீது சர்க்கார் விதிக்கும் நேரடி வரிகள் யாவும், இறுதியில் 'விலை உயர்வு' என்ற பெயரில் மக்களின் மீதே மறைமுக வரிகளாக விழுகின்றன. மேலும், நேரடி வரிகளின் வரம்பை அடைந்தாகி விட்டது என்றும், நான்காம் திட்டத்துக்குத் தேவைப்படும் மூவாயிரம் கோடி ரூபாயை மறைமுக வரிகளின் மூலம்தான் பொது மக்களிடமிருந்தே திரட்ட வேண்டியிருக்கும் என்றும் 'ஹிந்து' முதலிய பத்திரிகைகள் எடுத்துக்காட்டுகின்றன.

அன்றாட வாழ்க்கைக்கே அல்லல்படும் ஏழை மக்களிடமிருந்து மறைமுக வரிகள் வசூல் செய்து, அதைக் கொண்டு என்றோ வரப் போகும் தலைமுறைக்கு நன்மை செய்வதாகச் சொல்லப்படும் திட்டங்களை நிறைவேற்றுவது அக்கிரமம். பணம் படைத்தவர்களின்மீது அதிகபட்ச வரிகளை விதித்தபின்னும், அந்நியக் கடன்கள் 'பயங்கரமான உருவம் எடுத்துவிட்டதாக' மத்திய மந்திரி ஒருவரே கூறியபின்னும், ரூபாயின் மதிப்பைக் குறைத்து ஏழைகளின் பொருளைத் திருட்டுத்தனமாகக் கவருவது அநீதி. விலைவாசிகள் உயருவதற்குக் காரணம் பணத்தின் மதிப்புக் குறைவதே. பணத்தின் மதிப்புக்

தமிழ்த்திரு நாடுதன்னைப்
பெற்ற
தாயென்று கும்பிடடி —
பாப்பா
— பாரதியார்

குறைவதற்குக் காரணம் சர்க்கார் தனது பயனற்ற படாடோபத் திட்டங்களுக்காக ஏராளமான செலவு செய்வதுதான். விலைவாசி உயர்வு என்கிற பெயரில் மக்களது பணத்தை அவர்கள் அறியாமலே அரசாங்கம் சூறையாடி வருகிறது.

கறவைப் பசுவைக் காப்பாற்றும் செலவு அதிகமாகிப் போனதால் பால்காரன் பாலில் அதிக நீரைக் கலப்பது போல், அதிகச் செலவு செய்ய முனைந்துள்ள அரசாங்கமானது புழக்கத்திலுள்ள பணத்தோடு புதிதாக ரூபாய் அச்சடித்துக் கலந்து விடுகிறது. வெளிப் பார்வைக்கு நீர் கலந்த பாலின் நிறம்மாறாதது போலவே, சர்க்கார் சிருஷ்டித்த ரூபாயின் மதிப்புக் குறைந்திருப்பதும் தெரியாது. ஆயினும் நீர் கலந்த பாலின் சத்து குறைந்து விட்டது போல, ரூபாயின் மதிப்புக் குறைந்து விட்டது என்பது விலைவாசிகளைப் பார்க்கும் போது புரியும். பாலில் நீரைக் கலப்படம் செய்கிறவர்களைச் சுலபமாகத் தண்டித்துச் சிறைவாசமும் பெருத்த அபராதமும் விதித்து விடுகிறார்கள். மக்கள் கஷ்டப்பட்டுச்சேமித்து வைத்த பணத்தை 'நீர்த்துப் போகச்' செய்யும் காரியம் பால்காரர்களின் கலப்படத்தைக் காட்டிலும் பெரும் குற்றம். ஆயினும் இந்தக் குற்றத்தைச் செய்யும் அரசாங்கத்தை யார் தண்டிக்க முடியும்?

வெளிநாட்டு அரசாங்கங்களிலிருந்து கடன் வாங்கி விட்டுத் திருப்பித் தர முடியாமல் பரிதவிப்பதைக் காட்டிலும், அந்நாட்டு வியாபார முதலாளிகள் நம் நாட்டில் தொழில் புரிவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தினால் 'திவாலா' பற்றியும், கடன் வாய்தாவைத் தள்ளிப் போடுவதைப்பற்றியும் பேச்சு எழ அவசியமே இராது. அந்நிய முதலீட்டாளர்கள் இங்கு தொழில் நடத்திப் போதிய லாபமடையும்படி செய்திருந்தால் நம் நாட்டின் உற்பத்தி பெருகி, பொருளாதாரம் செழிப்படைந்திருக்கும். இந்தப் பதினோராண்டுகளில் ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து உண்மையான சோஷலிஸம் உருவாகியிருக்கும்.

சென்று போனதைச் சொல்லிப் பயனில்லை. செய்ய வேண்டியது என்ன என்பதே கேள்வி. நிர்வாக முறைகளை மாற்றியும், வெளிநாட்டுத் தனியாரின் மூலதனத்தை நம் நாட்டுக்குத் தருவிப்பதற்குகந்த ஊக்கங்களை ஏற்படுத்தித் தந்தும் பொருளாதாரத்தைச் சீர் செய்வதற்கு இப்போதும் காலம் தாழ்ந்து விடவில்லை. பெருமைக்குகந்த ஒரு பண்பாட்டையும், உழைப்பும் அறிவுமுள்ள நாற்பத்தைந்து கோடி மக்களையும் கொண்ட நமது சிரஞ்சீவியான நாட்டைப் பகுத்தறிவினால் காப்பதற்கு இன்றளவும் காலம் தாழ்ந்து விடவில்லை. உண்மை உணர்ந்தவர்கள் உண்மை பேச வேண்டும். தைரியமாகப் பணியில் இறங்க வேண்டும். அரசாங்கத்தின் தவறுகளை எடுத்துக்காட்டி அதன் மனப் பான்மையை மாற்ற வேண்டும்; அல்லது அரசாங்கத்தையே மாற்ற வேண்டும்.

வெள்ளி விழா ஆண்டு

கல்கி நேயர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. உங்கள் அபிமானப் பத்திரிகையான கல்கி தொடங்கி இருபத்து நான்கு வருஷம் பூர்த்தியாகி இன்று இருபத்தைந்தாவது ஆண்டு — வெள்ளி விழா ஆண்டு — தொடங்குகிறது. அடுத்த ஆண்டு இதே நன்னாளில் வெள்ளி விழாவைக் குதூகலமாகக் கொண்டாட விருக்கிறோம். அதற்கு முன்னோடியே போல இந்த ஆண்டு மலர் — வெள்ளி விழா ஆண்டுத் தொடக்க மலர் — சிறுகதைச் சிறப்பு மலராக மணம் வீசி உங்கள் கையை அலங்கரிக்கிறது. ஓவியர் வினு தீட்டியிருக்கும் அட்டைப்படமே அதற்குச் சான்று பகருகிறது. யானை மீது பவனி வரும் தமிழன்னையின் எழில் வதனத்தில்தான் எத்தனை பெருமிதம்! அது சிறுகதைச் சிறப்பு மலர் வெளியிடக் கல்கிக்கு ஒரு தனி உரிமை உண்டு என்பதை ஆமோதிப்பது போல் இல்லையா?

கல்கியின் ஸ்தாபக ஆசிரியரான அமரர் கிருஷ்ணமூர்த்தி இலக்கிய, அரசியல், சமுதாயத் துறையிலே தமது எழுத்தாற்றலின் மூலம் ஒரு புரட்சியையே உண்டு பண்ணியவர். எத்துறையிலும் நற்பணி புரிந்து கல்கிப் பத்திரிகைக்கு ஈடு இணையில்லை என்று இலக்கிய உலகம் பேசிக் கொள்ளும்படி செய்தவர். மக்கள் விரும்பி ஏற்கும் வகையிலே கதைகள் புனைந்தும் புனையச் செய்தும் மக்கள் மனத்திலே இலக்கிய அரசாட்சி புரிந்தவர்; கல்கி சகாப்தம் ஒன்றை நிறுவியவர். அவரது பெயரைத் தாங்கி வரும் ஸ்தாபனம் சிறுகதைக்கு ஒரு சிறப்பு மலர் வெளியிடுவது பொருத்தம்தானே?

சிறுகதை அயல்நாட்டுச் சரக்கு. சமீப காலத்தில்தான் நம் நாட்டுக்கு இறக்குமதியானது என்று சொல்வோருண்டு. கதைகள் ஏற்றுமதிச் சரக்காயிருக்கட்டும், அல்லது இறக்குமதிச் சரக்காகத்தான் இருக்கட்டும். இந்திய மண்ணின் வளம் பெற்று இனம் பிரிக்க முடியாதபடி நம் நாட்டில் செழித்துள்ளன.

கதைகளில்தான் எத்தனை விதம்! குடும்பம், சமூகம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம் என்று வளர்ந்து கொண்டே போகின்றன. உலகம் பலவிதம் என்பது போலக் கதைப் படைப்பிலும்தான் எத்தனை உத்திகள்! எத்தனை வகைகள்!

கல்கி இதழின் கடந்த இருபத்து நான்கு ஆண்டு இதழ்களையும் புரட்டினால், கதையுலகத்தின் அத்தனை நுட்பங்களையும் சிறப்புக்களையும் காணலாம். இலக்கியத்துக்குக் கல்கிப் பத்திரிகை புரிந்திருக்கும் பணியைக் கண்டு பெருமையுறலாம்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, இந்த ஆண்டு மலரில் நவநவமான பல்சுவைச் சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து ஓர் இன்சுவை விருந்து அளித்துள்ளோம். சுவைத்து இன்புற வேண்டியது நேயர்களான உங்கள் பாக்கியம்.



ராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்கள் அறுபதாண்டு நிறைந்து மணி விழாவைக் காணும் இந்த மங்கலத் திருநாளிலே (ஆகஸ்ட் 2) அவருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கிய திடகாத்திரத்தையும் அருளுமாறு அம்பலக் கூத்தனை இறைஞ்சுகிறோம். தமிழ்ப் பற்றும் தொழில் வளர்ச்சியில் அக்கறையும் கல்வி வளர்ச்சியில் நாட்டமும் கொண்ட செல்வச் சீமான்களில் முக்கியமான ஒருவர் திரு முத்தையா செட்டியார் அவர்கள். நமது தந்தையார் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் நிலைநாட்டிச் சென்ற பல்வேறு ஸ்தாபனங்களை, முக்கியமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழிசைச் சங்கம் ஆகிய இரண்டினையும் திரு முத்தையா செட்டியார் அவர்கள் தம் கண்களின் மணிகளைப் போல் போற்றிப் பேணி வருகிறார். இவை தவிர, பொதுநலப் பணிகளிலும் அரசியலிலும் அக்கறையும் ஈடுபாடும் கொண்டவர். நீண்ட கால சட்டசபை அநுபவம் பெற்றுள்ளவர். சென்னை நகர சபையிலும் இருமுறை மேயர் பதவி வகித்திருக்கிறார். காங்கிரஸ் எம். எல். ஏ. எனினும் அவர் ஆட்சியாளர்களின் தரித்திரத் தனிப்போக்கைத் தீவிரமாகக் கண்டித்து வருவது பாராட்டத்தக்கது. அவர் புகழ் ஓங்குக!

பாணங்களை முறித்துப் பல பாணங்களை பானுகோபன்மீது ஏவினார்கள். பானுகோபன் மிகுந்த கோபத்துடன் எண்ணற்ற பாணங்களை இலக்கம் வீரர்கள் மீது விடுத்து அவர்கள் கையிலிருந்த விற்களையும் அழித்தான். இலக்கம் வீரர்களும் வேறு விற்களை எடுத்துக் கொண்டு பாணங்களை விடுத்தார்கள். பானுகோபனும் அளவற்ற பாணங்களை விடுத்தான். இலக்கம் வீரர்கள் உடலினும் பாணங்கள் தைத்து அவர்கள் வருந்தினார்கள். பானுகோபன் இறுதியில் அவர்களை வென்று விட்டான்.

இலக்கம் வீரர்களும் பானுகோபனிடம் தோற்றதும் வீரகேசரி பானுகோபன் மீது பாணங்களை விடுத்தார். இருவருக்கும் கடுமையான விற்போர் நடந்தது. பானுகோபன் கடைசியாக நாராயணாஸ்திரத்தை வீரகேசரி மீது செலுத்தினான். அந்த அஸ்திரம் வீரகேசரியின் மார்பில் புகுந்தது. வீரகேசரி மயங்கி விழுந்தார். முருகப் பெருமானின் ஆணையினால்தான் அவரது ஆவி பிரியாமல் நின்றது.

பின்னர் பானுகோபனுடன் வீர மார்த்தாண்டர் கடும் போர் புரிந்தார். அவரது நெற்றியில் உடைவாளால் பானுகோபன் தாக்கினான். வீரமார்த்தாண்டர் மயங்கி விழுந்தார். வீர ராக்கதர் பானுகோபனை எதிர்த்துப் போரிட்டார். பானுகோபன் அவர் மீது பிரம்மாஸ்திரத்தை விட்டு மயக்கினான். அதன் பின் வீராந்தகர், வீரமகேச்சுரர், வீரதீரர், வீரமகேந்திரர், வீரபுரந்தரர் — ஆகியவர்கள் பானுகோபனுடன் போர் செய்து தோல்வியுற்றனர்.

முன்பு பூதசேனைகளுடன் போர் செய்து சிதறியோடிய அசுர வீரர்கள் பானுகோபன் போரில் வெற்றிமுகம் பெறுவதைக் கண்டதும் திரும்பி அவனிடம் வந்து சேர்ந்தார்கள். பானுகோபன் வீரவாகு தேவரை நோக்கி வந்தான். அதனைக் கண்ட வீரவாகு தேவர் கந்தவேளைத் தியானித்துக் கையில் வில்லை எடுத்துக் கொண்டார். தேரை வேகமாகச் செலுத்தும்படி கட்டளை யிட்டார்.


வீரவாகுதேவர் வில்லை வளைத்து நாணை மீட்டினார். அந்த நாணொலி, தேவர்களுக்கு அமிர்தம் உண்பதைப் போலிருந்ததாம். வீரவாகு தேவருக்கு எதிராகப் பானுகோபன் தனது வில்லை வளைத்து ஒலி எழுப்பினான். அந்த ஒலி, தேவர்களுக்கு விஷத்தை உண்பது போன்றிருந்ததாம்.

வீரவாகுதேவருக்கும் பானுகோபனுக்கும் கடுமையாகப் போர் நடந்தது. இருவரும் ஆயிரக் கணக்கில் பாணங்களை மழை போல் பொழிந்தார்கள். இந்தப் பாண மழையில் பூமியும் வானும், கடல்களும் மறைந்தன. அவர்களின் கடும் போரைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் அச்சத்தினால் பல திக்குகளிலும் ஓடினார்கள். வீரவாகுதேவர் சர்வசங்கார மூர்த்தியைப் போல் போர் புரிந்தார்; பானுகோபனின் தேரை அழித்தார். பானுகோபன் வேறொரு தேரில் ஏறிப் பாணங்களை விடுத்தான். பானுகோபனின் வில்லையும் வச்சிர கவசத்தையும் வீரவாகுதேவர் உடைத்து விட்டார். பானுகோபனின் மார்பிலிருந்து உதிரம் பெருகி வழிந்தது. பானுகோபன் மார்பில் முன்பு ஏற்படுத்திய துளையின் வழியாக வீரவாகுதேவர் ஆயிரம் பாணங்களை விடுத்து அவனது முதுகில் தொங்கிக் கொண்டிருந்த அம்பறாத் தூணியை அறுத்தெறிந்தார். அதனால் மனம் தளர்ந்த பானுகோபன், ''வில் வித்தையினால் இவனை வெற்றி கொள்ள முடியாது'' என்று முடிவு செய்து கொண்டான்.

பானுகோபன் முன்பு பிரம்மதேவரிடமிருந்து மோகனாஸ்திரம் பெற்றிருந்தான். அந்த அஸ்திரத்தை எவர் மீதாவது செலுத்தினால், அதனால் தாக்கப்படுகிறவரின் அறிவு மயங்கும். அந்த அஸ்திரத்தை எடுத்து, ''நீ வேகமாய்ச் சென்று எதிரியின் அறிவை மயங்கச் செய்து கொன்று விடுவாயாக'' என்று கூறி விடுத்தான் பானுகோபன். பயங்கரமான அந்த அஸ்திரம் எங்கும் இருளைப் பரப்பி விரைந்து சென்றது. அந்த அஸ்திரம் சென்ற போது பூதசேனையைச் சேர்ந்த வீரர்கள் பயந்து விழுந்தனர். பூதசேனைத் தலைவர்கள் மயங்கி விழுந்தனர். அஸ்திரம் நெருங்க நெருங்க இலக்கத்தெண்மரும் வீரவாகு தேவரும் மயங்கி விழுந்தனர். இந்த நிலையை ஆகாயத்திலிருந்து கவனித்த பானுகோபன் மயங்கி விழுந்தவர்கள் மீது ஏராளமான பாணங்களை விடுத்தான். பாணங்கள் தைத்ததால் அவர்களின் உடல்கள் சல்லடைக் கண் போலாகி விட்டன.

இலக்கத்தெண்மரும், பூதசேனைகளும் வீரவாகுதேவரும் அறிவு மயங்கிக் கிடந்ததை யாவுமறியும் முருகவேள் உணர்ந்தார்.

பானுகோபன் விடுத்த மோகனாஸ்திரத்தை எதிர்க்க அமோக அஸ்திரத்தைத் தமது மலர்க் கரத்தாலேயே எடுத்தார். ''பானுகோபன் விடுத்த மோகனாஸ்திரத்தின் சக்தி



39. அமருக்குப் புறப்பட்ட அமரநாயகன்

உக்கிரனால் தூக்கியெறியப்பட்டு சூரிய மண்டலத்தை அடைந்த பானு கோபனின் தேர் அங்கிருந்து கன வேக மாகக் கீழே விழுந்தது. அதற்கும் உயிர் தப்பிய பானுகோபன், இமைப் பொழு தில் தன்னைச் சமாளித்துக் கொண்டு உக்கிரனைத் தூக்கி ஆகாயத்தில் வீசினான். அவன் ஆகாயத்திலிருந்து கீழே விழும் போது பிரம்மாஸ்திரத்தை மார்பிலே ஏவினான். அதனால் உக்கிரன் மயங்கி விழுந்தான்.

உக்கிரன் மயங்கி விழுந்ததைப் பூதப் படை வீரன் தண்டி கண்டான். உடனே ஒரு மலையைப் பெயர்த்து பானுகோபன் மீது வீசினான். பானு கோபன் பாணங்களை விடுத்து அந்த மலையைத் தூள் தூளாக்கி விட் டான். பானுகோபன் விடுத்த பாணங் களால் தாக்குண்ட தண்டி சோர்ந்து விழுந்தான். பூதப் படையைச் சேர்ந்த பினாகி ஒரு மலையைப் பெயர்த்துப் பானு கோபன் மீது எறிய முயன்றான். அவன் மீது ஆயிரம் பாணங்களை விடுத்தான் பானுகோபன். அதனால் பினாகியும் தளர்ச்சியடைந்தான். மற்ற பூத சேனை வீரர்கள் சிறிது நேரம் பானு கோபனுடன் போர் புரிந்தார்கள். ஆனால் பானுகோபன் அவர்களைச் சிதற அடித்தான்.

பூத சேனையைச் சேர்ந்த வீரர்கள் சிதறி ஓடுவதைக் கண்டதும் இலக்கம் வீரர்களும் பெருங்கோபத்துடன் பானு கோபன் மீது மழை போலப் பாணங் களைப் பொழிந்தார்கள். பானுகோபன் ஆயிரம் கோடிப் பாணங்களை விடுத்து அவற்றை யெல்லாம் ஒடித்தான். மேலும் ஆயிரம் கோடிப்பாணங்களை யெல்லாம் ஒடித்தான். மேலும் ஆயிரங் கோடிப் பாணங்களை இலக்கம் வீரர்கள் மீது விடுத்தான். அவர்கள் அந்தப்

பாணங்களை முறித்துப் பல பாணங்களை பானுகோபன்மீது ஏவினார்கள். பானு கோபன் மிகுந்த கோபத்துடன் எண்ணற்ற பாணங்களை இலக்கம் வீரர்கள் மீது விடுத்து அவர்கள் கையிலிருந்த விற்களையும் அழித்தான். இலக்கம் வீரர்களும் வேறு விற்களை எடுத்துக் கொண்டு பாணங்களை விடுத்தார்கள். பானுகோபனும் அளவற்ற பாணங்களை விடுத்தான். இலக்கம் வீரர்கள் உடலினும் பாணங்கள் தைத்து அவர்கள் வருந்தினார்கள். பானுகோபன் இறுதியில் அவர்களை வென்று விட்டான்.

இலக்கம் வீரர்களும் பானுகோபனிடம் தோற்றதும் வீரகேசரி பானுகோபன் மீது பாணங்களை விடுத்தார். இருவருக்கும் கடுமையான விற்போர் நடந்தது. பானுகோபன் கடைசியாக நாராயணாஸ்திரத்தை வீரகேசரி மீது செலுத்தினான். அந்த அஸ்திரம் வீரகேசரியின் மார்பில் புகுந்தது. வீரகேசரி மயங்கி விழுந்தார். முருகப் பெருமானின் ஆணையினால்தான் அவரது ஆவி பிரியாமல் நின்றது.

பின்னர் பானுகோபனுடன் வீரமார்த்தாண்டர் கடும் போர் புரிந்தார். அவரது நெற்றியில் உடைவாளால் பானுகோபன் தாக்கினான். வீரமார்த்தாண்டர் மயங்கி விழுந்தார். வீர ராக்கதர் பானுகோபனை எதிர்த்துப் போரிட்டார். பானுகோபன் அவர் மீது பிரம்மாஸ்திரத்தை விட்டு மயக்கினான். அதன் பின் வீராந்தகர், வீரமகேச்சுரர், வீரதீரர், வீரமகேந்திரர், வீரபுரந்தரர் — ஆகியவர்கள் பானுகோபனுடன் போர் செய்து தோல்வியுற்றனர்.

முன்பு பூதசேனைகளுடன் போர் செய்து சிதறியோடிய அசுர வீரர்கள் பானுகோபன் போரில் வெற்றிமுகம் பெறுவதைக் கண்டதும் திரும்பி அவனிடம் வந்து சேர்ந்தார்கள். பானுகோபன் வீரவாகு தேவரை நோக்கி வந்தான். அதனைக் கண்ட வீரவாகு தேவர் கந்தவேளைத் தியானித்துக் கையில் வில்லை எடுத்துக் கொண்டார். தேரை வேகமாகச் செலுத்தும்படி கட்டளை யிட்டார்.

வீரவாகுதேவர் வில்லை வளைத்து நாணை மீட்டினார். அந்த நாணொலி, தேவர்களுக்கு அமிர்தம் உண்பதைப் போலிருந்ததாம். வீரவாகு தேவருக்கு எதிராகப் பானுகோபன் தனது வில்லை வளைத்து ஒலி எழுப்பினான். அந்த ஒலி, தேவர்களுக்கு விஷத்தை உண்பது போன்றிருந்ததாம்.

வீரவாகுதேவருக்கும் பானுகோபனுக்கும் கடுமையாகப் போர் நடந்தது. இருவரும் ஆயிரக் கணக்கில் பாணங்களை மழை போல் பொழிந்தார்கள். இந்தப் பாண மழையில் பூமியும் வானும், கடல்களும் மறைந்தன. அவர்களின் கடும் போரைக் கண்ட தேவர்களும் அசுரர்களும் அச்சத்தினால் பல திக்குகளிலும் ஓடினார்கள். வீரவாகுதேவர் சர்வசங்கார மூர்த்தியைப் போல் போர் புரிந்தார்; பானுகோபனின் தேரை அழித்தார். பானுகோபன் வேறொரு தேரில் ஏறிப் பாணங்களை விடுத்தான். பானுகோபனின் வில்லையும் வச்சிர கவசத்தையும் வீரவாகுதேவர் உடைத்து விட்டார். பானுகோபனின் மார்பிலிருந்து உதிரம் பெருகி வழிந்தது. பானுகோபன் மார்பில் முன்பு ஏற்படுத்திய துளையின் வழியாக வீரவாகுதேவர் ஆயிரம் பாணங்களை விடுத்து அவனது முதுகில் தொங்கிக் கொண்டிருந்த அம்பறாத் தூணியை அறுத்தெறிந்தார். அதனால் மனம் தளர்ந்த பானுகோபன், ''வில் வித்தையினால் இவனை வெற்றி கொள்ள முடியாது'' என்று முடிவு செய்து கொண்டான்.

பானுகோபன் முன்பு பிரம்மதேவரிடமிருந்து மோகனாஸ்திரம் பெற்றிருந்தான். அந்த அஸ்திரத்தை எவர் மீதாவது செலுத்தினால், அதனால் தாக்கப்படுகிறவரின் அறிவு மயங்கும். அந்த அஸ்திரத்தை எடுத்து, ''நீ வேகமாய்ச் சென்று எதிரியின் அறிவை மயங்கச் செய்து கொன்று விடுவாயாக'' என்று கூறி விடுத்தான் பானுகோபன். பயங்கரமான அந்த அஸ்திரம் எங்கும் இருளைப் பரப்பி விரைந்து சென்றது. அந்த அஸ்திரம் சென்ற போது பூதசேனையைச் சேர்ந்த வீரர்கள் பயந்து விழுந்தனர். பூதசேனைத் தலைவர்கள் மயங்கி விழுந்தனர். அஸ்திரம் நெருங்க நெருங்க இலக்கத்தெண்மரும் வீரவாகு தேவரும் மயங்கி விழுந்தனர். இந்த நிலையை ஆகாயத்திலிருந்து கவனித்த பானுகோபன் மயங்கி விழுந்தவர்கள் மீது ஏராளமான பாணங்களை விடுத்தான். பாணங்கள் தைத்ததால் அவர்களின் உடல்கள் சல்லடைக் கண் போலாகி விட்டன.

இலக்கத்தெண்மரும், பூதசேனைகளும் வீரவாகுதேவரும் அறிவு மயங்கிக் கிடந்ததை யாவுமறியும் முருகவேள் உணர்ந்தார்.

பானுகோபன் விடுத்த மோகனாஸ்திரத்தை எதிர்க்க அமோக அஸ்திரத்தைத் தமது மலர்க் கரத்தாலேயே எடுத்தார். ''பானுகோபன் விடுத்த மோகனாஸ்திரத்தின் சக்தி

யைக் கெடுத்து வெற்றியுடன் திரும்பி வா'' என்று கூறி அதனை விடுத்தார். அந்த அஸ்திரம் விண் வழியே சென்று போர்க்களத்தை யடைந்து மோகன அஸ்திரத்தின் மாயையைக் கிரகித்துக் கொண்டது. வீரவாகுதேவரும் மற்றவர்களும் தூக்கத்திலிருந்து எழுவது போல் எழுந்தனர். முருகப் பெருமான் விடுத்த அஸ்திரம் தன் பணியை முடித்தபின் பரமனிடமே திரும்பிச் சென்று விட்டது.

மயக்கம் தெளிந்தெழுந்த வீரவாகு தேவர், 'வஞ்சனையால் வலிமையைக் கெடுத்த பானுகோபனை உடனே கொல்லுவேன்' என்று எண்ணிப் பாசு பதாஸ்திரத்தைக் கையில் எடுத்து அதனை விடுப்பதற்குச் சிந்தித்தார்.

மோகனாஸ்திரத்தினால் மயங்கிவிழுந்தவர்கள் அறிவு தெளிந்து எழுந்ததையும், வீரவாகுதேவர் பாசுபதாஸ்திரம் விடுப்பதற்குத் தயாராயிருப்பதையும் அறிந்த பானுகோபன், ''இனி இங்கு நின்றால் பாசுபதாஸ்திரம் உயிரை மாய்த்து விடும்'' என்று உணர்ந்து அங்கிருந்து மாயமாக விண்ணில் சென்று மறைந்து விட்டான். அசுர வீரர்களும் மறைந்து ஓடி விட்டனர். மறைந்து செல்கின்றவனைக் கொல்வது யுத்த தர்மம் ஆகாது என்பதால் வீரவாகு தேவர் ஆயுதத்தை விடுக்காது இருந்து விட்டார். ஓடி ஒளிந்ததே பகைவரின் தோல்விக்குச் சமமெனப் பூதர்கள் மகிழ்ந்தனர்.

இலக்கத்தெண்மரும், பூதவீரர்களும் சூழ வீரவாகுதேவர், ஜயசங்கம் ஊதிக் கொண்டு பாசறையை அடைந்தார். அங்கு எழுந்தருளியிருந்த அருள்மூர்த்தியாகிய கந்தவேளின் திருவடிகளை யாவரும் நன்றியுடன் தொழுதனர். யுத்தகளத்தில் நிகழ்ந்தவற்றை யெல்லாம் மகிழ்ச்சியுடன் செவிசாய்த்துக் கேட்ட செவ்வேட்பரமன், வீரர்களுக்கு விடைகொடுத்து அவரவர் விடுதிகளுக்கு அனுப்பி வைத்தார்.

ஃ ஃ ஃ

விண்ணில் மாயமாய் மறைந்த பானுகோபன் பெருத்த அவமானத்துடன் புறக்கடை வழியாக மகேந்திர புரிக்குச் சென்று தன் உடலில் ஏற்பட்டிருந்த புண்ணுக்கு மருந்து தடவிக் கொண்டிருந்தான். உடலைப் புண் வாட்டியதை விட அவமானமும், துக்கமும், பழியும் அவனது உள்ளத்தை அதிகமாக வாட்டிக் கொண்டிருந்தன.

போன மகன் வெற்றியோடு திரும்பி வருவான் என்று சூரபன்மன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். பானுகோபன் வந்துவிட்ட செய்தியைச் சேவகர்கள்தான் அவனிடம் தெரிவித்தார்களே தவிர, பானுகோபன் சூரபன்மனிடம் வரவில்லை. ''பானுகோபன் எங்கே?'' என்று சேவகர்களைக் கேட்டான் சூரபன்மன். ''தோட்டத்துப் பக்கம் வந்து படுத்திருக்கிறார்'' என்று சேவகர்கள் பதில் கூறினார்கள்.

சூரபன்மனின் உள்ளம் கொதித்தது. 'ஹூம், இவனும் சிறுவன் தானே? போனால் போகிறது. நானே நானே போகிறேன். அந்தக் கந்தனை எவ்வாறேனும் வென்று விரைவில் திரும்புவேன்' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டான் சூரன். மறுநாள் யுத்த ஏற்பாடுகளை எப்படி யெல்லாம் செய்ய வேண்டும் என்ற சிந்தனையில் அதன்பின் ஆழ்ந்தான்.

எப்படி முடியும்?



கதை

பால்கர் ஓர் அமெச்சூர் நாடக நடிகன். அவனை அமுதா அன்புடன் காதலித்தாள். முதன் முறையாக அவன் ஒரு நாடகத்தில் கதாநாயகனாக நடித்ததைக் கண்டாள். அவர்கள் சந்திப்பு அடிக்கடி நிகழ்ந்தது. வழக்கம் போல் பார்க், பீச், சினிமா, இத்தியாதி காதலர்கள் இடங்களைச் சுற்றிய பின், காதலில் கரை கண்டவர்களாய் ஒருவர் மற்றவரின்றி வாழ்வதில்லை என்று உணர்ந்தனர்.

அப்போதுதான் அமுதாவுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது.

பால்கர் நடிகனாயிற்றே! தன்னை முழு மனத்துடன்தான் காதலிக்கிறானா அல்லது நடிப்பா? இதை எப்படி உணருவது?

ஒரு நாள்--

அவனைத் தேடி அவன் வரும் போது அவள் தன் மேஜையின் மீது ஒரு கடிதத்தை வைத்திருந்தாள். அதாவது தான் ஓர் இக்கட்டில் சிக்கி யிருப்பதாகவும் அதனால் அவனை மணக்க முடியாதென்றும் தன்னை மறந்து மன்னித்து விடும்படியும் அதில் எழுதியிருந்தாள்.

அன்று வீட்டில் யாரும் இல்லை.

பால்கர் உள்ளே நுழைந்ததும் அறையின் மறைவு ஒன்றில் ஒளிந்து கொண்டு நடப்பதைக் கவனிக்கலானாள்.

பீரோவின் பின்னே ஒளிந்திருந்த அவளால் பால்கரைப் பார்க்க முடியவில்லை. ஆனால் அவள் காதுகள் கூர்மையாயின.

சிறிது நேரம் நிசப்தம்! பிறகு----

எப்படி முடியும்?

சிந்திக்க. பிறகு அடுத்த பக்கம் பார்க்க



இப்படி முடியும்

'ஐயோ, என் அன்பே! நீ இன்றி நான் எப்படி உயிர் வாழ்வேன்? என்னைப் பிரிந்து செல்ல உனக்கு எப்படியடி மனம் வந்தது? இதோ...... இன்றே.... இங்கே.... இப்போதே என் உயிரையும் முடித்துக் கொள்கிறேன்.'

ஒளிந்த இடத்திலிருந்து ஓடோடி வந்தாள் அமுதா. அவள் கண்கள் பனித்திருந்தன. அவனுக்குத்தான் அவளிடம் எத்தனை அன்பு!

'எப்படி அமுதா என் நடிப்பு? அடுத்த வார நாடகத்தின் உச்ச கட்டத்தின் வசனம்! உன்னைக் காணவில்லையா? ஒரு வரையும் காணோம். இப்படியே ஒத்திகை பார்த்துக் கொண்டேன்! எப்படி? நீ இங்குதான் இருக்கிறாயா?'

அமுதா திகைத்தாள்! அவள் கடிதம் பிரிக்கப்படாமல் மேஜை மீது அப்படியே இருப்பதை அப்போதுதான் பார்த்தாள் அவள்!



மறு நாள் பொழுது புலர்வதற்கு முன் நித்திரையிலிருந்து எழுந்த சூரபன்மன், நித்திய கருமங்களை முடித்துக் கொண்டான். சபாமண்டபம் சென்று சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்தான். சேனைத் தலைவர்களும், அமைச்சர்களும் அவனைச் சூழ்ந்தார்கள்.

''நமது சேனைகளை அழைத்து வாருங்கள்'' என்று ஒற்றர்களிடம் கட்டளையிட்டான் சூரன். இரதகஜ துரகபதாதிகள் அடங்கிய பல வகை ஆயுதங்களை ஏந்திய இலட்சம் வெள்ளத்திற்கு மேற்பட்ட வீரர் படைகளைத் திரட்டி ஒற்றர்கள் அனுப்பினார்கள். அந்தச் சைன்யங்கள் வீரமகேந்திர புரியைச் சூழ்ந்து ஆரவாரம் செய்தன.

சூரபன்மன் சிகரம் ஒன்றின் மீதேறி நான்கு திசைகளிலும் தனது பார்வையைச் செலுத்தினான். கதிரவனின் ஒளிக் கதிர்கள் பாய முடியாத அளவுக்கு நெரிசலாகக் குவிந்திருந்த சேனையைக் கண்டதும் அவன் உள்ளத்தை வாட்டிய துன்பம் பறந்தது. எதிரிகளை அப்போதே வென்றவன் போல் களிப்புப் பெற்றான்.

சிகரத்திலிருந்து இறங்கி ஆயுத சாலைக்குச் சென்ற சூரபன்மன் சிவ தனுசு, பாசுபதாஸ்திரம் போன்ற தெய்வாஸ்திரங்களை எடுத்துக் கொண்டான். அட்சய அம்பறாத் தூணியை முதுகில் கட்டிக் கொண்டான். தலையில் வைர முடியைத் தரித்துத் தும்பை மாலை அணிந்து கொண்டு தேரில் ஏறினான். அண்டங்கள் அதிரக் கனைக்கும் குதிரைகள் பூட்டப்பட்டிருந்த அந்தத் தேர் வாயு வேகத்தில் புறப்பட்டது. அசுர வீரர்களும் அமைச்சர்களும், நால் வகைச் சேனைகளும் அவனைத் தொடர்ந்தனர்.

சூரபன்மனின் தேர் அரண்மனை வாயிலைக் கடந்தது. சிங்கமுகாசுரனின் மகன் அதிசூரனும், தாரகாசுரனின் மகன் அசுரேந்திரனும் போர்க்கோலம் பூண்டு, சூரபன்மனிடம் வந்து அவனை வணங்கினார்கள். ''நீங்கள் இருவரும் தலைவராக இருந்து படைகளை அணி வகுத்துச் சென்று போர் புரியுங்கள்'' என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான் சூரபன்மன். அவர்கள் அவ்விதமே செய்தனர்.

பூமி அதிர அசுரப் படைகள் அணி வகுத்துச் சென்ற போது புவியைத் தாங்கும் ஆதிசேஷன் தலையை நெளித்தான். அஷ்டமா நாகங்களும், திசை யானைகளும் அஞ்சின. அணிவகுத்துச் சென்ற யானைகள் பிளிறிய ஒலி எண் திசைகளையும் கிழித்துக் கொண்டு பரவியது.

சூரபன்மன் சதுரங்க சேனைகளுடன் போருக்கு வருவதை யறிந்த இந்திரன் கந்தவேளிடம் ஓடினான். கருணை நிறைந்த பெருமானின் திருவடிகளை வணங்கி, ''எம்பெருமானே! சூரபன்மன் இலட்சம் வெள்ளம் சேனைகளுடன் போருக்கு வருகிறான். தேவரீர் சூரபன்மனை வென்று எங்கள் அரச உரிமைகளையும் பொன்னுலக வாழ்வையும் மீட்டுத் தரவேண்டும்'' என்று விண்ணப்பித்துக் கொண்டான்.

''அஞ்சாதே அப்பனே!'' என்று திருவாய் மலர்ந்தருளிய தேவதேவன், வாயு தேவனை அழைத்துத் தேரைக் கொண்டு வரும்படி ஆணையிட்டார். வல்லசுரரை மாய்க்கவும் நல்ல சுரரை வாழ்விக்கவுமே வந்துதித்த சரவண பவன் போர்க்கோலம் பூண்டார். மனோவேகத் தேரில் ஏறிப் புறப்பட்டார் குமாரக் கடவுள். பூத சேனைகள் கடலும் அஞ்சும் வண்ணம் ஆரவாரம் செய்து புறப்பட்டன. வீரவாகு தேவரும், தம்பியரும், இலக்கம் வீரரும், பூத கணத் தலைவர்களும் போர்க்கோலத்துடன் பூத சேனைகளுக்கிடையே சென்றனர். **(தொடரும்)**

நியூட்ரினை விட தேவிகா இனிமை என்றால்

எங்களுக்கு ஆக்ஷேபணை இல்லை !

ஆனாலும் பல ரக மிட்டாய்களைச் சுவைத்துள்ள அழகு நக்ஷத்திரம் தேவிகா சொல்கிறார் :



“ பழ ரசங்களின் நறுமணம் நிறைந்த நியூட்ரின் மிட்டாய்களும், இனிய டாபிகளுமே எனக்கு மிகப் பிடித்தவை. நியூட்ரின் மிட்டாய்களே மிகச் சிறந்தவை. எப்பொழுதும் — ஏன் ஒவ்வொரு தடவையும் — நான் விரும்புவது நியூட்ரின்தான் !”

Nutrine





இனிய சுவையை அனுபவிக்க

நியூட்ரின் வாங்குவீர்

நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி
பிரைவேட் லிமிடெட்
சித்தூர் (ஆந்திரா)



ஒரு இங்கிதம்

ஜெயகாந்தன்

முன்கதைச் சுருக்கம்

பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட்ட இந்தியர்களில் ஒருவனாகச் சென்னைக்கு வந்து சேர்ந்த இளைஞன் நடனசபேசன், அகதிகள் முகாமில் தங்கியிருக்கிறான். அவன் வந்த முதல் கப்பலில் இடம் கிடைக்காததால் அவனுடைய தந்தை அடுத்த கப்பலில் வருவதாகச் சொல்லி ரங்கூனிலேயே தங்கியிருக்கிறார். கோயமுத்தூருக்கு அண்மையிலுள்ள கவுண்டன்பாளையம் என்னும் ஊரைச் சேர்ந்த ஒரு குக்கிராமத்தில் அவனது தாயார் இருக்கிறாள். அவளிடம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்பது அவன் திட்டம். ஆனால் அகதிகள் முகாமுக்குக் காரியார்த்தமாக வரும் நச்சினார்க்கினியன் என்ற நம்பி என்பவனுடன் சேர்ந்து நகரைச் சுற்றிப் பார்க்கப் போய், இரண்டொரு நாட்கள் அவனுடனேயே இருந்துவிட்டுத் திரும்பி வந்து பார்க்கும்போது அங்கிருந்த அகதிகள் வேறு ஊருக்குப் போய்விட்ட நிலையில் முகாம் கலைக்கப்பட்டிருந்ததைக் கண்டு திடுக்கிடுகிறான். தன் தவற்றை அதிகாரிகளிடம் சொல்ல அஞ்சுகிறான். சொந்த கிராமத்துக்குப் போய்ச் சேரக் கையில் பணமும் இல்லை. எனவே, நம்பியிடம் வந்து சேருகிறான்.

சமுதாயத்தின் அடித்தள வர்க்கத்தைச் சார்ந்தவன் நம்பி. அவனுடைய தாய் கன்னியம்மாள் ஓர் ஆங்கிலோ இந்தியர் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த ஆப்பிரிக்க நீக்ரோ சிப்பாயிடம் ஒரு நாள் நேசத் தொடர்பு கொண்டதால் பிறந்தவன். தம்பையா என்னும் ஒரு பயில்வானின் ஆதரவால் வளர்க்கப் பட்டவன். வீட்டுக்கு அடங்காமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருப்பவன். எந்த வேலையும் செய்யத் தயங்காதவன். நகர மன்றத் தேர்தலில் நின்று தோற்றவரும், மூன்றாந்தர அரசியல்வாதியுமான மருதமுத்து என்பவரின் கையாளாக இருந்து, அவரது பல நிய காரியங்களுக்கு உதவி வருபவன். சாமர்த்தியசாலி. நல்ல இதயம் உள்ளவன். அவனுடைய போக்குப்படி சபேசனுக்கு ஆதரவு அளிக்கிறான். ஆனால் சபேசனோ அதனால் பல துன்பத் துயரங்களுக்கு ஆளாகிறான். தங்கியிருக்க இடமின்றித் தவிக்கிறான். இரண்டாவது கப்பலில் தன் தந்தை சென்னைக்கு வந்ததும் அவருடன் சேர்ந்து ஊருக்குப் போய் விடலாம் என்ற நம்பிக்கையில் எப்படியோ நாட்களைக் கடத்துகிறான். அச்சகங்களில் வெட்டிக் கழிக்கும் காகித ஜல்லிகளை வாங்கி விற்று வயிற்றுப்பாட்டைப் பார்த்துக் கொண்டு கொஞ்சம் பணமும் சேர்க்க ஆரம்பிக்கிறான்.

நம்பிக்கு வேதா என்ற தங்கையொருத்தி இருக்கிறாள். அவள் அவனது சொந்தத் தங்கை அல்லள். பல ஆண்டுகளுக்கு முன் யாரோ ஒரு பெண், தான் எடுத்து வந்த பிரம்புப் பெட்டியை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நம்பியிடம் கொடுத்து விட்டு ரயிலேறிப் போய் விடுகிறாள். அவள் யாரென்றே தெரியாமல் இருக்கிறது. அந்தப் பெட்டிக்குள் மூன்று மாதக் குழந்தை ஒன்று இருக்கிறது. நம்பி அதைத் தன் தாயிடம் கொண்டு

வந்து கொடுக்க, அவனே வளர்த்துப் பெரியவ ளாக்குகிறான். இதற்கும் பயில்வான் தம்பையா பெரிதும் உதவுகிறான். நச்சி அவளைத் தன் சொந்தத் தங்கையாகவே பாவித்து அவள் மீது பேரன்பு செலுத்தி வருகிறான். இப்படி வளர்ந்த வள்தான் வேதா. அவள் படித்து உபாத்தியாயினிமைத் தொழிலுக்குப் பயின்று, நகர மன்றப் பள்ளிகளில் வேலையும் தேடுகிறாள்.

இந்நிலையில்தான் சபேசன் அவளைச் சந்திக்கிறான். அவனுடைய இனிய குண நலன்களால் ஈர்க்கப் பட்ட வேதா அவனிடம் தன் மனத்தைப் பறி கொடுக்கிறாள். சபேசனுக்கும் அவளிடத்தே ஒரு கவர்ச்சியும், அநுதாபமும், அன்பும் ஏற்படவே செய் கின்றன. ஆனால், தனது அநாதரவான நிலையில் அதிலெல்லாம் மனத்தைச் செலுத்த அவனால் இயலவில்லை. எனவே, அந்தக் காதல் ஈர்ப்பி லிருந்து ஒதுங்குகிறான். வேதாவோ மேலும் மேலும் அவன் மீது தன் அன்புக் கொடியைப் படரவிட்டு அது பிடிப்பற்றுச் சாய, மனம் உடைகிறாள்.

அந்நிய நாட்டில் வளர்ந்து அல்லல் பலபட்டு அகதியாக வெளியேறி வந்திருந்த சபேசனின் இளகியிருந்த நெஞ்சத்தில் தேசபக்தி எனும் ஜீவஅமிர்தம் பொங்கித் ததும்பிக் கொண்டிருக் கிறது. பாரதத்தின் தேசிய கீதத்தின் மேல் அவ னுக்கோர் அபாரமான பக்தி; உயிரன்பு. இந்நிலை யில் ஒரு நாள், நச்சியின் காதலியான ரோஸ்லின் என்னும் ஆங்கிலோ இந்தியப் பெண் அந்தக் கீதத்துக்குப் போதிய மரியாதை கொடுக்கத் தவறிய தைக் கண்டு ஆத்திரமடைந்து உணர்ச்சி வசப்பட்டு அவள் மீது ஒரு தட்டை விசிறியெறிந்துவிட்டு வெளியே ஓடி வந்து விடுகிறான். இதனால் அவனுடைய நிலைமை இன்னும் மோசமாகிறது. பர்மாவி லிருந்து வந்த இரண்டாவது கப்பலிலும் அவன் தந்தை ஏனோ வராமல் இருக்கிறார். இதற்கு மேலும் சென்னை நகரில் கிடந்து அல்லல்பட வேண் டாம் என்று எண்ணியவனுச் சொந்தக் கிராமத் துக்குப் புறப்பட்டு விடுகிறான். தன் அன்பு நண்ப னுன அவனை ரயிலேற்றிவிட்டு மனம் உடைந்து வீடு திரும்புகிறான் நச்சி. அவன் மூலம் அந்த விஷயத்தை அப்போதுதான் கேள்விப்படும் வேதா நெஞ்சம் துடித்துக் கண்ணீரில் கரைகிறாள்.

இனி, மேலே படிக்கலாம்.

அத்தியாயம் முப்பத்தொன்று

இதயங்கள் பலவிதம்

வாடிக்கை வீடுகளுக்குப் பால் கறந்து விட்டு மாட்டை ஓட்டிக் கொண்டு திரும்பி வந்து சேர்ந்த கன்னியம்மாள், பொழுது புலர்ந்து இவ்வளவு நேரமாகியும் என்றைக்கு மில்லாத திருநாளாக இன்று நச்சி வெளியில் எங்கும் செல்லாமல், தூங்கி யெழுந்த கோலத்தோடு வீட்டில் உட் கார்ந்திருந்ததைக் கண்டு வியப் படைந்தவளாய் வாசல் நிலையருகி லேயே நின்று அவனை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "இன்னைக்கு மழை தான் வரும்போல இருக்குது!" என்ற வாறு கையிலிருந்த பால் குவளையை 'நங்'கென்று கீழே வைத்தாள்.

தூக்கக் கலக்கம் தெளியாதவனுகத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு சுவரில் சாய்ந்து குந்தியிருந்த நச்சி, பக்கப் பார்வையில் தன் தாயைப் பார்த்துவிட்டுச் சோம்பல் முறித்தவாறு எழுந்து புறக்கடைக்குச் சென்றான்.

"இந்தத் திம்மாக்குப் பொண்ணு எங்கே போச்சு?" என்று ஓர் அலா ரிப்புக் குரலில் கேட்டுக்கொண்டே உள்ளே வந்த கன்னியம்மாள், அப் போதுதான் அடுப்படிக் கட்டைச் சுவருக்குப் பின்னுலிருந்து எழுந்து நின்ற வேதாவைப் பார்த்து, "ஏண்டி, விடியாமூஞ்சி! ஊடு வாசலைக்கூடப் பெருக்காம இன்னுமா உறக்கம் போட்டுக்கிட்டு இருக்கிறே?" என்று இரைந்தாள்.

இரவெல்லாம் தூங்காமல் கண்ணீரி லேயே முகம் அலம்பிக் கொண் டிருந்தவள்போல் காட்சியளித்த வேதா தன் தாயின் இந்தக் கூப்பாட்டைக் கேட்டுச் சற்றே கறுகறுப்படைந்த வளாய் அலங்கோலமாகக் கிடந்த வீடு வாசலைப் பெருக்கிச் சுத்தம் செய்வ தில் முனைந்தாள்.

கன்னியம்மாளிடம் எப்போதுமில் லாத ஒரு மகிழ்ச்சிக் குறுகுறுப்பு இப் போது காணப்பட்டது. மாடப்புரை, திருநீறு டப்பா, உண்டியல் கலயம்— முதலானவற்றைத் துழாவிச் சில சில்லறைக் காசுகளைத் தேடி எடுத்து முந்தானையில் முடிந்துகொண்டு ஓர் அலுமினியக் குவளையுடன் அவசரமாக வெளியே ஓடினவள் சற்றைக்கெல் லாம் திரும்பி வந்தாள். நச்சியும் பல் துலக்கி முகம் கழுவிக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

"ஏன்டா, பையா! காலம்பற எழுந்திருச்சதிலிருந்து வெறும் வவுத் தோடவா கெடக்கிறே? இந்தா, இதிலே கொயாப்புட்டு இருக்குது. துன்னு!" என்றவாறு மடியிலிருந்த பொட்டலத்தை எடுத்து மகனுக்கு எதிரில் பிரித்து வைத்துவிட்டுக் குவளை யில் ஆவி பறந்து கொண்டிருந்த தேநீரை ஆற்றிக் கொடுத்தாள். பிறகு புறக்கடைப் பக்கம் ஓடி, அங்கே மாட்டுக் கொட்டகையைப் பெருக்கிக் கொண்டிருந்த வேதாவைப் பார்த்து, "ராசாத்தி! இன்னைக்கு உன் அண் ணங்காரன் ஊட்லே இருப்பான் போலிருக்குது. மவனுக்கு மத்தியானம் வாய்க்கு வணமா ஏதனுச்சும் ஆக்கிப் போட வாணுமா? நான் ஓடிப் போய் அந்த மோலியார் ஊட்டு அம்மா

கிட்டே ரெண்டோ மூணோ கடன் கேட்டு, சாய்பு கடையிலே அரிசி பருப்பு வாங்கியாறேன். அதுக்குள்ளாற நீ அடுப்பை மூட்டி உலை போட்டு வை; இன்னு?'' என்று சொல்லிக்கொண்டே மீண்டும் வீட்டுக்குள் விரைந்தாள். அவளுடைய குணமும் மனமும் நன்ருயிருந்தால் வேதாவை 'ராசாத்தி' என்று அன்பொழுக அழைப்பது வழக்கம்.

''நைனு, நான் கடைத்தெரு வரை போயிட்டு வறேன், இருக்கறயா ?'' என்றவாறு ஒரு கித்தான் பையை எடுத்துக்கொண்டு புறப்படத் திரும்பியவள் சட்டென்று நின்று, ''ஆமாம்; அந்தப் பர்மாக்கார புள்ளாண்டானோட அட்ரேஸை வாங்கி வைச்சிருக்கிறயாடா? இருந்தா நம்ம வேதாவை விட்டு அவனுக்கு ஒரு லெட்டர் - கடுதாசி எழுதிப் போடச் சொல்றது தானே?'' என்று வெகு அக்கறையாகக் கூறியபடி கம்பீர நடை போட்டு வெளியே சென்ருள்.

குழாய்ப்பிட்டை அப்படியே இழுத்து வைத்துவிட்டு டீயை மட்டும் சுவைத்துப் பருகிக் கொண்டிருந்த நச்சி தன் தாயை வியப்புடன் ஏறிட்டு நோக்கினன். நேற்றிரவு சபேசனைப் பற்றித் தான் சொன்னது அவள் மனத்தில் ஏதோ ஒரு மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கிறது என்பது இந்தப் பேச்சிலிருந்து அவனுக்குப் புலனுகியது. ஆனல் காலம் கடந்த இம்மாறுதலால் இனி எவ்விதப் பயனுமில்லை என்று எண்ணியவனுய் முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

தண்ணீர்க் குடத்துடன் உள்ளே வந்த வேதா, நச்சியின் பக்கம் திரும்பாமலே அடுப்படிக்குப் போய்க் குடத்தை இறக்கி வைத்துவிட்டு உலை ஏற்றி அடுப்பு மூட்டலானுள். அவளையே சற்று நேரம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த நச்சி மெல்லத் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, ''தங்கச்சி ! நீ இன்னும் நாஸ்தா பண்ணலியா? இந்தா, இதை எடுத்துத் துன்னு!'' என்ருன் அலட்சியமாக.

''எனக்கு வேண்டாண்ணு! நீ சாப்பிடு. காலையில் நான் பழைய சோறு சாப்பிட்டுவிட்டேன்'' என்று அவனைத் திரும்பிப் பார்க்காமலே கூறினுள் வேதா.

''அடங்க இஸ்கி! நேத்து ராத்திரியிலிருந்து தங்கச்சி ஒரு தினுசாவே இருக்குதே? சரி; இருக்கட்டும், இருக்கட்டும்!'' என்று கேலிப் புன்னகை பூத்த நச்சி, தெரு வாசற்பக்கமாகப் போய் உட்கார்ந்துகொண்டு, கன்றுக் குட்டி நினைத்த நேரத்தில் பால் குடித்து விடாதிருக்க உபயோகப்படுத்தும் 'வாய்ப் பூட்டு'க் கயிற்றை எடுத்து அதன் அறுந்த பின்னலைச் சரி செய்ய ஆரம்பித்தவன், ''அண்ணு!'' என்ற குரல் கேட்டுப் பின்னல் திரும்பினன். கட்டைச் சுவரோரமாக வந்து தலை குனிந்துநின்றுகொண்டிருந்தாள் வேதா.

''இன்னு, தங்கச்சி?''

ஏதோ சொல்ல வாயெடுத்த அவள் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் தலை குனிந்தாள். நச்சி தன் வேலையில் கவனம் செலுத்தினன்.

சற்று நேரங் கழித்து, ''அன்ருெரு நாள் டீச்சர் வேலைக்கு நான் அப்ளிகேஷன் எழுதிக் கொடுத்துவிட்டு வந்தேன் என்று சொன்னேன் இல்லையா?'' என்ருள் வேதா இழுத்தாற்போல.

''ஆமாம்.''

''இத்தனை நாட்களாகியும் அதுபற்றி ஒன்றுமே தகவல் வரவில்லை, அண்ணு!''

''அது எப்படி இவ்வளவு சீக்கிரம் வந்துடும்? மெட்ராஸ் கார்ப்பொரேசனுச்சே ?''

''அப்படியானல் இன்னும் சில தினங்களில் பதில் வரும் என்கிருயா?''

''வரும், வரும். வேலை காலி இல்லே என்கிற பதில் கண்டிப்பாக வரும்.''

வேதாவின் முகம் சுண்டியது. ''இதற்கு என்ன அண்ணு, பண்ணுவது?'' என்று ஏக்கம் செருமிய குரலில் வினவினுள்.

''வேலை கிடைச்சா புள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கிறேன்னு வேண்டிக்கிட்டு இருப்பே இல்லையா? அதை வேணுமின்னு உடைக்காம இருக்கலாம்!'' என்று கூறி நகைத்தான் நச்சி.

வேதாவுக்கு ஆத்திரமும் அழுகையும் பொங்கிக்கொண்டு வந்தன. ''இதைக் கேட்கத்தானு உன்னிடம் வந்தேன்?'' என்று பொருமினுள் அவள்.

சற்று நேரம் அவளையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்த நச்சி, ''ஆமாம்; நான்தான் முந்தியே சொல்லிப்பிட்டேனே, அந்த டீச்சர் வேலை செய்யணுமென்கிற எண்ணத்தை விட்டுப்பிடுன்னு? இப்ப திரும்பவும் வந்து அதையே கேட்கிறயே, இன்னு அருத்தம்?'' என்ருன் கடுகடுத்த குரலில்.

''இல்லே, அண்ணு! என்னல் வீட்டிலே சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லே. அப்படியிருப்பது ரொம்பவும் கஷ்டமாயிருக்கிறது. அதனுல்தான் உபாத்திமை வேலைக்குப் படிச்சுத் தேறினேன். அந்த வேலை செய்தால் என் மனசுக்கு ஆறுதலாக மட்டுமல்ல, நம் குடும்பத்துக்கும் உதவியாயிருக்கும்.''



''ஓகோ!.... சரி; அதுக்கு என்னை இன்னு பண்ணச் சொல்றே?''

''நீ மனசு வைச்சா எப்படியும் எனக்கு அந்த வேலையை வாங்கிக் கொடுத்துட முடியும், அண்ணு!''

''வாஸ்தவம்தான்'' என்று மெல்லத் தலையாட்டிக் கொண்ட நச்சி, ''ஆனுல் அந்த முயற்சியிலே நானும் நீயும் எதையெல்லாமோ இழக்க வேண்டியிருக்குமே?.....'' என்ருன் தன் வழக்கமான கோணல் சிரிப்புடன்.

அவனுடைய இந்தப் பதிலை வேதாவினுல் புரிந்துகொள்ள முடியவில்லை. பச்சிளங் குழந்தைபோல் அவனைப் பார்த்து விழித்தாள் அவள்.

கையிலிருந்த நார்க் கயிற்றைத் திரித்துக்கொண்டே மீண்டும் அமைதியாகப் பேசினுன் நச்சி: ''ஆமாம், தங்கச்சி! இந்த ஊரிலே இம்மாதிரியான பொதுப் பள்ளிக்கூடங்களிலெல்லாம் ஒரு டீச்சர் வேலை வாங்கணுமின்னு அதுக்குப் பல பெரிய மனுசாளுடைய தயவு வேணும்: சிபாரிசு வேணும்! அதுகளைப் பெறுகிறதுக்காகச் சில சமயம் நீ அவங்களோடு கூட மகாபலிபுரத்துக்கோ, ரெட்ஹில்ஸுக்கோ, பூண்டிக்கோ போயாகணும்! இதெல்லாம் நம்பளைப் போலிருக்கிற மானமுள்ள ஏழைகளாலே முடிகிற காரியமா?.... அதுதான் யோசனை பண்றேன்.....''

''அதாவது, அவர்களுக்கெல்லாம் லஞ்சம் கொடுக்க வேண்டும் என்கிருயா?'' என்ருள் வேதா சிறுபிள்ளைச் சிரிப்புடன்.

இதற்குப் பதில் சொல்ல விரும்பாதவன் போல் சில விநாடிகள் மௌனமாயிருந்த நச்சி, ''அப்படித்தான் வைச்சுக்கோயேன்!'' என்ருன் அலட்சியமாக.

''அதெல்லாம் இல்லை. உனக்குப் பிடிக்காத காரியத்தைச் செய்ய மனமின்றி இப்படி ஏதேதோ சொல்லித் தட்டிக் கழிக்கப் பார்க்கிருய்'' என்று உள்ளார்ந்த கோபத்துடன் முணுமுணுத்த வேதா, சட்டென்று அவனெதிரே போய் உட்கார்ந்து பரிதாபமான குரலில் கேட்டாள்: ''ஏன் அண்ணு! உனக்கு மிகவும் வேண்டியவரான மருதமுத்து நமக்கு இந்த உதவியைச் செய்து தர மாட்டாரா? கார்ப்பொரேஷனில் அவருக்கு நிரம்பச் செல்வாக்கு இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீ அவரைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னுல் போதும்; நிச்சயமாகப் பலன் கிடைக்கும்.''

தேள் கொட்டினுற்போல் திடுக்குற்று நிமிர்ந்த நச்சி அவளை ஒரு விநாடி வெறித்துப் பார்த்து விட்டு வெடுக்கென்று முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, ''போயும் போயும் அந்தச் சோமாறியிடமா போய்க் கேட்கச் சொல்றே? அவனைப் பத்தி உனக்குத் தெரியாது தங்கச்சி! பெத்தவளுக்குப் பாடை கட்டணுமின்னுக்கூட அதுக்கும் கமிஷன் கேட்கிற கயிலாத்து அவன்!'' என்ருன் சினம் கனன்ற குரலில்.

வேதாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்கள் சரசரவென்று நீரைச் சொரிந்தன. அங்கிருந்து சட்டென்று எழுந்து போய் அடுப்படியில் உட்கார்ந்துகொண்டு தேம்பித் தேம்பி அழலானுள்.

அவளுடைய அழுகையை நச்சி சட்டை செய்தவனுகவே தெரியவில்லை. அமைதியாகவும் நிதானமாகவும் அந்த வாய்ப் பூட்டுக் கயிற்றுப் பின்னலைச்செப்பனிட்டு வைத்துவிட்டு எழுந்து, வேதாவை ஒரு கணம் கூர்ந்து நோக்கினுன். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவன் போல் தலையாட்டிக் கொண்டு புறக்கடைப் பக்கம் சென்ருன்.

அவன் சென்ற சற்று நேரங்கழித்து வேர்த்து விறுவிறுத்த கோலத்தில் வீடு வந்து சேர்ந்த கன்னியம்மாள், ''இன்னும்மா ராசாத்தி! உலை கொதிக்கப் போச்சா?'' என்று அன்புடன் கேட்டுக்

கொண்டே மடியை அவிழ்த்து அரிசி, பருப்பு, காய்கறிகளை ஒரு முறத்தில் கொட்டினாள். அவளுடைய பார்வை நச்சியைத் தேடியது. "எங்கே அந்தப் பையன்?....." என்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

இவ்வளவு நேரம் உடல் குலுங்கப் பொருமியழுது கொண்டிருந்த வேதா பரபரப்புடன் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து, "இங்கேதாம்மா இப்ப அண்ணா இருந்துச்சு!" என்றவாறு புறக்கடைப் பக்கம் ஓடி அங்குமிங்குமாகத் தேடினாள். நச்சியைக் காணோம்.

"அவனாவது, ஒரு நாள் ஊட்லே குறியா தங்கியிருக்கிறதாவது! ஊர் சுத்திப் பொறுக்கிப் பையன், ஓடிப்பிட்டிருக்கிறான்! அவனை வெட்டிப் பாடையிலே வெக்க!" என்று ஆக்ரோஷமாக இரைந்து கூவிய கன்னியம்மாள், "ஐயோ! அந்தக் கஸ்மாலத்துக்கு வடிச்சுக் கொட்ட நாலணா வட்டிக்கு ரெண்டு ரூவா கடன் வாங்கிப்பிட்டேனே! அதை எப்படிக் கொடுத்து மீளப் போறேனோ!" என்றாள் ஒப்பாரிக் குரலில். உடனே அவளுடைய கோபம் வேதாவின் மேல் திரும்பியது. "ஏண்டி நாதாரிப் பொண்ணே! அந்த ராஸ்கோல் பையனைக் கொஞ்ச நேரத்துக்காவது இருக்கச் சொல்லக் கூடாது?...... அங்கே இன்னாடி மேக் பார்த்துக்கினு நிக்கிறே? வா, வந்து இதையெல்லாம் நீயே வாரிக் கொட்டி அவிச்சுத் துன்னு!" என்று சீறினாள்.

"யக்கோவ்! இப்படிக் கொஞ்சம் வர்றியா?"

ஆத்திரமும் சோர்வுமாக முந்தானையை விரித்துப் போட்டுப் படுத்த கன்னியம்மாள் இந்தக் குரல் கேட்டு, "யாருடீ, அது?" என்று சலிப்புடன் வினவியவாறு வாசலுக்குச் சென்றாள்.

அங்கே, பக்கத்து வீட்டுக் குயக் கிழவனின் மருமகள் பரபரப்போடு ஓடி வந்து, "யக்கோவ்! அந்தப் பயில்வான் அண்ணாத்தை ரொம்ப டேஞ்சரா கெடக்கிறாராமே! சேப்பங் கட்டி இஸ்க்குதாம்! சனமா சனம் போய்ப் பார்க்குது! நீ போவலியா?" என்று கேட்டாள்.

நிடுக்குற்றுக் கழுத்தை நீட்டிய கன்னியம்மாள், "இன்னாடி பொண்ணே இது, கதையாக் கீது? முந்தாநாள்கூட அந்த மனுசன் திண்ணை மேலே கட்டைத் துண்டு மாதிரி உட்கார்ந்துக்கினு என்னைப் பார்த்துச் சத்தாய்ச் சாரே!" என்று வியந்து குழறியவள், அவசரமாக முந்தானையை வரிந்து சுற்றிச் செருகிக்கொண்டு, "அட, பாவி மனுசா! நான் அப்பவே சொன்னேனே, கண்ட பாத்தாளியெல்லாம் குடிச்சு வவுத்தைப் புண்ணாக்கிக்காதே — திடீர்னு ஒரு நாள் காலை நீட்டிப்பிடுவேன்னு—கேட்டியா?" என்று பிலாக்கணக் குரலில் கூவிக் கொண்டே பயில்வான் தம்பையாவின் வீட்டை நோக்கி ஓடினாள்.

அந்த வீட்டின் எதிரே ஜனங்கள் கும்பலாகக் கூடி நின்றனர். தலைவிரி கோலமாக ஓடி வந்த கன்னியம்மாள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே பாய்ந்தாள். அங்கே, கூடத்து அறையில் சீடப் பிள்ளைகள் புடைசூழ நார்க் கட்டிலில் ஸ்மரணையின்றிப் படுத்துக் கிடந்தான் தம்பையா.

"அண்ணாத்தே! என்னை விட்டுட்டுப் போவப் போறியா அண்ணாத்தே?" என்று அலறிக்கொண்டே தம்பையாவின் காலடியில் விழுந்த கன்னியம்மாள் சிறிது நேரம் ஒப்பாரி வைத்து அழுது விட்டு மூக்கைச் சிந்தியவாறு எழுந்து, சுற்றிலும் நின்ற சீடப் பிள்ளைகளை வெறித்து நோக்கி, "ஏண்டா, தீவட்டிப் பசங்களா! சும்மா குருவைப் பார்த்துக்கிட்டு நின்னு இன்னாங்கடா புரோசனம்? அடையாத்திலே இவரோட அம்மா, அண்ணங்காரங்களெல்லாம் இருக்கிறாங்க; யாராச்சும் ஒருத்தன் ஓடிப் போயி சமாசாரத்தைச் சொல்லி அவங்களைக் கூட்டியாறக் கூடாது?" என்று சீறினாள்.

"இப்பத்தான் அய்த்தே, உன் மவன் நச்சி அடையாத்துக்குச் சைக்கிள்ளே ஓடியிருக்கிறான்!" என்றான் ஒரு சீடன்.

வியப்புக் கலந்த பெருமையுடன் புன்னகை பூத்த கன்னியம்மாள், "போயிருக்கிறானா?..... இன்னா இருந்தாலும் என் மவன், மவன்தான்!" என்று நெஞ்சைத் தொட்டுக் கூறியபடி தன்னுடைய முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"இன்னா, கன்னீம்மாக்கா! இந்தப் பயில்வானுக்குச் சொந்தக்காரங்ககூட இருக்கிறாங்களா?" என்று அந்தப் பேட்டைக்குப் புதிதாகக் குடி வந்திருந்த ஆப்பக்காரி யொருத்தி வெகு அக்கறையாக வினவினாள்.

"இல்லாம இன்னாடி? ஊடும், வாசலும், காரும், பங்களாவுமா எல்லாரும் இந்த ஊரிலேதான் இருக்கிறாங்க! இது தலையெழுத்து, இப்படி ஓரிப் பரதேசியா கெடந்து பதங்குலையுது!" என்று சலிப்புடன் நீட்டி முழக்கிய கன்னியம்மாள், மோவாயை ஒரு கையால் தாங்கிக் கொண்டு மேலும் கூறத் தொடங்கினாள். (தொடரும்)

கவர்ச்சியுடன் இருப்பது எப்படி?



பிரமாதமான பருத்திப் ப்ரிண்ட் உடுத்திப் பாருங்கள். புகழ் மாலைகளாய் வந்து குவியும். பிரதியொரு உடை, மனோபாவம், சந்தர்ப்பம் ஆகியவற்றுக்கு ஏற்ற ப்ரிண்டுகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சாயம் தோய்த்த ப்ளெயின் பாப்ளின் ரகங்கள் பல உள்ளன. டிக்காக, ஜிலுஜிலுவென, அதி கம்பீரமாகத் திகழ உதவுகின்றன. நீண்டகாலமும் உழைக்கின்றன. அணிந்து பார்க்கலாமே!

பருத்தி ப்ரிண்டோ, சாயம் தோய்த்த ப்ளெயின் பாப்ளினோ, எது வாங்கினாலும் ஸாயாஜி அல்லது சுபலக்ஷ்மி என்று குறிப்பிடுவது லாபகரமானது.


ஸாயாஜி மில்ஸ் நெ.1 (பரோடா) மற்றும் நெ.2 (பம்பாய்)
சுபலக்ஷ்மி மில்ஸ் லிட். (கேம்பே)

SHBI-BP.17 TM


உங்கள் வீட்டுத் தோட்டம் இத்தனை அழகாக இருப்பதன் காரணம் இப்போதுதான் புரிகிறது.
உரியவர் கவனித்தால் எதுவுமே இப்படித்தான் இருக்கும்.
எனக்குப் பூச்செடிகள் என்றால் உயிர். உங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். உள்ளே போகலாம் வாருங்கள்.
அவள் எங்கே?
கதை கௌசிகன்
சித்திரம் ரமணி.
17
உங்கள் தங்கையின் அறையிலிருந்து கைப்பற்றிய பொருள்களைப் போலீசார் உங்களிடம் ஒப்படைத்து விட்டார்களில்லையா?
போன வாரம்தான் இரண்டு பெட்டிகளில் அவை வந்தன. நான் அவற்றைத் திறந்து கூடப் பார்க்கவில்லை.
சந்துரு அதில் ஏதாவது புதையல் எடுப்பான்.
வண்ணப் புடவைகளில் எண்ண முடியாத அளவு. அலங்காரப் பொருள்கள் ஓர் அம்பாரம்...!
பெட்டியில் இருந்த பொருள்களில் ஒரு டைரியும் ஒரு போட்டோ ஆல்பமும் சந்துருவின் சோதனைக்குள்ளாகின்றன. டைரியில் சில பக்கங்கள் கிழிக்கப்பட்டிருக்கின்றன. போட்டோ ஆல்பத்தில் மாலதியின் கவர்ச்சிப் படங்களின் இடையே சில போட்டோக்கள் கிழித்தெறியப் பட்டிருக்கின்றன.
கிழித்து எறியப்பட்ட படங்களில், மாலதியோடு அந்த மர்ம மனிதனும் இருந்திருக்க வேண்டும்.
அந்த மர்ம மனிதன் யாராக இருக்கலாம் என்ற விடுகதைக்கு ஏதாவது விடை கிடைத்ததா?
ஒரு குறிப்பிட்ட நபரைச் சுற்றித்தான். இப்போது சந்துருவின் சிந்தனை எல்லாமே...ம்...இந்தப் படத்திலுள்ளவரை உங்களுக்குத் தெரியுமா பாருங்கள்.
இவரை எங்கோ பார்த்திருக்கிறேனே...ம்... எங்கே...?


உங்களைக் காக்க வைத்து விட்டேன, மன்னிக்கவும்.
அப்படி யொன்று மில்லை - மாதர் நல சேவா சங்கத் தின் ஆண்டு விழா வுக்கு நீங்கள் தலைமை தாங்க வேண்டும். மறுக்கக் கூடாது.
அடக்கத்திற்கு இருப்பிடமான நீங்கள் தலைமை தாங்கி எங்களுக்கு ஆசி வழங்க வேண்டும்.
உங்கள் தலைமையில் எங்கள் சங்கத்துக்கே ஒரு கௌரவம் ஏற்படும்..
உங்கள் முகம் ரொம்பப் பரிச்சயமானது போல இருக்கிறதே. இதற்கு முன்பு நாம் எங்காவது சந்தித்திருக்கிறோமோ?
நகரின் பிரமுகரும் பண்பாளருமான உங்களை நான் பல மேடைகளில் பார்த்திருக்கிறேன். ஆனால் என்னை நீங்கள் பார்த்திருக்க நியாயமில்லையே.
ஆ...! இது நீதிபதி தர்மராஜன் அவர்களின் படமல்லவா? இவருக்கும்...?
நாம் தேடிக் கொண்டிருக்கும் மர்ம மனிதன் நீதிபதி தர்மராஜன் என்ற முடிவுக்கா வந்திருக்கிறீர்கள் சந்துரு?
சிரிக்காமல் என்ன செய்வது மிஸ்டர் சந்துரு? நகரின் மிகப் பெரிய மனிதர். தர்மத்தின் காவலர். நீதிக்கும் நேர்மைக்கும் இருப்பிடமான ஆசாரசீலர். அன்புள்ளம் படைத்தவர் என்றெல்லாம் மக்கள் ஒருமுகமாகப் பாராட்டும் ஒருவரைக் கொலைகாரன் என்று குறிப்பிட்டால் நம்மை ஊரார்...
ஏன் இப்படிச் சிரிக்க வேண்டும் ரேகா.
நீதிபதி அவர்களின் வாழ்க்கையின் ஒரு பக்கத்தைத்தான் ஊரார் பார்த்திருக்கிறார்கள். வெளித் தெரியாத அவருடைய வாழ்வின் மறுபக்கத்தைக் காணும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படவில்லை. இரட்டை வாழ்வு வாழும் அவரை உங்கள் தங்கை மாலதி தம் பலத்துக்குக் கொண்டு வந்து விட்டாள்.

தொடரும்..



காலச்சக்கரம்

கி. ராஜேந்திரன்

பூர்வ கதை

பள்ளிச் சிறுவன் தங்கப்பனுடன் உஷா விளையாடக் கூடாதெனத் தடுக்கப் படுகிறாள். தங்கப்பன் 'கள்ளுக் கடைக் கண்ணுச்சாமியின் மகன்' என்ற ஏச்சுப் பேச்சு சத்தியபுரியில் நிலவுகிறது. அவன் அவமானத்துக் குள்ளாகிறான். செல்லப் பெண்ணாக வளரும் சிறுமி உஷாவின் தகப்பனார் எம். எல். ஏ. அந்நாளில் மது விலக்குப் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கண்ணுச்சாமியின் கள்ளுக்கடை முன்னால் மறியல் செய்து தடியடி பட்டுச் சிறை சென்றவர். ஆகவே உஷா கண்ணுச்சாமி தான் தன் தகப்பனார் தடியடி படவும் சிறை செல்லவும் காரணம் என்று குழந்தைத்தனமாக நம்பி அவன் மகனை தங்கப்பனை அடியோடு வெறுக்கிறாள். தாழ்வு மனப்பான்மையினால் நொடிந்த தங்கப்பனுக்கு உபாத்தியாயர் மாருதி தைரியம் சொல்கிறார்.

இவையெல்லாம் நேற்றையக் கதை. இன்று தங்கப்பன் படித்துப் பட்டம் பெற்றவன். உஷாவின் தகப்பனார் தீனதயாளு இன்று தமிழக சர்க்காரில் ஒரு மந்திரி. உதகையில் இரண்டு வருஷ இடைவெளிக்குப் பிறகு உஷாவைச் சந்திக்கும்போது வயதுக்கு மீறிய அவளது வளர்ச்சியையும் வனப்பையும் கண்டு பிரமிக்கிறான் தங்கப்பன். உஷா அவனைத் துச்சமாகக் கருதிப் பேசிச் செல்கிறாள்.

தன் தகப்பனார் பல பேருடைய குடியைக் கெடுத்துச் சேர்த்ததாகக் கருதப்படும் சொத்தைப் பல குடும்பங்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் விதத்தில் எவ்விதம் பயன்படுத்துவது என்று யோசித்து அத்திட்டம் நிறைவேறும் வரை தனக்கு நிம்மதி பிறக்காது என்று உணர்கிறான் தங்கப்பன். நிலத்தையெல்லாம் விற்று ஒரு தொழிலகத்தைத் தொடங்க எண்ணுகிறான்.

திருமணம் செய்து கொண்டால் தன் லட்சியக் கனவுக்கு இடையூறாக இருக்குமெனக் கருதி அதை ஒத்திப் போட நினைக்கிறான். அவனிடம் மட்டிலாத காதல் கொண்ட அவனது முறைப் பெண் செல்லம், உஷாவை உதகையில் சந்தித்ததிலிருந்துதான் தங்கப்பன் தடுமாறுகிறானோ எனக் கருதிக் கலங்குகிறாள். தங்கப்பன் சிரிக்கிறான். 'உஷாவை நான் மணப்பதாவது? மந்திரி தீனதயாளு என்னை ஒரு பொருட்டாக மதித்துப் பெண் கொடுக்க முன்வருவாரா? அதற்கு முன்னால் உஷாவே என்னை அவமானப்படுத்தி அனுப்பி விடுவாள்!' என்கிறான்.

செல்லம் தன்னம்பிக்கை பெறுகிறாள். திருமணம் இப்போதைக்கு இல்லை என்றதும் கோபத்துடன் போகும் தன் பெற்றோரைச் சமாதானப்படுத்திச் சென்னைக்கு அழைத்துச் செல்கிறாள்....

அத்தியாயம் 20

திறப்பு விழா

"தாமரைத் தொழிலகம்" திறப்பு விழாவை முன்னிட்டுச் சத்தியபுரி இன்று ஏறக்குறைய திருவிழாக் கோலம் பூண்டு விளங்கியது. சத்தியபுரித் தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தமிழக சர்க்காரில் முக்கியமானதொரு மந்திரி பதவி வகிக்கும் தீனதயாளு இந்தத் திறப்பு விழாவை உத்தேசித்தே எத்தனையோ வேலைகளுக்கிடையில் இரவோடு இரவாகக் காரில் கிளம்பி வந்திருக்கிறாராம். அதிகாலை ஐந்து மணி சுமாருக்கு காந்தி பூங்காவை யொட்டி அமைந்துள்ள தமது இல்லத்துக்கு வந்து சேர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறாராம்.

பிற்பகல் மூன்று மணியிலிருந்தே மக்கள் இவ்வாறாகவெல்லாம் பரபரப்புடன் பேசிக்கொண்டே தொழிற்சாலைக்குப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த விசாலமான பந்தலுக்குச் சாரிசாரியாக வந்து குழும ஆரம்பித்து விட்டார்கள். தொழிலகத்தைச் சென்றடையும் பாதை நெடுக மூவர்ணக் கொடிகளும் தோரணங்களும் அலங்கரித்தன. அதன் முடிவில் அழகுற அமைந்த அகலமான நுழைவாயில். பசுமையான தென்னை ஓலைக் கீற்றுக்களாலும், வண்ணத் துணிகளாலும் உருவான அந்தச் சிங்கார வாயிலின் இரு பக்கமும் குலை தள்ளிய வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்தன. ஆங்காங்கே, "சத்தியபுரி அளித்த தவச் செல்வமே வருக, வருக!", "தீனர்களின் துயர் தீர்க்கும் தீனதயாளுவே வருக, வருக!" என்பது போன்ற புகழுரைகளுடன் கூடிய வரவேற்பு வளைவுகள் காட்சி தந்தன. 'தான் கொடுத்த நூறு ரூபாயிலா இத்தனை காரியமும் நடந்திருக்கிறது?' என்று அதிசயித்தான் தங்கப்பன். திறப்பு விழாவையொட்டி அலங்கார ஜோடனைகள் செய்ய முன் வந்த சிலரிடம் தனக்கு அவை போன்ற ஆடம்பரமெல்லாம் அதிகம் பிடிக்காதென்று கூறி ஐம்பது ரூபாயை எடுத்துக் கொடுத்திருந்தான் தங்கப்பன்.

அவர்கள் உதட்டைப் பிதுக்கியவாறு, அதிருப்தியுடன் அசையாது நிற்கவே வேண்டா வெறுப்பாக மேலும் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களை நீட்டியிருந்தான். ஐந்நூறு ரூபாய்க்குக் குறைவில்லாமல் செலவாகியிருக்கும் அவர்களுக்கு என்று இப்போது மதிப்புப் போட்டான். இதுபற்றி அவன் வியந்துகொண்டிருக்கையில், ''இதில் அதிசயம் என்ன தம்பி! மந்திரி ஒரு முக்கியமான காரியமாக இங்கு வருகிருரென்ருல் உள்ளூரிலும் பக்கத்திலேயே உள்ள தொழிலதிபர்கள் மிகுந்த கோவையிலும் ஓராயிரம் ரூபாய் வசூலிக்க முடியாமலா போய்விடும்? மீதம் ஐந்நூறு ரூபாயை இந்தத் தடபுடலை ஏற்பாடு செய்தவர்கள் தங்களுக்குள் பகிர்ந்துகொண்டிருப்பார்கள். பாவம் அவர்களும் வாழவேணும் அல்லவா? இதுவே தானே தொழில் அவர்களுக்கு!'' என்ற மாருதி மேலும் தொடர்ந்தார்: ''தீனதயாளுவும் சாமர்த்தியத்தை இனிமேல் யாராவது சொல்லிக் கொடுத்தா தெரிந்து கொள்ளப் போகிருர்? வரப் போகும் தேர்தலை முன்னிட்டு இந்த விழாவைத் தமது சொந்த வெற்றியாகவே அவர் மாற்றிக் கொண்டுவிடுவார்! இத்தனை மக்களுக்கு நீ என்ன அழைப்பா அனுப்பினுய்? தீனதயாளுவின் நன் முயற்சியால் சத்தியபுரிக்கு ஒரு தொழிலகமே கிடைத்திருப்பதாக அல்லவோ அந்த ஜனங்கள் நம்பி வாழ்த்த வந்திருக்கிருர்கள்! பத்துப் பன்னிரண்டு மைல் தொலைவில், கோவையில், தொழில்வளர்ச்சி பிரமாதமாயிருந்தாலும் சத்தியபுரிக்கென்று ஒரு தொழிலகம் இப்போதுதானே தோன்றியிருக்கிறது? அந்தப் பெருமை அவர்கள் உள்ளங்களில் இன்றைக்கு நிலவுமில்லையா?''

''நான் பட்ட பாடும் போட்ட முதலும் கணக்கில்லையா?'' என்று பொருமினுன் தங்கப்பன்.

''ஏனில்லை? அத்துடன் சர்க்கார் கொடுத்த கடனையும் கணக்கில் சேர்த்துக்கொள்!''

''அதற்கு மக்களிடம் நன்றி தெரிவிக்கிறேன்; உரிய முறையில். வட்டியும் முதலுமாய்த் திருப்பித் தரப் போகிறேன்! பொதுமக்களின் வரிப் பணத்தைக் கடனுக வாங்கி விழுங்கி ஏப்பம் விடுபவன் நானில்லை! பொறுப்புடன் நடந்துகொள்ள எனக்குத் தெரியும்!''

''உனக்கு அந்தக் கடன் அவசியத் தேவையாகத்தானே இருந்தது? அதுவும் தீனதயாளுவின் சிபாரிசு மூலமாகத் தானே கிடைத்தது?''

''தமது சொந்தப் பணத்தை எடுத்துக் கொடுத்துவிடவில்லையே அவர்?''

''அது எப்படியோ என்னவோ தம்பி! அவர் உன்னை ஒரு கருவியாகக் கொண்டு இந்த ஊருக்கு நல்லதொரு தொழிலகத்தை உருவாக்க முயற்சி எடுத்துக் கொண்டு வெற்றி பெற்றதாகத்தான் ஜனங்கள் நம்புவார்கள். அதற்கு வேண்டிய பிரசார ஏற்பாடுகளெல்லாம் ஏற்கெனவே நடந்து விட்டன. அது எப்படியோ தொலையட்டும். நேரமாகிறது; நீ இப்போது நேரில் போய் அவரை அழைத்துவிட்டு வா!''

சென்னையிலிருந்த மந்திரியிடம் கடிதத் தொடர்பு கொண்டு அவர் திறப்பு விழாவுக்கு வரச் சம்மதிக்கச் செய்



இருந்த போதிலும் சத்தியபுரிக்கு அவர் வந்துவிட்ட பிறகு மரியாதைக்கு அவர் வீட்டுக்குச் சென்று நேரில் ஒரு முறை அழைத்துவிட வேண்டியதன் அவசியத்தைத்தான் மாருதி வலியுறுத்தினார். இதன்பொருட்டுப் புறப்பட்ட தங்கப்பனின் உற்சாகம் பெருமளவு குறைந்துவிட்டிருந்தது இதற்குள்ளாக.

தன் வாழ்க்கையில் இது ஒரு திருப்பத்தை ஏற்படுத்தப் போகிற பொன்னான நாள் என்று சற்று முன்புவரை ரொம்பவும் குதூகலித்துக் கொண்டிருந்தான் தங்கப்பன். தன் அபிலாஷைகள் நிறைவேறும் இந்தத் தினமும் வருமா என்று எத்தனை பயப்பட்டான்! இந்த லட்சியக் கனவு நினைவாக எவ்வளவு போராடினான்! எத்தனைபேரைப் பகைத்துக்கொண்டான், அதிருப்திப்படுத்தினான், துயரத்தில் ஆழ்த்தினான்! எவ்வளவு சண்டை போட்டான்! நினைக்க நினைக்க ஏதோ மங்கி மறையும் கனவுகள் போலிருந்தன அந்த நிகழ்ச்சிகள். கனவுகள் நனவாக நிலைக்கும்போது நினைவுகள் கனவாகத் தேய்வதை உணர்ந்து மெல்லத் தனக்குள் நகைத்துக்கொண்டான் தங்கப்பன்.

தன் மானம் கப்பலேறிவிட்டதாகக் கதறினாள் தாயார் தாமரை. அன்னை கொடுத்த வாக்கை நிறைவேற்றாத மகனைப் பெற்ற வயிற்றில் அடித்துக் கொண்டாள். ''என் பெண்ணிடம் என்ன குறையைக் கண்டே நீ?'' என்று நாத் தழுதழுக்கக் கேட்டுக் கண்ணீர் பெருக்கினாள் சொர்ணம். அம்மாவையும் பிள்ளையையும் திருப்திப்படுத்துவதற்காகவே மஞ்சள் நீராட்டு விழாவின்போது மூவாயிரம் ரூபாய்வரையில் கடன் பட்டதாகக் கூறிச் சீறினார் மாமா சபாபதி. ''முடியாதுன்னா அதை முன்னாலேயே சொல்லித் தொலைக்கிறதுக்கென்ன?'' என்று அனலாகக் கோபித்தார் அவர்.

''அதை நீங்களும் நேரடியாகக் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டிருந்திருக்கலாமில்லையா? உங்களுக்குக் கேட்க இருந்த தயக்கம் எனக்கு மறுக்க இருந்திருக்கப்படாதோ? அம்மா சம்மதம் கொடுத்தாங்கன்னா அது பாதிக் கிணறு தாண்டிய கதைதானே? என் அபிப்பிராயம்தானே முக்கியம்?''

உதகைக்கு அழைத்துப் போய் பில் தொகையை யெல்லாம் தங்கப்பனை கொடுத்ததை இடித்துக் காட்டினார் அவர். ''மாப்பிள்ளையா வரப்போறவன்தானேன்னு சும்மா இருந்தேன்.. எனக்குக் கௌரவமில்லையா? மானமில்லையா? வேணுமின்னே என்னை இப்படி அவமானப்படுத்தணும்னு எத்தனை நாளா திட்டம் போட்டிருந்தே?''

அவர் வீசி எறிந்த பணத்தைப் பொறுக்கினான் தங்கப்பன். ''லக்ஷ்மியைத் தூற்றாதீங்க, என்பேரிலே இருக்கிற கோபத்தில். கல்யாணம் இல்லை என்றாலும் பில்லைக் கொடுத்ததினால் உங்கள் மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும் என்று நினைச்சுத்தான் செய்தேன். அது நேர் விரோதமான வேலை செய்துடுச்சு உங்களிடம்.''

செல்லம் குறுக்கே புகுந்து நல்ல வார்த்தைகள் சொல்லிப் பெற்றோரை அப்பால் அழைத்துப் போனாள். தனது



●

ஒருத்தி: நான் அவளிடம் சொல்லாதே என்று சொன்ன ரகசியத்தை நீ அவளிடம் சொல்லிவிட்டாயாமே!

மற்றொருத்தி: நான் சொன்னதாக உன்னிடம் சொல்லிவிடாதே என்று அவளிடம் படித்துப் படித்துக் கூறியிருந்தேனே!

ஒருத்தி: அப்படியா? நான் உன்னிடம் கேட்டதாக அவளிடம் போய்க் கேட்டு வைக்காதே!

●



வாக்குவாதத் திறனை யெல்லாம் பயன்படுத்தி அவர்களை அடங்கி யிருக்கச் செய்தான். உணர்ச்சிக்கொந்தளிப்புக்கள் கொஞ்சம் ஓய்ந்த பிறகு, இப்போது அப்படி ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை என்றும் தங்கப்பனுக்கே செல்லத்தை மணம் முடித்துக் கொடுக்கும் சாத்தியக் கூறுகள் இன்னமும் இருப்பதையும் புரிந்துகொண்டு அவர்கள் சென்னைக்குக் கிளம்பினார்கள். மனக் கசப்பிருந்தாலும் அடியோடு உறவை முறித்துக்கொள்ளாமல் பிரிந்தார்கள். அவர்கள் தலை மறைந்து தங்கப்பன் பெருமூச்சு விட்டு முடிவதற்குள்ளாகத் தாய் மாமன் முருகேசன் வந்தார். ''எனக்குத் தெரியும் தம்பி பட்டணத்துக்குப் போய்ப் படிச்சதினாலே பழைய மனுஷங்களை மறந்துட மாட்டான்னு; என்னதானிருந்தாலும் என் தோள் மேலே ஏறி உட்கார்ந்துக்கிட்டுத் திருவிழாப் பார்த்தவனில்லையா தங்கப்பன்'' என்று உரிமை கொண்டாடிக்கொண்டே வந்தார்.

'எல்லாச் சோதனைகளையும் சேர்ந்தே அனுபவித்து விடுவோம்; இன்னொரு நாளைக்கென்று இதை ஒத்திப் போட வேண்டாம்' என்று கருதியவனாய்த் தங்கப்பன் விரல் விட்டு எண்ணியபடியே பளிச் பளிச்சென்று விஷயங்களை விண்டு கூறினான்: ''ஒன்று, உங்கள் மகளை எனக்குப் பிடிக்கவில்லை. இரண்டு இத்தனை நாட்களாக நீங்க என் அப்பா விட்டுப் போன நிலங்களைப் பராமரிச்சு வந்ததுக்கு நன்றி தெரிவிக்கிற அளவிலே நீங்க இது வரை கணக்குகளிலே பண்ணி இருக்கிற தகிடுதத்தங்களையும் அம்மாவை நல்லா ஏமாத்தியதையும் மறந்து விடுகிறேன்; கோர்ட்டு, கேஸுன்னு போகாமல் இருந்துடறேன். மூணு, நிலங்களை யெல்லாம் விற்று, நான் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப் போகிறேன். அது எழும்புவதற்குத் தேவையான நல்ல இடமாகக் குறைந்தபட்ச அளவுக்குத்தான் நிலம் எனக்குத் தேவை. மிகுதியையெல்லாம் வேணுமான விலையை நிர்ணயம் பண்ணி நீங்களே வாங்கிக்கிடுங்க!''

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக விழுந்த இடிகளைத் தாங்க முடியாமல் பதறினார் அவர். ''நீ என்னடா உசத்தி? என் பெண்ணை ஹோட்டல்காரனுக்குக் கல்யாணம் பண்ணிவைப்பேன்! அரிசியா விற்றால் 'மிராசுதார்' என்கிறது; 'அவன் தங்க அரைஞாண் போட்டுக்கிட்டிருக்கான்'னு வாயைப் பிளக்கிறது! அதே அரிசியை அரைச்சுக் கொடுத்தால் 'ஹோட்டல்காரன்'னு இளக்காரம் பண்றது. எனக்கு அதெல்லாம் ஒண்ணும் லட்சியமில்லை; தெரிஞ்சுக்கிடு! எப்படியும், 'கள்ளுக் கடைக்காரன் மவன்தான் நான்'னு நீ நிருபிச்சுடுவேங்கிறது நான் முன்பே எதிர் பார்த்ததுதான்!''

''மாமா!'' என்று பற்களை நறநற வென்று கடித்தபடி அதட்டி அழைத்தான் தங்கப்பன். ''மறுபடியும் இந்த வீட்டு வாசற்படியை மிதிக்காதீங்க! அப்புறம் நீங்க நினைக்கிறதுக்கு அதிகமாகவே நான் நிருபிச்சுக் காட்டிடுவேன்! உங்க எலும்புங்க கதி என்ன ஆகும்னு விவரமாச் சொல்ல நான் இப்போ விரும்பலே!''

''எல்லாம் அந்த மாருதி பண்ணற சதி! உன் தலையைத் தடவ அவன் தீர்மானிச்சுட்டான்! அதுக்கு முதல் படியா அக்காளையும் என்னையும் பிரிக்கத் திட்டம் போட்டிருக்கான்! ஏமாந்துபோய் அப்புறமா பல்லை இளிக்காதே! நான் வறேன்! பூனைக்கும் ஒரு காலம் வரும் என்கிறதை மறந்துடாதே; அப்போ உன்னைக் கவனிச்சுக்கிடறேன்!'' என்றெல்லாம் சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஏதேதோ உளறிக் கறுவிச் சென்றார் முருகேசன்.

அவர் செய்த தவறுகளை யெல்லாம் உணர்ந்தாலும் சகோதர பாசம் காரணமாய்க் கண்ணீர் பெருக்கிய தாமரையை ஆசுவாசப்படுத்துவது பெரும் பாடாகி விட்டது தங்கப்பனுக்கு.

இத்தனை அமர்க்களத்துக்கிடையிலும் சற்றும் அமைதி இழக்காமல் அனுதாபத்துடன் பிரச்னைகளை அணுகி, நல்ல ஆலோசனைகளைத் தங்கப்பனுக்குக் கூறி வந்தவர் மாருதிதான். அதை எண்ணியதும் இப்போதும் கனிவும் அன்பும் கூடிய மனம் நெகிழ, கண்ணீர் மல்க நடந்தான் தங்கப்பன், தீனதயாளுவின் வீடு நோக்கி.

(தொடரும்)

✳ ✳ ✳ பின்னியின் தூய பட்டு-பிரத்தியேக வகைகள் ✳ ஷாட் ஸில்க் புடவைகள் ✳ ஜார்ஜெட், ஷிப்பான், மேன்பட்டு தினுசுகள் ✳ கண்ணியமான தோற்றமளிக்கும் தூய ஸில்க் ஷர்ட்டிங்.

கண்கவரும் பல மோஸ்தர்களில் கிடைக்குமிடம்:

வேங்கடேஷ் வஸ்திராலயா

ஷோரூம்: ஹைகோர்ட் எதிரே, சென்னை-1

மானேஜிங் பார்ட்னர்: S. வெங்கடேச்வர அய்யர்



JWT/VV/1775


கல்கி
சரித்திரக் கதை
விஞ்ஞானக் கதை
காதல் கதை
உணர்ச்சிக் கதை
இலக்கியக் கதை
புராணக் கதை
வேதாந்தக் கதை
நாட்டுப்புறக் கதை
கிராமியக் கதை
ஹாஸ்யக் கதை
பிரச்னைக் கதை
திருப்பக் கதை
கேலிக் கதை
சிறுகதைச் சிறப்பு மலர்
கவிதைக் கதை
மர்மக் கதை
துப்பறியும் கதை
குட்டிக் கதை
KALKI
1-8-1965

எந்த ஸ்டேஷனையும் தெளிவுடன் கேட்டு ரஸிக்க

நேஷனல் எக்கோ


அளிக்கும் கவர்ச்சியான புது மாடல்கள்



இந்தியாவில் ரேடியோ உற்பத்தியில் முன்னோடிகளான நேஷனல்—எக்கோ பெருமிதத்துடன் அளிக்கும் மூன்று புதிய மாடல்கள்: U-819, U/A-806, A-829. நேஷனல்—எக்கோவின் உன்னத தன்மைக்கு உதாரணமான இவை ஒவ்வொன்றும் தர நிர்ணய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டவை.. இவற்றின் இயற்கையான, தெளிவிய, நாதத்தை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள். இன்றே உங்கள் அருகில் உள்ள நேஷனல்-எக்கோ வியாபாரியிடம் சென்று, நீங்கள் விரும்பும் ஸ்டேஷன்களை வைத்துக் கேளுங்கள்!

விலைகள் எக்ஸைஸ் ட்யூடி உள்பட. வரிகள் தனி.

மாடல் U-819:
ஏஸி/டிஸி ஸெட். 5 வால்வுகள், 3 வேவ் பாண்டுகள். பேக்லைட் பெட்டி. ரூ. 298.00



மாடல் 806:
6 வால்வுகள், 3 வேவ் பாண்டுகள். நவீன மாதிரி அழகிய மரப்பெட்டி. மாடல் A.806, ஏஸி ஸெட். மாடல் U.806, ஏஸி/டிஸி ஸெட். ரூ. 395.00



மாடல் A-829: ஏஸி ஸெட்.. 6 வால்வுகள், 4 பாண்டுகள். பர்மனெண்ட் மாக்னெட் ஸ்பீக்கர்; பேஸ், ட்ரெபில், மற்றும் மீடியம் நாதத்துக்கான 3 புஷ் பட்டன் டோன் கண்ட்ரோல்கள். பாண்டுகள் தேர்வுக்கு பியானோ கீ அமைப்பு. ரூ. 481.00

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்

பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி . பெங்களூர் . ஹைதராபாத் . பாட்னா

நேஷனல் எக்கோ ரேடியோக்கள்

இந்தியாவிலேயே மிகப்பெரிய ரேடியோ ஃபாக்டரியின் தயாரிப்பு

JWT-GRA-3033A

கவிஞன் இட்ட தீ!

அகிலன்

கவி அரசராம் கபிலரின் கண்களிரண்டும் வேல் பட்ட புண்களெனச் சிவந்து கண்ணீர் உதிர்த்துக் கொண்டிருந்தன. கூரைக் குடிசையொன்றின் வாயிலில் நின்றவண்ணம் தம் எதிரில் ஒரு குப்பை மேட்டின் மீது ஏறி நின்று வேடிக்கை பார்த்திருந்த இரு பெண்களையே வேதனையுடன் பார்த்துக்கொண்டிருந்தார் அவர். பெண்களில் ஒருத்தி அங்கவை; மற்றொருத்தி சங்கவை. இருவரும் பறம்பு நாட்டரசன் வேள் பாரியின் செல்வப் புதல்வியர். திருமணப் பருவம் எய்தியவர்கள்.

''ஐந்து ... ஆறு ... ஏழு ...'' என்று அவர்கள் தெருவில் ஊர்ந்து சென்ற வண்டிகளை எண்ணிக் கொண்டிருந்தார்கள். உப்புப் பொதிகளைச் சுமந்து சென்ற மாட்டு வண்டிகள் வரிசையாகத் தெருவில் அசைந்தாடிச் சென்றன.

''கண்கள் செய்த பாவம் இது!'' என்று கவிஞர் தமக்குத் தாமே சொல்லிக்கொண்டு தம் கரங்களால் கண்களை மூடிக் கொண்டு விம்மத் தொடங்கினார். அப்போது கூரைக் குடிசைக்குள்ளிருந்து மற்றொரு பெண்மணி வெளியில் வந்தார். அவருக்கு வயது நாற்பது இருக்குமென்றாலும், அவர் மேனியழகு பொன்னால் உருக்கி வார்த்த சிலையை ஒத்திருந்தது. முகத்தில் அறிவின் ஒளி சுடர் விட்டது. புலவரின் மன நிலையைப் புரிந்து கொண்ட அந்தப் பெண்மணி, அவர் துயரத்தை ஆற்றுவதற்கு வழி தேடிக் கொண்டு அருகில் வந்து நின்றார்.

அன்றைக்குப் பௌர்ணமி. அது இரவு நேரம். மாசுமறுவற்ற நீல வானத்திலிருந்து முழு நிலவு உலகெங்கும் பாலைக் கொட்டிக் கவிழ்த்துக் கொண்டிருந்தது. கபிலர் கண் திறந்து தம் அருகில் நிற்கும் நற்பசலையாரைப் பார்த்தார். பிறகு அந்தக் குடிசையின் மீது படர்ந்து தொங்கிய பீர்க்கங் கொடிகளையும், சுரைக்கொடிகளையும் நோக்கினார். குடிசையின் கூரையற்ற பகுதிகளை அந்தக் கொடிகள் இட்டு நிரப்பிக் கொண்டிருந்தன.

''நற்பசலை! பார்த்தாயா இந்தக் காட்சியை?'' என்று ஈச்சங்குருத்துக்களின் கழிவுகளால் நிறைந்த குப்பை மேட்டையும் அதன் மீது நின்றிருந்த இரு பெண்களையும் சுட்டிக்காட்டினார் கபிலர். ''பறம்பு மலையின் உச்சியில் நின்று, கோட்டையை முற்றுகையிட்டிருந்த மூவேந்தர்களின் யானைகள், குதிரைகள், தேர்கள் இவற்றை எண்ணிக் களித்த இதே செல்வங்கள் இன்று குப்பை மேட்டின் மீதிருந்து உப்பு வண்டிகளை எண்ணுவதைப் பார்த்தாயா?'' கவிஞரின் குரலில் ஏற்பட்ட தழுதழுப்பு நற்பசலையாரின் கண்களைக் கலங்கச் செய்து விட்டன.

''கவி அரசராகிய தாங்களே இப்படிக் கலங்கினால், பேதையாகிய நான் எப்படித் துன்பம் தவிர்க்க முடியும்?'' என்றார் நற்பசலை.


''அரசன் என்ற சொல்லை இனிச் சொல்லாதே! அரசன் என்ற சொல்லையே இனி என் செவிகள் கேட்கக் கூடாது. அரசர்களே இந்த நாட்டில் இல்லை; புவி அரசர்களும் இல்லை; கவி அரசர்களும் இல்லை. வேள்பாரியோடு அரசன் மாண்டொழிந்தான்; அவனோடு கவி அரசன் கபிலனும் போய் விட்டான். நான் இப்போது கவிச்செருக்கு மிகுந்திருந்த கபிலன் இல்லை. கவித்துவத்தை இழந்துவிட்ட கபிலனின் நிழலுருவம் இது.''

நற்பசலையார் கபிலரின் குமுறலைக் கேட்டுவிட்டு முத்து முத்தாய்க் கண்ணீர்

சரித்திரக் கதை

கல்கி வாசகர்களுக்கு அகிலனைப் புதிதாக அறிமுகம் செய்து வைக்க வேண்டுமென்பதில்லை. சிறுகதைச் சிறப்பு மலருக்கு அவர் எழுதியுள்ள இந்தச் சங்க கால சரித்திரக் கதை தமிழ் மண்ணில் விளைந்த கவி வளத்தையும் மன வளத்தையும் சொல்லும் கதை. இன்றைய நாட்டு மன்னராம் தமிழ்ப் பெருமக்கள் அன்றைய ஆழத்தை உணர்ந்து போற்றுவர் என்ற ஆவலால் எழுதப் பெற்ற கற்பனை.





உதிர்த்து நின்றார். கபிலரைத் தம் குருவாகக் கொண்ட பெண்பாற் புலவர் நற்பசலையார். மன்னர்களையும் மக்களையும் பாடியதோடு கபிலரையும் சேர்த்துப் பாடியவர் அவர். புலவர்களால் போற்றப்பட்ட பெரும் புலவரான கபிலரின் வேதனை நற்பசலையாரை மிகவும் பாதித்து விட்டது. தேற்றுவதற்கு வழியறியாது தவித்து நின்றார்.

''நற்பசலை! புகழ் பாடிச் செல்லும் புலவர்களை ஆதரிப்போரை நாம் வள்ளல்கள் என்று அழைக்கிறோம். கொழுகொம்பு இல்லாமல் தவித்த முல்லைக் கொடிக்குத் தன் தேரைக் கொடுத்துவிட்டு வந்தானே பாரி, அவனை என்னவென்று அழைப்பது? முல்லைக் கொடியின் துயரைத் தன் துயராய் உணர்ந்த உத்தமனின் பெண்களுக்கா இந்த நிலை வரவேண்டும்? பாரியின் பறம்பு மலையில் அங்கவையும் சங்கவையும் எப்படி வளர்ந்தார்கள் என்று உனக்குத் தெரியுமா? எனக்குத் தெரியும். அவர்களை மார் மேலும் தோள் மேலும் தூக்கி வளர்த்தவன் நான். பெற்றவன் பாரி; வளர்த்தவன் நான்.''

நற்பசலையாருக்கு எல்லாமே தெரியும். கவிஞரின் இதயக் குமுறலுக்கான வேறு காரணங்களும் அவருக்குத் தெரியும். கபிலர் அந்த இரு பெண்களையும் அழைத்துக் கொண்டு மலைநாட்டரசனான விச்சிக்கோவிடம் முதலில் சென்றார். பிறகு வேளிர் குலத்தரசனாகிய இருங்கோவேளிடம் சென்றார். வேள்பாரியின் செல்வ மகளிரை மணந்து கொள்ளுமாறு வேண்டினார். தம்முடைய தீஞ்சுவைக் கவிதையை அவர்கள் முன்பு பாடினார். பேரெழில் மிக்க அந்தப் பெண்களின்



அழகோ, அவர்கள் பிறந்த குடிப் பெருமையோ, கபிலரின் கவிதைகளோ, அந்த இரு அரசர்களையும் இருதயம் உள்ளவர்களாக மாற்றவில்லை. மூவேந்தர்களின் வஞ்சனைக்குப் பலியானவன் வேள்பாரி.





அவனது மகளிரை மணந்தால் மூவேந்தர்களது பகை நேரும் என்று அஞ்சினார்கள் அவர்கள். மேலும், நாடிழந்து, அரசிழந்து, செல்வம் அனைத்தையுமே இழந்திருந்தனர் அங்கவையும் சங்கவையும். ஆகவே கபிலர் நம்பிச் சென்ற அந்த இரண்டு அரசர்களும் அந்தப் பெண்களை மணக்க இசையவில்லை.

நற்பசலையாருக்கு இவை எல்லாமே தெரியும்.

''திண்ணையில் சற்று அமர்ந்து பேசுவோமா?'' என்று கபிலரை அழைத்து விட்டு, அவர் மறுக்காதிருக்க வேண்டுமே என்பதற்காக, ''நம் துன்பம் குழந்தைகளுக்குத் தெரியாமல் இருந்தால் அவர்களாவது மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்'' என்றார் நற்பசலையார்.

திண்ணைக்குச் சென்று அமர்ந்த கபிலர் வருத்தத்துடன் சிரித்தார். ''இவர்களைப் பாரி என்னிடம் விட்டுக் கண் மூடியதிலிருந்து எல்லாத் துன்பங்களையுமே அனுபவித்து விட்டார்கள். பேசும் பொற்சித்திரங்களான இவர்களைத் தங்கள் கண்களால் பார்த்த பிறகும், கபிலனின் கவிதைகளைக் காதுகளால் கேட்ட பிறகும், எவ்விக்கோவும் இருங்கோவேளும் இவர்களை மணக்க மறுத்தார்களே. இதைவிடவா இந்தப் பெண்களுக்குத் துன்பம் வேண்டும்? பாரி போன பிறகு எல்லாமே போய் விட்டன! எல்லாமே போய் விட்டன!'' சின்னஞ் சிறு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதார் தெய்வத் தமிழ்க் கவிஞர்.

''கவி அரசே! அப்படிக் கூறாதீர்கள்!'' என்று பதறினார் நற்பசலையார். ''நாங்களும் தங்கள் கவி பாடும் நாவும் உள்ளவரையில் அவர்களுக்கு ஒரு குறையும் வராது.''

''கவி பாடிய இந்த நாவை அறுத்தெறிய வேண்டும்! என் கவிதைகளைத் தீயில் கட்டெரிக்க வேண்டும்! எல்லாமே இந்தக் கவிதைகளால் வந்த வினைதான். மூவேந்தர்கள் தங்கள் வஞ்சனையால் பாரியைக் கொன்று விட்டதாகத்தான் உலகம் நம்பிக் கொண்டிருக்கிறது. ஆனால் பாரியைக் கொன்றவன் நான். நானேதான் அவனைக் கொன்றேன்!''

கவிஞரின் சித்தம் துன்பம் தாங்காமல் குழம்பி விட்டது என்று நினைத்தார் நற்பசலையார். வேள்பாரியின் வீரம், கொடை வளம், அவனது நாட்டு வளம், மக்கள் வளம் முதலியவற்றைப் பாடிப் பாடி இன்புற்றவர் கபிலர். அவனிடம் உயிருக்குயிரான அன்பு பூண்டவர். அந்த அன்பில்

விளைந்த கவிதைகளைக் கண்டு உலகமே வியந்து நின்றது.

"நான்தான் என்னுடைய பேரன்பால் என்னுடைய நண்பனைக் கொன்று விட்டேன்!" என்று மீண்டும் கூறினார் கபிலர். "முல்லைக்குத் தேர் ஈந்த அவனுடைய இரக்கம் நிறைந்த இதயத்தை நான் ஏன் புகழ்ந்து பாட வேண்டும்? முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு வழங்கிய அவன் கொடை வளத்தை நான் ஏன் போற்ற வேண்டும்? பறம்பு மலையின் மயிலாடும் சோலைகள், குரங்குகள் தாவும் கனிமரங்கள், செங்கழுநீர் சிரிக்கும் நீர்நிலைகள், மலை முகட்டில் ஊசலாடும் தேன்கூடுகள், விருந்திட்டு உண்ணும் அவனது குடிமக்கள்..... ஏன், இவற்றை யெல்லாம் இன்பத் தமிழில் நான் பாட வேண்டும்? வேள்பாரிக்கே உரித்தான புகழை இந்தத் தமிழ் மண்ணெங்கும் நான் பரப்பியதால்தானே மூவேந்தர்களும் அவன் மீது பொறாமை கொண்டார்கள்? ஒற்றுமையையே அறியாத அம்மூவரையும் ஒன்று சேர்த்துப் பாரியின் மீது படை எடுக்கத் தூண்டியவை என் பாடல்கள் தாமே?..... நானே கொன்றேன் பாரியை! நானே அவனுக்குக் கூற்றுவனானேன்!"

நற்பசலையாருக்குப் புலவரின் குமுறலைத் தணிப்பது எளிதல்ல என்று தோன்றியது. வேள்பாரியுடன் ஒன்றாகவே கபிலரும் உயிர் நீத்திருப்பார். ஆனால் பாரி தடுத்து விட்டான். தம்முடைய குமாரத்திகளைக் காப்பாற்றும் கடமைகளை அவரிடம் விட்டதால், அவர் வேறு வழியின்றி உயிர் சுமக்க வேண்டிய அவசியம் நேர்ந்து விட்டது.

நற்பசலையார் தமது மென்தளிர்க் கரத்தால் கபிலரின் வலது கரத்தைப் பற்றித் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். செந்நாப் புலவரின் நெஞ்சிலிப் பாடல்களைச் சுவடிகளில் எழுதிய கரம் அது.

"ஒருபோதும் தங்கள் பாடல்களைக் குறை கூறாதீர்கள். அவற்றின் அருமையைத் தாங்கள் உணராவிட்டாலும் இந்த நாடு உணரும். வேள்பாரியைத் தங்கள் கவிதைகள் கொல்லவில்லை. மாறாக அவனையும் அவனுடைய நாட்டையும் மக்களையும் கூற்றுவனிடமிருந்து தாங்கள் பறித்து விட்டீர்கள். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குத் தாங்களும் பாரியும் ஒன்றாகவே வாழ்ந்திருக்கப் போகிறீர்கள். தமிழ் உள்ள அளவும் தங்களால் வாழப் போகிறான் பாரி!"

கபிலரை மெய்சிலிர்க்க வைத்தன நற்பசலையாரின் சொற்கள். அவர் தம் கண்களைத் துடைத்துக் கொண்டார். தம் உயிருக்கும் மேலான நட்பைக் கவிதைகளில் கட்டிக் காத்திருக்கும் தெம்பு அப்போதுதான் அவருக்கு ஏற்பட்டது.

என்றாலும் அவருடைய ஐயம் முழுதும் தீர்ந்தபாடில்லை. "பாரி கொல்லப்பட்டவுடன் என்னுடைய கவிதா சக்தியும் என்னிடமிருந்து பறிக்கப்பட்டதாக உணர்கிறேன், நற்பசலை!"

"தாங்கள் அப்படிக் கற்பனை செய்து கொள்ளலாம். ஆனால் உண்மை என்னவோ நேருக்கு மாறானது."

"என்ன?"

"ஆமாம், வேள்பாரி உயிருடன் இருந்த போது நீங்கள் ஆனந்தக் களிப்பில் பாடியிருக்கிறீர்கள். எண்ணற்ற பாடல்களை மழை பொழிந்தாற்போல் பொழிந்திருக்கிறீர்கள். அவற்றில் சில பாடல்களேனும் காலத்தால் கரையாது எஞ்சி நிற்கும். ஆனால் பாரியின் பிரிவுக்குப் பின்னர் நீங்கள் மிகுதியாகப் பாடவில்லையென்றாலும், பாடியுள்ள ஒவ்வொன்றுமே உங்கள் இதயத்து ஆழத்தின் சோகக் குமுறலாகும். பாரியின் பறம்பு மலையின் இயற்கை வளத்தைக் காலதேவன் கைக் கொண்டு போகக் கூடும். ஆனால் தங்கள் கவிதையில் துடிக்கும் அந்த எழிற் காட்சிகளிடம் அவனால் நெருங்கவும் முடியாது. ஓர் உயிர் மற்றோர் உயிருக்காகத் துடிக்கும் துடிப்பு இருக்கிறதே, அதை நினைத்து நினைத்து ஏங்கும் பெருமூச்சு இருக்கிறதே, அதற்காகப் புலம்பும் அழுகை ஒலி இருக்கிறதே இவ்வளவையும் இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் தமிழ் கற்றோர் அனுபவிக்கப் போகிறார்கள். உங்கள் கவிதாசக்தியின் ஆவேசமாக உங்கள் உயிர் மூச்சில் கலந்து நிற்கிறான் பாரி!"

நற்பசலையாரும் கண்ணீர் மாலை தொடுத்தார்; கபிலரும் கண்ணீர் உகுத்தார். அது வரை அவர்களது உள்ளத்தில் தேங்கிய துன்பம் அந்தக் கண்ணீரின் சங்கமத்தில் கரையத் தொடங்கியது. அங்கவையும் சங்கவையும் தங்கள் விளையாட்டு முடிந்து அங்கு திரும்பி வந்தார்கள். கரத்துக்கொருவராக அவர்களைப் பற்றிக் கொண்டு அவர்களது நெற்றிகளில் முத்தமாரி பொழிந்தார் கபிலர்.

"கபிலன் எங்கு இருந்தாலும் அவன் கவி அரசன்! அவன் இருக்குமிடம் தமிழ் வாழும் அரண்மனை!" என்று உற்சாகமாய் முழங்கினார் கபிலர். "பீர்க்கங்கொடியும் சுரைக்கொடியும் படர்ந்த இந்த ஓட்டைக் குடிலுமே, இங்கு கபிலனும் பாரியின் மகளிரும் பசலையாரும் இருப்பதால் பொன் மாளிகையாகி விட்டது. விரைவில் நான் எடுத்த காரியத்தை முடித்தே தீருவேன்! வெற்றிகரமாக முடிப்பேன்!"

மறு நாள் பொழுது பொன்னைத் தூவிக் கொண்டு புலர்ந்தது. கவிஞர் இருவரும் பாரி மகளிர் இருவரும் கால்நடையாகக் கிளம்பினார்கள். வடதிசைக்கே பெண்ணையாற்றை அடுத்த திருக்கோவலூரை நோக்கி அவர்கள் நடந்தார்கள்.

திருமுடிக்காரி என்ற மலையமான் உயிருடன் இருந்த காலத்தில் மலைய நாட்டின் அவைக்களப் புலவராக இருந்தவர் கபிலர். வள்ளலான காரி, கபிலரையும் கவிஞர் என்ற முறையில் போற்றி வளர்த்தானென்றாலும், அவருடைய தனித்தன்மையை உணர்ந்து அவருக்குத் தனிச் சிறப்பளிக்கத் தவறி விட்டான். மற்ற எத்தனையோ புலவர்களில் கபிலரும் ஒருவர் என்று அவன் எண்ணி விட்டான் போலும்! கவித் திறனும் அதனால் விளைந்த செருக்கும் கொண்ட

கபிலர் அதைச் சுட்டிக்காட்டி ஒரு பாடல் பாடிவிட்டு, பாரியின் பறம்பு நாட்டுக்கு வந்தார். கபிலரின் கவித்துவ சக்தியை, அவருடைய ஆழத்தை, அவரது கற்பனையின் தனி அழகைக் கண்டு கொண்டான் பெரும் கவிச்சுவைஞனான வேள்பாரி. கவிஞருக்கு வேறென்ன வேண்டும்? தம்மை மறந்து அவர் மன்னனை, நாட்டை, மக்களைப் பாடினார். தம்மைத் தமிழுக்கே தந்துவிட்ட அவரைக் கண்ணே போல் காக்கும் பொறுப்பைப் பாரி ஏற்றுக் கொண்டான். பறம்பு மலை நாட்டில் தமிழ் மழை பொழியச் செய்து பண்புப் பயிர் வளர்த்து வந்தார் கவிஞர். பாரியின் புகழ் தமிழ்ப் பாரெங்கும் பரவியது. புகழால் தொடரும் பகை உணர்ச்சி மூவேந்தரின் உருவில் வந்து பாரியைக் கொன்றது. கவியரசர் மிடுக்கோடு நடந்தார், மீண்டும் திருக்கோவலூரை நோக்கி.

மலையமான் திருமுடிக்காரி இப்போது உயிருடன் இல்லை. அவனுடைய இருமக்களான தேர்வண்மலையனும் திருக்கண்ணனும் ஆட்சி செய்து வந்தார்கள். கடைசி முறையாக அவர்களிடம் வேண்டுகோள் விடுப்பது என்றும் அவர்களது செவியும் தமிழுணராச் செவியாக இருக்குமானால், பெண்ணையாற்றில் ஒன்றுபி மூழ்கி உயிர் துறப்பது என்றும் முடிவு செய்திருந்தார் கபிலர்.

பறம்பு மலையிடைப் பிறந்த மணிகளாம் பாரியின் மகளிரை யாருக்காவது எப்படியாவது மணம் செய்து கொடுத்து விட்டால் போதுமென்று அவர் நினைக்கவில்லை. அரசனுக்குப் பிறந்தவர்கள் அவர்கள்; அரண்மனையில் வாழ்ந்தவர்கள் அவர்கள். 'புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?' என்று உறுமிக் கொண்டே நடந்தார் அவர்.

தற்பசலையாருக்குக் கவிஞரிடம் ஏற்பட்டிருந்த புத்துணர்ச்சி எல்லையற்ற ஆனந்தம் கொடுத்தது. விளையாட்டாகக் கூறினார். "'குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடை மெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்' என்ற சொற்கள் எவ்வளவு உண்மையான சொற்கள்!

"அதையே நான் மாற்றிப் பாட விரும்புகிறேன். 'நடை மெலிந்து ஓர் ஊர் நண்ணுவரேனும் குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்வர்' என்று கூறிக்கலகலவென்று நகைத்தார். அவருடைய வெண்கலச் சிரிப்பு தொலைவில் வந்து கொண்டிருக்கும் யானைகளின் மணியோசை போல் அங்கவைக்கும் சங்கவைக்கும் ஒலித்தது.

ஊர்ப்புறத்தே ஒரு வீட்டில் தங்கிக் கொண்டு, காரியின் மக்களுக்கு ஓர் ஓலை எழுதினார் கபிலர் : "கவி அரசனும் கபிலனை முதன் முதலில் போற்றிய பெருவள்ளல் காரியின் வீரப் பெருமக்களே, உங்களை நான் என் செந்தமிழால் வாழ்த்துகிறேன். நும் தந்தை காலத்தில் இந்த நாட்டை விட்டுச் சென்றவன் இப்போது திரும்பி வந்துள்ளேன். கபிலனின் கவிப் பெருமையையும் அவனைப் போற்றிய வள்ளல் பாரியின் பெருமையையும் நானே உங்களுக்கு இனிச் சொல்ல வேண்டுமென்பதில்லை. நீங்கள் இன்று உயிர் பிழைத்திருப்பதும் நாடாள்வ



இரு அதிசயங்கள்

நாற்பத்தி இரண்டு அறைகள் கொண்ட செல்வம் கொழிக்கும் மாளிகையில் சீமான் மகனாகப் பிறந்தார். ஆனால் அந்திய காலத்தில் நிராதரவாக ஓர் ஒதுக்குப்புறமான நிலையத்தில் உயிரை விட்டார். இளமையில் ஆடை அலங்காரத்துக்காகவும் ஆடம்பர வாழ்க்கைக்கும் பணத்தை வாரி இறைத்தார். கடைசிக் காலத்தில் தம் அறையைத் தாமே பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. வாலிபத் துடிப்பில் அவர் செய்யாத பாவங்கள் இல்லை. வயோதிக நிலையிலோ அவர் காண்போர் பிரமிக்குமளவில் ஆண்டவனின் உபதேசங்களைக் கடைப்பிடித்தார். கல்லூரி வாழ்க்கை அவருக்கு வெற்றியளிக்கவில்லை. ஆனால் கால ஓட்டத்தில் அவர் ஒரு தலைசிறந்த எழுத்தாளராக மாறி உலகம் என்றென்றும் போற்றி மறக்க முடியாத இரண்டு நவீனங்களின் ஆசிரியரானார். மணமான புதிதில் அவரும் அவர் மனைவியாரும் அடிக்கடி ஆண்டவன் சந்நிதியில் மண்டியிட்டுத் தங்களுடைய இல்லற இன்பம் என்றென்றும் இப்படியே நிரந்தரமாக நிலைத்துவிட வேண்டும் என்று பிரார்த்தித்ததுண்டு. ஆனால் ஐம்பதாண்டு மண வாழ்க்கைக்குப் பிறகு, என் மரணத் தறுவாயிலும் என் மனைவி என்னை நெருங்கக் கூடாது என்று சொல்லி மனம் வெதும்பியதுண்டு.

காரணம் மனைவி, ஆடம்பரத்தையும் புகழையும் பணத்தையும் வேண்டினாள். கணவனோ அவ்வளவையும் அலட்சியம் செய்து ஒதுக்கினார். தந்தையிடம் தன்னுடைய மகள்களில் ஒருத்தி அதிக அன்பு செலுத்துகிறாள் என்ற ஒரே காரணத்தினால் அவளை வீட்டை விட்டே துரத்தினாள். அவள் படத்தையும் ஆத்திரத்தினால் துப்பாக்கி கொண்டு சுட்டாள். காரணம், அவர் தனக்கு எந்தவிதமான பண வரவும் இல்லாத வகையில் தம் நூல்களைப் பிரசுரிக்கும் உரிமையை நாட்டு மக்களுக்கு இலவசமாகக் கொடுக்க முன்வந்தார்.

அவருடைய வாழ்க்கையில் கடைசி இருபது ஆண்டுகளில், புண்ணியக்ஷேத்திரங்களுக்குப் போகும் பக்தர்கள் போல், பொது ஜனங்கள் லட்சக்கணக்கில் அவரைத் தரிசனம் செய்யவும், அவருடைய வார்த்தைகளைக் கேட்கவும் வந்து போனார்கள். அவர் தம் வாழ்நாளில் நூற்றுக்கு மேற்பட்ட புத்தகங்களில் அடங்கும் விஷயங்களை எழுதினார். ஆனால் அவரைப் பற்றியோ, பிறர் இருபத்தி மூவாயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்கள் எழுதினார்கள். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் அவரைப் பற்றி ஐம்பத்தி ஆறாயிரத்துக்கு மேற்பட்ட கட்டுரைகள் வெளியாயின.

மகாமேதை, ஞானி என்று உலகத்தோரால் பாராட்டப்பட்ட அவர்தான், 'அன்னா கரினா, போரும் அமைதியும்' என்ற இலக்கியங்களை சிருஷ்டித்த டால்ஸ்டாய். - மேறு

தும் ஒரு கவிஞனின் கவிதை பெற்ற வரத்தால் விளைந்தவை என்பதை மறந்திருக்க மாட்டீர்கள். சின்னஞ் சிறு குழந்தைகளாக நீங்கள் இருந்த காலத்தில் உங்களைச் சிறைப்படுத்திச் சென்று சோழன் கிள்ளிவளவன் தன் யானையின் கால்களில் இடறச் சொல்லியது உங்களுக்கு நினைவிருக்கும். வரவிருக்கும் ஆபத்தை உணராது நீங்கள் அந்த யானையைக் கண்டு வியப்போடு விழித்து நோக்கியபோது, உங்களுடைய உயிரைக் காக்க ஒரு கவி பாடிய கோவூர்க்கிழான் ஒரு கவிஞன். அவன் பாடிக் கேட்டுப் பரிசிலாகப் பெற்ற அதே உயிரை இப்போது நானும் கேட்கிறேன். எனக்காகக் கேட்கவில்லை. என்றுமே தனக்காக வாழ்ந்ததில்லை தமிழ்ப் புலவன். திருமகளையும் கலைமகளையும் ஒத்த இரு தெய்வ மங்கையருக்காக உங்கள் உயிரை நான் யாசிக்கிறேன். வேள்பாரியின் உயிராம் அன்பும் அறமும் ஊற்றெடுக்கும் நெஞ்சுனையில் மலர்ந்த இரு செங்கழுநீர் மலர்களை உங்களுக்குச் சூட்டி மகிழ வந்திருக்கிறேன். பட்டத்து யானை, பரிவாரங்கள் அணிமணிகள் இவற்றை இந்த ஓலை கொண்டு வரும் பெண்பாற் புலவர் நற்பசலையார் வாயிலாக அனுப்புங்கள். நற்பசலையாரே உங்களது எதிர்காலத்து அவைக்களப் புலவராக விளங்குவார்கள்!''

ஓலையை நற்பசலையாரிடம் கொடுத்து, ''நற்பசலை! காரியின் மக்களில் மூத்தவனும் திருக்கண்ணனை முதலில் உன் தமிழ்க் கவியால் வாழ்த்தி விட்டுப் பிறகு இந்த ஓலையைக் கொடு'' என்றார் புலவர்.

''ஏன், தாங்கள் பாடவில்லையா?''

''வேண்டாம்! என் பாட்டின் புகழ் என் நண்பன் பாரிக்கு விளைவித்த இன்னல் போதும். என் மகளிரும் அவருக்கு மாலையிடவிருக்கும் மருமக்களும் சிறப்பாக வாழ வேண்டுமென்பதற்காகவே நான் கவி பாடவில்லை. இனிமேல் நான் கவி பாடுவதையே விட்டு விட்டேன்!''

திடுக்கிட்டார் நற்பசலையார். ''சென்று வா!'' என்று கட்டளையிட்டார் கவிஞர்.

சற்றைப் பொழுதுக்கெல்லாம் திருக்கோவலூர் நகரத்துப் பெருமக்கள் ஒரு பேரெழிற் காட்சியைக் காணத் தெருக்களில் கூடி நின்றனர். பல்வகையான இசைக் கருவிகள் முழங்க, பட்டத்து யானையின் மீது திருமகளும் கலைமகளுமாகப் பாரி மகளிர் இருவரையும் தம் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு, நற்பசலையார் மெய்ம்மறந்த பரவச நிலையில் அருகேயிருக்கப் பவனி வந்தார் கபிலர்.

நல்லதோர் நாளில் திருமுடிக்காரியின் மக்களாம் திருக்கண்ணன், தேர்வண்மலையன் இருவருக்கும் வேள்பாரியின் மகளிர், அங்கவை சங்கவை இருவருக்கும் திருமணம் இனிது நிறைவேறியது. பெண்களுக்குத் தாயாகவும் அரசவைப் புலவராகவும் நற்பசலையாரை அங்கு தங்கச் செய்தார், கவிஞர் கபிலர்.

பிறகு விடைபெறும் நாள் வந்தது. விடை கேட்டார். அனைவரும் துடித்தனர்.

''தாங்கள் கவி பாடவேண்டாம்; உடனிருங்கள் போதும்!'' என்றனர் மலையமான்கள். ''தந்தையாரே! எங்களைப் பிரிந்து செல்லாதீர்கள்!'' என்று தடுத்துக் கதறினர் பெண்கள். நற்பசலையார் தமது கவி ஆழம் நிறைந்த நெஞ்சில் கபிலர்பால் எத்தகைய அன்பு கொண்டிருந்தாரோ தெரியாது. அவர் பாதங்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் வடித்தார்.

''இவ்வுலகக் கடமை எனக்கு முடிந்து விட்டது. என் கவி கேட்கக் காத்துத் துடிக்கிறான் என் நண்பன். அவனுக்காக என் உயிரும் துடிக்கிறது'' என்றார் கபிலர். அவர் பிடிவாதத்தை யாராலுமே தடுக்க முடியவில்லை.

பெண்ணையாற்றங் கரைக்குச் சென்று அவர் ஒரு மலைக் குகையில் வடக்கு நோக்கி அமர்ந்தார். உணவில்லை; உறக்கமில்லை, பேச்சில்லை. சிலையாக உட்கார்ந்திருந்தார். அவரால் பொறுக்க முடியவில்லை.

துறவியாக அவர் இருந்திருந்தால் நாள் கணக்கில் வடக்கிருந்து சிறிது சிறிதாக அவர் உயிர் துறந்திருக்க முடியும். அவரோ தூய உணர்ச்சிகள் பொங்கும் மனத்தவரான கவிஞர். துறவின் பொறுமை அவருக்குப் பிடிக்கவில்லை. மேலும், நாள்தோறும் அவரைச் சூழ்ந்து கொண்டு கண்ணீர் வடிக்கத் தொடங்கினார்கள் மற்றவர்கள்.

அவர் ஒரு புது முடிவுக்கு வந்தார். ஒரு நாள் காலையில் யாரும் அங்கு வரும் முன்னரே தீ வளர்க்க ஏற்பாடு செய்து விட்டார். என்றாலும், தீ கொழுந்து விடுவதற்கு முன்பு அரண்மனைக்குச் செய்தி எட்டி விட்டது. ஓடோடியும் வந்தார் நற்பசலையார் தம் மகளிர் இருவரோடு. மலையமான்களும் மக்களும் கூடிவிட்டனர்.

''கண் கலங்காதீர்கள்! எனக்கும் பாரிக்கும் என்றுமே சாவில்லை என்ற உண்மையை எனக்கு நற்பசலையார்தான் உணர்த்தினார். தமிழ்க் குலம் இரக்க உணர்ச்சியோடும், அன்போடும், நட்போடும் உறவாடி வாழ வேண்டும். இதைச் சொல்ல எனக்குப் பாரி ஒரு தூண்டுதலாக விளங்கினான். இதோ, என்னெதிரிலும் என்னை அணைத்துக்கொண்டு தழுவி மகிழ்வதற்கு அவன் அன்பின் ஒளி மிக்க தீயாய்ச் சுடர்விட்டு அழைக்கிறான். எங்களுக்காக யாருமே வருந்தாதீர்கள். இந்த அன்பின் ஒளிமிக்க நெருப்பைத்தான் நான் என் கவிகளில் மூட்டியிருக்கிறேன். நீங்கள் விரும்பும்போதெல்லாம் அங்கு எங்களைக் கண்டு மகிழுங்கள். அந்த நெருப்பை உங்கள் உள்ளத்தில் கனியச் செய்யுங்கள்!''

கபிலரும் பாரியும் ஒன்று கலந்தனர். பெண்ணையாறு அங்கு கூடியிருந்தோரின் விழிகள் வழியே பெருக்கெடுத்து அழுதது.

கபிலர் வடக்கிருந்து உயிர் நீத்தார் என்று கூறுவோரும் உளர். திருக்கோவலூர்க் கல்வெட்டொன்று 'மூத்தமிழ்க் கபிலன் அனல் புகுந்து' உயிர் நீத்ததாகவும் அதுகண்டு அலைபுனல் பெண்ணையாறு அழுததாகவும் கூறுகிறது.

கவிதைக் கதை



வெற்றி

சோமு

உலகப் பெரும்போர் இரண்டினையும்
ஊன்றி உணர்ந்த ஞானியர்கள்
கலகம் இலாத சாந்த நிலை
காசினி எங்கும் நிலவுதற்காய்

நாளும் பலநல் அறிவுரைகள்
நல்ல அறமுறை வழிவகைகள்
ஆளும் தலைவருக் கெடுத்துணர்த்தி
அமைதி காண விழைகின்றார்

வீழ்ந்து பட்ட நாடுகள் போல்
வெற்றி பெற்ற நாடுகளும்
ஆழ்ந்த துயர அவதியிலே
அல்லல் உறவே காணுகிறோம்

வென்றார்க் கெல்லாம் வேதனையாம்
வெல்லார் தமக்கும் அஃதேயாம்
கொன்றார் மடிந்தார் இருவருமே
கொடிய சாவை உறுகின்றார்

• • •

''வெற்றி இது தானோ
வீரத்தின் பண்பிதுவோ!
கொற்றம் எனமாந்தர்
கூறுவதும் இதுவேயோ!'

என்று பல எண்ணங்கள்
ஏக்க நினைவுகளில்
சென்று மனம் சிக்கிநான்
திணறிநின்ற போதினிலே

சிந்தனை கேட்டுச் சிரிப்பவன் போலே
யாரோ ஒருவன் ஏளன ஒலியொடு
எங்கோ தொலைவில் நகைத்திடக்கேட்டேன்:
கனவெனும் உலகக் கதவு திறந்தது
காளை ஒருவன் கண்முன் நின்றான்
காரிகை ஒருத்தி அருகினில் நின்றாள்:

''ஏதெனை நோக்கிச் சிரித்தனை ஐயா ?
வேதனை இன்றி வெல்லும் வழியை
வெற்றியும் தோல்வியும் குலவிடும் வழியை
சாதனை செய்தவர் உண்டோ உலகில்



திரு சோமு 'கல்கி' வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். சாகித்ய அகாடமி பரிசு பெற்ற எழுத்தாளர் — கவிஞர். அவரது இந்தக் கவிதைக் கதைப் படைப்பு வெற்றி தோல்வியை எடை போடுகிறது.

சாற்றிட வேண்டும் சற்றே!'' என்றேன்.
இளைஞன் அருகினில் இணைந்து நின்ற
காதலி யவளைக் கடைக்கணால் பார்த்தான்;
புன்னகை செய்தான், புகலுவான் பின்னே;

''என்னில் சண்டைகள் கோபங்கள் - அவை
எத்தனை முறையென் றோர்மையில்லை
'கண்ணின் முன்பு நில்லாதே - அடீ
கைத்தனை நீ'எனக் கடிந்ததுண்டு

இங்ஙனம் சொல்லிப் பேசாமல் - உடன்
எழுந்து செல்வேன், பின்தொடர்வாள்!
எங்ஙனமோஒரு புன்னகையால் - இவள்
ஏழை என்னை வென்றிடுவாள்:

கோபம் பறந்து சென்றுவிடும் - சொல்லின்
கொடுமை தோற்றே ஓடிவிடும்
தாபம் தணியும் வகையினிலே - உறவுத்
தன்மை விளைந்து விளையாடும்!

''தோற்றேன் கண்ணே உன்நகையில் - அடீ
தோற்றேன் கண்மணி உன் உரையில்
ஆற்றேன் இனிநின் அன்பையெலாம் - அடீ
ஆருயி ரேயென் அருகேவா''

என்றே எனது தோல்வியினை - பல
ஏழை மொழியில் புகன்றிடுவேன்
வென்றே அவளும் தோல்வியுற்று - புனல்
விளையா டிடுவோம் என்றழைப்பாள்!

துன்பம் நீங்கிய தோல்வியிது - ஐயா
தூய வெற்றி என்றுசொல்வேன்
இன்பம் நல்கும் தோல்வியிது - இது
இனிய வெற்றி என்றுரைப்பேன்!''

• • •

இனிய காதலன் இவ்வுரை சொன்னதும்
கனவின் கதவம் மீண்டும் அடைத்தது:
மீண்டும் நகையொலி கேட்டது, பின்னர்
மீண்டும் கதவந் திறந்திடக் கண்டேன்!

உலகப் போரில் உன்னத வீரச்
சேவைகள் பலபல செய்துள நிரர்
விருதுகள் பெற்ற வீரர் ஒருவர்
கையில் மகவினை ஏந்திய வண்ணம்
களிநடை நடந்து வரவே கண்டேன்.

''படைகள் தாங்கும் கையினிலே - ஒரு
பாலைக் குமரன் வந்தபின்னர்
நடையும் மென்மை கண்டதுவோ - அதை
நவின்றிட வேண்டும்'' எனக் கேட்டேன்

''போரில் வென்ற வெற்றிகளால் - நான்
புரிந்த வீரச் செயல்களினால்
யாரும் அஞ்சும் பான்மையிலே - இங்கே
யானும் பலநாள் உலவிவந்தேன்.

இந்தக் குமரன் வந்தபின்னே - ஐயா
என்றன் வெற்றி மாறுதையா
எந்த வெற்றியும் இதற்கீடாய் - உலகில்
இல்லை இல்லை இல்லை ஐயா:

ஓங்கி அடிக்கப் பாய்ந்திட்டால் : இவன்
ஒருசிறு முறுவல் செய்திடுவான்!
தாங்கிச் செல்லும் போதினிலோ - என்றன்
தவடை தன்னில் அடித்திடுவான்!

வேகம் எல்லாம் மாற்றிடுவான் - முழு
வெற்றி யோடே நகைத்திடுவான்
ஊகம் செய்ய இயலாத - பல
உன்னதக் குறும்பால் எனைவெல்வான்

தோல்வி நிதம்நிதம் பலகோடி - நான்
தோற்றுத் தோற்று மகிழ்ந்திட்டேன்
தோல்வி தருதற் கேஉதித்த - என்
தோன்றலை நீரே பாருமையா!''

என்றே வீரர் இயம்பிட்டார் - பெற்ற
இன்பம் பொங்கிடும் குரலினிலே
வென்றே நின்ற போரெதிலும் - காணு
வெற்றிப் பெருமிதக் களிப்புடனே!

தோற்று மகிழ்ந்த வீரரிடம் - ஒளி
கூடரும் இங்கிதக் களிகண்டேன்
தோற்றல் என்னும் இன்பந்தான் - இது
தூயதோர் இன்பம் எனவுணர்ந்தேன்!

• • •

கனவின் கதவு மீண்டும் அடைத்தது
மீண்டும் ஓர்கணம்; மீண்டும் திறந்தது!

• • •

மன்னன் அமர்ந்த சபை கண்டேன் - அதில்
மாண்புறும் அமைச்சர் தலைவரொடு
நன்னயக் கலைஞர் பண்டிதர்கள் - பல
நாவலர் பாவலர் வீற்றிருந்தார்

மன்னவன் யாழ்முறி என்னுமொரு - பழம்
மாயப் பண்ணொலி கேட்க எண்ணி
பன்னெடும் நாளாம் அவையிலுள்ள -
முதுமைப்
பாணர் கிழவரை அழைத்திட்டான்

கையின் முதுமை ஒருபாதி - அவர்
கண்ணின் முதுமை ஒருபாதி
ஐயன் உரைத்த யாழ்முறியை - கிழவர்
அவரால் இசைக்க வகையில்லை!

முதுமை விழிகள் மறுகினவே - அவை
முழுதும் மறுகும் முன்பாகப்
பதுமை யருகில் ஒதுங்கிநின்ற - கலைப்
பண்புச் சிடனை நோக்கினவே!

• • •

சிடன் வந்தான் சிங்கம் போலே
அரங்கில் இருந்தோர் அத்தனை பேரும்
புதிய காட்சி பூத்தது கண்டார்!

மன்றம் சூழ்ந்த மாந்தர் யாரும்
விண்ணில் பறந்தார் விந்தை இசையில்
மாடகம் முறுக்கி மார்பிலே தவழ்ந்த
வீணையின் இசையில் விண்வெளி கண்டார்!
யாழ்முறிச் சுழலில் யாழிசைக் காற்றில்

அரசன் அமைச்சர் அரங்கம் தரணி
யாவரும் யாதும் ஒன்றே யாகிட
ஐம்புலன் ஒன்றி அரசவை உகந்தது!
அரங்கு நின்றதும் முதியவர் எழுந்தார்:





''எனது கலையே என்னை வென்றது
தோல்வி எனுமொரு தூய வெற்றி
இன்றே கண்டேன் இதயம் குளிர்ந்தேன்''

* * *

முதியவர் இங்ஙனம் மொழிந்த மறுகணம்
கனவின் கதவம் மீண்டும் அடைத்தது!
நகையொலி கேட்டேன் எழுந்து நின்றேன்;
'நாவிலம்' என்ற நாமம் கொண்ட
நாவலன் ஒருவன் பேச லுற்றான்:-

''காதலன் வெற்றியும், காதலி வெற்றியும்,
மைந்தன்வெற்றியும்,மாணவன்வெற்றியும்
வெற்றியில் தோல்வியில் விளைவ தில்லை!
மனமெனும் களத்தே அன்பெனும்போரில்
மாண்புத்தோல்வியே மாட்சிவெற்றியாம்!''





ஒன்றும் பத்தும்

ஜ. சாமிநாதன்

ஆடிட்டிங் துறையில் பயிற்சி பெற்று இன்று இந்தியன் ஆயில் கம்பெனியில் பணியாற்றும் திரு ஜ. சாமிநாதன் பல நல்ல சிறுகதைகளை எழுதிப் புகழ் பெற்றவர். உருவகக் கதை எழுதுவது அவரது தனிச் சிறப்பு. ஜ

வாழ்நாள் முழுவதும் பாவத்தைச் சுமப்பதைப் போல அழுக்குப் பொதி சுமக்கின்ற தன் ஜன்மத்தை நினைத்துக் கொண்டு மெள்ள ஆற்றங்கரையை நோக்கி நடந்தது அந்தக் கழுதை. தனக்கென்று ஓர் ஆசை இல்லாமலும், தனக்கென்று ஒரு லட்சியம் இல்லாமலும் அப்படி ஓர் அவல வாழ்வு வாழ்வதை எண்ணிப் பெருமூச்சு விட்டது.

அது ஆற்றங்கரையை நெருங்கும் போது இன்னொரு பாதை வழியாக அதனுடன் நட்புக் கொண்ட பெண் பன்றி ஒன்றும் வந்து சேர்ந்து கொண்டது. கொழுத்தபன்றி. அது எப்போதும் சுறுசுறுப்புடன் ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டு பொறாமைப்பட்டது.

அழுக்கைச் சுமக்கும் கழுதை அழுக்கில் புரளும் பன்றியைக் கண்டு பொறாமைப்பட்டது.

அப்போது மணி ஓசையோடு பாகன் முன்னே செல்ல நிதானமாக யானை நடந்து வந்தது.

அது பட்டத்து யானை.

யானையைக் கழுதையும் பன்றியும் லட்சியமே செய்யாது.

கழுதைக்கு என்னவோ பன்றியைக் கண்டால்தான் பொறாமை.

பன்றி சிறிது நேரம் கழுதையுடன் பேசிவிட்டு வெகு வேகமாய் ஓடிப்போய் விட்டது — அழுக்கில் புரள.

அது போகும் வேகத்தைக் கண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டே கழுதை முதுகு கொள்ளாத அழுக்கு மூட்டையோடு ஆற்றங்கரையை நோக்கி நடந்தது.

ஏதற்காக வாழ்கிறோம் என்பதே அறியாமல் வாழும் கோடிக் கணக்கில் ஒன்றாக வாழ்ந்த கழுதைக்கு ஏக்கம் அதிகமாகிவிட்டது. தனக்காகவும் வாழாமல் பிறருக்காகவும் வாழாமல் வாழ்க்கையே தனக்கும் பிறருக்கும் சுமையாகப் போய்விட்ட இந்த அவலத்தை எண்ணி எண்ணி....

இந்தத் துக்கத்தைச் சொல்லிக் கொள்ளக்கூட அந்தப் பன்றியை இரண்டு மூன்று நாட்களாகக் காணோம். கழுதை தினமும் அந்தப் பன்றியை எதிர்பார்த்து ஏமாந்தது.

ஒருநாள்-பன்றி அந்த வழியே கனவேகமாக ஓடிவந்தது. கழுதையின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

இது என்ன!


பன்றியின் பின்னால் நாலைந்து பன்றிக் குட்டிகள் வாலை ஆட்டிக் கொண்டு ஓடி வந்து கொண்டிருந்தன.

கழுதைக்கு இதைக் காணப் பொறாமை இன்னமும் அதிகமாகியது. பன்றிக்கு என்று தனியே ஒரு குடும்பம்!

அப்போது பல நாட்களாகக் காணாமலிருந்த யானை பாகனோடு அந்த வழியே வந்தது. அதனோடு யானைக் குட்டியும் புதியதாக வந்து கொண்டிருந்தது.

கழுதை, யானை போட்ட ஒரு குட்டியையும் பன்றியின் நாலைந்து குட்டிகளையும் மாறி மாறிப் பார்த்தது.

''என்ன இருந்தாலும் பன்றியின் பெருமையே பெருமை. யானை ஒரு குட்டிதான் ஈன்றது. பன்றியோ...



எவ்வளவு அழகாக, சுறுசுறுப்பாக இருக்கிறது'' என்று வியந்தது; பொறாமைப்பட்டது.

அப்படி அது நினைவில் ஆழ்ந்திருந்தபோது அதன் முதுகில் ஓர் அடி விழுந்தது; உடனே வேகமாக ஆற்றங்கரையை நோக்கி நடந்தது.

அடித்த கைக்கு உரியவன் சொன்னான்:

''உனக்கு என்ன பார்வை வேண்டிக் கிடக்கிறது? பன்றியைப் பார்த்து நின்று விட்டாய். அது பத்துக் குட்டி போட்டுஎன்ன பயன்? அதோ பார் யானையை. ஒரு குட்டி போட்டாலும் யானைக் குட்டி. யானைக் குட்டிதான்... நாளைக்கே பெரிதானால் ராஜாவைத் தன்மேல் ஏற்றிக் கொண்டு போகும்!''

இதைக் கேட்டுக் கழுதை திடுக்கிட்டது. ''பூ! இவ்வளவுதானா! பன்றிக்குப் பெருமை இல்லையா? யானைக்குத்தான் பெருமை உண்டா?'' என்று கழுதை தான் இதுவரை தவறாக நினைத்ததை எண்ணி வருந்தியது. பெருமை இல்லாதவற்றுக்கெல்லாம் தன் சிறுமையினால், பெருமை அளித்துப் பார்த்து ஏங்கிய கழுதைக்கு இப்போது ஞானோதயம் வந்தது; வந்ததாக எண்ணிக் கொண்டது.

உடனே ஆற்றங் கரையில் தவம் இருந்தது.

''கடவுளே, எனக்குப் பன்றியைப்போல நாலைந்து குழந்தைகள் வேண்டாம்; யானையைப் போல ஒரே ஒரு குழந்தை போதும்'' என்று கழுதை தவம் இருந்தது.

கழுதைக்கும் சாமி உண்டு. நம்மைப்போல அல்லாமல் அதனால் சாமியைப் பார்க்கவும் முடியும். சாமிக்குக் கழுதை என்று கிடையாது, மனிதன் என்று கிடையாது. மனிதனுக்கு ஆயிரம் சாமிகள் இருந்தாலும் சாமிக்கு எல்லோரும் ஒன்றே.


கழுதை தவம் இருந்தது; தாடி வைத்துக் கொள்ளாமலே தவம் இருந்தது. தவம் மனசைப் பொறுத்தது; வேஷத்தைப் பொறுத்தது அல்ல.

கழுதையின் தவத்துக்கு மனமிரங்கிக் கழுதைச் சாமி ஐந்து கால்களுடனும் மூன்று காதுகளுடனும் அதன் முன்னர் தோன்றி வரத்தை அளித்தது.

கழுதையின் ஆசை பலித்தது.

அதற்கு ஓர் அழகான குட்டி பிறந்தது.

தன் குட்டியைக் கண்டுகண்டு மகிழ்ந்தது கழுதை. தானும் தன் குட்டியும் நடந்து போய்க் கொண்டிருந்தபோது அதன்வழியே பன்றி தன் குட்டிகளோடு ஓடி வந்தது. பன்றி எப்போதுமே சுறுசுறுப்பு; ஆனால் அதற்கு அர்த்தம்தான் இல்லை.





உருவகக் கதை

கழுதை அதைப் பார்த்தும் பாராமல் அலட்சியமாய் இருந்தது. ''நான் உன்னைப்போல் அல்ல. ஒரே குட்டி போட்டிருக்கிறேன்'' என்றது பெருமையுடன்.

அப்போது இன்னொரு பாதை வழியே யானை கம்பீரமாகத் தன் குட்டியுடன் வந்து கொண்டிருந்தது.

உடனே கழுதை தன்னையும் யானையைப் போலப் பெருமைக்குரியதாக நினைத்துக் கொண்டது.

''நானும் யானையைப் போலத்தான். எனக்கும் ஒரே குழந்தைதான். எனக்கும் யானையைப் போலப் பெருமை..''

இப்படி நினைத்துக் கொண்டிருக்கும் போதே அதன் முதுகில் பலமான அடி ஒன்று விழுந்தது.

அடித்த கைக்குரியவன் சொன்னான், ''சீக்கிரம் போ. ஒரு குட்டி போட்டு விட்டால் யானைமாதிரி ஆகிவிட்டதாக நினைப்போ? நாளைக்கு யானைக் குட்டி ராஜாவைச் சுமந்து கொண்டு போகும். உன் குட்டி ராஜாவின் அழுக்கு உடையைத்தான் சுமக்கும்'' என்று விரட்டினான்.

''பத்தில் பெருமை என்று நினைத்தோம். அது தவறு என்றான். ஒன்றில்தான் பெருமை என்று எண்ணினோம். அதையும் தவறு என்கிறானே இவன். அப்படி என்றால் எதில்தான் பெருமை இருக்கிறது?'' என்று குழம்பியபடியே கழுதை ஆற்றங்கரையை நோக்கி முதுகு நிறைய அழுக்கு மூட்டையும் மனம் நிறைய ஏக்கமுமாக நடந்து சென்றது.





நீங்களும் அழகாக விளங்கலாம்

லாக்டோ-காலமைன் உபயோகித்தால்

ஏனெனில் அது ஒரு சாதாரண அழகு சாதனம் மட்டுமல்ல, சருமத்திலுள்ள குறைகளை நீக்கி ஒளியுடன் மிளிரச் செய்கிறது.

சருமத்திற்கு இதத்தைச் செய்யும் "காலமைன்" "விச்-ஹேஸல்" (பனிப்பிரதேசங்களில் வளரும் ஓர் வகை மரத்தின் திரவம்) ஆகிய உயர்தர மூலப் பொருள்கள் "லாக்டோ-காலமைனி"ல் சேர்க்கப் பட்டிருப்பதால் உங்கள் சருமம் இயற்கைப் பொலிவுடன் பளபளக்க உதவுகிறது. சருமத்தில் உள்ள குறைபாடுகளை அகற்றி சுத்தப்படுத் துகிறது. லாக்டோ-காலமைன் அவற்றை அடியோடு மறைத்தும் விடுகிறது. பவுடர் பூச்சுக்கு முன்பு உபயோகிக்க இது மிகச் சிறந்தது. சருமத்துடன் ஒன்றிப்போவதுடன் சருமத்தை பட்டுப்போல மழ மழப்பாக்கி பிரகாசிக்கச் செய்கிறது. வெய்யிலினால் பாதிக்கப்பட்ட சருமத்திற்கு இதம் அளிக்கிறது. சருமத்தில் உள்ள குறைபாடுகளை மறைத்துப் போக்கிக் குணம் அளிக்கும் அழகு சாதனம் லாக்டோ-காலமைன் ஒன்றுதான். எண்ணெய் பசையற்றது. மெல்லியது. தினசரி உபயோகத்துக்கு நேர்த்தியானது.



குருக்ஸ்

இயற்கை அழகு பொலிய வகை செய்கிறது **லாக்டோ-காலமைன்**

லாக்டோ-காலமைனில் இதர வகைகள்: கிரீம், (ஆடை) டால்க் (பவுடர்)

ரமாமணி திப்பறிகிருள்!

துமிலன்

சென்னை சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனில் நின்றுகொண்டிருந்த பம்பாய் மெயில் வண்டி புறப்படத் தயாராய் இருந்தது.

அப்போது ஒரு பிரயாணி ஒரு சிறிய தோல் பெட்டியுடனும், ஒரு சிறிய படுக்கையுடனும் பிளாட்பாரத்துக்குள் வேகமாக வந்தார். அவர் ஓட்டோடியும் சென்று எஞ்ஜினுக்குச் சமீபத்திலிருந்த ஒரு முதல் வகுப்புப் பெட்டிக்குள் ஜன்னல் வழியாகத் தமது சாமான்களை வீசி எறிந்தார். பிறகு கதவைத் திறந்து கொண்டு அவர் உள்ளே காலடி எடுத்து வைத்ததுதான் தாமதம், வண்டி புறப்பட்டு விட்டது.

ஓடி வந்ததனால் ஏற்பட்ட சிரமம். அவர் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கப் பொத்தென்று ஆசனத்தில் உட்கார்ந்தார். அது ஒரு 'கூபே' பெட்டி. அவர் உட்கார்ந்திருந்த ஆசனத்தைத் தவிர, மேலே ஓர் ஆசனம் மட்டும் இருந்தது. அதில் பிரயாணி யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. யாராவது இருக்கிறார்களா என்று பார்க்கவும் அவர் முயலவில்லை.

சில நிமிஷங்களுக்குப் பிறகுதான் அவர் மூச்சு விடுவது நிதானத்துக்கு வந்தது. உடல் படபடப்பு அடங்கிற்று. தோல் பெட்டியை எடுத்து ஆசனத்தின் கீழ் வைத்தார். உட்கார்ந்த வண்ணமே படுக்கையை விரித்துப் படுத்தார். பிறகு தலையணையின்கீழ் வைத்திருந்த புத்தகங்களில் ஒன்றை எடுத்தார். அது தமிழ் நிகண்டு. அதைப் புரட்டி மேலெழுந்தவாரியாகப் படிக்கலானார்.

வண்டி வேகமாகப் போகத் தொடங்கியது.

அவர் தமது கழுத்துச் சங்கிலி ஒரு பக்கமாகத் தொங்கியதை இழுத்து விட்டுச் சரியாகப் போட்டுக் கொண்டார். அவருக்கு வயது சுமார் நாற்பத்தைந்து இருக்கும். குள்ளமானவர். ஆனால் பருமனாக இருந்தார். முகம் ஓரளவு கவர்ச்சிகரமாக இருந்தது. ஆனால் அதில் அசம்பாவக் களை சொட்டிக் கொண்டிருந்தது.

அவர் நிகண்டில் 'பேய்' என்பதற்கு உபயோகிக்கக் கூடிய மற்ற வார்த்தைகளின் ஜாபிதாவைப் படித்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்குத் தூக்கம் மேலிட்டுக் கண்கள் சுழன்றன. கையில் புத்தகத்தைப் பிடித்தவண்ணம் அப்படியே தூங்கி விட்டார்.

வண்டி மிகவும் வேகமாய்ச் சென்று கொண்டிருந்தது. பிரயாணி குறட்டை விடலானார்.

வண்டி திருவாலங்காடு ஸ்டேஷனைக் கடந்து சென்ற சமயம், அவரது கையிலிருந்த புத்தகம் கீழே விழுந்தது. அப்போது அவர் தூக்கம் சற்றுக் கலைந்து கண்கள் இலேசாகத் திறந்து கொண்டன. எதிரில் ஏதோ பிசாசு மாதிரி நிற்பது போலும், அது தம்மையே உற்றுக் கவனித்துக் கொண்டிருப்பது போலும் அவருக்குத் தோன்றியது. தாம் தூங்குவதற்கு முன்னர் புத்தகத்தில் 'பேய்' என்ற வார்த்தையைப் பார்த்துக் கொண்டிருந்ததனால் ஏற்பட்ட பிரமையோ என்று எண்ணினார். ஆனாலும் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டிருக்கத் தைரியமில்லை. கண்களை நன்றாகத் திறந்து பார்த்தார்.

''புத்தகம் கீழே விழுந்து விட்டது ஸார்!'' என்று கூறிக் கொண்டே ஜன்னல் பக்கம் நின்றிருந்த அந்த உருவம் புத்தகத்தை எடுத்து ஆசனத்தின் மீது வைத்தது.

படுத்திருந்த பிரயாணி திடுக்கிட்டவராய் எழுந்து உட்கார்ந்தார். அது மனிதன்தான் என்று தெரிந்தது. ''வண்டி நடுவில் ஓரிடத்திலும் நிற்கவில்லையே. எங்கே ஏறினீர்கள்?'' என்று விசாரித்தார்.

''நான் சென்னையிலேயேதான் ஏறினேன். ரொம்ப முன்னாடியே வந்தேன். மேலே படுத்துத் தூங்கிவிட்டேன்'' என்று மற்றவர் தெரிவித்தார்.

''நான் வண்டி கிளம்பும்போதுதான் ஓடிவந்து ஏறிக் கொண்டேன். மேலே யாராவது இருக்கிறார்களா என்றுகூடப் பார்க்கவில்லை. ஓடிவந்த களைப்பு. உடனேயே கண்ணயர்ந்து விட்டேன்'' என்று உட்கார்ந்திருந்தவர் கூறினார். பிறகு

மர்மக் கதை



மர்மக்கதை எழுத வேண்டும் என்றுதான் கேட்டுக் கொண்டோம். ஆனால் துமிலனின் வழக்கமான ஹாஸ்யமும் கிண்டலும் அவர் பேனா முனையை விட்டுப் பிரிய மறுத்து மர்மக்கதையின் மதிப்பைப் பெருக்கி விட்டனவே பன்மடங்காக!


தமது படுக்கையைக் காட்டி, ''உட்காருங்களேன்'' என்றார்.

அந்தப் பிரயாணி அதற்காக வந்தனம் தெரிவித்துவிட்டு உட்காரப் போனபோது முன்ஜாக்கிரதையாய்த் தலையை நன்றாகக் குனிந்து கொண்டார். ஏனென்றால், அவர் நல்ல உயரம். உடல் ஒல்லியாயிருந்தது. ஆனால் நரம்புகள் வைரம் பாய்ந்திருந்தன. சுமார் அறுபது வயதிருக்கும். அவர் உதடுகளில் ஒருவிதமான புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. கண்களில் ஒரு திருட்டுப் பார்வை தாண்டவமாடியது.

''தாங்கள்.......!''

''ரத்னம், கதாசிரியர்!'' என்று தங்கச் சங்கிலிக்காரர் பெருமையுடன் கூறினார்.

''ஓ! புகழ்பெற்ற சிறுகதை ஆசிரியர் ரத்னமா? இப்போது ஞாபகம் வருகிறது! தங்களுக்குக் கதாரத்னம் என்ற பட்டம்கூட உண்டல்லவா? தங்களைப் பார்க்க மிகவும் சந்தோஷம்'' என்று கூறிக் கொண்டே அவர் ரத்தினத்தின் கையைப் பிடித்துப் பலமாகக் குலுக்கினார்.



ரத்தினத்துக்குத் தம் விரல்கள் முறிக்கப்பட்டு விடுவது போல் இருந்தது. அவர் அவற்றைப் பிடித்து விட்டுக் கொண்டே, ''தாங்கள்.....!'' என்றார்.

''பாண்டியன் என்று பெயர். சுகவாசி என்கிறார்களே. அந்த ரகத்தைச் சேர்ந்தவன்'' என்று அந்த மனிதர் தெரிவித்தார். பிறகு, ''எதுவரையில் போகிறீர்கள்?'' என்று விசாரித்தார்.

''பம்பாய்க்கு. அங்கே ஒரு சங்கத்தார் எனக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் போகிறார்கள்!''

''அடடா! அந்த வைபவத்தை நான் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. வழியில் ராஜம்பேட்டையில் ஓர் அவசர காரியமாக இறங்க வேண்டியிருக்கிறது. உங்களை ரொம்ப ரொம்ப நாட்களாகப் பார்க்க வேண்டுமென்பது. இங்கே சந்தித்தது நல்லதாய்ப் போயிற்று. வீட்டில் சாவகாசமாகப் பேச முடியாது. இப்பொழுது ராஜம்பேட்டை வரை பேசிக் கொண்டே போகலாம். நமது பேச்சில் தலையிட ஒரு மூன்றாவது மனிதரும் இல்லை'' என்று பாண்டியன் திருப்தி தோன்றக் கூறினார்.

இதைக் கேட்ட போது ரத்தினத்துக்குக் கவலையாகி விட்டது. தமது தூக்கத்துக்கு ஆபத்து வந்துவிடப் போகிறதே என்று!

''எதைப் பற்றிப் பேசப் போகிறீர்கள்?'' என்று கேட்டார் ரத்னம்.

பாண்டியன் சிரித்தார். ''சிறுகதை மேதையிடம் எதைப் பற்றிப் பேசுவது? சிறுகதையைப் பற்றித்தான்'' என்றார்.

வண்டி அரக்கோணம் ஜங்ஷனில் வந்து சிறிது நேரம் நின்றது.

''நீங்கள் சிறுகதைகள் படிக்கிற வழக்கமுண்டாக்கும்?'' என்று ரத்னம் கேட்டார்.

''நிறையப் படிக்கிறேன். இன்னும் படித்துக் கொண்டிருக்கிறேன். மாபஸானின் கதைகள் எல்லாம் தெரியும். சிறுகதைகளின் பிதாவான அவர்...'' என்று பாண்டியன் கூறியதைக் கேட்டபோது ரத்னத்தின் முகத்தில் அருவருப்புத் தோன்றியது.

''சிறு கதையின் பிதாவா?'' பரிகாசத் தொனியில் கேட்டார் அவர்.

''டால்ஸ்டாயின் கதைகள்...?'' பாண்டியன் ஆரம்பித்தார்.

''வழவழா குழகுழா என்றிருக்கும். நடையில் விறுவிறுப்பே கிடையாது.''

''ஓஹென்றியின் கதைகள் எனக்கு மிகவும் பிடிக்கும்!'' என்று பாண்டியன் உற்சாகத்துடன் கூறியபோது ரத்னம் விழுந்து விழுந்து சிரித்தார். ''மிஸ்டர் பாண்டியன்! நான் உங்களுக்காக மிகவும் வருத்தப்படுகிறேன். ஓஹென்றியின் கதைகள் கதைகளா? கேவலம் ஹாஸ்யக் கதைகள்! கடைசியில் ஓர் எதிர்பாராத முடிவு வேறே!''

''அப்படிப்பட்ட முடிவு வரும்படி எழுதுவது கற்பனைத் திறனைத்தானே காட்டுகிறது? பலரால் அது மாதிரி எழுத முடிவ



தில்லே. நீங்கள் அம்மாதிரி ஒன்றே ஒன்று எழுதுங்களேன்!''

''எதற்காக அது மாதிரி எழுத வேண்டும் என்று கேட்கிறேன். அந்த மனிதர் காஷிய ராக இருந்து பணத்தை அபேஸ் பண்ணி விட்டு ஜெயிலுக்குப் போய் வந்தார். அப் படிப்பட்ட ஆசாமி எழுதிய கதைகளைப் படிப்பதே பாவம்!''

''ஸாமர்ஸெட் மாமின் கதைகள்!'' என்று பாண்டியன் கூறியபோது ரத்னம் தம் தலே யில் அடித்துக் கொண்டார்.

இப்படி யார் பெயரைச் சொன்னாலும் ரத்னம் ஏதாவது ஒரு குறை சொல்லித் தமது காதுகளைப் பொத்திக் கொண்டார்.

''அப்படியானால் சிறந்த கதை எழுது பவர்கள் என்று நீங்கள் யாரைத்தான் ஒப்புக் கொள்வீர்கள்?'' என்று பாண்டியன் மெது வாகக் கேட்டார்.

''சொல்கிறேன். தாங்கள் தமிழ்ச் சிறு கதைகள் படிப்பதுண்டா?'' என்று ரத்னம் பதிலுக்குக் கேட்டார்.

''உண்டு!'' என்றார் பாண்டியன்.

''என் நண்பர்கள் சிலர் எழுதும் கதைகள் ஐந்துக்கு இரண்டு பழுதில்லாமல் இருக்கும்.''

''முதல்தரமான கதைகள் எழுதுபவர்களே இல்லையா?''

''அப்படி எப்படி உறுதியாகக் கூறமுடியும்? என் கதைகளைப் படித்திருக்கிறீர்களா?''

''ஓ! 'யாரோ ஒருவன் எங்கேயோ போனான்' என்று ஒன்று எழுதியிருந்தீர்களே? சிரஞ்சீவிக் கதை என்கிறார்களே? அதை ஒரு தடவையல்ல பல தடவைகள் படித்திருக்கிறேன்.''

''அதைப் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பமளிப்பது என்று சில விமரிசகர்கள் எழுதியிருக்கிறார்கள்'' என்று ரத்னம் பெருமிதம் தோன்றக் கூறினார்.

''நான் ஆராய்ச்சிக்காகப் பல முறை படிக்க வேண்டியதாயிற்று. அந்தச் சிறுகதையில் மொத்தம் 2470 வார்த்தைகள் இருக்கின்றன. அதில் ஒரு குட்டையையும் ஓர் எருமை மாட்டையும், சூரியாஸ்தமனத்தையும் பற்றி வர்ணித்திருக்கிறீர்கள். அதற்காக 288 வார்த்தைகளை வீணாக்கியிருக்கிறீர்கள். கதை நடுவில் தலையிட்டுத் தங்களது அபிப்பிராயத்தைச் சொல்லும் அதிகப் பிரசங்கித்தனத்துக்காக 250 வார்த்தைகளைப் பலி கொடுத்திருக்கிறீர்கள். அதில் உங்களது....''

''மிஸ்டர் பாண்டியன்!'' என்று ரத்னம் கோபமாகக் குறுக்கிட்டார்.

''மற்றப் பேராசிரியர்களைப் பற்றி நீங்கள் இழிவாகக் கூறியவற்றை இதுவரை நான் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தேன். நீங்களும் இப்போது நான் சொல்வதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும்!'' என்று பாண்டியன் கூறிப் பல்லைக் கடித்துக் கொண்டு அவரை வெறித்துப் பார்த்தார்.

''அப்புறம் பழமொழிகள், மேற்கோள்கள் இவற்றுக்காக முப்பது வார்த்தைகளையும் பிரசங்களுக்காக இருபது வார்த்தைகளையும் அநாவசியமாக உபயோகித்திருக்கிறீர்கள். அப்புறம் கதையினால் ஏற்பட்டுள்ள நீதியை வாசகர்களின் மண்டைக்குள் திணிப்பதற்காக நாற்பத்திரண்டு வார்த்தைகளை நாசஞ் செய்திருக்கிறீர்கள். ஆகக் கதை என்பது பாக்கியுள்ள ஆயிரத்து ஐந்நூற்றுத் தொண்ணூறு வார்த்தைகளில்தான் அடங்கியிருக்கிறது.''

''இப்போது என்னைத் தூங்க அனுமதிப்பீர்களா?'' என்று கேட்டார் ரத்னம்.

''சரி!'' என்று கூறிவிட்டுப் பாண்டியன் தமது ஆசனத்தில் ஏறிப் படுத்துக்கொண்டார். ஆனால் அவர் தூங்கவில்லை.

வண்டி வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

அது புத்தூர் ஸ்டேஷனைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது பாண்டியன், ஏதோ சத்தம் கேட்டுக் கீழே உள்ள ஆசனத்தைக் கவனித்தார். ரத்னம் தமது வாயை நன்றாகப் பிளந்துகொண்டு பலமாகக் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார். பாண்டியன் சப்தமிடாமல் கீழிறங்கினார். தூங்கும் கதாசிரியரை ஒரு நிமிஷம் உற்றுக் கவனித்தார்.

பிறகு படுக்கையின் ஓரமாகக் கிடந்த ரத்னத்தின் மெல்லிய கைச்சவுக்கத்தை எடுத்துப் பந்தாக உருட்டி வலது கையில் வைத்துக்கொண்டார். விளக்கை அணைக்கப் போனார். ஆனால், அதன் கிளிக் சப்தம் கேட்டு ரத்னம் கண் விழித்துக்கொண்டு விடக்கூடும் என்று எண்ணி அணைக்கவில்லை.

அவர் துணிப் பந்தை ஒரு கையால் ரத்னத்தின் வாயில் திணித்துக் கொண்டே, இன்னொரு கையால் அவரது மென்னியைப் பலமாகப் பிடித்து நெருக்கினார். அதே சமயம் கீழிருந்து தாவி அவரது வயிற்றின் மீது தமது முழங்கால்கள் இரண்டையும் வைத்துக் கொண்டு பலம் கொண்ட மட்டும் அமுக்கினார்.

''மிஸ்டர் கதாரத்னம்! நாம் இருவரும் ஸென்ட்ரல் ஸ்டேஷனில் ஏறினோம். ஆனால் நான் பிரயாணம் செய்வது உங்களுக்கு முதலில் தெரியாது. தற்செயலாகச் சந்தித்தோம். சிறுகதையைப் பற்றி நமக்குள் காரசாரமான விவாதம் நடந்தது. நம் இருவருக்குமே இந்தச் சூழ்நிலையில் மேலே என்ன நடக்குமென்று தெரியாது. இதுதான், 'ஸஸ்பென்ஸ்' என்பது. இப்போது நான் உங்களை மட்டமான கதை எழுதுபவர்கள் போகும் நரகத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறேன். இதுதான் 'கிளைமாக்ஸ்'. அடுத்தாற்போல் வண்டி நிற்கப்போகும் ஸ்டேஷனில் இறங்கிப் போய் விடுவேன். உங்களை யார் கொலை செய்தார்கள் என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. இதுதான் எதிர்பாராத முடிவு. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் நடைபெற்ற ஒரு சிறிய சம்பவம். இதில் சம்பந்தப்பட்டவர்கள் இரண்டே பேர்தான். சிறுகதை என்பது கிட்டத்தட்ட இந்த அமைப்பில், இந்த அளவில்தான் இந்த மூன்று அம்சங்களையும் கொண்டதாக இருக்க வேண்டும். இதை நான் மங்களகரமாக முடிப்பதற்காக உங்களை பம்பாய்க்குப் போக விட்டிருந்தால் அது சாதாரணக் கதையாகி விடும். கதையைச் சிரஞ்சீவிக் கதையாக்குவதற்காக நான் உங்களைக் கொல்ல வேண்டியதாகிறது....... ஹா, ஹா, ஹா...!''

பாண்டியன் இப்படிச் சொல்லிக் கொண்டே போனபோது ரத்னத்தின் தலை ஒரு பக்கமாகச் சாய்ந்தது. அவர் மூச்சு நின்றுவிட்டது.

பாண்டியன் நிதானமாக அவர் மீதிருந்து கீழிறங்கினார். வாயிலடைத்திருந்த துணிப் பந்தை எடுத்தார். ஜன்னல் கதவைத் திறந்து அதை வெளியில் வீசி எறிந்தார். தமது கைக்குட்டையை எடுத்து ரத்னத்தின் கழுத்தில் தமது கைவிரல்கள் பட்டிருந்த இடங்களை நன்றாகத் துடைத்தார். கைக்குட்டையினாலேயே ரத்னத்தின் கைகளைப் பிடித்து அவரது கழுத்தில் வைத்து, விரல்கள் நன்றாகப் பதியும்படி அழுத்தினார். படுக்கையின் கால்மாட்டில் கிடந்த போர்வையைக் கைக்குட்டையாலேயே பிடித்திழுத்து, ரத்னத்தின் முகத்தின் மீது போட்டார்.

ஜன்னல் கதவுகளைச் சாத்தினார். தம் விரல் ரேகைகள் படிந்திருக்கக்கூடிய இடங்களையெல்லாம் கைக்குட்டையால் துடைத்தார். பிறகு தமது தோல் கைப்பெட்டியை எடுத்து வைத்துக் கொண்டு வண்டியிலிருந்து இறங்கத் தயாராக இருந்தார்.

நான் எழுதுபவை சமூக நாவல்கள், சிறு கதைகள் என்கிறார்கள். இல்லை, நானும் சரித்திரக் கதைகள்தான் எழுதுகிறேன். இந்த நூற்றாண்டின் அமெரிக்க வாழ்வுதான் எனக்கு நன்கு பரிச்சயமான ஒன்று. அதைப் பற்றித்தான் நான் எழுதுகிறேன். சமூக சரித்திரக் கதைகள் என்று வேணுமானாலும் அவற்றைக் குறிப்பிடுங்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரிட்டனை ஆராயும் எந்த சரித்திரப் பேராசிரியர்தான் டிக்கன்ஸை மேற்கோள் காட்டாமலிருக்க முடியும்? - ஜான் ஓ. ஹாரா

வண்டி ரேணிகுண்டா ஜங்ஷனுக்கு வந்தது. வண்டி நின்ற மாத்திரத்தில் அவர் கீழிறங்கி எதிரேயுள்ள கிராதிப் பக்கம் போய் நின்றார். அப்படியே திருப்பதிக்கு வண்டிகள் செல்லும் பிளாட்பாரத்துக்குச் சென்று விட்டார். பிறகு பம்பாயிலிருந்து சென்னை வரும் மெயில் வண்டியில் மூன்றும் வகுப்புப் பெட்டி ஒன்றில் ஏறிச் சென்னைக்கு அதிகாலையிலேயே திரும்பி விட்டார்.

பம்பாய் மெயில் வண்டி காலை ஏழரை மணிக்குக் குத்தி ஸ்டேஷனை அடைந்தது. ஒரு டிக்கட் பரிசோதகர் ரத்னம் இருந்த கூபே பெட்டியைத் திறந்தார். படுத்திருந்த பிரயாணியைப் பார்த்து டிக்கட் கேட்டார்.

அப்புறம் காரியங்கள் துரிதமாக நடந்தன. போலீஸ் அதிகாரிகள் பெட்டிக்குள் கொலையாளியைப் பற்றித் தெரிவிக்கக் கூடிய தடையங்கள் ஏதாவது அகப்படுகின்றனவா என்று சோதனை செய்து பார்த்தனர். ஒரு தகவலும் கிடைக்கவில்லை. தோற்பெட்டியிலிருந்த சில கடிதங்களிலிருந்து இறந்தவர் பெயர் ரத்னம் என்பதும் அவர் ஒரு பிரபல எழுத்தாளர் என்பதும் தெரிய வந்தன.

இது ஓடும் ரயிலில் நடந்த கொலை; அதுவும் ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர் கொலை. ஆகையால் விஷயம் பத்திரிகைகளில் பலமாக அடிபட்டது. பத்திரிகைகள் ரத்னத்தின் போட்டோவை மட்டுமின்றி, அவரது ஒரே மகள் ரமாமணியின் போட்டோவையும் பிரசுரித்தன.

ரத்னத்தின் நண்பர்களும் வாசகர்களும் ரமாமணியைத் துக்கம் விசாரிக்க வந்தனர். செல்வந்தராகக் காணப்பட்ட சாத்தனூர் என்ற பிரமுகரும் வந்திருந்தார். அவர் காலஞ்சென்ற கதாரத்தினத்தின் எழுத்துக்களில் தமக்கு ஈடுபாடு உண்டென்றும், அவரை ஒரே ஒரு முறை சந்திக்கும் மகத்தான பாக்கியம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். கதாரத்னம் எழுதியது எதுவாயிருந்தாலும்கூடத் தாம் எல்லாவற்றையும் புத்தகமாகப் பிரசுரிக்கத் தயாராக இருப்பதாகக் கூறினார். கூறியதோடு மட்டுமல்ல; முன்பணமாகப் பத்தாயிரம் ரூபாயைக் கரன்ஸி நோட்டுக்களாகவே எண்ணிக் கொடுத்துச் சென்றார்.

போலீஸார் கொலையாளியைக் கண்டுபிடிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். கொலை நடந்த தினம் பம்பாய் மெயிலில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்ய இடம் ரிஸர்வ் செய்திருந்தவர்களின் ஜாபிதாவிலிருந்து ரத்தினத்தின் வண்டியில் சென்றவர் பெயர் வில்லிக்கூத்தன் என்று தெரிந்து கொண்டார்கள். ஆனால், அவர் விலாசம் கிடைக்கவில்லை. டெலிபோன் கெய்டில் கூட அந்த விந்தையான பெயர் இல்லை.

கொலையுண்டவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியும், அவரது பணப் பையிலிருந்த பணமும் அப்படியே இருந்தன. ஆகவே, கொலையாளி திருடுவதற்காக அன்றிப் பழி வாங்குவதற்காகவே கொலை செய்திருக்கிறான் என்று போலீசார் நினைத்தார்கள்.

ஆனால், ரத்னத்துக்கு விரோதி என்று சொல்லக் கூடிய யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. இறுதியில், கதாசிரியர் கதாரத்னம் கொலை செய்யப்பட்ட விஷயம் போலீஸாரால் துப்புத் துலக்கப் படாத நூற்றுக் கணக்கான ரயில் கொலைகள் ஜாபிதாவில் சேர்ந்துவிட்டது.

ஆனால் கொலையுண்டவரின் பெண் ரமாமணி கொலையாளியை எப்படியும் கண்டு பிடிப்பது என்று சபதம் செய்துகொண்டாள். அவள் கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு நாளொன்றுக்கு ஓர் ஆங்கிலத் துப்பறியும் நாவல் படித்து வந்தாள். ஒரு நாள் அவள் தனது தந்தையின் கதைகளின் கைப்பிரதிகளுக்காக முன் பணம் கொடுத்துவிட்டுச் சென்ற பிரமுகரைப் பார்த்துவிட்டு வரலாமென்று புறப்பட்டாள்.

சாத்தனூர், புதிதாக ஏற்பட்டு வந்து கொண்டிருந்த ஒரு காலனியின் ஒரு கோடியிலிருந்த சிறிய பங்களா ஒன்றில் வசித்து வந்தார். ரமாமணி வந்ததும் அவர் அவளை அன்புடன் வரவேற்றார். இருவரும் புத்தக அலமாரிகள் நிறைந்திருந்த ஹாலில் உட்கார்ந்து பேசினார்கள்.

போலீஸார், தனது தந்தையைக் கொன்றவனைக் கண்டுபிடிக்கத் தவறியதைப் பற்றி அவள் கூறிக் குறைப்பட்டாள். அந்த ஆளைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம் என்று சாத்தனூர் கூறினார். பிறகு பேச்சு பொது விஷயங்களில் திரும்பியது.

''நிறையப் புத்தகங்கள் வைத்திருக்கிறீர்களே!'' என்றாள்.

''புத்தகம் சேகரிக்கும் பைத்தியம் கொஞ்சம் உண்டு. எனக்கு உன் அப்பா எழுதிய...'' என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது வேலைக்காரப் பையன் வந்தான். யாரோ அவரைத் தேடி வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

''மிஸ் கதாரத்னம், இதோ வந்துவிடுகிறேன்'' என்று கூறி வாசல்புறம் விரைந்து சென்றார்.

பொழுது போகாமற் போகவே ரமாமணி ஒரு சிறிய மேஜையின் மீது ஓர் இரும்பு டிரேயில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த ஒரு தமிழ்ப் புத்தகத்தை எடுத்துப் புரட்டினாள். அது ஒரு கதைத் தொகுதி. மாணிக்கம் என்பவர் எழுதியது. அதைப் புரட்டிய போது அவள் உதடுகளில் கேலிப் புன்னகை அரும்பியது. அந்தப் புத்தகத்தில் ஒவ்வொரு பக்கத்தின் ஓரத்திலும் பென்சிலால் குறிப்புகள் எழுதப் பட்டிருந்தன. ''மோசம்!'', ''சுத்த அபத்தம்!'', ''குழப்பம்!'' ''பேத்தல்!'' ''இவனெல்லாம் எதற்குக் கதை எழுதுகி

றாள்?" "ஆபாசம்!" "கன்னிப் பெண்கள் படிக்கக் கூடாது" என்றெல்லாம் எழுதப்பட்டிருந்தது.

ரமாமணி, அடியிலிருந்து இன்னொரு புத்தகத்தை எடுத்தாள். அதன் தலைப்பைப் பார்த்ததுமே அவள் அதை எடுத்துக் கண்களில் ஒத்திக்கொண்டாள். அது "யாரோ ஒருவன் எங்கேயோ போனான் முதலிய கதைகள்" என்ற தலைப்புடனிருந்தது. அது அவள் தந்தை எழுதிய கதைகளின் கோவை.

அதை அவள் புரட்டிப் பார்த்தபோது அதிலும் பக்கங்களின் ஓரத்தில் அபிப்பிராயங்கள் எழுதப்பட்டிருப்பதைக் கண்டாள். அப்பொழுது கதவு காற்றில் படாரென்று சாத்திக்கொள்ளவே அவளுக்குப் பயம் வந்து விட்டது. அந்த இரண்டு புத்தகங்களையும் எடுத்துக் கைப்பையில் வைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

சாத்தனாரைப் பார்க்க வந்திருந்தவர் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு, தமது வண்டியில் ஏற விருந்தார். ரமாமணியைக் கண்டதும் தயங்கி நின்றார்.

"இவள் கதாசிரியர் ரத்தினத்தின் பெண்." "இவர் காளத்தி. 'ரிஜிஸ்திரார் ஆப் புக்ஸ்' ஆபீஸில் என் சகாவாக இருந்தவர்" என்று ஒருவருக்கொருவரை அறிமுகப்படுத்தி வைத்தார் சாத்தனார்.

"ரத்னத்தை எனக்கு இலேசாகப் பரிச்சயம் உண்டு. பாவம்!" என்று காளத்தி தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

"அது ஒரு கதையாய்ப் போய்விட்டது" என்று ரமாமணி கூறிவிட்டு, சாத்தனாரிடம் "நான் போய்விட்டு இன்னொரு நாள் சாவகாசமாக வருகிறேன். வரும்போது அப்பா கதைகளின் கையெழுத்துப் பிரதிகளை எல்லாம் எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்றாள்.

அவள் இப்படித் திடீரென்று கிளம்புவது சாத்தனாருக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஆனாலும் "சரி போய் வா!" என்று விடை கொடுத்தார்.

"நான் உங்கள் வீட்டுப் பக்கமாகத்தான் போகிறேன். வண்டியில் கொண்டு போய் விட்டு விடுகிறேனே!" என்றார் காளத்தி.

அவர் அப்படிச் சொல்லி வாய் மூடு முன்னமேயே ரமாமணி வண்டிக்குள் ஏறிக்கொண்டு விட்டாள். ஏனென்றால், அவள் தன் கைப்பைக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருந்த இரண்டு புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு போய்விட வேண்டுமென்று துடித்துக்கொண்டிருந்தாள்.

வண்டியில், அவள் காளத்தியோடு பேச்சுக் கொடுத்ததில் சாத்தனாரைப் பற்றிய பழைய விஷயங்கள் அவளுக்குத் தெரிய வந்தன. அவர் மூளை குழம்பிப் போகுமளவுக்கு நிறையப் படித்தவர். ரிஜிஸ்திரார் ஆப் புக்ஸ் ஆபீஸில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்தார். சில பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களைப் படிக்கும்போது "சகிக்கவில்லை!", "மோசம்", "பையன்கள் படிப்பதற்கு இப்படியா எழுதுவான்?" என்று முனகுவார். ஓர் ஊசியை எடுத்துத் தம் தலையில் குத்திக் கொள்வார். சங்க காலப் புலவர் சீத்தலைச் சாத்தனார், குறைகளுள்ள கவிதைகளைப் படிக்கும்போது எழுத்தாணியால் தம் தலையில் குத்திக்கொள்வது வழக்கம். தாமும் அந்தப் புலவரைப் போன்றவர் என்ற பிரமை; நடுவில் ஒருநாள் புத்தகங்களைக் கிழித்துக்கொண்டிருந்தார். அவரை மனோவியாதி சிகிச்சை செய்யும் நர்ஸிங் ஹோமில் சேர்த்தார்கள்; சீக்கிரமே குணமாகிவிட்டது. ஆனால் பிறகு அவரைக் கட்டாயப்படுத்தி வேலையினின்றும் விலகச் செய்தார்கள்."

புகழ்ச்சி என்பது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. நான் எழுதிய விஷயம் ஏதாவது நன்றாயிருக்கிறது என்று யாராவது சொல்லிவிட்டால் எனக்குக் கெட்ட கோபம் வந்து விடும். ஒரு தடவை ஒரு பத்திரிகைப் 'பிரியர்' என்னிடம் வந்து நான் எழுதிய ஒரு கதை நன்றாயிருக்கிறதென்று சொல்லி விட்டார். உடனே நான் அன்று முதல் ஒரு வாரம் உபவாசம் இருப்பதென்று உறுதி கொண்டேன். அன்று வீட்டில் வெங்காய சாம்பார் சமையல் என்று தெரிந்த பிறகுதான் அந்த உறுதியை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிருந்தது. - கல்கி

இந்த விவரங்கள் ரமாமணியின் துப்பறியும் மூளையைத் தீவிரமாக வேலை செய்யச் செய்தன. போலீஸ் கமிஷனரைப் பார்க்கப் புறப்பட்டாள்.

அவள் அந்த அதிகாரியிடம், தான் சாத்தனாரைப் பற்றிக் கேள்விப்பட்ட பழைய கால விவரங்களைத் தெரிவித்தாள். தான் கொண்டு வந்த இரு புத்தகங்களின் பக்கங்களில் சிவப்பு மையால் எழுதப்பட்டிருந்த குறிப்புக்களையும் காண்பித்தாள். சாத்தனார் வீட்டில் தான் மூன்று படங்களைப் பார்த்ததையும் அவற்றில் மகாத்மா பிள்ளைப் பாண்டியன், மகாத்மா வில்லிபுத்தூரார், மகாத்மா ஒட்டக்கூத்தன் என்று எழுதப்பட்டிருந்ததைப் பற்றியும் கூறினாள். பிறகு ஆசிரியர் ரத்னத்தின் கதைப் புத்தகத்தின் கடைசியிலிருந்து ஒரு சிறிய காகிதத்தை எடுத்துக் காண்பித்தாள். அதில் 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனிங்கில்லை, குறும்பியளவாய்க் காதைக் குடைந்து தோண்டி, எட்டினமட்டறுப்பதற்கோ வில்லி இல்லை, இரண்டொன்றும் மயிரை முடிந்து இறங்கப் போட்டு வெட்டுவதற்கோ கவி ஒட்டக்கூத்தனில்லை...' என்ற பாட்டு எழுதப்பட்டிருந்தது. "அந்த மூவரைப் போலத் தற்கால எழுத்தாளர்களைத் தண்டிக்க வேண்டிய பொறுப்பு தம்மைச் சேர்ந்தது என்ற பைத்தியம் அவரைப் பிடித்திருக்கிறது. ஆகவே, அவர்தான் என் தந்தையைக் கொன்றிருக்க வேண்டும். 'வில்லிக் கூத்தன்' என்ற பெயரால் ரயிலில் இடம் ரிஸர்வ் செய்திருக்கிறார். என் தந்தையைக் கொன்றுவிட்ட பாவம் போவதற்காகப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்."

ரமாமணி கூறிவந்ததைப் போலீஸ் அதிகாரி, அமைதியுடனும் ஆச்சரியத்துடனும் கேட்டு வந்தார்.

"நீங்கள் சொல்வது போல் நடந்திருக்கலாம். ஆனால் அதை எப்படி நிரூபிப்பது?"

"நான் அதைப் பற்றியும் யோசனை செய்து வைத்திருக்கிறேன்" என்றாள் ரமாமணி.

பிறகு அவள் தனது திட்டத்தைப் பற்றி விவரமாகக் கூறினாள்.

இதற்கு மூன்று நாட்களுக்குப் பிறகு, சாத்தனாருக்குத் தபாலில் ஒரு கடிதம் வந்தது:

''உயர்திரு சாத்தனார் அவர்களுக்கு,

நான் கதாசிரியன் மாணிக்கம் என்று என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். தங்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு இது வரை ஏற்படவில்லை. காலஞ்சென்ற என் நண்பர் கதாரத்னத்துக்கு அடுத்தபடியாக நான்தான் சிறந்த எழுத்தாளன் என்று விமரிசகர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

தாங்கள், கதாரத்னத்தின் கதைகளைப் பிரசுரிக்கப் போவதாகவும், அதற்காக முன் பணமாக அவர் பெண்ணிடம் பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருப்பதும், புகழ் பெற்ற விஷயம். அதேபோல் என் கதைகளையும் பிரசுரிக்க முன்வருவீர்களென்று நம்புகிறேன்.

நான் இன்னும் இரண்டு வாரங்களில் அதாவது ஆகஸ்ட் முதல் தேதியன்று பம்பாய்க்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அன்று நண்பர் கதாரத்னம் ஏறிச் சென்ற கூபேயிலேயே பிரயாணம் செய்யலாமென்றிருக்கிறேன். அதில் பிரயாணம் செய்து, அந்தச் சூழ்நிலையைக் கவனித்து அவரது கொலையைப் பற்றிய கட்டுரை ஒன்று எழுதலாம் என்று உத்தேசம். பம்பாயிலிருந்து திரும்பி வந்ததும் தங்களைச் சந்திக்கிறேன். அதற்கிடையே என் புத்தகங்களைப் பிரசுரிப்பதைப் பற்றி முடிவு செய்திருப்பீர்களென்று நம்புகிறேன்.

மாணிக்கம்

சாத்தனார் இந்தக் கடிதத்தை இரண்டு மூன்று முறை படித்துவிட்டுச் சிறிது யோசனையில் ஆழ்ந்தார். பிறகு எழுத்தாளர் கதா மாணிக்கத்தைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்தார்.

ஆகஸ்ட் முதல் தேதியன்று. சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் பம்பாய் மெயில் கிளம்புவதற்குத் தயாராயிருந்தது. ஒரு பிரயாணி மிக வேகமாக வந்தார். அவர் கூபே பெட்டிக்குள் ஏறியது தான் தாமதம், வண்டி புறப்பட்டது.

அவர் தமது படுக்கைக் கட்டைப் பிரித்துப் போடாமல், ஜன்னல் பலகையின் மீது சாய வைத்து அதன் மீது சாய்ந்துகொண்டு கால்களை ஆசனத்தின் மீது வைத்து உட்கார்ந்து கொண்டார்.

வண்டி அரக்கோணம் ஸ்டேஷனுக்கு வந்து நின்றுவிட்டுக் கிளம்பியது. கூபேயின் மற்ற இரண்டாவது ஆசனத்தின் மீது படுத்திருந்த பாண்டியன் கீழே குனிந்து பார்த்தார். கீழே இருப்பவர் குறட்டை விடத் தொடங்கினார்.

வண்டி இச்சிபுத்தூர் ஸ்டேஷனைக் கடந்து சென்றது. குறட்டை சப்தம் பலமாயிற்று. பாண்டியன் தனது நெடுங் கால்களைக் கீழே வைத்துச் சப்தமிடாமல் இறங்கி வந்து ஜன்னல் பக்கம் சென்றார். கடைக் கண்ணால் தூங்கும் பிரயாணியைக் கவனித்தார். 'மாணிக்கம்' என்று கூப்பிட்டார். அந்தப் பிரயாணியின் தூக்கம் கலையவில்லை.

பாண்டியன் நின்றவாறே தம் மேல் ஆசனத்திலிருந்து மூட்டை போன்ற ஒன்றைத் தூக்க முயன்றார். அப்போது அவர் குதிகால்கள் சற்றே மேலே எழும்பின.

படுத்திருந்த பிரயாணி கண் திறந்து அதைக் கவனித்துவிட்டார். மறு கணம் பாண்டியன் வயிற்றில் விண்ணென்று பூட்ஸ் கால்கள் உதைத்தன. பாண்டியன் மல்லாக்காக விழுந்தார். எதிரிலிருந்த சாமான் வைக்கும் சிறிய ஷெல்பில் மண்டை பலமாக மோதியது. பிறகு அவர் கீழே விழுந்தார். அவரை உதைத்து வீழ்த்திய பிரயாணி அவர் மீது பாய்ந்து உட்கார்ந்தார். அவரது கைகளையும், கால்களையும் தமது கால் சராய்ப் பையிலிருந்த கயிற்றை எடுத்துக் கட்டிப் போட்டார்.

ரயில் திருத்தணி ஸ்டேஷனில் நின்றது. பிரயாணி கதவைத் திறந்ததும், பக்கத்து வண்டியிலிருந்த நான்கு போலீஸ்காரர்கள் வந்தனர். அவர்கள் பின்னால் ரமாமணியும் வந்தாள்.

''இதோ! பாண்டியன் அல்லது வில்லிக் கூத்தன் என்ற சாத்தனார் இருக்கிறார். அவர் என் தலையில் ஒரு கல்லைத் தூக்கிப் போட முயன்றார்'' என்று பிரயாணி கூறி மேல் ஆசனத்திலிருந்த ஒரு லெத்தான் பையை எடுத்தார். அதற்குள் ஒரு பெரிய கல்லுரல் குழவி இருந்தது.

''ரமாமணி! நீங்கள் எதிர்பார்த்தபடியே நடந்தது. அப்பாவின் புத்தகத்தில், 'மென்னியை முறிக்க வேண்டும்!' என்று சிவப்பு மையில் எழுதியிருந்தான். அப்படியே செய்து விட்டான். மாணிக்கத்தின் புத்தகத்தில் 'இவன் தலையில் கல்லைத் தூக்கிப் போட வேண்டும்!' என்று சிவப்பு மையால் குறிப்பிட்டிருந்தான். அதே மாதிரி செய்துவிட்டான்'' என்றார் பிரயாணி.

''உங்களுக்கு என்ன நேர்ந்துவிடுமோ என்று பயந்துகொண்டிருந்தேன். அந்த எழுத்தாளர் மாணிக்கம் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவராக இருக்க வேண்டும். ஒரு பெண் சொன்ன யோசனை என்று அலட்சியம் செய்யாமல்; அதன்படி செய்து பார்த்தீர்களே. என் அப்பாவைக் கொன்ற பைத்தியத்தைப் பிடித்தீர்கள். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன், போலீஸ் கமிஷனர் ஸார்!'' என்றாள் ரமாமணி.

சாத்தனார் மீது வழக்கு நடைபெற்ற போது, அவர் தமது குற்றங்களை ஒப்புக் கொண்டுவிட்டார். நீதிபதி அவருக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்.

''இரு கோரிக்கைகள்!''

''சொல்லுங்கள்!'' என்றார் நீதிபதி.

''நான் கதா ரத்னத்தின் புத்தகங்களுக்காக ரமாமணியிடம் கொடுத்த முன் பணம் பத்தாயிரம் ரூபாயை வாங்கி நெருப்பு வைத்துக் கொளுத்திவிட வேண்டும். என்னைத் தூக்கிலிடு முன் எனக்கு 'இலக்கிய நூம்பக் நிக்ரஹன்' என்று பொறிக்கப்பட்ட வீரப் பதக்கம் அளிக்க வேண்டும்'' என்று தமிழ், ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம் மூன்றும் கலந்த திரிவேணி மொழியில் கேட்டுக் கொண்டார் சாத்தனார்.

லீலை

சுந்தர ராமசாமி



"அப்பா, நான் புறப்பட்டாச்சு, பின்னே பார்க்க" என்று சொல்லிக்கொண்டே அவளேறு வாசல் திண்ணையில் வந்து நின்றாள்.

மகாதேவ அய்யர் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். அவர் முகத்தில் பார்வை பதித்தபடி கூச்சமில்லாத பாவனையில் சிரித்துக்கொண்டு நின்றாள் அவள். அவள் அப்பட்டமாக உடைத்துப் பேசிவிட்டது அவரிடம் ஓர் அசுவாரஸ்யத்தை ஏற்படுத்தி, தொடர்ந்து மன வேதனையைக் கிளறுவது போலவே இருந்தது. இருந்தாலும் அவளோடு சேர்ந்துகொண்டு அவரும் மேலுக்குச் சிரிக்க முயன்றார்.

"அவா நமக்குத் தூர உறவு, தெரியுமா?"

"நேத்து ராத்திரிதான் தெரியும், நீங்க சொல்லி. தூர உறவான அந்த மாமிக்கு உடம்பு சரியில்லே. அவளைப் பார்த்துவிட்டு வரத்தான் நாம போறோம். பின்னே பார்க்க இல்லே அப்பா, பின்னே பார்க்க இல்லே. தமாஷுக்குச் சொன்னேன்" என்று சொல்லிவிட்டு மேலும் சிரித்தாள் அவள்.

இப்பொழுது அவரால் அவளோடு சேர்ந்துகொண்டு சிரிக்க முடியவில்லை. அவளுக்கு எதிராக ஒரு கோப அலை அவர் மனசில் மூண்டது. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் ஒரு குற்றவாளியைப் பார்ப்பதுபோல் அவள் முகத்தைப் பார்த்தார். அவருடைய மன உணர்வுகளைப் புரிந்துகொண்டு, அதை வாங்கிக் கொள்ளாத பாவனையில் தலையைத் திருப்பி வானை வெறித்தபடி நின்றுகொண்டிருந்தாள் அவள்.

வாசலில் ஒரு கார் வந்து நின்றது.

"அப்பா, டாக்ஸி வந்தாச்சு" என்றாள்.

மகாதேவ அய்யர் எழுந்திருந்து சரசரென்று உள்ளே விரைந்து, வெற்றுடலில் அங்கவஸ்திரத்தைப் போர்த்தியபடி வெளியே வந்தபோது, செருப்பும் காலுமாக அவளேறு பின்சீட்டில் ஏறிக்கொண்டிருந்தாள். அவள் முகம் மௌன விரதம் பூண்டு யுகாந்திரங்கள் ஆகிவிட்டதுபோல் கல்லாக இருந்தது. அவர் ஏறிக் கொள்ளவும் வண்டி புறப்பட்டு விட்டது.



"என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டார் மகாதேவ அய்யர்.

சாய்வு நாற்காலியில், அரைவேஷ்டியைத் தளர்த்திவிட்டுக் கொண்டு, அடிவயிற்றை இடது கையால் தடவியபடி, ஆங்கிலத் துப்பறியும் நாவலுக்குள் அமிழ்ந்துபோயிருந்தவர் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார். எதிரே ஒரு வயதானவரும், குண்டாக ஒரு பெண்ணும் நின்றுகொண்டிருந்தனர்.

"நான்தான் கரமனை மகாதேவ அய்யர். லக்ஷ்மிக்கு ஒன்றுவிட்ட மாமா பிள்ளை."

"அது யாரு, லக்ஷ்மி?"

"உங்க சம்சாரம்."

"ஓ! எச்சுமியா? அவளுக்கு?"



அத்தி பூத்தாற் போல்தான் எழுதுவார் நாகர்கோவிலைச் சேர்ந்த திரு சுந்தராமசாமி. ஒவ்வொரு கதையும் அழுத்தமும், கற்பனை வளமும் நிறைந்து படிப்பவர் மனத்தை உருக்கும்படியாக அமையும்.

சோகக் கதை

''ஒன்றுவிட்ட மாமா பிள்ளை.''

''ஒன்றுவிட்டா? ரெண்டுவிட்டா?''

''ஒன்றுவிட்ட.''

''ஒன்றுவிட்டா? அப்போ ரொம்பக் கிட்டின உறவாச்சே. வாங்கோ, வாங்கோ. யாரு குழந்தை?''

''என் பெண்!''

''நமஸ்காரம் மாமா!'' என்று கையைக் கூப்பினாள் அலமேலு.

''இதெல்லாம் என்னது? வேண்டாத வழக்கம்'' என்று சொல்லிக் கொண்டே சுய உணர்வின்றிக் கையைத் தூக்கிச் சலாம் போட்டுவிட்டு, ''உள்ளே வாங்கோ. எச்சுமி, எச்சுமி, உன்னுடைய ஒன்றுவிட்ட மாமா பிள்ளை காமனே மகாதேவ அய்யர். அவர் பெண்ணோடு நம்ம வீடு தேடி.....'' என்று குழறியபடியே அறிவித்துக் கொண்டு காற்றால் அடித்துச் செல்லப்படுவது போல் உள்ளே சென்று கொண்டிருந்தார் கிழவர். கூனல் முதுகும், ஒட்டிய வயிறும் ஒரு புராதன வில் உயிர் பெற்று ஓடுவது போலவே இருந்தது. மகாதேவ அய்யரும் அலமேலுவும் பரஸ்பரம் பார்த்துச் சிரித்த படி ரேழி வாசல் திண்ணையை ஒட்டி நின்று கொண்டிருந்தனர். அய்யர் ஜன்னல் வழி பக்கவாட்டு அறைக்குள் எட்டிப் பார்த்து விட்டுத் தம் பெண்ணின் முகத்தைப் பார்த்தார். அலமேலுவும் எட்டிப் பார்த்தாள். அறை முழுதும் ஒரே புத்தகக் காடாகக் கிடந்தது.

''காலேஜிலேயிருந்து இன்னும் வரவில்லே போலிருக்கு'' என்று முணுமுணுத்தார் மகாதேவ அய்யர்.

அலமேலு அதைக் காதில் வாங்கிக் கொண்ட பாவனையே காட்டிக் கொள்ள வில்லை. அவளுடைய கண்கள் அந்த



அறையை இரண்டு மூன்று முறை பக்கம் பக்கமாக நோட்டம் விட்டன.

"என்ன, அங்கேயே நிக்கறியே......" இரண்டாம் கட்டிலிருந்து கிழவரின் குரல் கேட்டது.

"கூப்பிடறேளா" என்று தணிந்த குரலில் சொல்லிக் கொண்டே அனுசரணையோடு ஒரு பள்ளி மாணவி மாதிரி வேகமாக நடந்து சென்றாள் அலமேலு. அப்பாவும் அவளைப் பின் தொடர்ந்தார்.

லக்ஷ்மி அம்மாள் ஒரு கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள். காலை பூஜை புனஸ்காரம் முடிந்து ஒரு சிறு பூனைத் தூக்கம் போட்டு விட்டுக் கண் விழித்தது போலிருந்தது. மூக்கில் வைரபேசரி. காதில் வைரத் தோடு. சாண் அகலம் சரிகை போட்ட காஞ்சிபுரம் சேலை. கால் விரல்களில் வெள்ளி மெட்டி. உள்ளங்கால் வெள்ளை வெளேரென்று உள்ளங்கை மாதிரியே இருந்தது.

"மூணு வருஷமாச்சு. இதே படுக்கை. முதுகெலும்பில் ஏதோ கோளாறாம்" என்றார் கிழவர்.



லக்ஷ்மி அம்மாள் அலமேலுவைப் பார்த்துப் புன்னகை பூத்தாள்.

"மாமி, நமஸ்காரம் பண்ணறேன்" என்று சொல்லிக் கொண்டே கட்டிலோரம் தரையில் குனிந்து நமஸ்காரம் பண்ணினாள் அலமேலு.

"பாவாடை கட்டிண்டு பார்த்தது. ஒரு கடலை வக்ஷிபத்துக்கு அழைச்சுண்டு வந்திருந்தா உங்கம்மா. இருபத்தஞ்சு வருஷம் இருக்கும். நாங்க ரெண்டு பேரும் பேசிண்டிருந்தோமா? நீ எங்கேயோ சித்த நகர்ந்து போய் விட்டே. பதறிப் போச்சு! 'என்மாட்டுப் பெண்ணுக்கும். எங்கேயாவது தவற விட்டோமானாப் சொல்ல வேண்டியிருக்கும்' அப்படீன்னு சொன்னேன். உங்கம்மா சிரிச்சது இன்னும் கூடக் கண் முன்னாலே நிக்கறது. நல்ல சாதி. அநியாயமா அற்பாயுசுலே......"

கிழவர், மகாதேவ அய்யர் முகத்தைப் பார்த்தார். அவர் எதிர்பார்த்த சோக ரேகைகள் அவர் முகத்தில் தெரியவில்லை. வேறு ஏதோ

என்னவி அவர் மனசு துளும்புவதை முகம் காட்டிக் கொண்டிருந்தது.

"அன்னிக்கே மாட்டுப்பெண்ணாக வரிச் சுண்டுட்டேளாக்கும்" என்றார் அய்யர்.

"நாம என்ன வரிச்சுக்கறது? நம்ம கையிலேயா இருக்கு? வைான் அவர் பிடிச்சுண்டிருக்கார். நாம குதிரையெச் சொடுக்கிண்டிருக்கோம். நெனச்ச இடத்துக்குப் போய்ச் சேர்ந்தாப்லேதான்! ஆசை, சொல்றோம். அப்புறம் ஐயோன்னு அழறோம்."

"ரொம்ப நன்னாச் சொன்னேள்" என்றார் மகாதேவ அய்யர்.

கிழவர் தமது வேலை முடிந்து விட்டது என்ற பாவனையில் முக்காலியைக் கட்டிலருகே இழுத்து. "உட்காருங்கோ" என்று சொல்லி விட்டு வாசல் திண்ணையைப் பார்க்க நகர்ந்தார்.

மகாதேவ அய்யர் முக்காலியிலும், அலமேலு தரையிலுமாக உட்கார்ந்து கொண்டனர்.

"பேரன்பேத்திகள் இருக்கா சொல்லியோ?" என்று அய்யரைப் பார்த்துக் கேட்டுவிட்டு அலமேலு முகத்தைப் பார்த்தாள் லக்ஷ்மி அம்மாள்.

அலமேலு சிரிக்கும் பாவனையில் முகத்தைக் குனிந்துகொள்ள, அய்யர், "அவளுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை" என்றார்.

"அப்படியா?" என்றாள் மாமி. அசட்டுத் தனமாக வாய் நழுவவிட்ட கேள்வியின் பச்சாதாபம் மாமியின் முகத்தில் தெரிந்தது.

"என்ன வயசாறது?"

"நிறைய ஆயிடுத்து."

"நிறையன்னா?"

"முப்பத்திரண்டு தாண்டிடுத்து" என்று அலமேலு சற்று உரக்கச் சொன்னாள். தகப்பனாரின் தயக்கத்துக்குச் சவால் விட்டது போலிருந்தது.

"பிந்தித்தான் போச்சு" என்றாள் மாமி.

"நானும் அவளுக்குப் பதினாறு வயசிலே ஜாதகத்தைத் தூக்கினது. பாலக்காட்டி லிருந்து கன்னியாகுமரி வரையிலும் பார்த்துட்டேன். ஒண்ணும் அமையலே."

"பாப ஜாதகமோ?"

"ஊஹூம். பாபம் புண்ணியம் எல்லாம் அளந்து வச்சாப்லதான் இருக்கு. ஆகலே. ஆயிரம் காரணம்."

"ஆண் பிள்ளைகளுக்கே தட்டித் தட்டிப் போயுடறது. எங்க ராஜாவுக்கு மாசிக்கு நாற்பது தாண்டிடுத்து. பெண் குழந்தைகளுக்குக் கேட்பானேன்?"

"என்னைப் பார்த்தால் தெரியலையா மாமி, ஏன் கல்யாணம் ஆகலேன்னு?"

மாமி சடேரென்று திரும்பி அலமேலுவைப் பார்த்தாள். அலமேலு சிரித்துக்கொண்டிருந்தாள். கொல்லை வாசல் வழியாக உள்ளே விழுந்திருந்த துண்டு வெயிலின் வெளிச்சத்தில் அவள் கண்களில் ஈரம் பளபளத்தது. மகாதேவ அய்யர் இன்ஸ்பெக்டர் முன்னிலையில் தவறான பதில் சொல்லும் குழந்தையை வகுப்பு வாத்தியார் முறைப்பது போல் முறைத்தார்.

"ஏன் அப்படிச் சொல்றே?" என்றாள் மாமி.

"அசடு. அசடு. இப்படித்தான் எதையாவது உளறிண்டிருக்கும்" என்றார் மகாதேவ அய்யர்.

"ஏன் அப்படிச் சொன்னே? நிறமாயில்லேன்னுட்டா? சித்த மங்கல். அதனால் என்ன? அதுவும் ஒரு அழகுதான். ராமர், கிருஷ்ணர் எல்லாம் அழகு இல்லையா?"

"குண்டா இருக்காளாம். குண்டா இருக்கறது தூக்குப் போட்டுக்க வேண்டிய விஷயமா இப்போ? பல்லேலே பாத்துண்டிருக்காம். பழையபடி அது முத்தாப் படிஞ்சு மூளைக்கணும்னு சொல்றா. நடக்குமோ?"

அலமேலு மேலுதட்டை விரிய விடாமல் சிரித்தபடி தலையைக் குனிந்து கையில் ஏந்திக் கொண்டாள். இடது கை சுண்டுவிரல் அவள் கன்னத்தை வழித்து விட்டுக்கொள்வதைக் கவனியாததுமாதிரி பாவனை செய்து கொண்டாள் மாமி.

"என் கண்ணுக்கு ஒரு குறையும் தெரியலை. அம்மா. உடம்பு சேர்ந்துண்டு அழகா இருக்கு. இப்போ இதுமாதிரி பார்க்கறதே அபூர்வமாப் போச்சே. ஒரு வியாதி வெக்கை இருக்கப்படாது. முக்கியமா உடம்பு நல்லா இருக்கணும்."

"நன்னா தோசைக்கு அரைப்பேன் மாமி. ரெண்டுபடி அரிசியைப் போட்டுப் பாருங்கோ. அரை மணி நேரத்திலே மாவா வழிச்சிடுவேன்...."

"ஏன்? நன்னாப் பாட மாட்டாயா? அதைச் சொல்லேன்?" என்றார் மகாதேவ அய்யர்.

"பாட்டுச் சொல்லி வச்சிருக்கேளா?"

"பாட்டா? மியூசிக் அகாடமியிலே நாலு வருஷம் படிச்சிருக்கா. சங்கீத பூஷணம்னு பட்டம். எனக்கும் சங்கீதத்துக்கும் காது செவிடு. கேட்டவா, கேட்டவா நன்னா பாடறா. ஞான பாவம் இல்லியமா இருக்குன்னு சொல்றா. மாமிக்குப் பாடிக் காட்டேண்டி."

"இங்கே எல்லாருக்கும் அதுக்கு மேலே காது செவிடு. தெரிஞ்சவா நன்னாப் பாடறான்னு சொன்னா சரிதான்" என்றாள் மாமி.

"ரேடியோவிலே அடிக்கடி சான்ஸ் வரது. இந்த மாதம் பத்தொன்பதாம் தேதிகூட ப்ரோகிராம் இருக்கு. சாயங்காலம் இருபது நிமிஷம்."

"அப்படியா! தேவலையே. அப்போ ரேடியோப் புகழ் அலமேலு அம்மான்னு சொல்லுங்கோ."

"இப்போ ரேடியோப் புகழ். அப்புறம் டெலிவிஷன் புகழ்" என்று ஒரு குரல் கேட்டது.

அப்பாவும் பெண்ணும் திரும்பிப் பார்த்தார்கள். நிலையின் மேல் படியில் இரு கைகளையும் தூக்கி வைத்தபடி நின்று கொண்டிருந்தார் கிழவர்.

"டெலிவிஷன் வந்துட்டா எனக்கு சான்ஸே கிடைக்காது மாமா!" என்றாள் அலமேலு.


கிழவர் இதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. மகாதேவ அய்யருக்கு அர்த்தமாகவும் இல்லை. மாமி மட்டும் செல்லமாகக்

கீறல் விழுந்த ரிகார்டு

"நீ என்ன பத்திரிகைகளையே விட்டு விட்டாயாமே! இப்பத்தான் கேள்விப்பட்டேன்."

"வயிற்றுப் பிழைப்புக்கு எது இருந்தால் என்ன? ஜீவப் பேன் குத்துகிறதும் ஒரு பிஸினஸாக இருந்து அதில் ஒரு சான்ஸ் கிடைத்தால் அதையும் விட்டா வைக்கிறது? நான் பத்திரிகையை விட்டு விட்டால் கதை எழுதாமல் இருந்து விடுவேனா? ஒரு பெரிய நாவலுக்கும் பிளான் போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிருஷ்டம் இருந்தால் எனக்கும் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில் சென்ட்ரல் ஐடியா என்ன தெரியுமா?....."

"நீங்க நேற்றும் பொருட்காட்சிக்குப் போனீர்களாமே!" என்று பேச்சை மாற்ற முயன்றார் சுப்பிரமணியபிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால் முருகதாசர் கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்.



புதுமைப்பித்தனின் 'ஒரு நாள் கழிந்தது' என்ற கதையில் ஒரு பகுதி.

கடித்துகொள்ளும் பாவனையில் அலமேலுவைப் பார்த்து முறைத்தாள்.

"திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வந்தாச்சோ?" என்று கேட்டார் கிழவர், கட்டில் பக்கம் திரும்பி.

"வரலே, வரலே. கைகாட்டி விழுந்தாச்சு. இப்போ வந்துடும்" என்றாள் மாமி.

கிழவர் திரும்பி வாசல் திண்ணையைப் பார்க்கச் சென்றார்.

"சாயங்காலம் காப்பி போட்டுத் தர ஒரு மாமி வருவாள், அவளைத்தான் கேக்கறா" என்றாள் மாமி.

அலமேலு சிரித்துக் கொண்டே, "காப்பிக்கு வேளை ஆயிடுத்தா?" என்றாள்.

"வேளை ஒண்ணும் ஆயிடலே. அவருக்கு இப்படித்தான் கைக்குழந்தை மாதிரி அரை அரை மணிக்கு எதையாவது விட்டுண்டே இருக்கணும். என்னவோ பகவான் காலை முறிச்சுப் போட்டிருக்கார்."

"நான் போடறேனே மாமி!" என்றாள் அலமேலு.

"சீச்சீ! வந்தவாளுக்குக் காப்பி போட்டுத் தரணும். முடியலே. அடுக்களைக் காரியம் வேற பார்க்கச் சொல்லணுமா?"

"லக்ஷ்மி, அந்த மாதிரியெல்லாம் சொல்லாதே. நாங்க என்ன தூரப் போனவாளா?" என்றார் மகாதேவ அய்யர்.

"வித்தியாசமா நெனைச்சுக்காதேங்கோ, மாமி" என்றாள் அலமேலு.

வாசலில் சைக்கிள் சத்தம் கேட்டது.

"ராஜா வந்தாச்சு" என்றாள் மாமி.

மகாதேவ அய்யர் எழுந்திருந்து வாசல் பக்கம் நகர்ந்தார்.

அலமேலு திரும்பிப் பார்த்தபொழுது, கரையேறும் மீனவன் மாதிரி இடது கையில் இரு பூட்ஸுகளைத் தொங்கவிட்டுக்கொண்டு ஒரு நெடிய உருவம் தலையை இடது பக்கம் சாய்த்தபடியே பக்கவாட்டு அறைக்குள் நுழைவது தெரிந்தது.

"ராஜாதானா?" என்று மாமி அலமேலுவைப் பார்த்துக் கேட்டாள்.

அலமேலு பதில் சொல்லாமல் மாமி முகத்தைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

"இந்தப் பக்கம் சித்தெ நகர்ந்து நின்னுண்டு பாரு. அந்த அறைக்குள்ளே" என்றாள் மாமி.

மாமியின் பார்வை வட்டத்தை மீறிச் சென்று விடாதபடி அலமேலு சற்று விலகி நின்று அறையைப் பார்த்தாள்.

"ராஜா" என்று கூப்பிட்டாள் மாமி.

"ஓ!"

"அவன்தான்" என்றாள் மாமி. "காப்பியை நெனைச்சுண்டே வருவன்" என்றாள்.

அலமேலு கட்டிலருகே நகர்ந்து மாமியின் முகத்தைப் பார்க்கக் குனிந்துகொண்டு, "நான் போடறேன், மாமி!" என்றாள் அழுத்தமான குரலில்.

மாமி அலமேலுவின் கைகளைப் பற்றித் தன் நெஞ்சில் தூக்கி வைத்துக் கொண்டு, "போடறேன்னு சொல்றியா?" என்று தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"ம்"

"சரி" என்றாள் மாமி.

மாமி கட்டிலில் படுத்தபடியே சொல்லச் சொல்ல அதன்படியே அலமேலு காரியங்களைக் கவனிக்கலானாள். பத்து நிமிஷங்களுக்குள் காப்பி தயாராகி விட்டது.

"முதல்லே உங்கப்பாவுக்கும் அவருக்கும் கொண்டு போய்க் கொடு" என்றாள் மாமி.

அலமேலு திரும்பி வந்தபோது அவள் பின்னாலேயே கிழவரும் வந்தார்.

"லக்ஷ்மி, காப்பி அமிர்தம்!" என்றார் கிழவர்.

"உங்களுக்கு யோகமிருந்தா இனிமே இந்த மாதிரி காப்பி சாப்பிடலாம்" என்றாள் மாமி.

"அதுக்கு நான் என்ன செய்யணும்னு சொல்லு. இப்பவே செய்யறேன்."

"வாசல்லே போயி அவரிட்டே பேசிண்டிருங்கோ."

கிழவர் மிகவும் அனுசரணையுள்ள குழந்தை மாதிரி வாசலைப் பார்க்கச் சென்றார்.

"ராஜாவுக்குக் கொஞ்சம் ஸ்ட்ராங்காப் போடு, சர்க்கரை கம்மியா" என்று அடுக்களைப்பக்கம் பார்த்துச் சொன்னாள் மாமி.

கையில் காப்பியுடன் அலமேலு வெளியே வந்து மாமி முன்னால் நின்றாள்.

"ராஜா!"

"ஓ"

ஒரு நிமிஷம் வரையிலும் காப்பியும் கையுமாக அலமேலு அப்படியே நின்று கொண்டிருந்தாள். ராஜா வரவில்லை.

''புதுசா ஒரு கலைப்புத் தெரிஞ்சுட்டா அப்புறம் பின்கட்டுக்கே வரமாட்டான் என் கண்ணு'' என்றாள் மாமி.

அலமேலுவின் முகத்தில் ஒரு குறுநகை மலர்ந்தது.

''இல்லே, ஏதாவது புஸ்தகத்தைத் திருப்பிட்டாரேனு என்னவோ. அப்புறம் இந்த உலக ஞாபகமே போயிடுமே.''

''இதிலே வெச்சுடட்டுமா?'' என்று கேட்டுக்கொண்டே முக்காலியைப் பார்த்துக் குனிந்தாள் அலமேலு.

''அவன் அறையிலே மூன்னுடி ஒரு மேஜை கிடக்கு. அதிலே கொண்டு போய் வெச்சுடேன்.''

''வெச்சுட்டு வந்துரவா?''

''வெச்சுட்டு, 'காப்பி வெச்சிருக்கேன்'னு சொல்லேன். குடிச்சுட்டான்னு தம்ளரையும் கையோட எடுத்துண்டு வந்துடலாமே!''

முக்காலியில் வைத்துவிட்ட காப்பியை அலமேலு குனிந்து கையில் எடுத்துக் கொண்டாள்.

''அந்தப்பக்கம் திரும்பிண்டு சிரிக்கறயா?'' என்று கேட்டாள் மாமி.

''இல்லியே, ஏன்?''

''ஒண்ணுமில்லே. காப்பியைக் கொண்டு போ'' என்று கட்டளை விட்டாள் மாமி.



அலமேலு அறைக்குள் நுழைந்தாள். மேஜைமேல் காலுறை அணிந்த இரண்டு பெரிய பாதங்கள் தெரிந்தன. சாய்வு நாற்காலியில் கீழ் நகர்ந்து தலையைச் சரித்து உடலைக் குறுக்கி, கர்ப்ப சிசு மாதிரி படுத்துக் கொண்டிருந்தான் ராஜா. அவன் முகத்தைக் கையிலிருந்த புத்தகம் மறைத்துக் கொண்டிருந்தது. தான் அறைக்குள் நுழைந்த நிமிஷத்தில்தான் புத்தகம் நகர்ந்து முகத்தைப் பூராவாக மறைத்ததாகத் தோன்றிற்று அலமேலுவுக்கு.

''காப்பி'' என்றாள் அவள்.

சாய்வு நாற்காலிக்குள் முகத்தை மறைத்துக்கொண்டு கிடந்த உருவம் அசையவில்லை.

''காப்பி'' என்றாள் மீண்டும்.

திடுக்கிட்டு விட்டது போல் ராஜா எழுந்திருந்து உட்கார்ந்தான். அவனால் அவள் முகத்தை இங்கிதத்தோடு பார்க்க முடியவில்லை. ஏதோ ஒரு விதத்தில் முறைப்பது போலத்தான் இருந்தது அது. அலமேலுவின் இமைகள் தாழ்ந்து பார்வை காப்பியிலிருந்து எழும்பும் ஆவியில் படிந்தது.

''யாரு நீ?'' என்றான் ராஜா.

''அலமேலு!''

''ஆயிரம் அலமேலு! அதிலே நீ எந்த அலமேலு?''

அலமேலு பதில் சொல்லாமல் சிரித்தாள்.

ராஜாவும் சிரித்தபடியே காப்பியை எடுத்து அவள் முகத்திலிருந்து பார்வையை அகற்றாமல் தம்ளரை உதட்டோரத்துக்குக் கொண்டு சென்று நாசூக்காக உறிஞ்சினான்.

''பேஷ்!'' என்றான் ராஜா.

அலமேலு அவன் முகத்தைப் பார்த்தாள்.

''மூணு வருஷமாச்சு இந்த மாதிரி காப்பி சாப்பிட்டு.''

''சும்மாச் சொல்றேள்.''

''இந்தப் பாரு. நான் காலேஜ்லே கணக்கு வாத்தியார். பொய் சொல்லாத பிறைப்புன்னு இது ஒண்ணுதான். நானும் மூணும் ஏழு. உலகம் பூரா அப்படித்தான்!''

''கதையெல்லாம் எழுதுவேளாமே.''

''யாரு சொன்னா?''

''அலமேலு!''

''நீதானே அலமேலு?''

''நான் இல்லே. சின்ன அலமேலு. உங்க மாணவி.''

''ஓ. அலமேலுவா? ஓ! காரமணிக்காரி! அவ என் ரசிகையாச்சே. ஒவ்வொரு கதையும் படிச்சுட்டு, 'ஸார், வர வர நன்னா எழுதறேள்'னு சொல்றவளே அவதானே?''

''கதை எழுதறதுன்னா எப்படி? நெனச்சா ஆச்சரியமாயிருக்கே.''

''எனக்கே ஒவ்வொண்ணும் எழுதி முடிச்சதும் ஆச்சரியமாத்தான் இருக்கும். எப்படி எழுதிப்புட்டோம்னு நெனைக்க அப்படியே அசந்து போயிடறேன். அது சரி. நீ புஸ்தகமெல்லாம் படிப்பியா?''

''ஆசைதான். ஆனா படிக்கிறது இல்லே. சோம்பலா இருக்கு. அப்படியே ஒண்ணு எடுத்து வெச்சுண்டா தூக்கம் தூக்கமா வரது. சின்ன வயசிலே, 'மீனுவின் மாயக் குதிரை அல்லது சந்திரகாந்தாவின் காதல் வெற்றி'னு ஒண்ணு படிச்சேன். படிச்சுட்டு ரொம்ப அழுதேன்....''

''ஏன்?''

''ஏனோ, மனசை உருக்கிடுத்து.''

''அம்மாடி!''

''கேலி பண்றேளா?''

''இல்லியே. சில புத்தகம் ரொம்ப உருக்கிப்புடும். நிஜமாத்தான், விளையாட்டில்லே'' என்று குரலில் உண்மையின் தொனி ஏற்றிச் சொன்னான்.

''இவ்வளவு புத்தகமும் நீங்க படிச்சதா?'' அறையைத் தன் விழிகளால் வளைத்துக் கட்டினாள் அலமேலு.

''அநேகமா!''

''உடம்பு என்னத்துக்கு ஆகும்? மூளை வீங்கிடாதோ?''

ராஜா உரக்கச் சிரித்தான். ''பொம்புளைகள்னு ஏக ஜாதி. எங்க அம்மாவும் இப்படித்தான் சொல்லுவா. மூளை ரெண்டா வெடிச்சே போயிடும் அப்படின்னு ஓரேயடியா சபிச்சுடுவள். சாதத்தை மட்டும் போறும்னு சொன்னாலும் தட்டிச் சொல்லிண்டேயிருப்பள். ஏன்? வயிறு மட்டும் வெடிக்காதோல்?''

அலமேலு சிரித்தாள்.

''புஸ்தகமெல்லாம் இறைஞ்சு கிடக்கே!''

''இறைஞ்சுதான் கிடக்கு.''

''அழகா அடுக்கி வெச்சுக்கணும்.''

''அடிக்கடி அடுக்கி வைப்பேன். பழைய படி நாலு நாளிலே இறைஞ்சு போயிடும்.''

காஷ்மீர் பொக்கே டால்க உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும், புதுமையுடனும் இருங்கள்



அன்றலர்ந்த மலர்களின் புதுமையுடனும், சுகந்தத்துடனும்கூடிய காஷ்மீர் பொக்கே டால்க் உங்களைச் சூழ்ந்து பரவி இருக்கட்டும்... உங்களைச் சுற்றி அதன் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தையும், வசீகரிக்கும் நறுமணத்தையும் உணர்ந்து அனுபவியுங்கள். பலமணிகளுக்குப் பிறகும், காஷ்மீர் பொக்கே டால்க்கின் குன்றாத நறுமணமும், புதுமையும், மலர்க்கொத்துகள் போன்று உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள்.

காஷ்மீர் பொக்கே ஒரு உன்னதமான அழகுசாதன டால்க் மட்டுமல்ல, குழந்தைக்கும் ஏற்ற அற்புத டால்க். அது இருவருமே உபயோகிக்கக்கூடிய செளகரியமான ஒரு பவுடர்!





காஷ்மீர் பொக்கே

ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ள டால்கம் பவுடர்

கால்கேட்டின் நயமான தயாரிப்பு

CB.G.2) TAM.

உங்கள் கேசம் உதிருகிறதா?



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாதது தான்.



இளமையில் வழுக்கை இக்கிலேயை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் ஸில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் ஸில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் ஸில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட. இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1 ஸில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022. பம்பாய்-1

ப்யூர் ஸில்விக்ரீன்



கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

ஸில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்



உங்கள் கேசத்தை காள பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் ஸில்விக்ரீன் கலந்துளளது.

Silvikrin

ஸில்விக்ரீன - கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/67/65

அலமேலு அவன் முகத்தை அனுதாபத்துடன் பார்த்தாள்.

''இது மாதிரி இன்னொரு தர்மசங்கடம்.''

''என்ன?''

''கதை எழுதினதும் பிரதி செய்யற வேலே.''

''கஷ்டமா?''

''மகா கஷ்டம். மகா பேஜாரம். காலேஜிலேருந்து வர்றதுக்குள்ளே யாராவது ஒரு தேவதை ரகஸ்யமா வந்து பிரதி செய்து வெச்சுட்டுப் போயிருக்கப்படாதான்னு தோணும்.''

ஒரு நோய்வாய்ப்பட்ட குழந்தையைப் பார்ப்பது மாதிரி அவன் முகத்தைப் பார்த்தாள் அவள். சில விநாடிகள் தலையைக் குனிந்துகொண்டு நின்றாள். அப்புறம் தலையைத் தூக்கி, ''என் கையெழுத்து முத்து முத்தாக இருக்கும்'' என்றாள்.

விழிகளை அகல விரித்து ஆச்சரியத்துடன் அவள் முகத்தைப் பார்த்தான் அவன். எதையோ சொல்ல வாயெடுத்து இரண்டு மூன்று முறை முயற்சி செய்தும் அவன் வாயிலிருந்து வார்த்தைகள் ஏதும் வெளிவரவில்லை. நல்லவேளே! அலமேலுவே பேசினாள்.

''அது என்னது அது? மூடி வெச்சிருக்கு?'' என்று அறையின் ஒரு மூலையை நோக்கிக் கையைச் சுட்டினாள்.

''ஒண்ணுமில்லே, டைப்ரைட்டர்.''

அவன் சொல்லி முடிப்பதற்குள், ''எனக்கு டைப் அடிக்கத் தெரியாது'' என்று இரு கைகளையும் விரித்துக் காட்டினாள்.

ராஜூவால் மீண்டும் எதுவும் பேச முடியவில்லே. சில விநாடிகள் மௌனம் நிலவியது.


மேஜை மேலிருந்த தம்ளரை எடுத்து, அதன் அடிப் பாகத்தை உள்ளங்கையால் தேய்த்துக் கொண்டே ''வரட்டுமா?'' என்றாள் அவள்.

''ம்''

அவன் தயங்கியபடியே நின்றுகொண்டிருந்தான். அவள் கை தம்ளரை வைத்து விட்டு மேஜை மேல் கிடந்த ஒன்றிரண்டு புத்தகங்களை ஓர் ஓரத்தில் சாவதானமாய் அடுக்குவதில் மூழ்கியிருந்தது. தலையை உயர்த்தி, மீண்டும் ''வரட்டுமா?'' என்றாள்.

''ம்.''

அவள் நடந்து சென்று உள்ளே மறைவதைப் பார்த்துக் கொண்டேயிருந்தான் அவன்.



''மடமடான்னு விட்டுண்டான்னு கிடையாது. துரை மாதிரி சொட்டுச் சொட்டா ஆறு நாழி உறுஞ்சுவன்'' என்றாள் மாமி.

அலமேலு குழாயில் பாத்திரங்களைக் கழுவ ஆரம்பித்தாள்.

''அங்கே போறுமே அதை. வேண்டாத காரியம் செய்யப் புறப்படறியா? வேலைக்காரி வருவள்னு சொல்றேன், காதிலே விழலியா?'' என்று பெரிதாக அதட்டல் போட்டாள் மாமி.

அலமேலு திரும்பிக்கூடப் பார்க்காமல், ''இதோ முடிஞ்சுதே'' என்று சொல்லிக் கொண்டே மீதிப் பாத்திரங்களையும் கழுவி அடுக்களைக்கு எடுத்துச் சென்றாள்.

''ரொம்ப நேரம் காக்க வெச்சுட்டானா?''

''இல்லேயே.''

''என்ன சொன்னான்?''

''ஒண்ணும் சொல்லலியே. காப்பி ருத்தமா இல்லேன்னார்.''

''பேச்சிலே என்ன சாதுரியம்மா அம்மா! ருத்தமா இல்லேன்னார்! தேவா அமிருதமா இருக்குன்னு சொல்லியிருப்பான்.''

''அப்புட்டு மேலே போயுடலே மாமி. நன்னாருக்குன்னு சொன்னார்.''

''சொல்லாம இருப்பானாக்கும்? இந்த மாதிரி காப்பியை இப்ப யாரு அவன் கண்ணிலே காட்டறா? அலமேலு, இதோ பாரு, வத்தக் காச்சின பால், ஜோரான காப்பிப் பொடி, ஜாவா சர்க்கரை இந்த மூணுலே ருத்தும் மோசமான காப்பியே வரவழைக்க முடியுமோடி உன்னாலே?''

''கஷ்டமாச்சே மாமி.''

''எங்க சமையல் மாமியைக் கேளு. சொல்லித் தருவள்.''

அலமேலு குலுங்கிக் குலுங்கிச் சிரித்தபடி, கட்டிலோரம் நெருங்கி, தலையணையில் மாமியின் தோள் பட்டையை பொட்டிக் கைகளை ஊன்றி, ''வேடிக்கை வேடிக்கையாப் பேசறேளே மாமி. கேட்டுண்டே இருக்கணும்போல இருக்கு'' என்றாள்.

''கேட்டுண்டே இருக்கணுமா? சட்னு போய்ச் சேரணும்னு சொல்லு.''

''ஏன் மாமி அப்படிச் சொல்றேள்?''

''பின்னென்ன? நான் எல்லாம் இருக்கலாமோமா? எனக்கும் இம்சை. மத்தவாளுக்கும் இம்சை.''

''அப்படிச் சொல்லாதேங்கோ மாமி! எனக்குக் கேக்கக் கஷ்டமா இருக்கு.''

''கஷ்டமா இருக்குன்னு சொல்றாய். வேணும்னு மேலுக்கு ஒரு சொட்டுக் கண்ணீரும் விடுவாய். இன்னும் அரை மணி நேரத்திலே அப்பா பின்னாலே கிளம்பிடுவியே. என்னைக் கவனிக்கக் யாரு இருக்கா, சொல்லு? புருஷனா இருக்கட்டும், பிள்ளையா இருக்கட்டும். பொம்பளைகளைக் கவனிக்கிறதுன்னு கஷ்டம்தானே ஆம்பளைகளுக்கு.''

கட்டில் அருகே மாமியின் பாதங்களைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள் அலமேலு.

''வாயடைக்கப் போச்சு பாத்தியா? அது தான் சொன்னேன், போய்ச் சேரணும்னு வாழ்த்திடு அப்படின்னு.''

''என்ன சொல்றதுன்னே தெரியலே, மாமி. மனசுக்குக் கஷ்டமா இருக்கு.''

''இதோப் பாரு, இங்கே வா.''

அலமேலு கட்டிலோரம் மேலும் நகர்ந்தாள்.

''இகோ, இப்படி உட்காரு, என் பக்கத்திலே.''

மாமி அலமேலுவின் இரு கரங்களையும் ஒன்றாக இணைத்து இறுகப் பிடித்துத் தன் நெஞ்சில் தூக்கி வைத்துக் கொண்டாள்.

''ஒண்ணு கேப்பேன். டக்னு பதில் சொல்லணும். எங்க ராஜாவைப் புடிச்சிருக்கோ, உனக்கு?''

அலமேலுவின் தலை குனிந்தது. அவள் பார்வை மாமியின் கண்களில் படிந்து, மறு விநாடி தலையணையில் படிந்தது.

மாமி அலமேலுவின் கைகளை அழுத்தினாள்.

''இங்கிருந்து உங்களைக் கவனிச்சுக்க முடிஞ்சா அதை ஒரு பாக்கியமா நெனைப்பேன் மாமி'' என்றாள்.

''பேச்சுலேதான் என்ன சாதுரியம்டீ அம்மா உனக்கு!'' என்றாள் மாமி.



''நீங்க என்ன சொல்றேள்?'' என்று கேட்டாள் மாமி.

கிழவர் முன்னால் நின்று கொண்டிருந்தார்.

தட்டில் மூல்லை அரும்போடு கொல்லைப் படி ஏறிவந்த அலமேலு, அப்படியே நின்று மீண்டும் செடியைப் பார்த்துச் சில அரும்புகள் கண் தப்பிப் போய்விட்ட பாவனை காட்டி, திரும்பிப் படியிறங்கி வெகு வேகமாகச் செடியை நோக்கிச் சென்றாள்.

கிழவர் வாய் திறவாமல் நின்றார்.

''தங்கமான பெண்'' என்றாள் மாமி.

''நன்னா காப்பி போடறா. அந்த ஒண்ணுக்காகவே ராஜா பண்ணிக்கலாம்'' என்றார் கிழவர்.

''எதுக்கு எடுத்தாலும் விளையாட்டுத்தானா? கூப்பிட்டுக் கேளுங்கோளேன்.''

''ராஜா, இங்கே வா'' என்று பெரிய குரலில் அதட்டல் போட்டார் கிழவர்.

ராஜா வந்து கட்டிலோரம் நின்றான்.

''ராஜா, இந்தப் பெண்ணை உனக்குப் புடிச்சிருக்கோடா?'' என்று கேட்டாள் மாமி.

''புடிச்சிருக்கு அம்மா. ரொம்ப நல்ல பெண்.''

''பண்ணிக்கறயா?''

''என்ன?''

''பண்ணிக்கறயாடா?''

''அம்மா''

''என்னடா?''

''ஓ! தூக்கல் போடறதே!'' என்றார் கிழவர்.

''துணியெல்லாம் கொடியிலே கிடக்கே?'' என்றாள் மாமி.

தோளிலும் நெஞ்சிலுமாகத் துணியை இழுத்துப் போட்டுக் கொண்டு கொல்லைப் படியேறி உள்ளே வந்தாள் அலமேலு.

அவள் நுழைவதைக் கண்டு ராஜா அங்கிருந்து தன் அறைக்குச் சென்றான்.

அலமேலு உள் திண்ணைக் கொடியில் துணிகளைப் போட்டுவிட்டுக் கட்டிலைத் தாண்டி, வாசல் திண்ணையில் தனியாக உட்கார்ந்திருந்த தன் தகப்பனாரை நோக்கிச் சென்றாள்.

அவள் வாசல் திண்ணைக்குப் போய்ச் சேருவது வரையிலும் அவளையே பார்த்துக் கொண்டிருந்த மாமி, ''என்ன சொல்றான்?'' என்று கேட்டாள்.

''தெரியலியே. நீதானே கேட்டுண்டிருந்தே!'' என்றார் கிழவர்.

''ராஜா, ராஜா!'' மாமி கூப்பிட்டாள்.

''ராஜா ராஜா'' என்று கிழவரும் கூப்பிட்டார்.

பதில் இல்லை.

கிழவர் ராஜாவின் அறைக்குச் சென்று உள்ளே எட்டிப் பார்த்துவிட்டு, ''அவனைக் காணுமே!'' என்றார்.

''என்ன? எங்கே போயிட்டான்?''

கிழவர் கொல்லைத் திண்ணையில் வந்து நின்றுகொண்டு, ''ராஜா, ராஜா!'' என்று கூப்பிட்டார்.

''சைக்கிள் இருக்கா பாருங்கோ'' என்றாள் மாமி.

கிழவர் வாசல் திண்ணைக்குச் சென்றார். ''சைக்கிளைக் காணுமே!'' என்ற குரல் மாமியின் காதில் விழுந்தது.

டாக்டருக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்பி வைத்து விட்டு உள்ளே வந்தார் மகாதேவ அய்யர்.



அலமேலு தன் அறைக்குள் நுழைந்து மாற்று உடைகள் உடுத்திக் கொள்வதில் முனைந்தாள்.

''மாமிக்கு உன்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு.''

''மாமாக்கும்தான்'' என்றாள் அலமேலு.

''சந்தேகமா?''

''போன காரியம் முடிஞ்சுது'' என்றாள் அவள்.

''என்ன?''

''இல்லே, மாமியைப் பாக்கணும்னு போனோம். பாத்தாச்சு, வந்தாச்சு'' என்றாள்.

''நீதான் அவனுக்குக் காப்பி கொண்டு போய்க் கொடுத்தயா?''

''மாமி சொன்னா, கொடுத்தேன்.''

''அதுக்குச் சொல்லலே. ஏதோ ரொம்ப நாழி விசாரிச்சுண்டு இருந்த மாதிரித் தோணித்தேன்னு கேட்டேன்.''

''ஆமாம், வக்கணையாத்தான் பேசிண்டிருந்தார்.''

''என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்லே; கதை எழுதறவா இல்லையா? நம்ம வாயைப் பிடுங்கிறா. நாம எதையாவது உளறுவோம். அதை எழுதிப் போட்டா அவாளுக்குக் காசு கிடைக்கும். புகழ் கிடைக்கும்.''

''ஏன் இப்படி விட்டெறிஞ்சு பேசறே?''

''நீங்க மடிலே கட்டிண்டு பேசுங்கோளேன். உங்களுக்குப் பைத்தியம்.''

''எனக்கா?''

''உங்களுக்குத்தான்.''

''எதுக்கு இப்போ அழறே?''

''அழறேன், உங்களை வயசுக் காலத்திலே பிடுங்கிண்டு இருக்கேனேன்னு.''

''ஐயோ! அழாதேடீ அலமேலு! என்னது இது? குழந்தையாட்டமா? உடம்புக்கு ஆகா

டீசு. இன்னிக்கு என்னெப் தேச்சு வேறே குளிச்சிருக்காய்.''

''உங்களுக்குக் கொஞ்சமாவது புத்தி இருக்கோ?''

''ஏன்?''

''நான் நன்னாப் பாடுவேன்னு எதுக்கு அங்கே பீத்திண்டேள்?''

''பீத்திக்கலையோ?''

''எனக்குத் தங்கமான குணம்னு மாமி சொன்னதும் அப்படியே அரை நாழி இளிச்சுண்டு நின்னேளே, எதுக்கு?''

''இளிக்கலியே.''

''உங்க குணத்தையும் பாட்டையும் கொண்டு போய்க் குப்பையிலே கொட்டுங்கோ.''

''ஏன்?''

''செடியிலே பூப்பூவாய்ப் பூக்கறதே, பாத்திருக்கேளோ?''

''பாத்திருக்கேனே, நீ அழாதே, நிறையப் பாத்திருக்கேனே.''

''ஒவ்வொண்ணுக்கும் நிறத்தையும் மணத்தையும் அள்ளிண்டு போறாப்ல கொடுத்திருக்காரே, பகவான், எதுக்கு?''

''எதுக்கு?''

''அதுதான் பைத்தியம்னு சொல்றது. அப்பா! இது மனுஷா செய்த சதியில்லே. கடவுளே செய்த சதி'' என்று சொல்லிக் கொண்டே தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டாள் அலமேலு.

''அலமேலு, அலமேலு!'' என்று கதவைத் தட்டினார் அய்யர்.

கதவு தாழிடப்பட்டிருந்தது. அப்படியே முற்றம் வழியாக வீட்டைச் சுற்றி வந்து அலமேலுவின் அறை ஜன்னல் வழியாக உள்ளே பார்த்தார். அலமேலு சுருட்டி வைத்திருந்த படுக்கையின் மேல் குப்புறப் படுத்துக் கொண்டிருந்தாள்.

இரவு பத்து மணி வரையிலும் அய்யர் வாசல் திண்ணைக் கட்டிலிலேயே சுவரில் தலை சாய்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்புறம் தம்மை அறியாமலே கண் அயர்ந்தார்.

அலமேலு எழுந்திருந்தபோது, வீடு இருளில் ஆழ்ந்து கிடந்தது. கூடத்துக்கு வந்து விளக்கைப் போட்டாள். மணி பத்து. வாசல் திண்ணைக்கு வந்து சுவரில் தலை சாய்த்து உறங்கிக் கொண்டிருந்த தகப்பனாரின் முகத்தைச் சில கணங்கள் வெறித்துக்கொண்டு நின்றாள். கூடத்துக்கு வந்து கண்ணாடியைப் பார்த்தாள். தலை மயிர் பரட்டையாகப் புஸ் புஸ்ஸென்றிருந்தது. முகம் வீங்கிக் கிடந்தது. குழாயில் முகத்தைக் கழுவிவிட்டு, ஈரக் கையோடு தலைமயிரைத் தேய்த்து விட்டுக் கொண்டாள். அடுக்களைக்குள் நுழைந்து அடுப்பை மூட்டினாள்.

''இந்தாருங்கோ, எழுந்திருங்கோ, உப்புமா இன்னுட்டுப் படுத்துக்குங்கோ'' என்று தகப்பனாரை எழுப்பி அவருக்கு இலை போட்டுப் பரிமாறினாள்.

''உனக்கு?''

விளம்பர யுகம்



இந்த ஒலகமே ஒரே சூதும் வாதுமாப் போயிடுத்துன்னு ராமாயண சாஸ்திரிகள் சொல்லி ரொம்ப வருத்தப்பட்டார். மூணு வாரம் தொண்டை வரளக் கதை பண்ணிட்டுப் பட்டாபிஷேகத்தன்னிக்கும் பாதிப் பேர்கூட வரல்லே; வந்த பேர் சரியானபடி மரியாதை பண்ணலேன்னு கோவம் வராதாக்கும்! அது அவர் கதை பூராவும் 'ஒலகமே வெறும் மாயை' அப்படீன்னு ஞயாம சொல்லிக் கொண்டு வந்திருந்தார்!

எங்க தாத்தா இதையெல்லாம் கேட்டுப் பிட்டு அப்பாவைக் கூப்பிட்டு, 'கேட்டியா, சமாசாரத்தை! எது நல்லது, எது கெட்டதுன்னு தெரியாத பைத்தியக்கார ஒலகம்டா இது.' அப்படீன்னார்.

அப்பா சிரிச்சுப்பிட்டு, 'அதெல்லாம் இல்லே அப்பா! நம்ம ராமாயண சாஸ்திரிகள் பேஷேதான் பெரசு..... இது விளம்பர உலகம். அதைக் கெவினிச்சுச் செஞ்சிருந்தா ராமர் அநுக்கிரகம் கட்டாயம் இருந்திருக்கும்னு' சொன்னார்.

எனக்குந்தான் அப்பா சொல்றது சரின்னு படறது. இந்த நாளிலே எது விளம்பரம் இல்லாம நடந்துடறது? பூக்களுக்குக்கூட வேண்டியிருக்கு, விளம்பரம்! நான் காயிதப் பூவைச் சொல்றேன்! அதுதானே இப்போ மலிவாக ஜாஸ்தியாக விக்கிறது!

எல்லாரையும்விட அதிகமா எழுத்தாளருக்குத்தான் பிழைப்புக்கு விளம்பரம் வேண்டியிருக்காம். மொதல் வழி நன்னா வந்துட்டிதுன்னு கதைகளைக் கொண்டே போயிடுவேன்னு எத்தனையோ எழுத்தாளர்கள் சொல்லுவானாம். அதேமாதிரி மொதல் கதை நல்ல பத்திரிகேலே வெளி வந்துட்டா அப்புறம் பேர் ஜம் ஜம்னு பிரபலமாயிடுமாம்.

பத்திரிகை ஒலகமே ஒரு புது ஒலகம். அதிலே பேர் வந்துட்டுதுன்னு அப்புறம் என்ன வேணு எழுதலாமாம். பொது ஜனங்கள் பேரைப் பார்த்துட்டே 'ஆ, அவரா! ரொம்ப நன்னா எழுதுவாரே!' அப்படீன்னு தலையை ஆட்டிப்பிட்டுப் படிக்கிறப்போ பாசாங்கு பண்ணிச் சிரிப்பு வராத இடமெல்லாம் சிரிக்க அழுகை வராத எடமெல்லாம் அழுது, அடடா! எழுத்திலே என்ன மணம் அப்படீன்னு ஆச்சரியப்படுவானாம்!

-- தேவனின் 'கண்ணன் கட்டுரை'யில்



எழுத்தாளர்கள் ஜாக்கிரதை-2

"வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே தன் அறையை நோக்கிச் சென்றாள்.

"அலமேலு, கதவைச் சாத்திக்காதேடீ."

"இல்லே."



மறுநாள் அவள் எழுந்திருந்த பொழுது வெயிலேறித் தகிக்கத் தொடங்கி யிருந்தது.

மகாதேவ அய்யர் பொழுதோடு எழுந்திருந்து காப்பி போட்டு வைத்திருந்தார். தம்ளரில் காப்பியை எடுத்துக் கொண்டு கூடத்துக்கு வந்தார் அவர்.

அலமேலு ரேடியோ முன்னால் கால் மேல் கால் போட்டபடி உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

"பாட்டைக் கேட்டேளா அப்பா? சகிக்கலே."

தன் இரு செவிகளையும் பொத்திக்கொள்ளும் பாவனை காட்டி முகத்தை வக்கிரமாகச் சுளித்துக் கொண்டாள்.

"ரொம்ப கண்டறாவியா இருக்கே" என்றார் மகாதேவ அய்யர்.

"கண்ட கத்துக்குட்டிகளை யெல்லாம் காசைக் கொடுத்துச் சாதகம் பண்ணக் கூப்பிட்டுடறா."

"இந்தா, காப்பி குடி."

"பல் தேய்க்கலேயே அப்பா."

"பரவாயில்லே. தேய்ச்சுக்கறது, குடி."

அலமேலு தம்ளரை வாங்கி வாயருகே கொண்டு சென்றாள். பளிச்சென்று ஏதோ நினைவுக்கு வந்த பாவனையில், "அப்பா, இதோ பாருங்கோ, இப்படியாக்கும் அவர் காப்பி குடிப்பர்" என்று ராஜாவைப் போல் முகத்தை வைத்துக் கொண்டு காப்பியை உறிஞ்சிக் காட்டினாள்.

மகாதேவ அய்யர் சிரித்தார்.

தம்ளரை வாயிலிருந்து அகற்றி, சிரித்தபடியே, "கதை எழுதறாராம், கதை. சொந்தமா எழுதறாரோ, இல்லே, காப்பிதான் அடிக்கிறாரோ. கடவுளுக்குத்தான் வெளிச்சம்" என்று சொல்லிவிட்டு மேலும் பெரிதாகச் சிரித்துக் கொண்டாள்.

பத்து மணிக்கு ஆரம்பித்த குளி பதினொன்று அடித்த பின்புகூட முடியவில்லை. ஸ்நான அறைக்குள் ராகம், தானம், பல்லவி முழு நேரக் கச்சேரியாக நடந்து கொண்டிருந்தது.

"தாயே! வெளியே வாடீ அம்மா, பக்க வாத்தியங்களுக்குக் கைசோர்ந்து போயாச்சு" என்று ஸ்நான அறை வாசலில் நின்று கொண்டு பிச்சைக்காரக் குரலில் கெஞ்சினார் மகாதேவ அய்யர்.

ஒரு மணி நேரத்துக்குப் பின் அவரே அலமேலுவின் அறை வாசலில் ஒருக்களித்த கதவுக்கு முன்னால் நின்றபடி, "ஏது, இன்னிக்கு டிரஸ் பண்ணி முடியாது போலிருக்கே" என்று கூறினார்.

அலமேலு தன்னிடமிருந்த ஒரே நைலான் சாரியை அன்று கட்டிக் கொண்டாள். உள்ளே ரகசியமாக வைத்திருந்த ரெடிமேடு பாடீஸை அன்று முதல் தடவையாக வெளியே எடுத்தாள். அது சற்று விசித்திரமாகத் தைக்கப்பட்டது. அதை அணிந்துகொண்டு கண்ணாடியில் பார்த்தபோது அவளுக்கு என்னவோபோலிருந்தது. 'நன்றாகத்தான் இருக்கிறது' என்று முணுமுணுத்துக் கொண்டாள். அவ்வளவாகப் பளிச்சென்று தெரியாதபடி உதட்டுச் சாயமும் போட்டுக்கொண்டாள். பவுடர்ப் பூச்சு வழக்கத்தை விடச் சற்றுத் தாராளமாகவே இருந்தது. கடைசியில் அந்தக் கொண்டை போட்டு முடிவதற்குள் அவளுக்குக் கழுத்தும் கையும் வலியெடுத்து விட்டன. போட்டு முடிந்ததும், பிடரியை அழுத்தித் தடவியபடி கண்ணாடியில் பார்த்த போது ஏதோ சினிமாவில் காட்சியளித்த நாககன்னிகையின் சாயை அப்படியே தனக்கு வந்துவிட்டது போலிருந்தது. கையைப் பாம்புப் படம் மாதிரி வைத்துக் கொண்டு, கண்ணாடியைப் பார்த்துச் சீறிவிட்டு பின்னால் நகர்ந்த உருவத்தை ராஜாவின் உருவமாகக் கற்பனை செய்துகொண்டபோது அவளுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

அலமேலு வாசல் திண்ணைக்கு வந்தாள். மகாதேவ அய்யர் வாசல் கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்தார். கால் அரவம் கேட்டு அவர் தன் பக்கம் திரும்பவும், அலமேலு முகத்தைத் திருப்பி முன் பக்கம் பார்த்தபடி, "நான் வெளியிலே போறேன் அப்பா!" என்றாள்.

மகாதேவ அய்யர் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"வரட்டுமா?" என்று சொல்லிக் கொண்டே அலமேலு முதல் படியில் இறங்கினாள்.

"சின்ன அலமேலுவைப் பார்த்துட்டு வரேன் அப்பா."

"அங்கே யாரோ புதுசா வந்திருக்கிற மாதிரி இருக்கே."

"அவ மாமாவாம் அப்பா. ஊரிலேருந்து வந்திருக்காளாம்."

"இப்போ என்ன அவசரம்? சாவகாசமாப் போகலாமே."

"இல்லேப்பா, சித்த நாழி அவளோடே பேசிண்டிருந்துட்டு வரேன்" என்று சொல்லிக்கொண்டே அலமேலு படியிறங்கிச் சென்றாள்.

அவள் உருவம் மறையும் வரையில் அவளையே வெறித்துக் கொண்டிருந்தார் மகாதேவ அய்யர். அவள் உடம்பிலிருந்து ஆயிரக்கணக்கான ஊசிகள் கிளம்பி அவருடைய இரு கண்களையும் சல்லடையாகத் துளைப்பது போல் இருந்தது. பீதியும் துக்கமும் நெஞ்சை வந்து அடைத்தன.

கூடத்துக்கு வந்து அங்கு சுவரில் மாட்டியிருந்த சக்தியின் படத்துக்கு முன்னால் நின்று கொண்டு, "தாயே! என்ன சோதனை இது?" என்று பிரலாபித்தார். அதற்கு மேல் அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. கட்டிலில் விழுந்து குழந்தை மாதிரி கேவிக் கேவி அழ ஆரம்பித்தார்.



மனித உள்ளங்களின் விசித்திரமான போக்குகளையும், விநோதமான இயல்புகளையும், நுணுக்கமான உணர்வுகளையும் கண்டறிந்து அவற்றைப் பாத்திரங்களின் வாயிலாக வெளியிடுவது இவருக்குக் கைவந்த கலை. இவருடைய படைப்புகளில் பாசமும், நேசமும், இன்பமும் துன்பமும் கலந்து ஒலிக்கும்.

★

திரைகளுக்கு அப்பால்

— ஆர். சூடாமணி —



மீண்டும் மறுதளிப்பு! எதிரில் அவள் ஜன்னல் புறமாய் முகம் திருப்பி நின்றிருந்தாள். அவனைப் பார்த்தாலே விஷயம் முடிந்து விட்டதுபோன்ற இறுதியின் வடிவமாய்த் தோற்றியது. திரும்பியிருந்த தலையின் ஜடை உச்சியிலே ரோஜா ஒன்று துடித்தது. அவன் உள்ளம் துடிப்பது போல. அவன் மட்டும் துடிக்கவில்லையா? அதையும் மீறியா மறுப்பு?

''மஞ்சு!...''

''இனியும் இந்த விஷயம் வேண்டாம் குமார். இதோடு விட்டுடுங்க.''

''எப்படி விடறது மஞ்சு? விடற மாதிரியா நாம் பழகினோம்? கடற்கரையிலும், பார்க்கிலுமாய்ப் பேசிச் சிரித்து ஒன்றாய் மனக்கோட்டைகள் கட்டி நமக்குள்ளாகக் கனவுகளை வளர்த்துக் கிட்டதையெல்லாம் மறந்துடச் சொல்றியா?''

''கனவுகள்தானே குமார்? கனவுகளாகவே முடிஞ்சு போச்சு. அதை நினைச்சுக்கிட்டே இருந்தால் அப்புறம் வாழ வேண்டாமா?''

''வாழத்தான் வழி சொல்றேன். நீயும் நானும் திட்டமிட்ட வாழ்வை நாம் வாழத்தான் வேண்டும்.''

''முடியாது! முடியாது!'' அடிவயிற்றிலிருந்து சுருண்டெழுந்த துக்கம் வாய் வழியே விடுபட்டபோது கோபத்தைப் போலக் குரலை உயர்த்தியது. அதுதான் ஒரே வழி. துக்கத்தை வெல்ல. அவனுக்கெதிரே அவள் தன்னைத் துக்கத்தில் வெளிப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. புன்னகையும் இன்மொழியுமே காட்டி வந்த அன்பின் சன்னிதானத்திலே அழுகையில் கரைந்து போவது முறையெனத் தோன்றவில்லை. அவன் சென்றபின் அவள் உடைந்து போகலாம்; அதற்கு முன் அல்ல.

குமார் வேதனையும் முறைப்பும் சேர்ந்து சமைத்த வடிவமாய் அவளுக்கெதிரே வந்தான்.

''முடியாதா மஞ்சு? அப்படின்னா நீ என்னை விரும்புவதாய்ச் சொன்னதெல்லாம் பொய்யா?''

''இல்லே, அது நிஜம்!'' மின்வெட்டுப் போல் அவள் சட்டென்று திரும்பி அவனை நேராகப் பார்த்தாள். முக அசைவில் விழியின் யாசிக்கும் வெறிப்பில், துடிக்கும் அதரங்களிடையே சொல்லாகத் தெறிக்காத தாபத்தில் இருதயத்தின் தாய்மை பேசியது. குமார் அக்காட்சியில் தன் ஆர்வத்துக்கு உரம் தேடியவனாய். ''அப்படின்னா இப்போ முடியாதுன்னு சொல்றதுதான் பொய்! இல்லையா?'' என்று அவள் விரல்களைப் பற்ற முயன்றான்.

அவள் விலகிக் கொண்டாள். ''இல்லே, இதுவும் நிஜம்தான்.''

''ஒரே சமயத்தில் ரெண்டும் எப்படி நிஜமாயிருக்க முடியும்?''

''இருக்கே!''

''இப்போ முடியாதுங்கறது நிஜமாயிருந்தால் முந்தி நீ காதலிச்சது பொய்தான்.''

''எத்தனை தடவை உங்களுக்குச் சொல்றது குமார்?'' அவள் குரல் கெஞ்சியது. விரல் நுனிகள் ஜன்னல் கம்பியின் மேல் நடுங்கின. ''அப்போ உங்களைத் திருமணம் செய்து கொள்ள விரும்பிய அதே காதலின் காரணமாய்த்தான் இப்போ உங்களை மறுக்கிறேன். இந்த... இந்த மாதிரி இருக்கறப்போ நான் உங்களைக் கல்யாணம் செய்துக்கறது சிறிதும் நியாயமில்லையல்லவா?''

''அதை நான்தானே முடிவு செய்யணும்? எனக்கு ஏதும் ஆட்சேபணை இல்லைன்னு...''

''எனக்கு இருக்கே!''

''இது உன்னை மட்டும் பொறுத்த விஷயம்னு நீ தீர்மானிக்கிறது சரியா மஞ்சு? இதிலே எனக்கும் பங்கு உண்டு இல்லையா?''

''என் மனசு உறுத்திக்கிட்டே இருக்கும், நான் உங்களுக்கேற்ற மனைவி இல்லேன்னு.''

''உன் மனசைப் பத்தியே யோசிக்கறயே, எப்பவும். இது சுயநலமில்லையா? என் மனசு உன்னிடமேதான் இருக்கு



என்றதைப் பத்தி உனக்குக் கொஞ்சமும் அக்கறையே கிடையாதா?''

''குமார், ப்ளீஸ்! நீங்க போயிடுங்க. நம் கல்யாணம் நடக்காது.''

''என் கால் இப்படிக் கொஞ்சம் பழுது பட்டுப் போயிருந்தால் என்னை நீ மறுத்திருப்பியா மஞ்சு?''

''மாட்டேன்.''

''உடலை மீறி உள்ளத்துக்காக அன்பு செய்யற திறமை பெண்கள் கிட்டத்தான் உண்டு. ஆண்களுக்குக் கிடையாதுன்னு நினைக்கிறியா?''

''எனக்கு அதெல்லாம் தெரியாது.'' அவள் ஒரு கணம் உணர்ச்சியை அடக்கிக் கொண்டு மேலே பேசினாள். ''நாம் ரெண்டு பேரும் இளவயசுக்காரங்க. 'நார்மலா'ப் பார்த்தால் முழு ஆயுசும் நம் முன்னே இருக்கு. இன்னிக்கு இருந்துட்டு நாளைக்கு மறைஞ்சுடற விஷயமா? இப்படி ஒரு காலை வச்சுக்கிட்டு உங்களுக்கு ஒரு முடிவற்ற சுமையாய் இருக்க நான் இஷ்டப்படலே குமார். என்னை மன்னிச்சுடுங்க.'' படபடப்பாய்ப் பேசிவிட்டு உள்ளே விரைந்து மறைந்த மஞ்சுளாவின் அடிச்சுவட்டில் அவன் இதயம் தயங்கித் தவித்தது. நடக்கும்போது சற்றே தாங்கித் தாங்கி நடக்கும் தோற்றம். அந்தச் சிறு தாங்கல் அவன் அன்பைத் தாங்கி நிற்க முடியாது என்று அவளாகவே தீர்மானித்து விட்டாள். அவள் தன்னுள் தப்பார்வையாக வகுத்துக்கொண்ட நியாய—அநியாய அளவுகளை அவனுக்குப் பொருத்துகிறாள்; அவன் அன்பின் தரம் அந்த அளவுகளுக்குட்பட்டதா இல்லையா என்பதைக் கவனியாமல்.

குமார் பெருமூச்சுடன் வெளியேறினான். கூடத்தில் தொங்கிய ஊஞ்சல் அவனை வழியனுப்பி வைத்தது. பார்க்கச் சாது போல் காட்சி அளிக்கும் பலகை—உண்மையில் அது இப்படியும் அப்படியுமாய் ஆடும் ஆட்டம் அவனை நோக்கிக் கைகொட்டி நகைக்கும் செயலல்லவா? அந்த மரப் பலகையில் அமர்ந்து விளையாட மஞ்சுளாவுக்கு மிகவும் பிடிக்கும். அப்படி ஒரு நாள் அறையின் கோடிக்குக் கோடி வீசி சுழன்றாடுகையில் மேலே இருந்த சங்கிலி வளையம் கலகல ஒலியுடன் கழன்றுகொண்ட போதுதானே... நினைக்கவும் மனம் தாளவில்லை. மஞ்சுளா அவிந்த வேதனைச் சுருளாய்க் கீழே கிடந்தாள். மடிந்த வலது கால் பலகையின் அடியில் நெரிவுண்டு துடிதுடிக்க. பிறகு வைத்தியம் நடந்துகால் என்ன பயன்? பெரிய முறிவேதும் இல்லை. ஆனாலும் அந்தச் சிறு கோணல் மஞ்சுவின் காலினோடு நில்லாமல் குமாரின் வாழ்விலுமல்லவா விஷ வேர் பாய்ச்சி விட்டது?

அதற்குமுன்! ஆகா! அதற்கு முன்!—குமார் நினைவுத் தேன் சுவைக்கிறான். அவனும் அவளும்! கல்லூரி நாட்களிலேயே கண்ணால் இணைந்துவிட்ட பழக்கம். பிறகு காரியாலயத்தில் ஒன்றாய் வேலை பார்த்த நெருக்கம். உதட்டோரம் நெளியும் சிறு நெளிவிலே உள்ளத்தையெல்லாம் கொட்டி அளக்கும் தூய வித்தை. இருள் மூட்டம் பிரிந்திராத இதயத்தின் தொடுவானத்தில் கவர்ச்சியின் முதல் பொன் வண்ணங்கள் படிகிற அற்புதச் சிலிர்ப்பு. உணர்ச்சியின் அந்தச் சிலிர்ப்பு விழி வழியே உலகமெங்கும் திரை நீக்கிக் காணும் அழகின் புதுப்புது ரகசியங்கள். நிலவு கவிதை பொழிகிற அதிசயம். இரவு ஒளிக் கலசமாய்க் கவிழ்ந்து மின்னுகிற மாயம். பரஸ்பரம் முகம் பார்த்து நிற்கும் வியப்பிலே, விரல்கள் இணையும் உரிமையிலே, உறக்கம் அறியாக் கண்களுள் சொல் கொண்டு வடித்த கனவுகள் தீட்டும் வர்ணங்களிலே மானிடத்தை அமரமாக்கி விடும் அதிசய உணர்வு அன்று உண்மையாய்த் திகழ்ந்

தது. இதையெல்லாம் மஞ்சுளா இன்று மறுக்கிறாள். தான் உருவாக்கிய உலகத்தையே இடித்து வீழ்த்துகிறாள். அதன் ஒரு பாதி அவனுள் இருந்தும் பாராது கண் மூடிக்கொள்கிறாள். எத்தனையோ முறை அவன் கெஞ்சிக் கேட்டுக்கூட, இனி அவனை மணக்கத் தன்னால் இயலாது என்றே சாதிக்கிறாள் அவள்.

என்ன செய்வது? திரும்பத் திரும்ப இதே எண்ணம் மஞ்சுளாவின் மனத்தில். நிலவொளி மெருகிட்ட கடலலைகள் அவனுக்கும் அவளுக்கும் இன்பக் கனவுகளை வாரி வழங்கிய நாட்களை அவள் மறக்கவில்லை. ஆயினும் என்ன செய்வது? அன்பைத் தியாகம் செய்துதான் அன்பை நிலைநாட்ட வேண்டிய நிலைமை இப்போது. அவனுக்கு நன்மை விரும்புவதானால் அவள் தன்னை ஒரு நிரந்தரச் சுமையாய் அவன் வாழ்வில் இணைந்து இழுக்கச் சொல்வது முறையா? 'எது எப்படி இருந்தாலும் நான் உன்னைக் காதலிக்கிறேன், என்னை மணந்து கொள்' என்ற அவன் உறுதியில் பெண் நெஞ்சின் உள்ளார்ந்த ஆழம் பெருமிதத்தை உணராமலில்லை. ஆனால் அந்தப் பெருமிதத்தை அவள் தன் ஆயுட்காலக் கன்னி வாழ்வின் நிறைவுக்கு ஆதாரமாகச் செய்து கொண்டு ஒதுங்கி விட வேண்டியதுதான். அவனுக்கு விடுதலை தந்துவிட வேண்டும் - வேறோர் அன்போடு தன் வாழ்வைப் பிணைத்துக்கொள்ள. அவள் நிலையில் காதலனைக் கணவனாக்கிக்கொண்டால் அந்தக் காதலே பொய்த்துவிடும்.

வாரங்கள் ஓடின. அவள் வேலையிலிருந்து விலகிக் கொண்டு விட்டாள். வீட்டினின்றும் அதிகம் வெளியே செல்வது கிடையாது. அவனும் அடிக்கடி வருவதில்லை. சந்திப்பே அரிதாகிவிட்டது. அவள் மறுப்பை அவன் ஒப்புக்கொண்டு விட்டானா? அதுதான் சரி. இதற்கு வேதனை ஏன்? அவள் வருத்த விதிதானே இந்தப் பிரிவு? அதன் வெற்றியில் அவள் பெண்மைக்குத் தோல்வியா? அப்படி நினைப்பது மதியீனம்.

பிறகு பேச்சுக்கள் காதில் அடிபட்டன. குமாருக்கு ராதாவை மணமுடிக்க ஏற்பாடுகளாம். ராதா அவளுக்குத் தெரிந்தவள்தான். நல்ல பெண். குமாரை மணக்கத் தகுதி உடையவள். உள் மனம் வாழ்த்தியது. கண்ணீரே அவ்விருவரின் இன்ப வாழ்வுக்குப் பன்னீராய் மாறி உதிர்த்தது.

அவன் வந்தான். வனப்பும் வாலிபமும் சேர்ந்து அவனுக்கு ஓர் இணையாய்ப் பொலிந்திருந்த அவன் உருவம் வீடு தேடி வந்தது. கையில் ஓர் உறை. அதன் நான்கு மூலைகளிலும் மஞ்சள் தடவியிருந்தது.

மஞ்சுளாவின் பெற்றோரைக் கண்டு குசலம் விசாரித்த பின் அவர்களிடம் நேரே அதைக் கொடுத்தான்.

''திருமண அழைப்பிதழ்.''

''கேள்விப்பட்டேனப்பா! தேவலையே, நீயே கொண்டு வந்து தர்றியா?'' அவள் தகப்பனார் மகளின் வாழ்வு



கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் க்ரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத் தான் உண்டு.

கால்கேட்டின் நீடித்திருக்கும், நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல் துலக்குங்கள்.

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்தப் பயன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டென்டல் க்ரீமையே வாங்குகிறார்கள்.

முறித்து வேதனையைப் பிழிந்து கொண்டு சிரித்தார்.

குமார் அவள் பக்கம் திரும்பினான். ''நீயும் கல்யாணத்துக்குக் கட்டாயம் வா மஞ்சு. இல்லையானால் எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கும்.''

''கட்டாயம் வரேன் குமார்.'' அவள் மகிழ்ச்சியில் பொறுமை இல்லை. பெருமூச்சு இருந்தாலும் அதை என்றோ நசுக்கியாகி விட்டது.

''ராதாவை எனக்குத் தெரியும். ரொம்ப நல்ல பெண்'' என்றாள்.

''எங்க எல்லோருக்குமே ரொம்பப் பிடிச்சது'' என்றான் குமார்.

''அவளை அடைபவன் பாக்கியசாலி.''

''குமார், என்னப்பா இது?'' அவள் தகப்பனாரின் குரல் இடையில் குறுக்கிட்டது. ''அழைப்பில் உன் தம்பி பெயரில்லே போட்டிருக்கு?''

''ஆமாம். அவனுக்குத்தான் கல்யாணம்.''

மஞ்சுளா சட்டென்று அவனை ஏறிட்டாள்.

''உங்களுக்குத்தானே அவளைப் பேசினாங்க?''

''அப்படித்தான் ஆரம்பிச்சது. நான் தான் என் தம்பிக்கு முடிச்சு வச்சேன். என் கல்யாணம் என்னுடைய விருப்பமில்லாமல் நடந்துடுமா?''

''அண்ணன் இருக்கிறப்போ தம்பிக்கு..''

''கன்னி என்கிற வார்த்தைக்கு ஆண்பாற் சொல் கிடையாதுன்னு நினைச்சுட்டியா மஞ்சு?'' அவன் குரலில் அமைதியினூடே மெல்லிய கண்டிப்பு. அவன் போய்விட்டான்.

அவள் வெகு நேரம் சிலையாக நின்றாள். இப்படி ஓர் உறுதியா? துயரம் மீதூரத் தன் வலக் காலைப் பார்த்துக் கொண்டாள். இந்த நிலை வந்திராவிட்டால்! ஐயோ, வந்திராவிட்டால்!

மீண்டும் நாட்களின் சுழற்சி. நினைத்து நினைத்துச் சிந்தனையே உடலெங்கும் புரையோடிவிட்டது. நெஞ்சில் கண்ணீர் வற்றியதில் கண்களிலே ஈரம் காய்ந்து போயிற்று. வேதனையின் வெளிறிய வடிவமாய் அவள் வளைய வந்தாள். குமார் மண வாழ்வில் புகுந்து விட்டால் அவள் வேதனை தீரும். ஆனால் அருவியாய் அவன் அன்பு பொழிந்து கொண்டிருப்பது உறுதியென்ற பாறையிலிருந்துதான். பெருமைக்குக் காரணமாயிருந்திருக்கும், நிலைமை வேறாயிருந்தால்... இன்று அதுவே அவள் பிரச்னையாகிவிட்டது.

எண்ணத் தகிப்பில் உடலும் எரிவது போல் இருந்தது. மறந்திருக்க முயன்றாள். தலைச் சுற்றல். கண் எரிச்சலோடு உடம்பெல்லாம் நோவு. படுக்கையில் அவள் சாய்ந்து விட்டாள்.

காய்ச்சல் ஒரு வாரம் விடாமல் பிடித்தது. அன்றாடம் வைத்தியர் வந்தார். விஷயத்தைக் கேள்வியுற்று ஒரு நாள் குமாரும் பதறிக்கொண்டு வந்தான்.

''மஞ்சு! உடம்பு சரியில்லையாமே? என்ன ஜுரம்? ரொம்ப அடிக்குதா? இதுக்குள்ளே இப்படி இளைச்சுத் துரும்பாயிட்டியே!''

கண்ணீரின் கதை!

கால வெள்ளத்தில் இரு சொட்டுக் கண்ணீர் கலந்தன. 'நான் யார் தெரியுமா? ஒருத்தியின் கணவனை இன்னொருத்தி பறித்துக் கொண்டுவிட்டாள். அந்தத் துயரத்தில் அவள் உகுத்த கண்ணீராக்கும்!' என்றது ஒரு துளி.

'அதற்காகக் கண்ணீர் விட்டு நீ கதறுகிறே. நான் யார் தெரியுமா? விருதுப்பட்டிச் சனியனை விலைக்கு வாங்கிக்கொண்ட கதையாக நாம் ஏன்தான் இந்தப் பருவத்தை அடைந்தோமோ என்று இரண்டாமவள் ஒரு பெருமூச்சு விட்டாள். அப்பொழுது அவள் கண்ணிலிருந்து தெறித்தது நான்தான்!' என்றது இரண்டாவது கண்ணீர்ச் சொட்டு ஒரு பெருமூச்சுடன்.



அன்பு அங்கலாய்த்தது. உணர்வின் ஆழத்தில் அவனுக்கும் ஒரு திருப்திதான்.

மறு வாரம்.

மஞ்சுளா வாசல் வராந்தாவில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தாள். காய்ச்சல்–நன்கு குணமாகி விட்டிருந்தது. ஆயினும் அவள் முகத்தில் சிந்தனை. புதியதொரு விழிப்பின் மோகம். டாக்டர் அருணாசலம் அப்போது தான் அங்கிருந்து சென்றிருந்தார். அவர் தன்னிடம் கூறிச் சென்ற விஷயத்தை நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் தாங்கவில்லை. இதயம் பொங்கித் துடித்தது. மனத்தில் வகையறியாத உணர்ச்சிக் கொந்தளிப்பு. அதனூடே ஒரு மிரட்சி. பதற்றமாயிருந்த நிலையில் உட்கார்ந்திருக்க இயலவில்லை. எழுந்து மேலும் கீழுமாய் நடந்தாள் மஞ்சுளா. தாங்கித் தாங்கிச் சாய்ந்து நடக்கும் நடை... தன் காலைக் குனிந்து பார்த்துக் கொண்டாள். மீண்டும் உள்ளத்தில் சோகமே பனியாய் உறைந்தது. அருணாசலம் சொல்லிப் போன தகவலோ திடீரென்று மதிப்புக்களையெல்லாம் தலைகீழாக மாற்றிவிட்டது. அவள் எண்ணப் போக்கைப் புதிய கோணத்தில் திருப்பிவிட்டது. எல்லாமே புதுப் பார்வையாய்த் திசை மாறிவிட்டாற்போல் பிரமை தட்டியது. இரு கைகளாலும் இதயத்தை அழுத்திப் பற்றிக் கொண்டாள். மிரட்சியும் பதற்றமும் ஓயவில்லை. அவள் அங்கத்தில் அந்தச் சிறு குறை. திடீரென்று மனவெளியில் நிறைமதி போல் நிர்மாணம் முழுமையுமாய் உதயமாகி விட்டது. குறையிருந்தால் என்ன? இனி அதைக் குறித்துக் கவலையில்லை. அருணாசலம் சொன்ன விஷயம் எல்லாவற்றையுமே மாற்றி விட்டது.

நேராகத் தன் அறைக்குச் சென்று காகிதத்தையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள். அடுத்த நாள் மாலை குமார் அவள் முன் ஆஜரானான்.

''என்ன சமாசாரம் மஞ்சு? என்னை வரச் சொல்லி எழுதியிருந்தாயே! ஆபீஸிலிருந்து

மூன்று கஷ்டங்கள்!

எழுத்தாளனுக்கு இருப்பதில் மூன்று கஷ்டங்கள் இருக்கின்றன. ஒன்று: பிரசுரிக்கத் தகுதியானதை எழுதியாகவேண்டும். இரண்டு: யோக்கியமான பிரசுரகர்த்தரைக் கண்டு பிடித்தாக வேண்டும். மூன்று: அதைப் படித்து ரசிக்கக் கூடிய புத்திசாலிகளைப் பிடித்தாக வேண்டும். என்ன கஷ்டம், என்ன கஷ்டம் போங்கள்!

-நோல்ட்டன்

வீட்டுக்குப் போனதும் உன் கடிதத்தைப் பார்த்தேன். உடனே பறந்து வந்தேன்."

"அப்போ காப்பிகூடக் குடிக்கலையா? கொஞ்சம் இருங்க."

"காப்பி கெடக்குது மஞ்சு. நீ கூப்பிட்டனுப்பிய விஷயத்தைச் சொல்லு. என்ன சமாசாரம்? உனக்கேதாவது உதவி வேணுமா? எதுவானாலும் செய்யக் காத்துக்கிட்டிருக்கேன் மஞ்சு! சீக்கிரமாய்ச் சொல்லேன்!" ஆர்வமும் துடிப்புமாக அவன் இறைஞ்சி நின்றான்.

"குமார்!" எப்படிச் சொல்வதென்று திகைப்பது போல் அவளுக்கு ஒரு நிமிஷம் பேச்சு எழவில்லை. விஷயத்தைச் சொல்லும் போது அவன் முகத்தைச் சந்திக்கவும் சங்கடமாக இருந்ததோ? திரும்பிக் கொண்டு அமர்ந்தாள்.

"நேற்று டாக்டர் அருணாசலம் சொன்னார். எனக்கு ஏதோ கடுமையான ரத்த நோயாம். அதுக்கு வைத்தியமே கிடையாதாம். இன்னும் ஆறு மாசத்துக்கு மேலே நான்...உயிரோட இருக்கிறது...சந்தேகம்."

"மஞ்சு!" அவன் கூவிவிட்டான்.

"நான் முந்தி சொன்னது நினைவிருக்கா, குமார்? என்னை ஒரு சுமையாய் ஆயுள் முழுவதுக்கும் உங்க மேலே சுமத்த இஷ்டப்படலேன்னு சொன்னேன்...... இப்போ என் ஆயுளே ஆறு மாசத்துக்குத்தான்னு தெரியறப்போ...... எல்லாமே கொஞ்சம் மாறிப் போகுது. இல்லையா?"

"மஞ்சு, ஆறு மாசமா? உன்னை நான் போகவிட மாட்டேன்..... மரணத்தோடு போராடுவேன்..... வெளியூரில் வைத்தியம் இருக்கலாம்......."

அவள் மிருதுவாய்ச் சிரித்தாள். "நல்லாத்தான் பேசறீங்க குமார்! நான் சாவுக்குப் பயப்படலே. இப்போ இது தெரிஞ்சப்புறம் நான் ரொம்ப நாள் உங்களுக்குச் சுமையாய் இருக்க மாட்டேன்னு புரியுது. அதனாலே......."

"அதனாலே?" அவன் குரல் ஆவலில் தத்தளித்தது.

"நீங்க என்னை மணக்க விரும்பினால்..."

"அதைப் பற்றிச் சந்தேகமா மஞ்சு?"

"நான் சம்மதிக்கிறேன் குமார்! கொஞ்ச நாளைக்காவது நாம் சந்தோஷமாய் வாழலாம். உங்க அன்புக்கு நான் ஓரளவாவது நிறைவைக் கொடுக்க முடியுமில்லையா?"

"மஞ்சு!" அவன் தாவி வந்து அவளருகில் உட்கார்ந்து அந்த மலர் முகத்தை உயர்த்தினான். "நிஜமாகவா சொல்றே, மஞ்சு? நிஜமாகவா?"

"ஆமாம்." அன்பு ததும்பும் புன்னகையால் அவன் கண்களைக் குளிர்வித்தாள் அவள்.

"எனக்கு எத்தனை சந்தோஷத்தைக் கொடுத்துட்டே!" அவன் இதயமே வாக்காக நவின்றான்.

திருமணம் நடந்தேறியது.

வைபவத்துக்கு வந்திருந்த டாக்டர் அருணாசலத்தைக் குமார் தனியாக அழைத்துச் சென்றான். சட்டைக் கையை ஆவேசமாய்த் தூக்கி விட்டுக் கொண்டு அங்கவஸ்திரத்தை இடுப்பில் வரிந்து கட்டினான். பிறகு அப்படியே அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்.

"ஸார், என் காதல் கைகூடினது உங்களால்தான். என் தந்திரம் பலித்தது. நான் கேட்டுக்கிட்டபடியே நீங்க மஞ்சுகிட்டே சொல்லியிருக்கலேன்னா அவள் என்னைக் கல்யாணம் செய்துக்க ஒத்துக்கிட்டிருப்பாளா? உங்களுக்கு நான் எத்தனை நன்றி சொன்னாலும் போதாது." அவன் ஏதோ எண்ணத்தில் இளித்தான். "பாவம், மஞ்சு! நான் ஆறு மாசத்துக்கப்புறமும் உயிரோடு இருக்கறப்போ அவளுக்கு எத்தனை ஆச்சரியமாயிருக்கும்!"


"ஒண்ணும் இருக்காது!" பின்னாலிருந்து குரல். அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். "யார்? ஐயோ, மஞ்சுவா?"

"நானேதான்! ஒரு டாக்டர் யாரிட்டேயாவது வந்து அவங்களுக்கு இல்லாத நோயைச் சொல்லிச் செத்துப் போயிடப் போறீங்கன்னு சொல்லுவாரா? இந்தச் சின்ன விஷயத்தை நீங்க யோசிக்கலியே குமார்! செத்துக்கிட்டிருக்கறவங்ககிட்டேயும் 'ஆபத்தில்லை'ன்னு கடைசிவரை சொல்றது தானே டாக்டருங்க வழக்கம்!"

குமார் திகைத்தான்.

மஞ்சுளா விவரித்தாள்: "டாக்டர் அருணாசலம் வந்து நீங்க இந்த மாதிரி என்கிட்ட சொல்லச் சொன்னீங்க என்கிறதையே சொல்லிட்டாரு. இப்படி ஒரு தந்திரம் செய்தாவது என்னையே கட்டிக்கணும்னு நீங்க நினைக்கிறது தெரிஞ்சப்போ உங்க அன்பின் ஆழத்தையும், உறுதியையும் புரிஞ்சுக்கிட்டேன் குமார்! அந்த அன்பின் நிறைவிலே என் சின்னக் குறைக்கு இடமே இல்லேன்னு உணர்ந்துக்கிட்டேன். டாக்டர் வாரும் அதையேதான் எடுத்துச் சொன்னாரு. நானும் யோசிச்சேன். இப்படிப்பட்ட உங்க அன்பை மேலும் மறுக்கிறது தப்புன்னு தோணிச்சு. அதை ஏற்றுக்கிறதுதான் என் அன்புக்கு அத்தாட்சி என்றும் தீர்மானித்தேன். கல்யாணத்துக்குச் சம்மதிச்சுட்டேன்."

இன்னும் சிறிது நேரத்துக்காவது அவர்களுக்குப் பசி தெரியாது என்பதை அவர்களது மலர்ந்த முகங்களிலிருந்து கண்டுகொண்ட அருணாசலம் பந்திக்கு முந்திக்கொள்ள அங்கிருந்து விரைந்தார்.



தி. ஜானகிராமன்

"நமஸ்காரம், டாக்டர் கோஸ்வாமி!"

"நமஸ்காரம். டாக்டர் என்று சொல்லத் தேவை யில்லை. வெறுமே கோஸ்வாமி என்று சொன்னால் போதும்."

"என் அயல் நாட்டுப் பல் கலைக் கழகம் ஒன்று உங்கள் தகுதியை ஆராய்ந்து கொடுத் திருக்கிற பட்டமாச்சே அது!"

"என்ன பிரயோசனம்? என் திட்டம் இப்படிச் சந்தி சிரிக்க ஆரம்பித்து விட்ட பிறகு பட்டமும் பிறவும் எதற்கு?"

"என்ன சந்தி சிரித்து விட்டது இப்போது? உங்கள் அரிய திட்டம் வெற்றி பெறவில்லை. அது கோடி ரூபாய் செலவழித்தும் வெற்றி பெறவில்லை என்று அரிய நுண்மை ஆய்கிறவர்கள் கவலைப்படுகிறார்கள். ஒரு பெரிய விஞ்ஞானிக்குக் கொடுத்த உதவி சரியாக அவர் மனசுப்படி செலவா யிற்று என்று அவர்கள் அறிய நினைக்கிறார்கள். உங்களுக்கு உதவி செய்கிற எண்ணம் தானே அது...?"

"ரொம்ப நன்றி. என் மனசுப்படி அந்த உதவித் தொகை செலவாயிற்று என்று நீங்கள் இப்போது குறிப்பிட் டீர்களே. ரொம்பச் சரியாகச் சொன்னீர்கள். நடுநிலையுடன் நீங்கள் விசாரித்தால் உங்க ளுக்கு உண்மை புலனாகி விடும்."



சூழ்நிலையையும் சந்தர்ப்பத் தையும் சொற்களால் வடித் துக் காட்டுவதைச் செய்வதிலும் நுட்பமான மனோபாவங்களைச் சித்திரிப்பதிலும் வல்லவரான தி. ஜானகிராமன் சிறந்த ஹாஸ்ய எழுத்தாளரும் கூட. அவருடைய ஹாஸ்ய நடை வெறுவேட்டு போன்றதல்ல. அழுத்தமும் கருத்தாழமும் கொண்டு நம்மைச் சிரிக்க வைத்துச் சிந்திக்கச் செய்யும்.



"உண்மையைக் கண்டு பிடித்து உங்களுக்கு உதவத் தான் வந்திருக்கிறேன்."

"ரொம்ப நன்றி. நீங்கள் எது வேண்டுமானாலும் கேளுங்கள். விடையளிக் கிறேன்."

"நன்றி. உங்கள் முழுப் பெயர் என்ன?"

"கணேச சந்திர விஞ் ஞான சாகரன்."

"கோஸ்வாமி..."

"அது பட்டப் பெயர்."

"குடும்பப் பட்டமா?"

"இல்லை. அதைவிடப் புனிதமானது. ஹிமாலயத் தின் சர்வ சாட்சி என்ற இடத் தில் உள்ள புராதன மடத் தின் பீடாதிபதி பிரம்மஞ் ஞானானந்தர் அருளிய பட்டம் அது."

"எதற்காக அருளினார் என்று நான் கேட்கலாமா?"

"நீங்கள் கேட்காமலே நான் சொல்லுவேன். பசுக்க ளிடத்தில் எனக்குள்ள கருணை யையும் அக்கறையையும் கண்டு தான் கோஸ்வாமி என்ற பட்டமளித்தார் அவர். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கோமாதா என்ற பத்திரிகை யில் நான் என்னுடைய கருத்தொன்றை வெளியிட்டு, பசுஞ் சாணத்திலிருந்து ரயில் பெட்டிகளும், ரயில் என்ஜின் களும் செய்ய முடியும் என்று எழுதியிருந்தேன். அதைப் பார்த்த பிரம்மஞ்ஞானானந்தர் விரைவில் புறப்பட்டு வரும் படி எனக்குத் தந்தி அனுப் பினார். உடனே மத்தியப் பிர தேசத்திலிருந்து நான் விமா னத்தில் சென்று பிறகு கோவேறு கழுதையில் ஏறி பல நாள் பிரயாணம் செய்து அந்த மடத்தை அடைந் தேன். அவரிடம் என் திட் டத்தை விளக்கினேன். பர வசமாகி விட்டார். எத்தனை தீர்க்க தரிசனத்துடன் நம் முன்னோர்கள் பசுவைத் தெய்வமாகக் கொண்டாடி னார்கள் என்று மெய்சிலிர்த் தார். இனி நம் பசுக்களுக்கு நல்ல காலம் பிறந்து விடும். பசுஞ் சாணத்திலிருந்து ரயில் செய்ய முடியும் என்றால் இனி மேல் நம் மக்களும் அதிகாரி களும் அதைப் புறக்கணிக்க மாட்டார்கள். இந்தப் பெரிய ஞானோதயப் புரட்சிக்கு நீ காரணமாக இருப்பதால் "கோஸ்வாமி" என்று உனக்



ருப் பட்டமளிக்கிறேன்'' என்று என்னை ஆசீர்வதித்தார். விஞ்ஞானியாக இருந்தாலும் அவருடைய கருணை என்னை உணர்ச்சி வசப்படுத்திவிட்டது. அதிலிருந்து விஞ்ஞான சாகர கோஸ்வாமி என்று என் பெயரையே சுருக்கி மாற்றி கெஜட்டிலும் பதிவு செய்து விட்டேன்.''

''விஞ்ஞானப் பண்பு, இந்திய ஆன்மிகப் பண்பாடு—இரண்டும் இணைந்த அரிய புருடர் நீங்கள்.''

''வேறு எப்படி நாம் இருக்க முடியும்? 'அணோரணீயான் மஹதோர் மஹீயான்' என்று விளக்கப்பட்ட பரம விஞ்ஞானத்தின் வாரிசுகளில்லையா நாம்?''

''ரொம்ப சரி. உங்கள் சூத்திரத்தைச் சற்றுப் பார்க்கலாமா? ஸீமஉ என் / √5 ஆர் x க = ரபெ என்பதுதானே உங்கள் சூத்திரம்?''

''ஆமாம்.''

''ஸீமஉ என்றால் என்ன?''

''கௌடங். அதாவது பகம் சாமணம். அதில் ஒரு குறிப்பிட்ட அளவை 5 ஆர் x க என்பதன் வர்க்க எண்ணால் வகுத்தால் ரயில் பெட்டி செய்யும் முறை புலனாகிவிடும்.''

''ஸீமஉ என்றால் கௌடங், அதாவது பகம் சாமணம். 5 ஆர், க என்பவை என்ன?''

''அதை நான் சொல்ல முடியாமைக்கு வருந்துகிறேன்.''

''ஏன்?''

''அது விஞ்ஞான ரகசியம். அதைக் கூறி விட்டால் மற்ற நாட்டார்கள் ரயில் பெட்டிகளையும் என்ஜின்களையும் மிக எளிதாகச் செய்து குவிப்பார்கள். நாம் இத்தனை காலமாகப் பட்ட கஷ்டம் போதும். மீண்டும் அன்னியர்களின் பொருளாதார அடிமையாக வேண்டாம்.''

''ஆர், க—இரண்டும் தாதுக்களா?''

''இல்லை. அவை பச்சிலைகள். இதோ பாருங்கள். சூத்திரத்தை என்னிடம் கேட்கிறீர்கள். அது விஞ்ஞானிகளுக்குத்தான் புரியும். சிக்கலான கால்குலஸ் கணக்கு அது. நான் நாலு வருஷங்கள் மண்டையை உடைத்துக்கொண்டு கண்டுபிடித்த சூத்திரம். இந்த மாதிரி ஒரு விசாரணையில் விளக்க முடியாது. விளக்கவும் நான் விரும்பவில்லை என்பதற்குக் காரணம் சொல்லிவிட்டேன். உங்களுக்கு வேண்டுமானால் ஆர் ஒரு பச்சிலை, க என்பது நாம் தினமும் பயன்படுத்தும் ஒரு பொருள் என்றமட்டும் சொல்லத் தயார்.''

''கடுகா?''

''இல்லை.''

''கத்தரிக்காயா?''

''இல்லை.''


''கரிசிலாங்கண்ணியா?''

''இல்லை.''

''கண்டத்திப்பிலியா?''

''அதை நாம் தினமும் உபயோகிப்பதில்லையே.''

''கருவேப்பிலையா?... கருஞ்சீரகமா?..... கற்கண்டா?... கடலைப் பருப்பா?...?... கஸ்தூரா?..... கருணைக்கிழங்கா?....''



1

''நீங்கள் உயர்நீதி மன்றங்களில் மிகப் பெரும் பதவி வகித்தவர்கள். தேசத்தின் பொருளாதார உயர்வைக் காக்கும் நோக்கத்துடன் இந்தச் சூத்திரத்தின் ரகசியத்தை என் மனத்தில் பூட்டி வைத்திருக்கிறேன். அதை நான் அஜாக்கிரதையாக வெளியிடக் கூடாது. இதில் நீங்கள் எனக்கு உதவுவதற்குப் பதிலாக வெளியிடும்படி நெருக்க முயலுகிறீர்கள்.''

''மன்னிக்க வேண்டும். கணிதத்தில் உள்ள அபார ஆவலால் சொந்த முறையில் கேட்டு விட்டேன். நீங்கள் சொல்ல வேண்டாம். நான் கேட்டதை மறந்து விடுங்கள். சரி, பசும் சாணத்திலிருந்து ரயில் செய்யலாம் என்று எப்படித் தோன்றிற்று உங்களுக்கு?''

''ஒரு தடவை தென்னிந்தியாவுக்குப் போயிருந்தேன். என் தாத்தாவும் பாட்டியும் ராமேசுவரம் போனார்கள். நானும் உடன் போனேன். அப்போது எனக்கு வயது பதினொன்று. வேத பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தேன்.''

''வேத பாடசாலையிலா?''

''ஆமாம்.''

''நீங்கள் வேதம் படித்திருக்கிறீர்களா?''

''பதினாறு வயதுவரை வேதம்தான் படித்தேன். நான் வேதம் சொல்வதை ராமேசுவரம் கோயிலில் கேட்ட அமெரிக்கர் ஒருவர் என் விலாசத்தைக் குறித்துக் கொண்டார். பின்பு மறு வருடமே எனக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து என்னை அமெரிக்காவுக்குத் தருவித்துப் படிக்க வைத்தார். அங்குதான் விஞ்ஞானத்தில் டாக்டர் பட்டம் பெற்றேன்!''

''ஓகோ! சார், ராமேசுவரம் போனதாகச் சொன்னீர்கள் தாத்தாவோடு—''

''ஆமாம். தென்னிந்தியக் கிராமங்களில் சுவர்மீது ஒட்டிக்கொண்டிருந்த சாண வரட்டிகளைப் பார்த்தேன். ஆச்சரியமாக இருந்தது. கையால் விள்ள முடியவில்லை. அது அடுப்பெரிக்கப் பயன்படுகிறது என்று தெரிந்ததும் தான் ஏன் சாணத்திலிருந்து ரயில் செய்யக் கூடாது என்று தோன்றிற்று. ஆனால் அப்போது எனக்குக் கணித அறிவோ மேனாட்டு விஞ்ஞான அறிவோ கிடையாது. அமெரிக்காவில் படித்துத் திரும்பிய பிறகுதான் அதைப் பற்றி யோசிக்கலானேன். நான்கு ஆண்டுகள் முயன்று இந்தச் சூத்திரத்தைக் கண்டுபிடித்தேன்.''

''சம்பிரதாய முறையில், அதாவது இரும்பு, எஃகு, அலுமினியம், மரம் — இவற்றைக் கொண்டு செய்யும் ரயில் பெட்டி—என்ஜின்களுக்கும் நீங்கள் உருவாக்கவிருக்கும் ரயிலுக்கும் என்ன வித்தியாசம்?''

''உருவாக்கவிருக்கும் என்று ஏன் சொல்கிறீர்கள்? நான் ஒரு சிறிய மாதிரி ரயிலை உருவாக்கிக் காட்டிய பிறகுதானே அமைச்சர் ஆறு கோடி ரூபாய் அனுமதித்தார்.''

''நான் பெரிய ரயிலைச் சொல்கிறேன். மன்னிக்க வேண்டும்.''

''நான் உருவாக்க நினைத்த ரயிலைச் செய்ய மரம், இரும்பு, எதுவுமே தேவையில்லை. சாணத்தினாலேயே அதன் உடல், சக்கரம் எல்லாம் அமைந்திருக்கும். அதை ஓட்ட நீர், நிலக்கரி, டீசல் எண்ணெய் ஒன்றுமே தேவைப்படாது. பசும் சாணத்திலிருந்து மீதேன்என்ற எரிவாயு உண்டாகிறது. அதைக் கொண்டே அந்த என்ஜின் ஓடும். அந்த வாயுவே ரயிலில் உள்ள மின் விளக்குகளை எரிய வைக்கும். மேலும் பசும் சாணத்தில் சில அரிய மருந்துச் சக்திகள் உண்டு. எனவே இந்த ரயில் பிரயாணம் செய்பவர்களுக்கு நோய் வராது. சாதாரண ரயில்களில் அநாதி காலமாக வாசம் செய்யும் மூட்டைப் பூச்சிகளும் மற்றக் கிருமிகளும் இந்தக் கோமய ரயிலில் உயிரோடு இருக்க முடியாது. இந்த ரயில் என்ஜினின் அடக்க விலை நாற்பதாயிரம் ரூபாய்க்குள் முடிந்துவிடும். ஒரு பெட்டியின் விலை பதினாயிரம் ரூபாய்க்கு மேல் ஆகாது. குளிர் காலத்தில் வெதவெதவென்றும், கடும் கோடையில் குளுகுளுவென்றும் இருக்கும் இந்தப் பெட்டிகள். அப்படி வெப்ப நிலையைச் சீராக்குவதும் இந்தப் பசும் சாண வாயுவால் தான். சுருக்கச் சொன்னால் தன் உடலின் சக்தியைக் கொண்டே இது ஓடுகிறது. வெளிப் பொருட்களே தேவையில்லை. என் சூத்திரத்தின்படி செய்தால் பசும் சாணம் இரும்பை விட, எஃகைவிடப் பன்மடங்கு உறுதியாகி விடும். எனவே தேயாமல் நீடித்து உழைக்கவும் செய்யும். இத்தனை பண்புகளையும் நான் செய்து காட்டிய, மாதிரி ரயிலில் நிரூபித்துக் காட்டியிருக்கிறேன். அதைப் பார்த்துத் திருப்தி அடைந்த பிறகுதான் அமைச்சர் ஆறு கோடி ரூபாய் அனுமதித்தார்.''

''கேட்கக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. பசும் சாணத்திலிருந்து ரயில். இரும்பு எஃகு, நிலக்கரி கிடையாது. தன் உடல் சக்தியைக் கொண்டே ஓடுகிறது. வெப்ப தட்பம் தருகிறது. விளக்கு, விசிறிகளை இயக்குகிறது. விலை முப்பதாயிரம்தான். உறுதியோ இரும்பைவிட! கேட்கக் கேட்க—''

''பார்த்தால் இன்னும் பிரமிப்பீர்கள். மாதிரி ரயிலை வந்து பாருங்கள்.''

''இவ்வளவு அழகான திட்டம் ஏன் இன்னும் நடைமுறையில் சாத்தியமாகவில்லை? ஒரு பெட்டி, ஓர் என்ஜின் உருவாகு முன் எப்படி ஆறு கோடியும் செலவழிந்தது?''

''சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி கொடுக்க வேண்டாமா? இந்த ஆறு கோடியை என்னிடம் கொடுப்பதற்குப் பதிலாக யாரோ ஒரு நிர்வாக அதிகாரியை ஏதோ ஓர் இலாக்காவிலிருந்து மாற்றிக் கொண்டு வந்தார்கள். நிர்வாக அதிகாரிக்கும் பசும் சாண ரயிலுக்கும் என்ன சம்பந்தம்? வரதட்சிணைக்குச் சம்பந்தம் இருக்கலாம்.''

''வரதட்சிணையா?''

''ஆமாம். நான் விசாரிக்காமல் சொல்லவில்லை. இந்தத் திட்டத்தின் நிர்வாக அதிகாரி, தன் கல்யாணத்துக்கு மூன்று லட்ச ரூபாய் பெண்ணின் தகப்பனாரிடமிருந்து வரதட்சிணையாகக் கறந்தவர். பிரச்னைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஞாபகம் வந்தது சொன்னேன். மனைவியாக வருகிறவளின் தந்தையிடமிருந்து இப்படிக் கறந்தவருக்கு எவ்வளவு அநுதாப உணர்வு இருக்கும்?''

''மேலே சொல்லுங்கள்.''

''அவருக்கு இந்தத் திட்டத்தில் நம்பிக்கை இல்லை போலிருக்கிறது. அடிக்கடி என்னைப் பற்றிக் கிண்டலாகப் பேசிக் கொண்டிருந்தாராம். ஆனால் இருபது லட்சம் ரூபாய் செலவில் ஆபீஸ் கட்டிடம் கட்டுவதை அவர் நிறுத்தவில்லை. அறுநூறு குமாஸ்தாக்கள், அதிகாரிகள் கொண்ட பட்டாளம் ஒன்றை எழுப்புவதை நிறுத்தவில்லை. இத்தனை பேருக்கும் வீடு கட்டிக்கொடுத்து, சாலைகள் போட்டு, பள்ளிக்கூடமும், ஆஸ்பத்திரியும், பொழுதுபோக்கு நிலையங்களும் / கட்டுவதை நிறுத்தவில்லை. தொழிற்சாலை கட்டிக் கால்வாசி எழுவதற்குள் பணம் தீர்ந்துவிட்டது. மூலப் பொருள் வாங்கப் பணம் இல்லை; அதற்குள் பார்லிமெண்டில் கேள்வியும் கேட்டுவிட்டார்கள். கேள்வி கேட்பதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஒருவிதத்தில் நல்லதுதான். ஆனால் பணம் சரியாகச் செலவாகவில்லை என்று எப்படி மக்களுக்குத் தெரியப் போகிறது? திட்டமே மோசம் என்று என்மீதே, என் விஞ்ஞான உணர்வின் மீதே சந்தேகத்தைக் கிளப்பிவிட்டதே என்ற துயரம் தான் எனக்கு. பத்திரிகைக்காரர்களே ஒரு தினுசு. நாலு வாக்கியம் அழகாக, உரப்பாக எழுதத் தெரிந்தவுடன், எல்லாம் தெரிந்த மாதிரிப் பேச ஆரம்பித்து விடுவார்கள். சத்தம் போட்டால்தானே அஞ்ஞானம் தெரியாமலிருக்கும்!''


''உண்மை தெரிந்தால் எல்லாம் சரியாகி விடும். கவலைப்படாதீர்கள். மூலப் பொருள் வாங்கித் தரக்கூட ஏற்பாடு செய்யவில்லை என்பதைக்கேட்டு எனக்குக் கோபமும் வருத்தமுமாக வருகிறது. நீங்கள் என்ன மூலப் பொருள் கேட்டீர்கள்?''

''என் ரயிலுக்கு மூலப்பொருள் பசும் சாணம். சாணத்துக்கு மூலம் பசுக்கள். நான் முதலில் இரண்டு கோடி ரூபாய்க்குப் பசுக்கள் வாங்க வேண்டும் என்று கேட்டேன். உண்மையில் முதல் முதல் இதற்குத்தான் பணம் செலவழித்திருக்க வேண்டும். பசுக்களை வாங்கி, அத்தனைக்கும் கொட்டில்கள் கட்டி, அவற்றுக்கான புல் விளையப் பக்கத்து நிலங்களை வாங்கியிருக்க வேண்டும். வீடுகளும் ஆபீசும் கட்டுவதற்குப் பதில் கொட்டில் கட்டியிருக்க வேண்டும். குமாஸ்தாக்களுக்குப் பதிலாகப் பசுக்களை வாங்கியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், ரயில்களை உற்பத்தி செய்து அந்த லாபத்திலேயே இந்த வீடுகளைக் கட்டியிருக்கலாம். அதற்கான விளக்குகள், தண்ணீர் சப்ளை, இயந்திரம் இவற்றையெல்லாம் இயக்கும் சக்தி முழுவதையும் நான் இந்தப் பசும் சாண வாயுவிலிருந்தே தந்திருப்பேன்.''

''சரி. இனிப் பேசிப் பயனில்லை. எடுத்த காரியத்தை விடக் கூடாது. ஏற்கெனவே குமாஸ்தாக்கள் ஒருமுறை வேலை நிறுத்தம் செய்து சம்பள விகிதத்தைக்கூட உயர்த்திக் கொண்டு விட்டார்கள். என்ன

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்

கார் சவாரியில்
ஒரு புது அனுபவம்



கீழ்க்கண்ட போற்றத்தக்க
வசதிகளுடன் கூடியது

- 25 அடி வட்டத்திற்குள் திருப்ப முடியும்
- ஒவ்வொரு சக்கரத்திற்கும் தனித்தனி சஸ்பென்ஷன் (Suspension) இணைப்பு இருக்கிறது (சுலபமாக அபாயமின்றி திருப்பலாம். ரஸ்தாவில் நல்ல பிடிப்பு உண்டு. முன் சக்கரத்திற்கு ஏற்படும் அதிர்ச்சி முன் சக்கரத்தின் ஸ்ப்ரிங்கிலேயே தாங்கிக்கொள்ளப்படுவதால், வண்டியின் பின்புறம் அதிர்ச்சியோ, ஆட்டமோ அடையாது.)
- எஃகு கர்டரினாலான சாஸிஸ் (Chassis) (மிக உறுதியான கார் அமைப்பு)
- 93% வெளிப்பார்வை வசதி

STANDARD herald

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்

உறுதியான, *எழில் மிகுந்த* கார்

தயாரிப்பாளர்கள் :

ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்

சென்னை. 2

விநியோகஸ்தர்கள்

யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்

சென்னை உதகை

யுனிகான் (பெங்களூர்) பிரைவேட் லிமிடெட், பெங்களூர்

செய்தால் காரியம் விரைவில் நிறைவேறும், சொல்லுங்கள்?''

''இதுவென்று கேட்டால் நான் என்ன சொல்லுவேன்? இருந்தாலும் முக்கியமானவற்றைச் சொல்லுகிறேன். இன்னும் ஒரு நாலு கோடி ரூபாய் கொடுங்கள். அதை என்னிடம் கொடுங்கள். இரண்டு கோடிக்கு இல்லாவிட்டாலும் ஒரு கோடிக்காவது பசு மாடு வாங்குகிறேன். நிர்வாகத்தை என்னிடம் ஒப்படையுங்கள். மூன்றாவதாகத் தொழிற்சாலையைச் சுற்றிப் பதினாயிரம் ஏக்கர் நிலம் வாங்கி மேய்ச்சல் நிலமாக மாற்றுங்கள். ரயில் மட்டும் இல்லை. உலகமே அதிசயிக்கும் பால் பண்ணையும் பால் பொருள் பண்ணையும் நான் இதன் துணைத் திட்டங்களாகச் செய்து காண்பிக்கிறேன். நிறையச் சாணம் தரும் பசுக்கள் நமக்குத் தேவை. எனவே அமெரிக்கா, மத்தியப் பிரதேசம், அர்ஜண்டைனா, ஆஸ்திரேலியா, டென்மார்க் — இந்த நாடுகளிலிருந்து பதினாயிரம் பசுக்கள் நமக்குத் தேவை. அவை இங்கே வந்தால் பத்து ஆண்டுகளில் அவை மூன்று நாலு லட்சமாகி விடும். அப்படிப் பசுக்களை இறக்குமதி செய்ய முடியாவிட்டால், ஐந்து கோடி டன் பசும் சாணமாவது இறக்குமதி செய்து கொடுங்கள். உங்களுக்குக் கோடிப்புண்ணியமுண்டு. இறக்குமதி செய்யச் சொல்லிவிட்டு ஒரு ராத்தல் சாணத்துக்கு ஒன்னே முக்கால் ரூபாய் இரண்டு ரூபாய் என்று சுங்க வரி விதித்துவிடாதீர்கள். எந்த வரியும் இன்றிச் சாணம் இந்த நாட்டுக்கு வந்தால்தான் திட்டம் நிறைவேறும்.''

''அவ்வளவுதானே!''

''அறுநூறு குமாஸ்தாக்களும், அதிகாரிகளும் தேவையில்லை. நூறுபேர் போதும்.''

''ஐந்நூறு குடும்பங்களை வயிற்றில் அடிக்காதீர்கள். நீங்கள் விஞ்ஞானி. கொஞ்சம் கருணையும் காட்டுங்கள். கோமாதாவிடம் உள்ள கருணையை இந்த மனிதப் பஞ்சைகளிடமும் காட்டுங்கள்.''

''நீங்களே சொல்லும்போது நான் என்ன சொல்ல?''

''நான் உங்கள் யோசனைகளை மேலே அனுப்புகிறேன். ஈச்வர யத்தனத்தில் எல்லாம் சரியாக நடக்கட்டும்.''

''தொழிற்சாலை வெற்றிகரமாக எழுந்து, முதல் பசுஞ்சாண ரயில் தயாரானதும் அதை பிரம்மஞானானந்தர் கையால் வெள்ளோட்டம் விடச் செய்ய வேண்டும்.''

''நீங்கள் ஏன் மதத்தைப் புகவிடுகிறீர்கள் இதில்? நாலு பேர் அந்தமாதிரி எதையாவது உளப்பி விடுவார்கள். செய்ததை எல்லாம் செய்துவிட்டு, இந்த மாதிரி ஒரு அபிப்பிராயத்துக்கு இடம் கொடுப்பானேன்?''

''நீங்கள் சொல்வது புரியவில்லை எனக்கு. இருந்தாலும் காரியம் எப்படியாவது நிறைவேறினால் சரி என்ற எண்ணத்துடன் நான் விட்டுக் கொடுக்கிறேன்.''

''வணக்கம், டாக்டர் கோஸ்வாமி!''

''வணக்கம்... ஒரே ஒரு விஷயம்: விடை பெறுவதற்கு முன்னால் சொல்லி விடுகிறேன். ஒரு கடுமையான தேச பக்தி உணர்வால்



ஓ ஹென்றி என்ற பிரபல அமெரிக்கச் சிறுகதை எழுத்தாளரிடம் யாரோ, நல்ல சிறுகதைகள் எழுதுவதற்கு ஏதாவது விதிமுறைகள் உண்டா என்று கேட்டார். அதற்கு ஓ ஹென்றி, ''ஓ! உண்டே! இரண்டு விதிகள் இருக்கின்றன!'' என்றார்.

''அவை என்ன?'' என்று கேட்டார் அவர்.

''முதல் விதி: நல்ல சிறுகதைகளை எழுத வேண்டும். இரண்டாவது விதி: மேலே குறிப்பிட்டதைத் தவிர வேறு விதியே கிடையாது.''

தான் நான் இங்கேயே வேலை செய்கிறேன். அயல் நாடுகளில் உள்ள பல விஞ்ஞானிகளும் தொழிலதிபர்களும் இந்தத் திட்டத்தில் ஊக்கமாயிருக்கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேற இந்தத் தேசத்தில் எனக்கு ஊக்கமும், உதவியும் கிடைக்காவிட்டால் அந்த நாடுகள் என்னை அங்கு வரவழைத்து வேண்டிய வசதிகளைச் செய்து தரக் காத்திருக்கின்றன. ஆனால் கோடிக் கணக்கில் கொடுத்தாலும் சரி, இரட்டை நோபல் பரிசு வருவதாக இருந்தாலும் சரி, நான் அப்படியெல்லாம் செய்ய மாட்டேன். இந்தத் தேசத்தில் இது நிறைவேறாவிட்டால், இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இந்தத் தேசத்துப் பெரியவர்களுக்கு நல்ல புத்தி கொடு என்று பிரார்த்தனை செய்து, இங்கேயே செத்தாலும் சாவேனே தவிர, அந்நியனுக்கு இந்த ரகசியத்தை விற்க மாட்டேன். அது விஞ்ஞான உணர்வுக்குப் புறம்பான மனப்பான்மை. உண்மைக்கு இந்தத் தேசம் அந்தத் தேசம் என்று எல்லைகள் கிடையாது. ஆனாலும் தாய்ப் பாசம் என்னை விடவில்லை. என்னைப் பெற்று வளர்த்த புண்ணிய நாடாயிற்றே. வேதங்களும் ரிஷிகளும் தோன்றிய புனித பூமியாயிற்றே!''

''உங்கள் தேசபக்தி என்னைப் பரவசமாக்குகிறது. விஞ்ஞானிக்கு இருதயம் இராது என்பார்கள். நீங்கள் இருதயத்தாலே செய்த விஞ்ஞானி என்று தோன்றுகிறது.''

''உங்கள் கண்ணைத் துடைத்துக் கொள்ளுங்கள். யாராவது பார்த்தால் நடுநிலை பிசகி, என் வலையில் விழுந்து விட்டதாக உங்களைக் குற்றம் சாட்டுவார்கள். உலகம் பொல்லாதது. அதனால்தான் ''யதாஸ்—த்ரீணாம் ததா வாசா ஸாதுத்வே துர்ஜனோ ஜனஹ'' என்று பவபூதி கதறிவிட்டுப் போனான்.....நான் வருகிறேன்.''

''வணக்கம், டாக்டர் கோஸ்வாமி!''



ஜுலை 31 முதல்
சென்னை சாந்தி
கிரௌன் - புவனேசுவரி
மற்றும் தமிழ்நாடெங்கும்
சிவாஜி கணேசன் அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
திருவிளையாடல்
ஈஸ்ட்மென் கலர்
பாடல்கள் - கவிஞர் கண்ணதாசன் - இசை - K.V. மகாதேவன் - ஒளிப்பதிவு - பிரசாத்
ப்ராஸஸிங் - ஜெமினி ஸ்டுடியோஸ் கலர் லேபரட்டரி
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் - A.P. நாகராஜன்
உலக உரிமையாளர் - சென்ட்ரல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், திருச்சி-8.

SANTHI

கொலை! கொலை!! கொலை!!!



மாயாவி



இப்பொழுது அகில இந்திய ரேடியோவில் நாடகத் துறையில் பணியாற்றும் மாயாவி என்னும் புனைபெயரில் ஒளிந்து கொண்டிருக்கும் திரு என். கே. ராமன் கதை புனைவதிலும் மாயாவி தான்.

திருப்பக் கதை

"....ஏன் நீங்கள் சாருமதியைக் கொன்றீர்கள் என்று மண்டையை உடைத்துக்கொண்டு ஆலோசித்துப் பார்த்தேன். என்னால் ஒரே ஒரு காரணம்தான் காண முடிந்தது. அதாவது, உங்கள் கையில் பேனா இருந்ததால் அவளைக் கொன்று தீர்த்துவிட்டீர்கள்! நண்பரே! அப்பொழுது நான் ஆண்டவனிடம் என்ன வேண்டிக் கொண்டேன் தெரியுமா? 'இறைவா! இந்த மனிதர் கையில் தப்பித் தவறிக்கூடத் துப்பாக்கியோ, கத்தியோ சிக்கும்படி செய்துவிடாதே. சிக்கி விட்டால் இவர், சம்ஹாரக் கடவுளாகிய உனக்கு வேலையே இல்லாமற் செய்து விடுவார்!'..."

தமிழ்ப் பத்திரிகையொன்றில் அப்பொழுது நான் எழுதி முடித்திருந்த ஒரு புதினத்தின் இறுதி அத்தியாயத்தைப் படித்து முடித்துவிட்டு, ரசிகர் ஒருவர் எனக்கு எழுதியிருந்த கடிதத்தின் ஒரு பகுதியே மேலே சொன்னது. அது என்னவோ, பெரும்பாலான வாசக அன்பர்களுக்கு எந்தக் கதையில் எந்தப் பாத்திரத்தைக் கதாசிரியன் சாகடித்தாலும் பிடிப்பதில்லை. அந்த ஆசிரியனுக்குக் கூசாமல் 'கொலைகாரன்' என்ற பட்டத்தை அவர்கள் கட்டி விடுகிறார்கள்!

அந்தப் பாத்திரத்தை அவ்வாசிரியன் சாகடித்திரா விட்டால், கதையின் போக்கோ கருத்தோ எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்காமல் இருப்பதே இத்தகைய குற்றச்சாட்டுக்குக் காரணம்.

ஆனால் அவர்களுக்காகக் கதாசிரியன் பாத்திரங்களைத் தேவைப்படும்போது கொல்லாமல் விட்டுவிட முடிவதில்லையே! அந்தப் பாத்திரங்களே அவன் மனக் கண் முன் தோன்றி 'எனக்குக் கயிறு, கடல், கத்தி, விஷம், இப்படி ஏதாவது ஒன்றன் மூலம் முடிவைத் தந்துவிடு' என்று கதறும்போது அவன் வாளாவிருக்க முடிவதில்லையே!

இதோ ஒரு கதை. இதில் கதாநாயகியைச் சாகடித்திருக்கிறேன். கதையைப் படித்து முடித்த பிறகு அவளை நான் கொன்றது நியாயமா, அநியாயமா என்பதை நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

நம் கதாநாயகியின் பெயர் காந்தம். காந்தத்தின் இயல்பு இரும்பைக் கவர்வதுதானே? அவளைக் கொல்லக் கூடாது என்பதற்காகவே அவளுக்குக் காந்தம் என்ற பெயரையும், அப்பெயருக்கேற்ப மனிதரைக் கவரும் தன்மையையும் கொடுத்து இரண்டு தடவைகள் அவள் சாவை நோக்கி ஓடியபோது உயிர் கொடுத்தேன். ஆனால் மூன்றும் தடவை? என்னால்கூடத் தடுக்க முடியாத ஓர் இக்கட்டை உண்டு பண்ணிக் கொண்டு சாவை நோக்கி விரைந்து விட்டாள் அவள். அதன் பிறகு நான் என்ன செய்ய முடியும்?

அவளுடைய முதலாவது சாகும் கட்டம், அவள் ஆறு மாதத்துக் குழந்தையாக இருக்கும்போது வந்தது. காந்தத்தின் அப்பா அவ்வூரில் ஓர் ஏழைக் குடியானவர். அவருடைய தனிக் குழந்தையாகப் பிறந்தாள் காந்தம். ஏழை என்றாலும், அவர்களுக்கும் பகைவர்கள் இருக்கத்தானே இருக்கிறார்கள்? அவ்வூரில் காந்தத்தின் அப்பா மீது ஜென்மப் பகை கொண்ட வேறொரு குடியானவர் இருந்தார். தம் பகைவனுக்கு அழகு பிம்பமாக ஒரு குழந்தை பிறந்தது அவ





ருக்குப் பிடிக்கவில்லை. அவ்வூரில் பிள்ளை பிடிக்கும் தொம்பர் கூட்டம் ஒன்று வந்து தங்கியிருந்தது. அக்கூட்டத்தின் தலைவனைப் பிடித்துக் கையில் கொஞ்சம் பணம் கொடுத்துக் காந்தத்தைத் தூக்கிச் சென்று கொன்றுவிட ஏற்பாடு செய்தார் இந்த ஆள்.

பணம் பெற்றுக்கொண்ட தொம்பர் தலைவன் வாக்களித்தபடி காந்தத்தைத் தூக்கிச் சென்றான். அருகில் உள்ள ஒரு தோப்பில் ஒரு மரக் கிளையில் ஏணை கட்டி மகளைக் கிடத்திவிட்டு வயலில் வேலை செய்து கொண்டிருந்தனர் காந்தத்தின் பெற்றோர். தொம்பர் தலைவன் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு காந்தத்தைக் கவர்ந்து சென்று விட்டான். ஆனால்...?

பச்சைக் குழந்தையானாலும் காந்தத்தின் அழகு அவனைக் கவர்ந்துவிட்டது. 'இவளைக் கொல்வதை விட வளர்த்து, ஆட்டம் கற்றுக் கொடுத்தால் இவளுக்கு இருக்கும் அழகுக்கு நாள் ஒன்றுக்கு நாலைந்து ரூபாய் சம்பாதித்து வருவாளே!' என்று தோன்றியது அவனுக்கு.

காந்தம் இப்பொழுது நாடோடித் தொம்பர் தலைவன் என்ற அந்த இரும்பிடம் ஒட்டிக் கொண்டாள். அவன் அவளை மகளென அன்பு செலுத்தி வளர்த்தான். ஆடக் கற்றுக் கொடுத்தான்; பாடக் கற்றுக் கொடுத்தான். ஆனால் தன் எழில் வதனத்தைக் காட்டி ஆடிப் பாடிப் பணம் கொண்டு வரும் பருவத்தை அடைவதற்கு முன், காந்தம் மற்றொருவரைக் கவர்ந்து விட்டாள்.

அவர் ஒரு போலீஸ்காரர். தாரம் இழந்தவர். அம்மாத இறுதியில் வேலையிலிருந்து ஓய்வு பெற வேண்டியவர். ஆனால் ஐம்பத்தெட்டு வயதை நெருங்கிக் கொண்டிருந்தும் அவருக்கு மக்கட்பேறு இல்லை. ஆணோ, பெண்ணோ அழகான குழந்தை ஒன்றை வளர்த்து இறுதிக் காலத்தில் தமக்குச் சோறு தண்ணீர் கொடுக்க வாகை செய்துகொள்ள வேண்டும் என்பது அவர் அவா. வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு அம்முயற்சியில் இறங்க வேண்டும் என்று நினைத்திருந்தார்.

அவ்வூரில் பெரிய களவு ஒன்று நடந்துவிட்டது. அப்பொழுது அங்கே வந்து முகாமிட்டிருந்த தொம்பர் கூட்டம் இக்களவுக்குக் காரணமாக இருக்கலாமோ என்பதைத் துப்பறிவதற்காக அப் போலீஸ்காரர் அக்கூட்டம் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றார். களவுக்கான தடயம் ஏதும் அவருக்குஅங்கே கிடைக்கவில்லையாயினும், அழகுச் சிலையாக நின்ற எட்டு வயதுக் காந்தத்தை அவர் கண்கள் கண்டுவிட்டன.

அது தொம்பர் குலக் குழந்தையல்ல என்பது பார்த்த மாத்திரத்திலேயே அவருக்கு விளங்கிவிட்டது. யாரிடமிருந்தோ இக் குழந்தையை இவர்கள் திருடி வந்திருக்க வேண்டும். போலீஸ் ஜபர்தஸ்து வேலை செய்தது. காந்தம் கை மாறினாள். போலீஸ்காரரின் வளர்ப்பு மகளானாள் அவள்.

நாடோடிச் சிறுமியாக வந்த காந்தம் நாகரிக மங்கையாக வளர்ந்தாள். அழகு கொஞ்சியது; அறிவு மிளிர்ந்தது. காலாகாலத்தில் ஒரு கணவனைத் தேடிக் கட்டிக் கொடுத்து, அவனையும் வீட்டோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்பது மாஜி போலீஸ்காரரின் எண்ணம். ஆனால் எண்ணத்தைச் செயலாக்க முயன்றபோதுதான் அதிலுள்ள சிக்கல் புலனாயிற்று அவருக்கு. ஆம், அவளை மருமகளாக்கிக் கொள்ளக் கண்ணியமான குடும்பத்தினர் எவரும் முன்வரவில்லை. ''என்னதான் இன்னிக்கு அவள் ஒங்க மகளாக இருந்தாலும், குறவங்ககிட்ட இருந்து நீங்க கொண்டுவந்த பொண்ணு தானே ஐயா!'' என்றனர் அவர்கள்.

போலீஸ்காரர் திணறினார்; திண்டாடினார். கடைசியில் காந்தத்துக்கு ஒரு கணவனைத் தேடாமலே அவர் காலனின் அழைப்பை ஏற்றுப் போய்ச் சேர்ந்தார்.

தனியளாகிவிட்ட காந்தம் இப்போது காமுகர்களின் கண்களுக்கு விருந்தானாள். நெருப்புத்தான் என்றபோதிலும், அதை அணைக்கிற விதத்தில் அணைத்தால் அணைந்துவிடுகிறது

அல்லவா? துணிந்த கட்டை ஒருவ னிடம் இசைகேடாகச் சிக்கிக் கொண்டு கன்னித் தன்மையை இழந்தாள் காந்தம்.

கறைப்பட்ட உடலோடு வாழ விரும்பவில்லை அவள். சாகத் துணிந்து ஊர் எல்லையிலுள்ள கம்மாயை நோக்கி ஒரு நாள் இரவு முன்னேரத்தில் நடந்தாள்.



கடலெனப் பரந்திருந்த கம்மாய் நீரிலே அவள் பாய முயன்றபோது இரண்டு இரும்புக் கரங்கள் அவ ளைப் பிடித்துக் கொண்டன.

மங்கலாக வீசிய நிலவொளி யில் தன்னைத் தடுத்து நிறுத்திய ஆளை அவள் பார்த்தாள். ஐம்பது வயதைத் தாண்டிய முதியவர் அவர்.

''ஏன் அம்மா இந்த முடிவு?'' என்று கேட்ட அவர் குரலில் அன்பு ததும்பி வழிந்ததைக் காந் தத்தால் உணர முடிந்தது. ஆயி னும் தன்னைச் சாவை நோக்கி விரட்டிய அவமானத்தை அவள் எப்படி ஓர் ஆடவனிடம் வெளி யிடுவாள்?

''என்னை ஒன்றும் கேட்காதீர்கள்; நான் சாகவேண் டியவள். சாக விடுங்கள்'' என்று அழுதாள் அவள்.

''எல்லோருமே ஒரு நாள் சாக வேண்டியவர்கள் தான் அம்மா. ஆனால் சாவு நம்மை நாடி வரவேண் டுமேயன்றி, நாம் சாவை நாடிப் போகக் கூடாது. அப்படிப் போகிறவர்களைத் தடை செய்யாதவன் மனிதப் பிறவி அல்ல. அப்படியிருக்கும்போது நான் எப்படி அம்மா உன்னைச் சாக விட முடியும்? உன் பெற் றோர், உற்றோர் யார் என்று சொல்; அவர்களிடம்



நான் பெற்ற குழந்தை அழகில்லை; கோரம் என்று எந்தத் தாயும் தந்தையும் ஒப்புக்கொள்வதில்லை. இப்படித் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளும் பண்பு, கற்பனை பெற்ற குழந்தைகள் விஷயத்தில் மிக அதிகம்!

-ஸெர்வாண்டிஸ்

புதிய விஷயங்களை ஏற்கனவே வாசகர்கள் அறிந்தவை தான் என்று நினைக்கும்வகையில் எழுத வேண்டும். அதே சமயம் பழைய விஷயங்களை ஏதோ புதிதாகக் கண்டுபிடித்துச் சொல்வதுபோல் எழுத வேண்டும். இதுதான் எழுத்துத் தொழிலில் உள்ள கலையான அம்சம். -ஜான்ஸன்



கொண்டு விட்டு விடுகிறேன். பிறகு உன் பாடு, அவர்கள் பாடு.''

''எனக்கு யாருமே இல்லே; நான் அநாதை'' என்று கதறினாள் காந்தம்.

''சரி, அப்படியானால் என்னை உன் தந்தையாக மதித்து என் ஊருக்கு வா. உன்னைப் போலவே அநாதையாக நிற்கும் எனக்கு ஒரு மகள் கிடைத்தாளென்ற மகிழ்ச்சியோடு உன்னைக் காப்பாற்றுகிறேன்.''

''இல்லே; நான் யாருடனும் வரமாட்டேன். நான் சாகத்தான் போகிறேன்.'' அவள் அவர் பிடியிலிருந்து திமிர முயன்றாள்.

''அதை ஒருபோதும் அநுமதிக்க மாட்டேன்.'' அவர் பிடி இறுகியது. ''ஊருக்குள்ளே வா. ஊராரிடம் உன்னை ஒப்படைத்து விடுகிறேன். பிறகு உன் விருப்பம் போல் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்.''

'ஊருக்குத் திரும்புவதா?' காந்தத்தின் மானம் பறிபோன செய்தி ஊரெல்லாம் சிரிப்பாய்ச் சிரித்ததால்தானே அவள் சாவதற்கு வந்தாள்? ''ஐயையோ! மாட்டேன். முடியாது'' என்று அலறினாள் அவள்.

''சரி, அப்படியானால் என் ஊருக்கு வா; என் மகளாக வாழ்.''

அந்தப் பெரியவரின் அன்பு கனிந்த சொற்கள் காந்தத்தின் வெறியைப் போக்கி விட்டன. அவள் அவருடன் புறப்பட்டு விட்டாள்.

இரண்டாவது தடவையும் சாவு அவளை அணுக முடியாமல் தோற்று ஓடியது.

பெரியவரின் பெயர் கறுப்பசாமி. கடல் கடந்து சென்று ஏராளமாகப் பொருளீட்டி வந்து தம் சொந்த ஊரில் நிலம் — நீச்சு வாங்கிக் கொண்டு செல்வச் செழிப்பில் வாழ்ந்து வந்தார். காந்தத்தைத் தம் மகளாகவே கருதி அன்பைச் சொரிந்தார்.

ஆனால் ஊர் வாய் பொல்லாததாயிற்றே! அது ஐம்பது வயதுக்கு மேற்பட்ட கறுப்பசாமிக்கும் பதினாறு வயதுகூட நிரம்பாத காந்தத்துக்கும் முடிச்சிட்டுப் பேசியது.

அது கட்டுப்பாடு நிரம்பிய கிராமம். எனவே ஊர்ப் பஞ்சாயத்தார் ஒரு நாள் கூடிக் கறுப்பசாமியை அழைத்து வரச்செய்து, ''இது நல்லா இல்லீங்க; ஒங்களுக்கும் அந்தப் பொண்ணுக்கும் முடிச்சுப் போடறாங்க. பேசாம ஒரு தாலியைக் கட்டி வீட்டோட வச்சுக்கிடுங்க. அப்படிச் செய்யப் பிரியமில்லேன்னா அந்தப் பொண்ணை வேற எதுச்சும் ஊரிலே கொண்டு வைச்சுக்கிடுங்க. நம்ம ஊரில இந்த அட்டூழியம் நடக்க விட மாட்டோம்'' என்றனர்.

''இது அநியாயம்! அக்கிரமம்! அபாண்டம்!'' என்று கத்தினார் கறுப்பசாமி.

''நீங்க செஞ்சுகிட்டு இருக்கிறதுதாங்க அநியாயம், அக்கிரமம் எல்லாம்.''

''உங்க குற்றச்சாட்டுக்கு அத்தாட்சி?''

''அந்தப் பொண்ணு இங்கே வந்த நாளிலிருந்து முழுகாம இருக்கிறதுதான்!''

கறுப்பசாமிக்குக் காந்தம் அன்று கம்மாயில் விழப்போனதன் காரணம் விளங்கி விட்டது. ஆனால் பழி இப்பொழுது அவர் மீதே அல்லவா விழுந்துவிட்டது? காந்தமே தவறிவிட்டாளோ? அல்லது வேறு யாராவது அவளைக் கெடுத்துவிட்டானோ? அந்த நபர் யாரென்று காந்தம் வெளியிட்டாலும் கூட அவன் ஒத்துக்கொள்ளுவானா? பின் எப்படித் தங்கள் தூய்மையை இவர்களுக்கு நிரூபிப்பது? அவர் மூளை குழம்பியது. ''சரி ஐயா; நாங்கள் இந்த ஊரில் இருக்கக் கூடாது என்பதுதானே உங்கள் தீர்ப்பு? போய் விடுகிறோம் ஐயா'' என்று கூறிவிட்டு வீடு திரும்பினார் அவர்.

கறுப்பசாமி வீடு திரும்புவதற்குள் காந்தத்துக்கு விஷயம் எட்டிவிட்டது. அவள் புறப்படத் தயாராயிருந்தாள். ''இதனால் தான் நான் சாகவேண்டியவள் என்று அன்று சொன்னேன். இப்பொழுது என்னைச் சாக விடுங்கள்'' என்று கூறிப் புறப்பட்டாள் அவள்.

''இல்லே மகளே! நீ இல்லாத உலகம் இனி எனக்கு இல்லே. நாம் இருவருமே வேறு எங்காவது போய் வாழலாம்!''

''என்ன? எனக்காக நீங்கள் உங்கள் சொந்த ஊரையும், வீடு வாசல், நில புலன்களையும் விட்டு விட்டு வருவதா? வந்தாலும் கூட நாம் போகிற ஊரிலும் இத்தகைய பழி ஏற்படாது என்பது என்ன நிச்சயம்?''

''ஊர் வாய்க்கு உறையிட முடியாது, காந்தம்!''

''ஆனால் நாம் எங்கே போனாலும் ஊரார் நடுவில்தானே வாழ்ந்தாக வேண்டும்?''

''கானகத்தில் வாழ்வோம்; காய் கனிகளைப் புசித்துக் கொண்டிருப்போம். என்ன கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தாலும் அனுபவிப்பேன். ஆனால் காப்பாற்றுகிறேன் என்று உறுதி அளித்து அழைத்து வந்த உன்னைக் கைவிட மாட்டேன். இனி நீ என்னைப் பிரிந்தால் என் உயிர் உடனே பிரியும். இது உறுதி.''

தன் பொருட்டு இந்த உத்தமர் சாவதா? கூடாது; கூடாது. இருவரும் வாழவேண்டும். ஆனால் வாழ வழி? கானக வாழ்வெல்லாம் சொல்லளவில்தான் சாத்தியப்படும். தவிர,

ரஸிகன்

கதைக் கலைக்கு வேண்டிய முதற் தகுதி அதைப் படைப்பவன் சிறந்த ரசிகனாக இருக்க வேண்டும்.

மரங்களடர்ந்த சாலை வழியே இருவர் நடக்கும்போது ஒருவர் மட்டிலும் நிழலின் அருமையை உணர்ந்து நடப்பார்; மற்றொருவர் உணர மாட்டார். ஒருவர் மட்டிலும் குயிலின் இசைக்குத் தம் செவிகளைத் திறந்து விட்டிருப்பார்; மலரின் மணத்தை நுகர்ந்துகொண்டு செல்வார்; விழிகளால் இயற்கையின் அற்புதங்களைக் கண்டு மகிழ்வார்; தெருவோரம் ஏதும் சண்டை நடந்தாலும் தாமதித்து நிற்பார். இவரே ரசிகர். மற்றொருவர் ரசிகத்தன்மை மரத்துப் போனவர்.

ரசிகத் தன்மைக்கு அடுத்தாற்போல் கற்பனை, எழுதுவோரது தனித்தன்மையின் அணிவேர் ஆகும்.

உள்ளதை உள்ளபடி சொல்வதற்குக் கலைஞன் தேவையில்லை. கற்பனை ஆற்றல் என்பது கற்பனை வறட்சி கொண்ட ஒருவர் கூறுவது போல் பொய்யுரையல்ல; புனைந்துரையும் ஆற்றல் அது.

பொய்யாமொழி எனப் பெயர் பெற்ற நமது ஆதிக் கலைஞர் வள்ளுவர் கூற்று ஒன்றை எடுத்துக்காட்டாக வைத்துக்கொள்வோம்:

அணங்கு கொல்? ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர் கொல்? மாலும் என் நெஞ்சு!

பெண்ணைக்கூட வள்ளுவர் கூறியதுபோல் அல்லாமல், இவளுடைய எடை எவ்வளவு பவுண்டு, அதில் இத்தனை சதவிகிதம் சதை, எலும்பு, கூந்தல் என்று பகுத்து நிறுத்துக் கூறலாம். மனிதன் வாழ்க்கையைப் பிறகு அனுபவிக்கத் துணிவானா என்பதையும் சிந்திக்க வேண்டும். - அகிலன்



அப்பாடி ஒரு காட்டுமிராண்டி வாழ்வை மேற்கொள்ளும்படி இவர் என்ன தவறு செய்துவிட்டார்? தவறெல்லாம் தன்மீதுதான். ஆதலால் அதற்குப் பரிகாரமும் தானே செய்தாக வேண்டும்.

காந்தம் ஆலோசித்தாள். ஒரு வழி தென்பட்டுவிட்டது அவளுக்கு. ''ஊர் வாய்க்கு உறைபோட்டு விடுவோம், அப்பா!'' என்றாள் அவள்.

''நீ என்னம்மா சொல்கிறாய்?''

''பொய்யை உண்மையாக்கி விடுவோம். நீங்கள் எனக்குத் தாலி கட்டிவிடுங்கள்!''

''காந்தம்!'' கறுப்பசாமி அலறினார்.

''பயப்படாதீர்கள். கறைபட்ட இவ்வுடலைப் புனிதமான உங்களுக்கு அர்ப்பணிக்கும் நோக்கத்தோடு நான் சொல்லவில்லை. ஊர் வாயை மூடவே இந்தத் தாலி!''

''ஐயோ! இது... இது...'' கறுப்பசாமியால் பேச முடியவில்லை.

''இது ஒன்றுதான் நாம் இருவரும் உயிர் வாழ்வதற்கான ஒரே வழி.''

கறுப்பசாமியால் மறுத்துரைக்க முடியவில்லை. ''பெயரளவில்தானே தாலி? அதிலும் நீ அந்நியமான பெண்தானே? ஆபத்துக்குப் பாவமில்லை. இறைவன் திருவுளம் அதுவானால் அப்படியே நடக்கட்டும்'' என்று கூறிவிட்டுப் பஞ்சாயத்தாரிடம் தங்கள் புதிய முடிவை அறிவிக்கச் சென்றார் அவர்.

திருமணத்துக்கு நாள் குறித்தாகிவிட்டது. நாளை மறுநாள் காந்தம் ஊரறியக் கறுப்பசாமியின் மனைவியாகி விடுவாள். அன்று காலையில் குளிப்பதற்காக ஆற்றுக்குச் சென்றாள் அவள். ஆற்றோரத்துத் தோப்பில் தொம்பர்களின் கூட்டம் ஒன்று தங்கியிருந்தது. தோப்பின் வழியே ஆற்றை நோக்கி நடந்துகொண்டிருந்த காந்தத்தை ஒரு இளக் குரல் ''அம்மா! அம்மா!'' என்று விளித்தது. அவள் திரும்பிப் பார்த்தாள். ஆண்டுகள் எட்டு ஆகிவிட்ட போதிலும் தன்னைக் கூப்பிட்ட ஆளை அவளால் உடனே அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அவளை எட்டு வயது வரையில் வளர்த்த தொம்பர் தலைவன் அவன்.

எட்டு வயது வரையில் ''அப்பா!'' என்று அழைத்து வந்த அவனிடம் காந்தத்தால் எதையும் ஒளிக்க முடியவில்லை. தன் அவலக் கதையைக் கூறி அழுதாள்.

''அது யார் அம்மா அந்த மவராசன், ஒனக்காக இவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்ய முன்வந்திருக்கிறவரு?'' என்று கேட்டான் தொம்பர் தலைவன்.

''அவர் பெயர் கறுப்பசாமி.''

''எந்தத் தெரு?''

''வடக்குத் தெரு.''

''யாரு? ரங்கூனுக்குப் போயிட்டு வந்த கறுப்பசாமி ஐயாவா?''

''ஆமாம். அவரை உங்களுக்குத் தெரியுமா?''

அவன் அவள் கேள்விக்குப் பதில் உரைக்கவில்லை. மாறாக, ''ஐயோ! இந்தக் கலியாணம் நடக்கக் கூடாது'' என்று அலறினான்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''அவர்தான் ஒன்னைப் பெத்த அப்பா, அம்மா! அந்த நாளில் அவருக்கும் இந்த ஊரில் ரங்கசாமின்னு ஒருத்தர் இருந்தாரு; அவருக்கும் பகை. என் கையில் பணம் கொடுத்துக் கைக்குழந்தையான ஒன்னைத் தூக்கிட்டுப் போயி கொன்னுடச் சொன்னாரு ரங்கசாமி. தூக்கிட்டுப் போனேன். ஆனா கொல்ல மனசு வரலே. நீ காணாமப் போயிட்ட அதிர்ச்சியிலே ஒங்க அம்மா செத்துட்டாங்க. கறுப்பசாமி ஐயா மனசு முறிஞ்சு, ரங்கோனுக்குப் போயிட்டாரு. இப்போ.....''

அவன் முடிக்கவில்லை. அதற்குள் காந்தம் ஆற்றை நோக்கி ஓடினாள். ஆற்றில் புது வெள்ளம் பொங்கிப் போய்க் கொண்டிருந்தது. ''என்னை ஏற்றுக்கொள்'' என்று அதில் பாய்ந்து விட்டாள்.

இந்தத் தடவை அவளை யாராலும் காப்பாற்ற முடியவில்லை—என் பேனாவால்கூட!

யக்ஷ காவ்யம்

பரசுராம்

காளிதாசரின் மேகதூதத்தில் வரும் நிகழ்ச்சிகள் உங்களுக்கு ஒருவேளை நினைவிருக்கலாம். மறந்திருந்தால் சுருக்கமாகச் சொல்கிறேன், கேட்டுக் கொள்ளுங்கள். குபேரனின் பணியாள் ஒரு யக்ஷன். தன் வேலையில் அவன் கவனக் குறைவாயிருக்கவே, எசமானர் சாபம் கொடுத்து விட்டார்; ஓர் ஆண்டுக் காலத்துக்கு நாடு கடத்தி விட்டார். அவன் ராமகிரி என்னும் இடத்துக்குச் சென்று ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்து வரலானான். ஆடி மாதம் முதல் நாளன்று மலைமீது மேகங்கள் குழுமியிருப்பதைக் கண்டான் அந்த யக்ஷன். யானைகள் கேளிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகப் பட்டது. அந்தக் காட்சியைக் காணும் பொழுது, மலர்ந்த குறிஞ்சி மலர்களைக் கையில் ஏந்திப் பிரிவுத் துயரால் வாடும் அந்த யக்ஷன் மேகங்களுக்கு அர்க்கியம் கொடுத்தான். அதைத் தொடர்ந்து மந்தாக்கிராந்தா சந்தத்தில் ஒரு நீண்ட சொற்பொழிவையே நிகழ்த்தி விட்டான்.

அதன் சாரம் இதுதான்:

''முகில் சகோதரா! எனக்காக நீ ஒரு முறை அளகாபுரிக்குப் போக வேண்டும். மெதுவாக உடம்பை வருத்திக் கொள்ளாமல் போ. வழியில் உன் விருப்பப்படி என்ன களியாட்டங்கள் வேண்டுமானாலும் புரிந்து கொண்டு போ. இதனால் தாமதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. அளகாபுரியில் உன் அண்ணி என் ஆருயிர்க் காதலி என் பிரிவால் வாடி வதங்கியவண்ணம் இருக்கிறாள். நான் கூறும் இச்செய்தியைக் கூறி அவளுக்கு ஆறுதல் அளிப்பாயாக. 'நான் உடல் நலத்தோடு இருக்கிறேன் என்றும் அவளுக்காகவே ஏங்கித் தவம் இருக்கிறேன் என்றும் கூறு. ஸ்ரீமந் நாராயணன் அரவப் படுக்கையிலிருந்து எழுந்ததும் — அதாவது கார்த்திகை மாத இறுதியில் என் சாபம் தீர்ந்து விடும். அதற்குப் பின் நாம் மீண்டும் சந்தித்து இன்புறுவோம்' என்று நான் கூறியதாகத் தானே சொல்லு.''

காளிதாசர் தமது யக்ஷனின் பெயரைக் குறிப்பிடவில்லை. சாபம் முடிந்த ஓர் ஆண்டுக்கெல்லாம் அவன் சுகமாக வீடு திரும்பினானா இல்லையா என்பதையும் எழுதவில்லை.

மகாபாரதத்தில் உத்தியோக பர்வத்தில் காட்டில் வாழும் ஒரு யக்ஷனைப் பற்றிய குறிப்பொன்று காணக் கிடக்கிறது. அவன் பெயர் ஸ்தூணாகர்ணன். அவனும் மேகதூதத்தில் வரும் இந்த யக்ஷனும் ஒருவனே என்பதில் சந்தேகம் இல்லை. காளிதாசர் தமது காவியத்தை முழுதும் முடிக்கவில்லை. மகாபாரதத்திலும் யக்ஷனின் உண்மை வரலாற்றைக் காணோம்.

காளிதாசரும் வியாசரும் எதைச் சொல்லாமல் விட்டு விட்டார்களோ, அந்த விசித்திர இரகசியத்தை இன்று நான் அம்பலப் படுத்துகிறேன்.

யக்ஷனின் மனைவியை யக்ஷிணி என்றே கூறுவேன். ஏனென்றால், வரலாற்றிலே அவள் பெயரும் தரப்படவில்லை. கணவனின் பிரிவாற்றாமையினால் உள்ளம் நைந்து உடல் நொந்து யக்ஷிணி தன் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தாள். ஒரு வேதி சமைத்துத் தினமும் அதன் மீது அவள் ஒரு மலரை வைத்து வந்தாள். இடையிடையே எண்ணியும் பார்த்தாள். முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் ஆக இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன என்று! கடைசியில் ஒவ்வொரு நாளாக ஓராண்டு ஓடி முடிந்தது. கார்த்திகை மாதமும் முடிந்தது. ஆனால் யக்ஷன் வரவில்லை. யக்ஷிணி ஆவலோடு இன்னும் சில நாட்கள் அவன் வரவை எதிர்நோக்கினாள். அதற்குப் பின்னரும் அவளால் தனது கணவனின் பிரிவுத் துயரைத் தாங்க முடியவில்லை. எனவே, குபேரனின் காலடிகளில் போய் அவள் விழுந்தாள்.

''யார் அம்மா நீ?'' என்று கேட்டான் குபேரன். ''பார்ப்பதற்கு அழகாயிருக்கிறாய்! ஆனால் தலைமயிர் எண்ணெய் காணாது செம்பட்டையாக வறண்டு கிடக்கிறதே! ஆடை அழுக்கேறிக் கிடக்கிறதே, ஏன்?''

யக்ஷிணி அழுது விட்டாள். ''மகாராஜ்! ஓராண்டுக் காலத்துக்கு உங்கள் பணியாள் ஒருவரை நாடு கடத்தினீர்களே, அவருடைய மனைவி நான். ஓராண்டு முடிந்து இன்றோடு பத்து நாட்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்னும் என் கணவர் வீடு திரும்பக் காணோம்!'' என்று புலம்பினாள்.



கல்கத்தா மருத்துக்கல்லூரி ஒன்றில் பணி புரிந்த ராஜசேகரபஸு, 'பரசுராம்' என்ற பெயரில் இணையற்ற நகைச் சுவைக் கதைகளை எழுதியுள்ளார். இவரது கதைத் தொகுதிகளுக்கு சாகித்திய அகாதமி பரிசு வழங்கியுள்ளது. சமூகத்தில் புரையோடியிருக்கும் குற்றங்குறைகளைக் கேலியாக எடுத்துக் காட்டும் போக்குவதில் பரசுராமுக்கு இணை பரசுராம்தான் என்று புகழ் பெற்றவர்.





'' அதற்காகப் பதற்றப்படுவானேன்? தைரியமாயிரு. உன் கணவன் கட்டாயம் திரும்பி விடுவான். அவன் எங்கேயாவது தங்கியிருக்கலாம். இளைஞன் அவன். இங்கு சப்பட்டை மூக்குக்காரிகளான யக்ஷிணிகளை யும் கின்னரிகளையும் மட்டும் தானே அவன் கண்டிருக்கிறான்? பூவுலகில் அழகிய மானிடப் பெண் யாரையாவது கண்டு காமுற்று அவளைக் காதலிக்கத் தொடங்கியிருக்கலாம். கவலைப்படாதே! மானிடப் பெண்ணிட மிருந்து மனம் சலித்ததும் அவன் கட்டாயம் திரும்பி வந்து விடுவான்!'' என்றான் குபேரன்.

யக்ஷிணி வேகமாகத் தலையை ஆட்டி, ''இல்லை, அப்படி இருக்க முடியாது. என் கணவர் அத்தகையவர் அல்ல. பிற மாதரை அவர் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். இப் பொழுதுதான் சில நாட்களுக்கு முன் ஒரு கார்முகில் வந்து அவர் கூறிய அன்புச் செய் தியை என்னிடம் கூறிச் சென்றிருக்கிறது. மகாராஜ்! தாங்கள் தயவுசெய்து அவரைத் தேடச் சொல்லுங்கள். அவருக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. சிங்கம் புலி எதுவாவது அவரைத் தனக்கு இரையாக்கிக் கொண்டிருக்கலா மல்லவா?'' என்றாள்.

''எதற்காக நீ இவ்வளவு ஆதுரப்படு கிறாய்? உன் கணவன் திரும்பியே வராவிட் டால்கூட நீ அநாதையாக மாட்டாய். என் அந்தப்புரத்தில் நீ ஆனந்தமாக இருக்கலாம். உனக்கு எவ்வித சுகக் குறைவும் ஏற் படாதபடி நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றான் குபேரன்.

''இப்படி யெல்லாம் சொல்லாதீர்கள், அரசே! நீங்கள் எனக்குத் தந்தைக்குச் சமான மானவர்கள். உங்கள் உத்தரவுப்படிதான் என் கணவர் நாடு கடத்தப்பட்டார். இப் பொழுது அவருடைய தண்டனைக் காலம் முடிந்துவிட்டது. அவரைத் திரும்ப அழைத்து வருவது தங்கள் கடமை. ஏதாவது ஆபத்தில் சிக்கியிருந்தால், அவரைக் காத்தருளுங்கள். இறந்திருந்தால் எனக்கு வந்து செய்தி சொல்லச் சொல்லுங்கள். நான் தீக்குளித்து இறந்து அவரைச் சொர்க்கத்தில் சென்று காண்கிறேன்!'' என்றாள் யக்ஷிணி.

''அப்பப்பா! என் உயிரையே நீ வாங்கி விடுவாய் போலிருக்கிறதே! சரி, போ! இப்பொழுதே நான் உன் கணவனைத் தேடி வரப் புறப்படுகி றேன். ராமகிரியைப் பார்த்து வர வேண்டும் என்று எனக்கும் வெகு நாட்களாக ஆசை. விரும்பினால் நீயும் என்னோடு வரலாம். யார் அங்கே? சீக்கிரம் புஷ்பக விமானத் தைத் தயார் செய்யச் சொல்லு. நீயும் தயாராயிரு, என்னோடு புறப் படு!'' என்று படபடவென்று உத்தர விட்டான் குபேரன்.

ராமகிரி பிராந்தியத்தில் ஒரு சிறு குன்றின் மீது யக்ஷன் தனக்கென்று ஒரு குடிசை வேய்ந்து கொண்டு வாழ்ந்து வந்தான். அங்கு சென்று குபேரன், குடிசை வெகு அழகாகக் கட்டப்பட் டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தான். கதவு, சாளரம் எல்லாம் வெகு நேர்த்தியாக அமைக் கப்பட்டிருந்தன. ஆனால் எல்லாம் மூடியிருந் தன. குபேரனின் உத்தரவின் பேரில் ஒரு பணியாள் கதவைத் தட்டி உரக்கக் குரல் கொடுத்தான்: ''ஏய், ஸ்தாணுகர்ணு! வெளியே வா. மகாராஜாதிராஜ குபேர மன்னர் விஜயம் செய்திருக்கிறார். உன் மனைவி யும் உன்னைக் காண வந்திருக்கிறாள்!''

உள்ளிருந்து ஒன்றும் மறுமொழி வர வில்லை. ''வீட்டில் யாருமே இல்லை போலிருக் கிறது. தீ வைத்து விட்டால் என்ன?'' என்றான் குபேரன்.

''அப்படிச் செய்யச் சொல்லாதீர்கள், அரசே! என் கணவர் இதே வீட்டில்தான் இருக்கிறார். உள்ளே சமையல் செய்யும் வாசனை வருகிறது. அவர்தான் சமைத்துக் கொண்டிருக்கிறார். சந்தேகமில்லை. பாவம், அவருக்கு உதவுவார்தான் யாரும் இல்லை. நானே அவரைக் கூப்பிட்டுப் பார்க்கிறேன். —இந்தாருங்க, நான் கூப்பிடுவது காதில் விழு கிறதா? நான் வந்திருக்கிறேன். மன்னர் வந்திருக்கிறார். தாளித்துக் கொட்டுவதை நிறுத்தி விட்டுச் சற்று வெளியே வாருங்க ளேன்!'' என்றாள் யக்ஷிணி.

ஒரு சன்னல் இலேசாகத் திறந்தது. உள் ளிருந்து பெண் குரலில் பதில் வந்தது: ''அன்பே! நீ வந்திருக்கிறாய். மன்னரும் வந்திருக்கிறாரா? குடி முழுகிவிட்டது. போ! நான் இப்பொழுது அவர் எதிரே எப்படி வருவேன்?''

குபேரன் வியப்போடு, ''யார் நீ? வா, வெளியே! வராவிட்டால் தீ வைத்துவிடு வேன், குடிசைக்கு!'' என்று கூச்சலிட்டான்.

அப்பொழுது கதவைத் திறந்து கொண்டு முகத்திரையோடு ஒரு பெண்ணுருவம் வெளியே வந்தது. குபேரன் கடிந்து கொண்

டான், "உன் வேடிக்கையெல்லாம் அப்புறம் ஆகட்டும். கலே வேஷத்தை!" என்று.

தலை குனிந்து திரை முகத்தை மறைக்க, "அரசே! என் முகத்தை எப்படிக் காட்டுவேன்!" என்று விடையளித்தது அவ்வுருவம்.

"ஏன்? நெருப்பு சுட்டுவிட்டதா என்ன? கவலைப்படாதே! சிவன் ஏறும் எருதின் சாணத்தைப் பற்றாக இட்டால் குணமாகி விடும்!" என்றான் குபேரன்.

சட்டென்று யக்ஷிணி முன்னேறி வெடுக்கென்று அந்தப் பெண் உருவத்தின் முகத்திரையைக் கிழித்தாள். தலையில் அடித்துக் கொண்டு அந்தப் பெண்ணுருவம் புலம்பியது: "ஐயையோ! இதைக் காட்டிலும் நான் இறந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே!"

"நீ யார்? இங்கிருந்த ஸ்தூணாகர்ணன் என்னும் யக்ஷன் என்ன ஆனான்? எங்கே போனான்? நீ அவனுக்கு என்ன வேண்டும்?" என்று கேள்விமேல் கேள்வியாகக் கேட்டான் குபேரன்.

"மகாராஜா! நான்தான் உங்கள் அதிர்ஷ்டங்கெட்ட ஊழியன் ஸ்தூணாகர்ணன். தெய்வ கோபத்தால் எனக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் என் குற்றம் ஒன்றும் இல்லை" என்றவன், "அன்பே! உண்மையில் நாம் அதிர்ஷ்டமற்றவர்கள் தான். சாபம் தீர்ந்த பின்னருங்கூட நாம் ஒன்று சேரும் வழி அடைபட்டு விட்டது, பார்!" என்று அங்கலாய்த்தான்.

"மகாராஜ்! இவர் என் கணவர்தான். ஒன்றுகூடிய இவரது புருவங்களே எடுத்துக் கூறுகின்றன. மூக்குக்கருகில் உள்ள மச்சம் கூட அப்படியே அச்சாக இருக்கிறது. ஐயோ, என் ஆருயிரே! உங்களுக்கு இந்த நிலை ஏற்படக் காரணம் என்ன? எந்தத் தேவதையிடமாவது குறும்பு புரிந்தீர்களா?" என்று கேட்டாள் யக்ஷிணி.

"இல்லை. பிறருக்கு உபகாரம் செய்யப் போய் இந்தச் சிறுமையை ஏற்க நேர்ந்தது. இந்த உலகத்தில் உபகாரம் என்றே ஒன்று கிடையாது போலும்!" என்றான் யக்ஷன்.

"நீங்கள் பெண்ணாக எப்படி ஆனீர்கள், நாதா?" என்று கேட்டாள் யக்ஷிணி.

"இப்படி ஆகிவிடுவது இயல்புதான். புதன் மனைவி இலா, முன்பு ஆடவனாகத்தான் இருந்தாள். சிவ — பார்வதியின் ஏகாந்தமான இடத்துக்குச் சொல்லாமல் கொள்ளாமல் போனதால் பெண்ணாகி விட்டாள். வாலி — சுக்ரீவனுடைய தந்தை ஒரு பொய்கையில் குளித்ததனால் பெண் குரங்காகி விட்டான். அந்த போலத்தான் ஏதாவது நேர்ந்திருக்க வேண்டும். ஸ்தூணாகர்ணா! நீ எப்படிப் பெண்ணானாய்? உன் கதையை விவரமாகச் சொல்லு!" என்றான் குபேரன்.

"மகாராஜா! மூன்று மாதங்கள் இருக்கலாம். உலர்ந்த சுள்ளிகள் பொறுக்கி வருவதற்காக நான் அதோ அந்தப் பக்கத்தில் உள்ள காட்டுக்குப் போயிருந்தேன். ஒரு மரத்தடியில் பெண் ஒருத்தி உட்கார்ந்து கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்ததைக் கண்டேன்!" என்றான் யக்ஷன்.

"அவள் பார்ப்பதற்கு எப்படி இருந்தாள்?" என்று கேட்டாள் யக்ஷிணி. அவள் கவலை அவளுக்கு.

"அழகி என்றுதான் சொல்ல வேண்டும். ஆனாலும் உன் அழகுக்கு உறை போடக் காண மாட்டாள். கரடு முரடான சரீரம். முகத்திலே லாவண்யமும் குறைவு. ஆம், மகாராஜா! அதற்குப் பின் கேளுங்கள்! நான் அந்தப் பெண்மணியிடம், 'அம்மணி! உங்களுக்கு என்ன நேர்ந்து விட்டது? ஏதாவது கஷ்டத்தில் சிக்குண்டிருந்தால் கூறுங்கள். என்னால் முடிந்த வரை அதைப் போக்க முயலுகிறேன்' என்று கூறினேன்.

"அவள் ஓர் அற்புதமான நிகழ்ச்சியைக் கூறினாள்: 'ஐயா! நான் பாஞ்சால நாட்டு மன்னன் துருபதனின் மகள் சிகண்டினி என்பவள். ஆனால் மக்கள் என்னை அரசகுமாரன் சிகண்டி என்ற முறையில்தான் அறிவார்கள். முற்பிறப்பில் நான் காசி மன்னரின் மூத்த மகள் அம்பாவாக இருந்தேன். சுயம்வர மண்டபத்தில் பீஷ்மர் எங்கள் மூன்று சகோதரிகளையும் அபகரித்துக் கொண்டார், தமது ஒன்றுவிட்ட சகோதரனை விசித்திர வீர்யனுடன் மணம் முடித்து வைப்பதற்காக. ஆனால் பின்னால் நான் சால்வராஜனிடம் காதல் கொண்டுள்ளேன் என்பதை அறிந்து அவரிடம் அனுப்பி வைத்தார். 'அரசகுமாரி! நான் உன்னை



ஏந்த முடியாது. ஏனென்றால் பீஷ்மர் உன்னை அபகரித்துக் கொண்டு விட்டார். அவர் ஸ்பரிசம் உன்னைக் கட்டாயம் புளகமுறச் செய்திருக்கும்' என்று கூறி விட்டார் சால்வ மன்னர். அதனால் பகவான் பரசு ராமரைச் சரணடைந்தேன். அவர் பீஷ்மரிடம், 'நீதான் அம்பாவை மணம் புரிந்து கொள்ள வேண்டும்' என்று கூறினார். பீஷ்மர் சம்மதிக்க வில்லை. பரசுராமர் அவரோடு போர் தொடுத்தார். ஆயினும் பலன் ஏதும் ஏற்படவில்லை. பீஷ்மரின் காரணமாகத் தானே என் பெண் பிறவி வீணாயிற்று? அதனால் பீஷ்மருக்கு மரணம் சம்பவிக்க வேண்டும் என்று நான் கடுந்தவம் இயற்றலானேன். என் தவத்தால் மகிழ்ந்து மகா தேவன் எனக்கு வரமருளினார், 'அடுத்த பிறவியில் நீ துருபத மன்னரின் மகளாகப் பிறப்பாய். உரிய காலத்தில் ஆண் உருவம் பெற்று பீஷ்மரை வதம் செய்வாய்!' என்று.

மகாதேவனது வரத்தால் நான் துருபத மன்னர் வீட்டில் பிறந்தேன். பெண்ணாகப் பிறந்திருந்த பொழுதிலும் அரசகுமாரன் சிகண்டி என்ற பெயரில் வளர்க்கப்பட்டேன். நான் அஸ்திர வித்தை — சஸ்திர வித்தை ஆகியவைகளும் கற்றேன். இளம் பிராயத்தில் தசார்ண மன்னர் ஹிரண்ய வர்மாவின் மகளுக்கும் எனக்கும் மணவினை நடந்தேறியது. ஆனால் சில நாட்களுக்கெல்லாம் நான் பிடிபட்டு விட்டேன். என் மனைவி தன் பணிப்பெண் மூலமாகத் தன் தாயாருக்குச் செய்தி சொல்லியனுப்பினாள்: 'அடி அம்மா! நீங்கள் ஏமாற்றப்பட்டு விட்டீர்கள்! என்னைக் கல்யாணம் செய்து கொடுத்திருக்கிறீர்களே, அது ஆண் மகன் அல்ல; பெண்ணாக்கும்!' என்று.

''இந்தத் துயரச் செய்தியைக் கேட்டு என் மாமனார் ஹிரண்ய வர்மாவுக்குக் கோபம் எல்லை மீறிப் பைத்தியமே பிடித்து விட்டது. தமது தூதன் ஒருவனைத் துருபத மன்னனிடம் அனுப்பி 'அட கெட்ட மதிகாரா! நீ என்னை மோசம் செய்து விட்டாய். என் படையுடன் நான் உன் நாட்டின் மீது படையெடுத்து வருகிறேன். என்னோடு அறிவிற் தேர்ந்த நான்கு இளம் பெண்கள் வருகிறார்கள். அவர்கள் என் மருமகன் சிகண்டியைப் பரீட்சிப்பார்கள். அவன் ஆண் மகன் இல்லை என்று உறுதிப்பட்டு விட்டால், நான் உன்னை உன் மந்திரி பிரதானிகளோடு பூண்டற ஒழித்து விடுவேன்' என்று எச்சரிக்கை விடுத்தார். தந்தைக்கு ஏற்பட்டுள்ள பயங்கர விபத்தைக் கண்டு நான் வீட்டை விட்டு இந்தக் காட்டுக்கு ஓடி வந்துள்ளேன். என் காரணமாகத்தானே என் உற்றார்—உறவினர்களுக்கு இந்தக் கஷ்டம் வந்துள்ளது? நான் உயிர் வாழ்ந்து என்ன பயன்? அன்ன ஆகாரமின்றிக் கிடந்து நான் இங்கேயே என் உயிரை மாய்த்துக் கொள்ளப் போகிறேன் என்றாள்.'

''யக்ஷ அரசே! சிகண்டினியின் இந்த வரலாற்றினைக் கேட்டு எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. எனவே, அவளுக்காக மனமிரங்கி, 'நீ வேண்டுவது யாது? நான் தனபதி குபேரனின் பணியாள். கொடுக்க முடியாத பொருள்களைக் கூடக் கொடுக்க வல்லவன் நான்!' என்றேன்.

'யக்ஷனே! என்னை ஆணாக்கி விடு!' என்றாள் சிகண்டினி.

'அரசகுமாரி! என் ஆண்மையைச் சில நாட்களுக்கு வேண்டுமானால் நான் உனக்கு இரவலாகத் தர முடியும். அதன் உதவியால் நீ உன் தந்தையாரையும் உன் உற்றார் உறவினர்களையும் தசார்ண மன்னரின் கோபத்திலிருந்து காப்பாற்றலாம். ஆனால் சோதனையில் வெற்றி கண்டதும் நீ இங்கு திரும்பி வந்து என் ஆண்மையை எனக்கே திருப்பித் தந்து விட வேண்டும். என் சாபம் தீரும் நாள் நெருக்கத்தில் இருக்கிறது. என் உயிர் மனைவியைக் காண நானும் துடித்துக் கொண்டிருக்கிறேன். அதனால் நீ சீக்கிரமே திரும்பி வர வேண்டும். மூன்றே மாதங்கள்தான் மீதமிருக்கின்றன. அதற்கு மேல் ஒரு நாள்கூட நீ தாமதிக்கக் கூடாது. இந்த நிபந்தனை சம்மதமானால் சொல்லு!' என்றேன்.

''மன்னரே! அதற்குப் பின் சிகண்டினி போனவள் போனவள்தான். திரும்பி வரவில்லை. பொய்யே உருவான துருபதன் மகள் என்னை ஏமாற்றி என் ஆண்மையை அபகரித்துக் கொண்டு ஓடி விட்டாள். அதற்குப் பிரதியாகத் தனது இந்தத் துச்சமான பெண்மையை எனக்குக் கொடுத்துச் சென்றிருக்கிறாள்!'' என்றான் யக்ஷன்.

யக்ஷனின் மனைவி கேட்டாள்: ''நாதா!''ஓர் அன்னியப் பெண்ணின் அழுகையில் ஏமாந்து போய் நீங்கள் உங்கள் விலை மதிப்பற்ற செல்வத்தை இழந்து விட்டீர்களே! உங்களைப் போன்ற அசடை நான் கண்டதில்லை. தேடினாலும் ஈரேழு பதினாங்கு உலகத்திலும் கிடைக்க மாட்டார்கள்!'' என்றாள்.

''நீ மகா மூடன். களிமண் மூளை படைத்தவன். இருப்பினும் நான் உனக்கு உன் ஆண்மையைத் திரும்ப வாங்கித் தருகிறேன். வா, என்னுடன்'' என்றான் குபேரன்.

எல்லோரும் பாஞ்சால ராஜ்யத்தை அடைந்தார்கள். தலைநகரத்திலிருந்து சற்றுத் தொலைவில் மனித சஞ்சாரமற்ற ஒரு காட்டில் தன் புஷ்பக விமானத்தை நிறுத்தி விட்டுக் குபேரன் தன் பணியாள் ஒருவனைக் கூப்பிட்டான். ''துருபத மன்னனின் மகனை சிகண்டிக்குக் குபேரமன்னர் வந்திருப்பதாகச் செய்தி அனுப்பு. உடனே வந்து அவரை வணங்கா விட்டால் பாஞ்சால நாட்டை அழித்து ஒழித்து விடுவோம் என்றும் சொல்லு'' என்று ஆக்ஞாபித்தான்.

சிகண்டி நடுநடுங்கிப் போய் உடனே குபேரனைக் காண வந்தான். குபேரனை வணங்கி, ''யக்ஷ மன்னரே! எனக்கு என்ன உத்தரவு?'' என்று வணக்கமாகக் கேட்டான்.

''சிகண்டி! நீ எனது பணியாளனான ஸ்தூணாகர்ணனை மோசம் செய்து விட்டாய். அவன் தன் மனைவியைச் சந்திக்க முடியாதவாறு செய்து விட்டாய். நீ கொடுத்த வாக்கையும் காப்பாற்ற வில்லை. நீ உன் நன்மையை விரும்பினால் இப்பொழுதே இவனது ஆண்மையைத் திரும்பக் கொடுத்து விடு!'' என்றான் குபேரன்.



''செல்வத்துக்கு அதிபதியே! நான் கொடுத்த வாக்கைக் கட்டாயம் நிறைவேற்றுவேன். தாமதம் ஏற்பட்டதற்கு என்னை மன்னிக்க வேண்டுகிறேன். இந்த யக்ஷன் எனக்குப் பேருபகாரம் செய்திருக்கிறான். தயவுசெய்து இன்னும் கொஞ்ச நாட்கள் எனக்கு அவகாசம் கொடுங்கள்!'' என்றான் சிகண்டி.

''ஏன்? இன்னும் உன் எண்ணம் ஈடேறவில்லையா?'' என்று கேட்டான் குபேரன்.

''யக்ஷராஜனே! வரவிருந்த விபத்து விலகிவிட்டது. தசார்ண மன்னருடன் வந்திருந்த யுவதிகள் என்னைப் பல முறைகளில் பரீட்சித்தார்கள். 'தங்கள் மாப்பிள்ளை நிச்சயம் ஆண் மகனே. ரூபாய்க்குப் பதினாறு என்ன, பதினெட்டணாகூட அவர் ஆண் மகன்தான் என்று நாங்கள் அடித்துச் சொல்லுவோம்' என்று தசார்ண மன்னருக்கு உறுதி கூறினார்கள். இதைக் கேட்டு என் மாமனார் மிகவும் வெட்கினார். என் தந்தையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வேண்டிய மட்டும் பரிசுகளை அளித்து விட்டுத் தம் பட்டாளங்களுடன் விடைபெற்றுக் கொண்டார். போகும் பொழுது தம் பெண்ணையும் கடிந்து கொண்டு போனார், எத்தனை அசட்டுப் பெண் என்று! நான் இந்த யக்ஷரிடம் இன்னும் ஒரு மாத காலம் அவகாசம் வேண்டுகிறேன். அதற்குள் குருக்ஷேத்திரப் போர் முடிந்து விடும். பீஷ்மரை வதம் செய்த பின்னர் நான் ஸ்தூணாகர்ணரின் கடனைத் தீர்த்து விடுவேன்!'' என்றான் சிகண்டி.

''மகாரதியான பீஷ்மரையாவது, நீ வதம் செய்வதாவது? சிறிதும் நம்பிக்கை ஏற்படவில்லையே! அவரல்லவா உன்னைக் கொன்று போட்டு விடுவார். அத்துடன் உன் ஆண்மையும் போய் விடுமே. அதெல்லாம் முடியாது. நீ சொல்கிறது நடவாது. நீ இதே கணம் ஸ்தூணாகர்ணனின் ஆண்மையைத் திரும்பக் கொடுத்து விட்டு, உன் பெண்மையைத் திரும்பப் பெற்றுக் கொள். இல்லாவிட்டால் சாட்சி சான்றுகளுடன் இப்பொழுதே உன் மாமனாரிடம் போவேன். உன் ஏமாற்று வித்தையைக் கேள்விப்பட்டால், தம் படை பட்டாளங்களுடன் மீண்டும் உன் நாட்டின் மீது படையெடுத்து வந்து ஒழித்துக் கட்டிவிட்டு மறு காரியம் பார்ப்பார்!'' என்றான் குபேரன்.

''ஐயோ! என் கதி என்ன ஆகும்?'' என்று வருந்திக் கதறினான் சிகண்டி.

''எதற்காகக் கவலைப்படுகிறாய்? உன் சகோதரன் திருஷ்டத்யும்னன் இருக்கிறான். ஐந்து பாண்டவ அத்திம்பேர்கள் இருக்கிறார்கள். பாண்டவர்களின் தோழனான கண்ண பெருமான் இருக்கிறான். அவர்கள் பீஷ்மரை வதம் செய்யத் திட்டம் போட்டுக் கொள்வார்கள்!'' என்றான் குபேரன்.

''அதெல்லாம் நடக்காத காரியம், குபேர மன்னரே! பீஷ்மர் பாண்டவர்களுக்குத் தாத்தா. துரோணர் அவர்களுக்குக் குரு—ஆசான். இவ்விரு குருமார்களையும் அவர்கள் கொல்ல மாட்டார்கள். இதே காரணத்தினால்தான் பீஷ்மரை வதம் செய்ய வேண்டிய பொறுப்பு என்னிடமும் துரோணரை வதம் செய்ய வேண்டிய பொறுப்பு திருஷ்டத்யும்னனிடமும் விடப்பட்டிருக்கின்றன'' என்றான்.

குபேரன் எந்தச் சாக்கையும் கேட்கத் தயாராயில்லை. கடைசியில் வேறு வழி இல்லாமற் போகவே, சிகண்டி யக்ஷனின் ஆண்மையைத் திருப்பிக் கொடுத்து விட்டுத் தன் பெண்மையைத் திரும்பப் பெற்றுக் கொண்டான். அப்புறம் குபேரனுடன் யக்ஷனும் யக்ஷிணியும் ஆனந்தம் கொப்புளிக்க அளகாபுரிக்குத் திரும்பினார்கள்.

துயரத்தில் மூழ்கிவிட்ட சிகண்டி வெகு நேரம் கவலையோடு யோசனை செய்த பிறகு



கிருஷ்ணனிடம் சென்றான். தற்செயலாக அப்பொழுது தேவரிஷி நாரதரும் அங்கு வந்திருந்தார். ''என்னப்பா சிகண்டி! ஏன் வாட்டமாக இருக்கிறாய்? இரண்டு நாட்களுக்கு முன்பு உனது வீரம் செறிந்த உருவத்தைக் கண்டு களித்தேனே! திடீரென்று இன்று பெண்ணுக்குரிய மென்மையும் தன்மையும் உன்னிடம் காணப்படுவானேன்?'' என்று கேட்டார் கிருஷ்ணன்.

''வாசுதேவா! எனக்கு ஏற்படும் கஷ்டங்களுக்கு ஓர் எல்லையே இல்லையே!''

''நீங்கள் இருவரும் இருந்து ஆர அமரப் பேசுங்கள். நான் போய் வருகிறேன்!'' என்று புறப்பட்டார் நாரதர்.

''வேண்டாம், தேவரிஷி! நீங்கள் போக வேண்டாம். உங்களுக்குத்தான் என் வரலாறு முழுவதும் தெரியுமே! உங்களிடம் ஒளிவு



"நீ எதை விரும்புகிறாயோ அதைப் போதிய கவனத்துடன் நோக்கு. அவ்வண்ணம் நோக்கினால்தான் இதுவரையில் எவரும் காணாத ஒரு விபரத்தையோ அம்சத்தையோ நீ கண்டுபிடிப்பாய். நம் கருத்தில் கொண்ட விஷயத்தைப் பற்றி நமக்கு முன் சென்றவர் என்ன கருதினர் என்ற நினைவுடன் நம் விழிகளை உபயோகித்து நோக்கவே நாம் பழகிக் கொண்டிருக்கிறோம். இந்தப் பழக்கத்தினால் புது விஷயங்களை நாமாகவே தேடிக் காண்பதில்லை. ஆகவே எந்த விஷயத்திலும் நாம் இதுகாறும் முற்றிலும் தேடிப் பார்த்தும் பரிசோதனை செய்யாத இடமோ, அம்சமோ ஏதேனுமொன்று இருக்கத்தான் செய்யும். நம் கண் முன்னேயுள்ள சின்னஞ்சிறு பொருளிலும் நாம் இதுகாறும் அறிந்து கொள்ளாத ஏதோ ஒன்று அடங்கித்தான் உள்ளது. இதைக் கண்டு பிடி. பெருஞ் சுவாலைகள் விட்டெரியும் ஒரு தீயையோ அல்லது சமபூமியிலுள்ள ஒரு மரத்தையோ நீ விவரிக்க வேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள். விவரிப்பதற்கு நீ அச்சுவாலைகளை அல்லது அம்மரத்தை நன்றாக நோக்க வேண்டும். அச்சுவாலைகளுக்கும் வேறு சுவாலைகளுக்கும் அல்லது அம்மரத்துக்கும் வேறு மரங்களுக்கும் உள்ள ஒப்புமைகள் யாவும் மறைந்து அவை மட்டுமே உன் மனத்தில் தனி உருவம் அடையும் வரையில் விடாது அவற்றை நோக்க வேண்டும். நவீன சிருஷ்டிக்கு இதுவே வழி.

(பிரபல மேலை நாட்டு எழுத்தாளர் ப்ளோபேர் (1821 - 80) தன் சீடன் மோப்பசானுக்கு (1830 - 93) கூறிய அறிவுரை.

- மேனு

புறமும் அகமும்

மறைவுக்கு என்ன இருக்கிறது?'' என்று தடுத்து நிறுத்தினான் சிகண்டி.

ஆதியோடு அந்தமாக எல்லா நிகழ்ச்சிகளையும் சொல்லி முடித்த பின்னர், ''கிருஷ்ணா! நீ பாண்டவர்களுக்கும் நண்பனாய் இருக்கிறாய். என் சகோதரி கிருஷ்ணாவோ உன் அன்புக்கான தோழி. என்னை இந்த இக்கட்டிலிருந்து காத்தருள மாட்டாயா? முற்பிறப்பிலேயே நான் பீஷ்மரை வதம் செய்வது என்று உறுதி பூண்டிருக்கிறேன். மகாதேவன் எனக்கு வரம் வேறு அருளியுள்ளார். ஆனால் ஆண்மை இல்லை யென்றால் நான் எப்படிப் போரிட முடியும்?'' என்று கேட்டான் சிகண்டி.

''உன் சங்கற்பம் தகுதியானதல்ல. பெண்ணாகப் பிறந்திருக்கிறாய். இயற்கைக்கு எதிராக ஏன் ஆணாக விரும்புகிறாய்? பீஷ்மரை வதம் செய்யும் பொறுப்பை வேறு யாருக்காவது விட்டுக் கொடுத்துவிடு. தேவரிஷியின் கருத்து என்னவோ?'' என்றார் கிருஷ்ணர்.

''சிகண்டி! கிருஷ்ணர் சொல்வது நியாயமாகத்தான் படுகிறது. சால்வரும் பீஷ்மரும் உன்னை நிராகரித்து இழிவுபடுத்தி ஒதுக்கி விட்டார்கள். ஆயினும் என்ன? உலகத்தில் எத்தனையோ ஆண்கள் இருக்கிறார்கள். உனக்குச் சம்மதமானால் சொல்லு. உன் தந்தையிடம் சொல்லி ஒரு நல்ல வரனைப் பார்த்து உன்னை அவன் கையில் ஒப்படைக்கச் சொல்லுகிறேன். அப்பொழுதுதான் உன் பெண் பிறவி பயனுடையதாகும். உன் மனைவிக்கும் ஒரு கொழுகொம்பு கிடைக்கும். அவள் உன் சக்களத்தி ஆகி ஆனந்தமாக வாழ்வாள்!'' என்றார் நாரதர்.

''தாங்கள் இப்படிப் பேசக்கூடாது, நாரதரே! மகாதேவன் எனக்குக் கொடுத்திருக்கும் வரம் பொய்க்காது. நடந்தே தீரும். கண்ணா! உன்னால் முடியாதது ஒன்றும் இல்லை. என்னைத் தயவுசெய்து ஆணாக்கிவிடு!''

''நடக்க முடியாததை நடத்திக் காட்ட நான் என்ன பிரம்மாவா? அந்த யக்ஷனைப் போலவே வேறு யாராவது உன்னோடு தன் ஆண்மையைப் பகிர்ந்துகொள்ள முன் வந்தால் நீ ஆணாக முடியும். ஆனால் அத்தகைய முட்டாள் இனி யாரும் கிடைக்க மாட்டான் என்றே எனக்குத் தோன்றுகிறது. ஏன், தேவரிஷி! நீங்கள்தான் உலகங்கள் அனைத்தையும் சுற்றி வருகிறீர்களே, உங்களுக்குத் தெரிந்து இப்படி யாராவது ஒரு படுமுட்டாள் இருக்கிறானா?'' என்று கேட்டார் கிருஷ்ணர்.

''இருக்கிறார், கிருஷ்ணா! அவரை உனக்கும் தெரியும். கேள், சிகண்டி. பிருந்தாவனத்தில் கிருஷ்ணனுக்குத் தூரத்து உறவில் மாமா ஒருவர் இருக்கிறார். அவர் ஆயர் குலத்தைச் சேர்ந்தவர். ஆயான கோஷர் என்பது அவர் பெயர். அவர் மிகுந்த நல்லெண்ணம் படைத்தவர். பரோபகார சிந்தனை உள்ளவர். ஆனால் இப்பொழுது மிகுந்த மனத் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறார். எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது தர்ம காரியங்களில் ஈடுபட்ட வண்ணமே இருப்பார் அவர். உலகத்தில் அவருக்கு எந்தப் பொருளின் மீதும் பற்றுக் கிடையாது. நீ அவரைத் தஞ்சம் புகுந்தால் ஒருவேளை உன் எண்ணம் ஈடேறலாம்!'' என்றார் நாரதர்.

''வாசுதேவா! என் மீது கருணை கூர்ந்து ஒரு சிபாரிசுக் காகிதம் ஆயான கோஷரின் பெயருக்கு எழுதிக் கொடுங்கள். அந்தக் கடிதத்தோடு நான் அவரைப் போய்ப் பார்த்து வருகிறேன்'' என்றான் சிகண்டி.

''பித்தம் தலைக்கேறிவிட்டதா உனக்கு? என் பெயரை நீ தப்பித் தவறி எடுத்தாலே அவர் உன்னை அடித்து விரட்டி விடுவார். உண்மையைக் கேள், சிகண்டி. நான் மிக மிக அதிருஷ்டக் கட்டையானவன். காரணமின்றிச் சொரது வெறுப்புக்கு ஆளாகியிருக்கிறேன். கம்ஸன், சிசுபாலன், என் மதிப்புக்குரிய மாமா ஆயானகோஷர் இம் மூவரும் அந்தக் கோஷ்டியில் உள்ளவர்கள். இது மட்டும் ஏன்? என் மகன் சால்வனுடைய மாமனார் துரியோதனன் கூட எனக்கு எதிரியாகியிருக்கிறார்!'' என்றார் கிருஷ்ணர்.

''அப்படியானால் வேறு வழி?'' என்று கேட்டான் சிகண்டி.

''வழி என்னவா? அது உன் கையிலேயே இருக்கிறது. பெண்களின் நடை உடை பாவனையும், ஆண்களின் கூரிய அறிவுத் திறனும் உன்னிடம் ஒருங்கே இயல்பாகவே அமைந்துள்ளன. அவற்றைக் கொண்டுதான்



கோபுர மார்க் பன்னீர் · ஓமவாட்டர்
பொன்னாங்கண்ணித் தைலம்
சந்தன பேஸ் பவுடர் · ஊதுபத்திகள்

K.T.R. வாசனாதி திரவியசாலை
விஜயபுரம் · திருவாரூர் · தமிழ்நாடு

சென்னை நகர பூர்ண விநியோகஸ்தர்கள் : ஸ்ரீ ரகுநாத் ஏஜன்ஸீஸ்
35, மங்கபதி நாயக்கன் தெரு, (போன்: 88223) சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 2

நீ காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டும். வா, என்னோடு! ஆயானரை உனக்கு நான் அறிமுகப்படுத்தி வைக்கிறேன்!'' என்று சிகண்டியை அழைத்தார் நாரதர்.

பிருந்தாவனத்து ஒரு மூலையில், லோகாலயத்திலிருந்து சிறிது தொலைவில், யமுனைக் கரையில் ஒரு குடிசை போட்டுக்கொண்டு ஆயானகோஷர் வாழ்ந்து வந்தார். மூன்றாவது யாமமிருக்கும். யமுனைக் கரையில் அமர்ந்து அவர் இராவணன் இயற்றிய சிவ தாண்டவ ஸ்தோத்திரங்களைப் பாராயணம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுதுதான் சிகண்டியை அழைத்துக்கொண்டு நாரதர் அங்கே போய்ச் சேர்ந்தார்.

சாஷ்டாங்கமாக விழுந்து நாரதரை வணங்கிய ஆயானர் கூறுவார்: ''தேவரிஷி! நான் மகா பாக்கியசாலி. உங்களைத் தரிசிக்கும் பேறு கிடைத்தது. தங்களோடு வந்திருக்கும் இந்த அழகி யார்? புரியவில்லையே!''

''இவள் பாஞ்சால மன்னன் துருபதனின் மகள் சிகண்டினி என்பவள். சூலமேந்தும் சிவபெருமான் இவளிடம் ஒரு கடுமையான நோன்பு இயற்றும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். அந்த நோன்பு முடியும்வரையில் இவள் திருமணம் செய்து கொள்ளாமல் கன்னியாக இருக்க வேண்டும். ஆனால் நல்லெண்ணம் மிகுந்தவரும் தர்மத்தில் ஈடுபாடு கொண்டவருமான ஓர் ஆடவரின் உதவியின்றி இவளது சங்கற்பம் நிறைவேறாது. மாமதி பெற்ற ஆயானரே! நான் எனது திவ்ய திருஷ்டி மூலம் காண்கிறேன், அந்த பாக்கியம் பெற்ற புருஷர் நீங்கள்தான் என்பதை. இவளது வேண்டுகோளுக்குச் செவி சாயுங்கள். தனது நோன்பு முடிந்ததும் எல்லாவித குண நலன்களும் பொருந்திய இந்தப் பெண்மணி உங்களையே கணவனாக வரிப்பாள். உங்கள் வாழ்க்கை பயனுடையதாகும்!'' என்றார் நாரதர்.

ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு ஆயானர் கூறுவார்: ''அந்தோ தேவரிஷி! என் வாழ்க்கை பயனுடையதாக ஆவதாவது? எனக்குக் குடும்பம் இருந்தும் இல்லாதது போலத்தான். வீடு வெறிச்சோடிக் கிடக்கிறது. ஜனங்கள் என்னைப் புல்லியனாக நினைக்கிறார்கள். என் முதுகுக்குப் பின்னாலேயே என்னை நிந்திக்கிறார்கள். அதனால்தான் இந்த ஜனங்களின் தொடர்பே வேண்டாமென்று நான் இப்படி ஓர் ஒதுக்குப்புறத்தை நாடி வந்திருக்கிறேன். இந்த அழகிய அரசிளங்குமரி அதிர்ஷ்டம் கெட்ட என்னை நாடி எதற்காக வந்திருக்கிறாள்?''

சிகண்டி இனிமையான குரலில், ''ஆயர் குலத்துதித்த தூமணியே! நான் தங்கள் குண நலன்களைப் பற்றித் தொலை தூரத்திலேயே கேள்விப்பட்டிருக்கிறேன். அது முதற்கொண்டு உங்களிடமே நான் என் மனத்தைப் பறிகொடுத்தும் இருக்கிறேன். இப்பொழுது உங்களைப் பார்த்ததும் மனம் நெகிழ்ந்து விட்டேன். உங்கள் காலடியிலேயே இந்த உயிரையும் உடலையும் அர்ப்பணிக்கிறேன்!'' என்றாள்.

''அதிருஷ்டம் கெட்ட என் வாழ்க்கையில் இப்படி ஓர் அதிருஷ்டம் கூடி வரும் என்று நான் கனவிலும் நினைத்திருக்கவில்லை. என் மனத்துக்குகந்த சிகண்டினியே! உனக்குக் கொடுக்கக் கூடாத பொருள் என்னிடம் எதுவுமே இல்லை. உனக்கு என்ன வேண்டுமோ, தாராளமாகத் தயங்காமல் கேள்!'' என்றார் ஆயானர்.

''தேவரிஷி! தாங்களே இவருக்குப் புரியும்படி சொல்லுங்கள்!'' என்றாள் சிகண்டினி.

நோன்பு பற்றிச் சுருக்கமாகக் கூறிய நாரதர், ''ஆயர் வேந்தரான ஆயானரே! மகாதேவனுடைய வரத்தினால் சிகண்டினி கட்டாயம் வெற்றி காண்பாள். நீங்கள் ஒரு மாத காலத்துக்குத் தங்கள் ஆண்மையை இவளுக்கு இரவல் தர வேண்டியிருக்கும். குருக்ஷேத்திரப் போர் அதற்குள் ஒரு முடிவைக் கண்டுவிடும். பீஷ்மரும் சொர்க்கம் புகுவார். அதற்குப் பின்னரே துருபத மன்னர் தமது மகளைத் தங்களுக்குக் கன்யாதானம் செய்து தருவார். பாஞ்சால ராஜ்யத்தில் பாதியையும், கன்றுகளோடு ஏராளமான கறவைகளையும் சீதனமாகக் கொடுத்து மகிழ்வார். மனத்துக்குப் பிடிக்காத இப் பிருந்தாவனத்துச் சூழ்நிலைக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டுத் தாங்கள் தங்கள் புது மனைவியுடன் ஒரு புது இராஜ்யத்தில் மிக ஆனந்தமாக ஆட்சி புரிந்து கொண்டு நீடு வாழலாம்!'' என்றார்.

சிறிது நேர யோசனைக்குப் பின்னர், ஆயானரின் கவலை விலகியது. அவர் தமது வருங்கால மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றி விட்டார். மீண்டும் ஆண்மையை அடைந்து விட்ட சிகண்டி நடையில் மகிழ்ச்சி கொப்பளிக்க நாரதருடன் சென்று விட்டாள். அதன் பின்னர் பெண்ணுருவம் தாங்கிய ஆயானர் குடிசைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு, சூரிய கிரணம் படாமல் சிகண்டினியின் வரவை எதிர்நோக்கிய வண்ணம் நாட்களை ஓட்டி வந்தார்.

குருக்ஷேத்திரப் போரில் பத்தாவது நாள் சிகண்டியின் அம்புகளால் துளைக்கப்பட்டு, பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்துவிட்டார். அதற்கு எட்டாம் நாள் போர் முடிந்தது. ஆனால் சிகண்டி ஆயானரிடம் திரும்பி வரவில்லை. ஏனெனில் அவள் திரும்ப முடியாத இடத்துக்கு ஏகிவிட்டாள். கரிய நள்ளிரவில் பாண்டவர்களின் முகாமில் புகுந்து அசுவத்தாமா யார் யாரையெல்லாமோ கொன்றுபோட்டானே, அவர்களில் சிகண்டியும் ஒருவனாகிவிட்டதுதான் காரணம்.

ஆயானருடைய தலையில் அரசகுமாரியும் பாதி ஆட்சியும் எழுதப்படவில்லை. அவரது ஆண்மைகூடச் சிகண்டியோடு முடிவடைந்து விட்டது. அதனால் அவர் வாழ்க்கையே வீணாகிவிட்டது என்று சொல்லிவிட முடியாது. காலப் போக்குக்கும் மாற்றத்துக்கும் ஏற்ப ஆயானரிடத்தில் ஒரு புதிய ஆத்மீக மாற்றம் கண்டது. அவர் தமது உடலையும் உள்ளத்தையும் கிருஷ்ணனுக்கு ஒப்படைத்து 'ஆயானி' என்று புகழ் பெற்றார். அவர் மிருதங்கம் வாசிக்கப் பழகினார். பிருந்தாவனத்தில் உள்ள இருபதினாயிரம் கோபியர்களுக்கும் தலைவியாகி எப்பொழுதும் கிருஷ்ணனையே துதித்து வந்தார். — ஆசுயம்

"ரெக்கரிங்" டெபாஸிட்டில் அக்கறை காட்டுகிறீர்களா ?

உங்களுக்கு அதிக வட்டி அளிப்பதிலே நாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம். தற்போது புது வழி யொன்றை கண்டு பிடித்திருக்கிறோம். "ரெக்கரிங்" டெபாஸிட் என்றால் ஒவ்வொரு மாதமும் ரூ. 10லிருந்து ரூ. 1000 வரை உங்கள் இஷ்டம்போல் 30, 40, 50 அல்லது 60 மாதங்களுக்கு எங்களிடம் டெபாஸிட்டு செய்யலாம். கால வரம்பு முடிந்ததும் நீங்கள் டெபாஸிட்டு செய்த பணத்தையும், 6¾ சத விகிதம் வரை வட்டியும் சேர்த்து கொடுக்கிறோம். கீழ்க்கண்ட அட்டவணையைக் கவனியுங்கள். உங்களுடைய மாதச் சேமிப்பின்மீது நாங்கள் எவ்வளவு வட்டி கொடுக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். குறைந்த தவணைகளுடன் அதிக வட்டியை நாங்கள் அளிக்கிறோம்.

திருப்பி அளிக்கப்பட வேண்டிய மொத்தத் தொகை

மாதாந்திர தவணைத் தொகை ரூ.	30 தவணைகளில் சேரும் தொகை ரூ.	40 தவணைகளில் சேரும் தொகை ரூ.	50 தவணைகளில் சேரும் தொகை ரூ.	60 தவணைகளில் சேரும் தொகை ரூ.
10	323	443	568	709
20	646	886	1,136	1,418
30	969	1,329	1,704	2,127
40	1,292	1,772	2,272	2,836
50	1,615	2,215	2,840	3,545
60	1,938	2,658	3,408	4,254
70	2,261	3,101	3,976	4,963
80	2,584	3,544	4,544	5,672
90	2,907	3,987	5,112	6,381
100	3,230	4,430	5,680	7,090

மேற்கொண்டு விவரங்களுக்கு இன்றே வந்து விசாரிக்கவும் :

தி சென்ட்ரல் பாங்க்

ஆப் இந்தியா லிமிடெட்


CBI-25-65

பதிவுக் காரியாலயம் : மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய் - 1

F. C. கூப்பர், ஜெனரல் மானேஜர்

தேவகானம்

சௌமாலீ



குட்டிக் கதை

புரசைவாக்கத்தில், ஐந்து குடும்பங்கள் வசிக்கும் அந்த வீட்டை நினைத்தால் சுதர்சனத்துக்குக் கோபம் கோபமாக வரும். முன்பு ஒரு தடவை சென்னைக்கு வந்து சித்தப்பாவின் வீட்டில் இரண்டு தினங்கள் தங்குவதற்குள் அவனுக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. குழாய்ச் சண்டை, வாசற்பெருக்குவதற்கு ஒரு சண்டை, இரவு நேரங்களில் யாராவது வந்தால் யார் கதவைத் திறப்பது என்பது பற்றி ஒரு சண்டை - இப்படிப் போரும் புயலும் சதா அங்கு வீசும். சுதர்சனத்துக்கு இதைக் கண்டாலே பிடிக்காது. டில்லியிலிருந்து லீவில் சென்னைக்கு வரும்போதெல்லாம் அவன் தன் சித்தப்பா வீட்டுக்குப் போவதில்லை. இதில் அவன் சித்தப்பாவுக்கும் சித்திக்கும் அவனிடம் ரொம்ப வருத்தம்.

சித்தப்பாவுக்குத் திருப்தியளிப்பதற்காக அவர் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கிவிட வேண்டியது என்ற தீர்மானத்துடன் வந்த சுதர்சனம் பத்து நாட்கள் அங்கே தங்கிவிட்டதன் காரணம் கொஞ்சம் விசித்திரமானதுதான்.

பெட்டி, ஹோல்டால், ஒரு கூடை வெறுப்பு சகிதம் சித்தப்பா வீட்டுக்குள் நுழைந்த சுதர்சனத்துக்கு என்ன வந்துவிட்டது? விளக்கெண்ணெய் குடித்தது போல் இருந்த அவன் முகத்தில் திடீரென்று எங்கிருந்து அத்தனை களை வந்தது? சமையலறையில் மின்னலாய்த் தோன்றிய அந்தப் பெண் யார்? சுதர்சனம் பிரமித்துப் போனான்.

நாணம் கலந்த அழகு; அழகு ததும்பும் புன்னகை; புன்னகையின் மின்னல் நிற்று படிந்த மதிமுகம். மதிமுகத்தை மலர வைக்கும் கரிய பெரிய விழிகள். பத்து நயாபைசாவின் ஓரத்தைப் போன்ற நெளி நெளியான கூந்தல். சந்தனக் கட்டையைக் கடைசல் பிடித்து இழைத்தெடுத்த எழில் மேனி......

சுதர்சனம் தன்னை மறந்து ஒரு கவி பாடும் நிலைக்கு வந்து விட்டான். நல்ல வேளையாகச் சமயத்தில் அவன் சித்தி அங்கு வந்து, ''வாடா அப்பா, சுதர்சனம்! வா. ஊரில் எல்லாரும் சௌக்கியமா?'' என்று கேட்டு அவனது பிரமையைக் கலைத்து விட்டாள். 'எல்லாரும் சௌக்கியந்தான் சித்தி!' என்று தன் நினைவில்லாமலே சொல்லிவிட்டு உள்ளே போனான்.

அவள் பெயர் கமலா. பின்கட்டில் புதிதாகக் குடிவந்திருப்பவர்களின் பெண். இந்த விவரம் சித்தி சொல்ல அவனுக்குத் தெரிய வந்தது.

அன்றைய தினத்திலிருந்து இதுவரையில் இடைஞ்சலாயிருந்த போர்ஷன் சுதர்சனத்தின் சொர்க்கமாக மாறிவிட்டது. அந்தச் சொர்க்கத்தின் நிரந்தர அப்சரஸாகக் கமலா விளங்கினாள்.

சுதர்சனத்தின் பார்வை தன் மீது படும் போதெல்லாம் கமலா ஏன் அப்படி நாணிக் கோணிக் கொண்டாள்? ஏன் அவள் முகம் அப்படிச் சிவந்தது? சுதர்சனத்துக்கு விஷயம்

விளங்கிவிட்டது. அவனைப் போலவே அவளும் அவனிடம்......!

சுதர்சனம் வாசற்புறத்திலேயே சாய்வுநாற்காலியில் அமர்ந்து ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டிருப்பான். கையில் புத்தகம்.... ஆனால் அவன் கண்கள் கமலாவைத் தேடிக் கொண்டிருக்கும். கமலா அவனை நெடுநேரம் தவிக்க வைக்கமாட்டாள். ஏதாவது ஒரு காரியத்தை வைத்துக் கொண்டு அந்தப் போர்ஷனுக்கு அடிக்கடி வருவாள்; கலகலப்பாகப் பேசிச் சிரிப்பாள். இதைக் கேட்கும் சுதர்சனம் ஏர்கண்டிஷன்டு அறையில் இருப்பது போன்ற உணர்ச்சியைப் பெற்று மெய் சிலிர்ப்பான். போகும்போது அவன் மீது கடைக்கண் பார்வையை வீசுவாள். ஆகா! அப்பொழுது சுதர்சனத்தின் நிலை.....! அவன் அவளோடு பேசி விடத் துடித்தான். ஆனால் அத்தனை குடித்தனங்களுக்கு இடையில் எப்படிப் பேசுவானாம் !

இடையில், சுதர்சனம் இருபது நாட்கள் மதுரை சென்று தன் பெற்றோர்களிடம் தங்கிவிட்டு வந்தான். மீண்டும் சித்தப்பா வீட்டிலேயே தங்கினான். விஷயம் தெரியாத அவனது சித்தப்பாவும், சித்தியும் தங்களுக்காகவே அவன் அத்தனை நாட்கள் தங்கி யிருப்பதாக நினைத்துப் பூரித்துப் போயினர்.

"அம்மா, அவருக்கு டில்லியில் உத்தியோகம். செக்ரடேரியட்டில் நல்ல வேலை.... மாமி சொன்னாள்." இது கமலா.

"நல்ல பிள்ளையாயிருப்பான் போலிருக்கிறது. ரொம்பப் பதவிசு. ரொம்ப மரியாதை....!" இது கமலாவின் தாயார்.

இந்தப் பேச்சு சுதர்சனத்தின் காதுகளில் தேனாய்ப் பாய்ந்தது. பொங்கி வழியும் மகிழ்ச்சியோடு அவன் அங்கும் இங்கும் வளைய வந்தான். கமலாவும் அவனும் மண மேடையில் மாலையும் கழுத்துமாக இருப்பது போல் கனவு கண்டு ஆனந்த பரவசமானான்.

சுதர்சனத்தின் விடுமுறை நாட்கள் அநேகமாக முடிந்து விட்டன. டில்லிக்கு ரிஸர்வேஷன் செய்தாகி விட்டது. கமலா விஷயம்தான் பாக்கி யிருந்தது. சித்தப்பா, சித்தியை வைத்துக் கொண்டு தன் மனத்தை விண்டு காட்டி, கமலாவின் மீது தனக்குள்ள அன்பைச் சொல்லி அவள் பெற்றோர்களின் சம்மதத்தைக் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தான் சுதர்சனம். அதற்குள் கமலாவிடம் பேசி அவள் விருப்பத்தை அறிந்து கொண்டுவிட்டால்.....? ஆகா! என்ன ஆச்சரியம்! அவனை நெருங்கிப் பேச வருகிறாளே. பூத்துக் குலுங்கும் ஒரு மலர்க் கொடி அசைந்து அசைந்து நடந்து வருவது போல் கமலா அவனுக்கு அருகில் வந்து நின்றாள். சுதர்சனத்தின் செவிகளில் தேவகானம் கேட்டது. உடம்பெல்லாம் புல்லரித்தது. அவன் தன்னை மறந்தான்; சூழ்நிலையை மறந்தான். வண்ண வண்ண மலர்கள் நிறைந்த ஒரு தெய்விகப் பூங்காவின் இடையே தான் இருப்பது போலவும், கமலா என்னும் அப்சரஸ் மங்கை தன்னை நோக்கி மாலையிட வருவது போலவும் உணர்ந்தான்.

"நீங்கள் என்று டில்லிக்கு..... புறப்படுகிறீர்கள்?" இப்படிப் பண் மிழற்றியது யார்? கமலாதான். சுதர்சனத்துக்கு இந்தக் கந்தர்வப் பண் அமுதப் பிரவாகமாகச் செவிகளில் விழுந்து அவனை மண்ணுலகுக்குக் கொண்டு வந்தது. ஆனால் அதை அவன் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. "என்ன கேட்டீர்கள்.....? டில்லிக்கா.....?" என்று சுதர்சனம் கேட்டான்.

உடனே கமலா எழில் ததும்பும் புன்னகையைத் தன் செவ்விதழ்களில் நெளிய விட்டுக் கொண்டு, "நீங்கள் டில்லிக்கு என்றைக்குப் புறப்படுகிறீர்கள்? என்று அம்மா கேட்கச் சொன்னாள். இரண்டு மூன்று நாட்களாகவே இதைக் கேட்க வேண்டும் என்று எண்ணம். கூச்சப்பட்டுத் தயங்கிக்கொண்டே இருந்து விட்டேன்" என்றாள்.

எழில் ஓவியமாக நின்ற கமலாவைப் பார்த்துக் கொண்டே, "....ஏன், என்ன விசேஷம்? அடுத்த வாரம் போகிறேன்..." என்றான் சுதர்சனம். அவன் உடம்பெல்லாம் என்னவோ செய்தது. கமலா என்ன சொல்லப் போகிறாள் என்று அறிந்து கொள்ளும் ஆவல் அவனை ஆட்டிப் படைத்தது.

கமலாவின் முகம் குப்பென்று சிவந்தது. "டில்லியில் என் அத்தான் இருக்கிறார்..... அவருக்குக் கொஞ்சம் பக்ஷணமும், ஊறுகாயும், அப்பளமும் கொடுத்தனுப்ப வேண்டும்..... அதற்குத்தான்.......!"

திடீரென்று உலகமே இருண்டு விட்டதுபோலவும் சுவாரஸ்யமான படம் பார்த்துக் கொண்டிருக்கும் போது பட்டென்று அது அறுந்து விட்டாற்போலவும் சுவை மிகுந்த பாதம் அல்வா தின்னும் போது ஒரு வேப்பங்காயைக் கடித்து விட்டது போலவும் இருந்தது சுதர்சனத்துக்கு.

"அவருக்கும்..... உனக்கும்....."

"......போங்க ஸார்....! அடுத்த மாதம் கல்யாணம் ஆகப் போகிறது...!" இதைச் சொல்லி முடிப்பதற்குள் கமலாவின் முகத்தில் எத்தனை சிவப்பு! அவள் உடம்பில்தான் எத்தனை கோணல்கள்......! சொன்ன உடனே அவள் மின்னல் போல் மறைந்து விட்டாளே!

சுதர்சனம் தொப்பென்று சாய்வு நாற்காலியில் சாய்ந்தான். குப்பென்று அவனுக்கு வியர்த்து விட்டது. ரிஸர்வேஷனைப் பொருட்படுத்தாமல் அன்றைக்கே, அப்போதே டில்லிக்குப் பறந்துவிட மாட்டோமா என்றிருந்தது !

விட்டகுறையுந் தொட்டகுறை

'அந்தப் பாதையில் அவனும் நானும் எப்படியோ வந்து சேர்ந்தோம். பிரயாணத்தையும் தொடங்கினோம். ஒரே திசையை நோக்கிப் பக்கம் பக்கமாக நடந்து சென்றோம். இப்படி நடந்து செல்கிறவர்கள் பேசாமல் இருக்க முடியுமா? அறிமுகப் படுத்திக் கொள்ளாமலும் இருக்க முடியுமா? சில மைல் தூரம் சென்ற பிறகு பேசினோம். நான் யார், அவள் யார் என்பதை அறிமுகமாகா விட்டாலும், அவரவர்களைப் பற்றிய விவரங்களையும் பரஸ்பரம் சொல்லித் தெரிந்து கொண்டோம். பேச்சுத் துணையோடு எங்கள் நடை தொடர்ந்தது.

'மேலும் சில மைல் தூரம் சென்றபின் பேச்சுத் துணையில் ஒரு வகைத் தொடர்பும் ஒரு வகையான ஈடுபாடும் ஏற்பட்டன; ஓர் உறவும் மலர்ந்தது. அப்புறம் அந்த வழிப் பயணத்திலும் அந்த உறவிலும் ஒரு பக்தியும் கவர்ச்சியுமே உண்டாகி விட்டன. இருவரும் கைகோத்துக் கொள்ளா விட்டாலும் சற்று நெருங்கி வந்தோம். அந்த நிலையிலேயே நடக்கலானோம்.

'மேலும் சில மைல் தூரம் சென்றோம். ஓரிடத்தில் நான் கிளைப் பாதை வெட்டினேன். அவளிடம் விடைபெற்றுக் கொண்டேன்......

"நீலா! பம்பாயில் எனக்கு வேலை கிடைத்திருக்கிறது. மாதம் நானூற்றைம்பது ரூபாய் சம்பளம்....."

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்!......" அவள் முகத்தில் தேவைக்கு மிஞ்சிய, நடிப்போ என்று சந்தேகிக்கக் கூடிய, ஒரு மகிழ்ச்சிக் குறி; அநாவசியமான ஒரு பிரகாசம்.......

"இன்னும் ஒரு வாரத்தில் பம்பாய்க்குப் பயணம்" என்று சொன்னேன்.

"ரொம்ப நல்ல சான்ஸ். ரூபாய் நிறையச் சம்பாதியுங்கள். சௌக்கியமாக இருங்கள்." அவள் அவசரமாகப் பேசினாள். என்னை முந்திக் கொண்டு அவள் தன் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

"உங்கள் வீட்டிலும் வந்து பயணம் சொல்லிக் கொள்ள வருவேன்."

அதற்கு அவள் ஒன்றும் சொல்லவில்லை. "நான் போய்விட்டு வருகிறேன்" என்று மட்டுமே சொல்லிவிட்டு, பஸ்ஸைப் பிடிப்பதற்காகப் போய் விட்டாள்.

'அப்புறம் அவள் வீட்டுக்குப் போனேன். அவளிடமும், அவள் தாயாரிடமும், அவளுடைய இரண்டு தங்கைகளிடமும் சொல்லி விடைபெற்றுக் கொண்டு மறுநாள் பம்பாய்க்குப் புறப்பட்டேன்.

'யார் கண்டது? நான் பம்பாய்க்குப் போகாமல், கிளைப் பாதை வெட்டிப் பிரியாமல், அவளுடனேயே என் யாத்திரையைத் தொடர்ந்திருந்தால் இருவருக்குமே பொதுவான ஒரு லட்சிய நகரம் எதிர்ப்பட்டிருக்கக் கூடும். இருவரும் அங்கே போய்ச் சேர்ந்திருக்கவும் கூடும். இல்லை, எங்கள் இருவருக்கும் பொதுவான ஒரு லட்சிய நகரம் இல்லை என்பதாவது, ஒரு கட்டத்தில் தெளிவாகியிருக்கும்.

ஆனால் எந்த முடிவையும் காணாமல், நடுவழியில் பிரிந்து விட்டேன்.......'

ஹோட்டல் அறையில் படுக்கையில் படுத்துக்கொண்டிருந்த சுந்தரத்துக்கு இரண்டு வருஷங்களுக்கு முந்திய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருந்தன. பம்பாயிலிருந்து அன்று பிற்பகல் இரண்டரை மணிக்குத்தான் அவன் சென்னைக்குத் திரும்பி வந்திருந்தான். நேரே ஒரு ஹோட்டலுக்குப் போய்க் குளித்துச் சாப்பிட்டான். மாடியில் அவன் எடுத்திருந்த

கு. அழகிரிசாமி



தமிழ் எழுத்துலகிலே யதார்த்த வாதக் கதைகள் எழுதுவோர் என்றால் தமிழிலக்கியத்தோடு தொடர்புகொள்ளக் கூடாது என்ற சித்தாந்தம் நிலவும் நாளிலே, கம்பன் கவிதையிலும், அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்திலும் உள்ளம் பறிகொடுத்து நிற்பவர் கு. அழகிரிசாமி. அதனாலேயே அவர் தமிழ் நடையில் தனியான வேகமும், நளமும் தோன்றி 'அழகிய கதைகளுக்கு ஶ்ரீ. அழகிரிசாமி' என்று புகழ்ந்து பேசும் அளவுக்குப் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.



அறைக்குச் சென்று பிரயாணக் களைப்பைப் போக்குவதற்காகப் படுத்தான்.

நிலாவை — அவள் இன்னும் சென்னையிலேயே, அதுவும் அதே வீட்டிலேயே இருந்தால் — போய்ப் பார்ப்பதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் கழிய வேண்டும். அந்த மணிக்குத்தான் ஆபீஸிலிருந்து அவள் திரும்புவாள். அது வரையிலும் படுத்திருப்பது. முடிந்தால் கொஞ்சம் தூங்குவது என்பது அவன் உத்தேசம்.

'அன்று பம்பாயில் நானூற்றைம்பது ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்ததுதான் பெரிதாகப் போய் விட்டது. அவசரமாக, முன்பின் யோசிக்காமல் கிளம்பியதை வெட்டிக் கொண்டு பிரிந்தேன். நிலா! நான் போன பிறகு நீ எந்தப் பாதையில் போய்க் கொண்டிருக்கிறாய்? உன் பிரயாணம் இன்னும் தொடர்கிறதா? இல்லையென்றால் எங்காவது ஓரிடத்தில் ஏதோ ஒரு வீட்டில் முடிந்து விட்டதா? உன் வீடு திருவல்லிக் கேணியில் இருக்கிறது; நீ வேலை செய்யும் காரியாலயம் மவுண்ட் ரோடில் இருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் நீ இருப்பாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உன் யாத்திரா மார்க்கம் எங்கே இருக்கிறது? அங்கே நீ எந்த இடத்தில் நிற்கிறாய்?......

'அவள் எங்கே நின்றால் என்ன? அதைப் பற்றிக் கவலைப்பட எனக்கு இப்போது என்ன உரிமை இருக்கிறது? கவலைப்பட்டு இனி என்ன செய்ய முடியும்?......'

சுந்தரம் இப்போது தன் கல்யாணத்துக்காகத் திருநெல்வேலியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான். இரண்டு மாதம் லீவ் எடுத்துக் கொண்டு பம்பாயிலிருந்து வந்திருக்கிறான். அவன் ஊர் போய்ச் சேர்ந்த மறு நாளே கல்யாணம் நிச்சயமாகிவிடும். ஒரு மாதத்தில் கல்யாணம். அப்புறம் ஒரு மாதம் ஊரில் இருந்துவிட்டு பம்பாய்க்குத் திரும்ப வேண்டும்.

தனக்கு மனைவியாக வரப் போகிறவளின் போட்டோவைப் பார்த்தாகி விட்டது. அவள் அழகு ஸ்வரூபமாக இருந்தாள். நேரில் பார்க்கும் போது அதில் கால்வாசி அழகுடன் தோற்றம் அளித்தாலும் வேண்டாம் என்று உதறிவிட முடியாத ஒரு சௌந்தரிய வடிவம். முக்கால்வாசிக் கலைகள் குறைந்தாலும் சந்திரனின் அழகு குன்றி விடுவதில்லையே! பிறைச் சந்திரனுக்குமே அழகைப் பொறுத்தவரையில் ஒரு பூரணத்துவம் உண்டு அல்லவா? படத்தில் கண்ட அவளுடைய அழகு. தன் பெற்றோர்களின் கடிதங்களில் கண்ட அவளுடைய குடும்பப் பெருமைகள், செல்வம், செல்வாக்கு, அப்புறம் அவளுடைய படிப்பு — எல்லாமே கூரையைப் பிய்த்துக் கொண்டு வந்து தெய்வம் வலியக் கொடுத்த பாக்கியங்களாக இருந்தன. அவளை அவன் மணக்கப் போவது இரண்டும் இரண்டும் நான்கு என்பதுபோன்றதோர் உண்மையாகிவிட்டது.

'எனக்கு ஏன் இனி நிலாவின் யாத்திரா மார்க்கத்தைப் பற்றிய கவலை?' என்று நினைத்தான் சுந்தரம். சிறிது நேரத்தில் கண்ணயர்ந்து விட்டான்.

இரண்டு வருஷங்களுக்கு முன் திருவல்லிக்கேணியில் ஒரு மாடி அறையில் அவன் ரூமை வைத்துக்கொண்டு மாதம் இருநூறு ரூபாய்க்குக் குறைவான சம்பளத்தில் ஒரு கம்பெனி



யில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் தங்கியிருந்த வீட்டுக்கு ஐந்து வீடுகள் தள்ளி ஆறாவது வீட்டின் மாடியில் குடியிருந்தாள் நீலா. அவளுக்கு மாதம் நூற்றுப் பத்து ரூபாய் சம்பளத்தில் வேறொரு கம்பெனியில் 'டைப்பிஸ்ட்' வேலை. அவளுடைய தகப்பனார் காலமாகி விட்டார். தாயாரையும் இரண்டு தங்கைகளையும் அவளே சம்பாதித்துக் காப்பாற்றி வந்தாள்.



சுந்தரம் அந்தத் தெருவுக்கு வந்து ஒரு மாதம் கழிந்ததுமே நீலாவின் வீட்டார் அவனுக்கு அறிமுகம் ஆனார்கள். அவன் வேலை செய்யும் கம்பெனியில் அவனுடைய இலாகாவிலேயே சற்றுப் பெரிய பதவியிலிருந்த ராமச்சந்திரன் என்பவர் நீலா வீட்டாருக்குத் தூரத்து உறவு. அவர்தான் அவளுக்கு வேறொரு கம்பெனியில் வேலை வாங்கிக் கொடுத்தவர். ஒரு விடுமுறை நாளில் குடும்ப சகிதமாக அவர் நீலாவின் வீட்டுக்கு வந்து விட்டுத் திரும்பிப் போகும்போது சுந்தரம் எதிரே வந்தான். அதே தெருவில்தான் அவனும் ஜாகை வைத்துக் கொண்டிருக்கிறான் என்ற விவரத்தை அவர் அப்போது அறியலானார். நீலாவின் வீட்டாரைப் பற்றி அவர் சொல்ல அன்றுதான் முதல் முதலாக அவன் தெரிந்து கொண்டான்.

மற்றொரு நாள் அவர் நீலாவின் வீட்டுக்கு வந்திருந்தபோது அவனும் அவருடன் சென்றான். அதுதான் முதல் சந்திப்பு.

இரண்டாவது சந்திப்பு இராமச்சந்திரன் வீட்டில். நீலாவும் அவளுடைய தங்கையும் அங்கு வந்திருந்த சமயம், சுந்தரம் சந்தர்ப்பவசமாக அங்கே போயிருந்தான். இருவரும் பார்த்தார்கள்; பேசிக் கொண்டார்கள். அவன் ஒம்பது வார்த்தைகள் பேசியிருப்பான்; அவள் ஐந்து வார்த்தைகள்; இல்லை யென்றால் நான்கு வார்த்தைகள் பேசியிருப்பாள். இது அடக்கமா அல்லது அலட்சியமா என்பது புரியாத நிலை. என்னவென்று புரிந்து கொண்டு பேசிச் சோதனை செய்து கொண்டிருக்க அது இடமும் அல்ல; சந்தர்ப்பமும் அல்ல. இடத்தையும் சந்தர்ப்பத்தையும் மற்றொரு நாளில் அவள் வீட்டிலேயே உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தான் சுந்தரம்.

ஒரு நாள் அவன் நீலாவின் வீட்டுக்கு யாதொரு காரணத்தையும் சொல்லிக்

கொள்ள முடியாதவனாகப் போனான். ராமச்சந்திரனுக்கு 'நண்பன்' என்ற முறையில் அங்கே அவனுக்கு வரவேற்பு இருந்தது. அன்றும் நீலா ஐந்து வார்த்தைகள்தான் பேசினாள். அதிக நேரம் பேசியது அவளுடைய தாயார்தான். அந்த வீட்டில் ஆண்மகனைப் போல் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றி வரும் நீலா, ஆண்மகனைப் போலவேதான் நடந்துகொண்டாள். காம்பீர்யமான பேச்சு; நிமிர்ந்த பார்வை; மகிழ்ச்சியோ, துக்கமோ சாமான்யத்தில் பிரதிபலிக்க முடியாத ஒரு முகம். அங்கிருந்து அவன் ஜாகைக்குத் திரும்பியபிறகு, 'இது கர்வமாகவும் இருக்கலாம்; அலட்சியமாகவும் இருக்கலாம், இல்லையென்றால், துன்பங்களைச் சகித்துச் சகித்து உணர்ச்சிகளெல்லாம் கூர் மழுங்கி, துடிப்பிழந்து, மனசுக்குள் அவிந்து அடங்கிவிட்டதன் விளைவாகவும் இருக்கலாம்' — இப்படி சுந்தரம் நினைத்துக் கொண்டான்.

நீலாவுக்குக் கல்யாண வயது வந்து ஐந்தாறு வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. அவளுடைய தங்கைகளும் கூடத் திருமண வயதை அடைந்து விட்டார்கள். இரண்டாவது தங்கை பி. யூ. சி. படித்துக் கொண்டிருந்தாள். நீலா கல்யாணம் செய்து கொண்டு கணவன் வீட்டுக்குப் போய்விட்டால், குடும்பத்தைக் காப்பாற்ற யாருமே இல்லாமல் போய், எல்லோருடைய கதியுமே நிர்க்கதியாகிவிடும் என்பதனால்தான் அவள் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்க யாருக்கும் விருப்பமில்லை; துணிவும் இல்லை.

இந்த விவரங்களை ராமச்சந்திரன் மூலம் அறிந்த சுந்தரம் அவள் குடும்பத்தின் நிலைக்காக மிகுந்த அனுதாபம் காட்டினான்.

'நீலாவையே கல்யாணம் செய்துகொண்டு அவள் வீட்டோடு இருந்தால் என்ன?' என்றும் ஒரு நாள் சுந்தரம் நினைத்தான். ஆனால் அதற்குப் பல தடங்கல்கள் இருப்பதாக அவனுக்கு அப்பொழுதே தோன்றியது. மனைவியின் வீட்டில் போய் ஒருவன் வசிப்பது விரும்பத் தகாத விஷயம் என்பது ஒருபுறமிருக்க, அவனும் தன் பெற்றோர்களைத் தன் சம்பாத்தியத்தினால் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருந்தான். எனவே நீலா வீட்டாரோடு போய் அவனால் வசிக்கவே முடியாது. அவளும் தன் தாயாரையும் தங்கைகளையும் விட்டுவிட்டு அவன் வீட்டுக்கு வர முடியாது. அப்படியே இருவரும் தம்பதிகளாகி ஒரு வீட்டில் குடித்தனம் ஆரம்பித்தாலும், இருவர் சம்பாத்தியத்தையும் வைத்துக்கொண்டு சுந்தரத்தின் பெற்றோர்களையும் நீலாவின் வீட்டாரையும், அப்புறம் தங்கள் இருவரையும், ஆக மூன்று குடும்பங்களைக் காப்பாற்றி வர முடியாது. அதனால் அவளை மணந்து கொள்ள நினைப்பது நிறைவேற முடியாத ஓர் ஆசையாகவே இருந்தது.

திருவல்லிக்கேணிக்குச் சுந்தரம் வந்து சேருவதற்கு முன்பே திருநெல்வேலியில் இருந்த போதே அவனுக்கு பம்பாயில் வேலை கிடைப்பதாக இருந்தது. நம்பிக்கையோடு நண்பனுடைய கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று ஒரு நாள் பெரிய ஏமாற்றத்தை அளிக்கும் அந்தக் கடிதம் வந்து சேர்ந்தது.

''இந்தத் தடவை என் முயற்சி தோற்றுவிட்டது. இதற்காக நான் நம்பிக்கையை அடியோடு இழந்து விடவில்லை. நீயும் இழக்க வேண்டியதில்லை. அடுத்த வருஷமும் இதே சமயத்தில் இதே கம்பெனியில் சில வேலைகள் காலியாகும். நிச்சயமாக உனக்கு இடம் பிடித்து விடுகிறேன்'' என்று பம்பாயிலிருந்து ஜயராமன் எழுதியிருந்தான்.

'அடுத்த வருஷம்' என்பது ஏமாற்றத்தைப் போக்குவதற்குச் சொல்லும் ஆறுதல் வார்த்தையாகவே அவனுக்குத் தோன்றியது. அவ்வளவுதான்; இனி பம்பாய் ஆசையையும் பெரிய சம்பளக் கனவையும் விட்டுவிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று ஒரு விரக்தியுடன் சென்னையில் குறைந்த சம்பளத்தில் வேலை தேடிக் கொண்டு, திருவல்லிக்கேணிக்கு வந்து சேர்ந்தான் சுந்தரம். ஆனால் ஜயராமன் மட்டும் மாதம் தவறாமல் பம்பாயிலிருந்து நம்பிக்கையூட்டும் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தான். ஒரு கடிதத்தில் 'இன்னும் மூன்று மாதங்கள்தான். அப்புறம் பம்பாய்க்காரன். இதை நம்பி நீ எது வேண்டுமானாலும் செய்யலாம். இப்போதே மூட்டையைக் கட்டி வைத்துக் கொண்டு ரயில் ஏறத் தயாராக இரு' என்று ஜயராமன் எழுதியிருந்ததைப் பார்த்த சுந்தரம், அன்று முதல் சென்னையில் ஒரு காலும் பம்பாயில் ஒரு காலும் வைத்து நடக்கத் தொடங்கினான். ஜயராமனின் கடிதத்தில் கண்ட விவரங்களையெல்லாம் நீலாவிடமும் ஒருநாள் சொன்னான்.

''நீலா! இன்னும் மூன்று மாதங்களில் நான் பம்பாய்க்குப் போய் விடுவேன் போலிருக்கிறது. உங்கள் வீட்டாரின் அன்பை என்னால் என்றென்றைக்கும் மறக்க முடியாது.''

''உங்களுக்கு அப்படி என்ன நாங்கள் செய்துவிட்டோம்! ஒன்றுமே இல்லை. நீங்கள் பம்பாய்க்குப் போய்ச் சௌக்கியமாக இருங்கள்'' என்றாள் நீலா.

தனியே இருந்த சுந்தரத்துக்கு உள்ளத்தில் துயரச் சாயை படர்ந்தது.

'நீலாவும் நானும் ஒரே பாதையில் போய்க் கொண்டிருந்தோம். இன்பகரமான அந்த வழிப்பயணம் விரைவில் முடியப் போகிறது. எத்தனை தடங்கல்கள்! எத்தனை தயக்கங்கள்!'

இனிப் பாதை வெட்டி, விடைபெற்றுக் கொண்டு பம்பாய்க்குப் போயாகி விட்டது. சில நாட்கள் நீடித்த ஏமாற்றமும், ஏக்கமும் பிரிவுத் துயரும் மறைந்து விட்டன. சம்பாத்தியத்திலேயே சுந்தரம் கண்ணும் கருத்துமாக இருந்தான். அவனுக்கு நீலாவின் ஞாபகம் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் முழு வேகத்துடன் தலை தூக்கியது. சுந்தரம் அப்போது தன் நண்பன் ஜயராமன் வீட்டில் இருந்தான். சுந்தரத்துக்கு இன்னும் இரண்டு மாதங்களில் மனைவியாகப் போகிறவளின் போட்டோவை ஜயராமன் வாங்கிப் பார்த்தான்; அவளுடைய குடும்பத்தின் செல்வத்தையும், செல்வாக்கையும் பற்றிச் சுந்தரத்தின் வாய்மொழி மூலம் அறிந்தான். முடிவில் தன் முழுத் திருப்தியைத் தெரிவித்து நல்வாழ்த்துக் கூறினான் ஜயராமன்.


எனக்கு என்னதான் வந்து விட்டது?
எனக்கு எப்பொழுதும் ஒரே சோர்வு. எதற்கெடுத்தாலும் எரிச்சலும் சிடுசிடுப்புமாய் இருந்தேன். அக்கம்பக்கத்தவர்கள் கூட என்னிடமிருந்து ஒதுங்கியே இருந்தார்கள்!
எங்கள் டாக்டர் என் சோர்வைப் போக்க வழி சொன்னார். சரியான போஷாக்கின்மைதான் சக்திக் குறைவுக்கு காரணம் என்றார். ஹார்லிக்ஸ் அருந்தும்படி சொன்னார்.
Horlicks
ஹார்லிக்ஸ் விரைவிலேயே எனக்கு சக்தியளித்தது! அதோடு என் பழைய தெம்பும் திரும்பியது. ஹார்லிக்ஸ் என் வாழ்க்கையை மீண்டும் மகிழ்ச்சிகரமாக்கியது!
Horlicks
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி யளிக்கிறது!


எக்காலத்திலும்
மகோன்னதமானது
அரவிந்த்
இப்பெயர் மிக கீர்த்தியான ஜவுளி ரகங்களின் சின்னம்
விதவிதமான தினுசுகள்
சான்ஃப். பாப்ளின்ஸ்:
ஷர்ட்டிங்ஸ்: ஸ்டிரைப், டாப்பி, செக், பைஜாமா
தோதீஸ்: மெர்ஸிரைஸ்ட் லான்: 5531, ஸூட்டிங்ஸ்: கபர்டின்
பிரிண்ட்ஸ்: ப்ரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்
நெசவான கலர் புட்டாக்கள்
2 x 2 கவர்ச்சியான முழு வாயில்கள் - லினோவிலும், புட்டாக்களிலும்
SANFORIZED
Arvind Quality
டெரிலீஸ்ட் * மற்றும்
டெரிலீஸ்ட் டபுள்
டெஸ்டெட்
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அஹமதாபாத்
* Registered User

ஹோட்டல் அறையில் சுந்தரம் தூங்கி எழுந்தபோது மணி ஐந்து அடித்துவிட்டது. நீலா இப்போது ஆபீசிலிருந்து வீட்டுக்குப் போய்க் கொண்டிருப்பாள் என்று நினைத்துக் கொண்டே முகத்தைக் கழுவி, உடைகளை மாட்டிக் கொண்டு மாடியை விட்டுக் கீழே இறங்கி வந்தான். ஒரு டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு திருவல்லிக்கேணிக்குப் புறப்பட்டான்.

'விட்ட குறை என்பது ஒரு ஜன்மத்திலிருந்து மறு ஜன்மத்துக்குத் தொடரும் என்பார்கள். எனக்கோ இந்த ஜன்மத்திலேயே தொடரும் ஒரு விட்ட குறையாக இருக்கிறது நீலாவின் தொடர்பு. இந்தக் குறையை இனி எந்த ஜன்மத்திலும் என்னால் பூர்த்தி செய்ய முடியாது....

'அதிர்ஷ்டவசமாக அவள் உணர்ச்சி வசப்படக் கூடியவள் அல்ல. என் கல்யாணச் செய்தியை அறிந்து ரகசியமாகக் கூட அவள் அழமாட்டாள். கலகலப்பாகத்தான் நடந்து கொள்வாள். வழக்கம்போல் ஐந்து வார்த்தைகள் பேசுவாள். அவளைப் பார்த்தால் எனக்குத்தான் ஒருவேளை மனக் கஷ்டம் உண்டாகலாம்.... பாவம்! அவளுடைய மௌனத்திலும் அலட்சியப் போக்கிலும் அன்பு துளித்தது என்பது எனக்கல்லவா தெரியும்? இனி அவள் யாரோ? நான் யாரோ? இன்றோடு இந்த உறவுக்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிடும். நீலாவை என் மனப் பீடத்திலிருந்து நிரந்தரமாக நீக்கி விடுவதற்காகப் போகிறேன். கடைசி முறையாக அவளைப் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறேன்...'

டாக்ஸி நீலாவின் வீட்டு வாசலில் போய் நின்றது. சுந்தரம் இறங்கி வீட்டுக்குள் போனான். அவன் போனபோது எல்லோருமே வீட்டில் இருந்தார்கள். அவனை அன்போடு வரவேற்றார்கள். நீலா ஐந்து வார்த்தைகள் அல்ல, ஐம்பது வார்த்தைகளுக்கு மேலேயே பேசினாள். அவளுடைய தாயார் அவனை ராஜ மரியாதையோடு வரவேற்றது. அவளுடைய மனசுக்குள் ஏதோ ஒரு நம்பிக்கை தளிர்த்திருப்பது போல் தோன்றியது. நீலாவின் தங்கைகள் இருவரும் அவனை வைத்த கண் வாங்காமல் அந்நியோந்நியமான ஒரு பிரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"பம்பாய் வாழ்க்கை எப்படி இருக்கிறது?" என்று கேட்டாள் நீலா.

"நன்றாகத்தான் இருக்கிறது."

"போய் இரண்டு வருஷங்களாகியும் ஒரு கடிதம்கூடப் போடவில்லையே?" என்று கேட்டாள் நீலாவின் தாயார்.

"ராமசந்திரனுக்கு எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் உங்கள் க்ஷேம லாபங்களை விசாரித்துக் கொண்டுதான் இருந்தேன். உங்களுக்கு என்று நான் தனியாகக் கடிதம் எழுதவில்லை. அது குற்றம் என்றால் மன்னிக்க வேண்டும்."

"மன்னிக்கவே முடியாது" என்று சொல்லி விட்டு நீலா சிரித்தாள். அவள் உட்பட எல்லோருமே சிரித்தார்கள்.

நீலாவின் பேச்சு அவனுக்கு இன்பகரமான ஓர் அதிர்ச்சியையே அளித்தது.

சிறிது நேரம் ராமச்சந்திரன் வீட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். நீலாவின் கடைசித் தங்கை உத்தியோகத்துக்கு மனுப் போட்டிருக்கும் செய்தியையும், அதற்கும் ராமச்சந்திரனின் உதவியையே நம்பிக் கொண்டிருப்பதையும் அவனுக்குத் தெரிவித்தார்கள்.

'மூன்று வருஷங்களுக்கு முன் இவள் மனுப் போட்டு, உத்தியோகத்துக்கும் போயிருந்தால் கதையே மாறியிருக்கும். நீலா என் மனைவியாகி என்னோடு பம்பாய்க்கு வந்திருப்பாள். இப்பொழுது காலம் கடந்து விட்டதே' என்று ஒருவருக்கு அவன் வருந்தினான். அடுத்த நிமிஷத்திலேயே தனக்குக் கல்யாணம் நடக்கப் போவதையும் அதற்காகவே தான் பம்பாயிலிருந்து வந்திருப்பதையும் அவன் தெரிவித்தான்.

நீலா அதைக் கேட்டதும் முகத்தில் ஒரு சலனமும் இல்லாமல் அவன் கண்களையே கூர்ந்து பார்த்தாள். அவளுடைய தாயாரும் ஏறக்குறைய அதே நிலையில்தான் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுடைய கல்யாணச் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டவர்கள் நீலாவின் தங்கைகள் இருவரும்தான்.

"நிச்சயம் ஆகிவிட்டதா சுந்தரம்? எந்த ஊர்ப் பெண்?"

"அவளுக்கும் திருநெல்வேலிதான். நிச்சயம் ஆன மாதிரிதான். அடுத்த மாதம் முகூர்த்தம்..."

"ரொம்ப சந்தோஷம் சுந்தரம்! பெண் வீட்டார் வசதி எப்படி? எவ்வளவு செய்வார்கள்?" என்று தாயாரே கேட்டாள்.

பத்தாயிரம் ரூபாய் வரதட்சிணை கொடுப்பார்கள் என்ற விவரத்தையும், பெண் வீட்டாரின் செல்வ நிலையையும் அவன் விரிவாக எடுத்துச் சொன்னான்.

"எங்களால் கல்யாணத்துக்கு வர முடியுமோ இல்லையோ, நீ பம்பாய்க்கு மனைவியை அழைத்துக் கொண்டு போகும்போது இங்கே ஒரு நாளாவது தங்கிவிட்டுப் போக வேண்டும்" என்றாள் நீலாவின் தாயார்.

அவ்வளவு நேரமும் மௌனமாக உட்கார்ந்திருந்த நீலா திடீரென்று எழுந்து வீட்டுக்குள் போனாள். அவள் அப்படிப் போனது எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தது. எல்லோருக்குமே அது ஒரு மர்மமாக இருந்தது. ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தார்கள்.

சூழ்நிலையை மாற்றும் நோக்கத்துடன், "பம்பாய்க்குப் போகும்போது கட்டாயம் வரவேண்டும் சுந்தரம்!" என்று நீலாவின் தாயார் மறுபடியும் சொன்னாள்.

"உங்களைப் பார்க்காமலா நான் பம்பாய்க்குப் போவேன்? நீங்கள் அழைக்காவிட்டாலும் நான் மனைவியோடு வருவேன். உங்களை அவளுக்கு அறிமுகப்படுத்தி, 'நான் திருவல்லிக்கேணியில் இருந்தபோது எனக்குத் தாயும், உடன் பிறந்த சகோதரிகளுமாக இருந்தவர்கள்' என்று மகிழ்ச்சிப் பெருக்கோடு அவளுக்குச் சொல்வேன்."

இதைச் சொல்லும்போது சுந்தரத்துக்குக் கண்கள் நனைந்தன. அந்த அம்மாளும் ஒரு

பெருமூச்சுடன் அவன் முகத்தை எறிட்டுப் பார்த்தான்.

மேற்கொண்டு பேச எதுவும் இல்லை. நீலாவின் வருகையை எதிர்பார்த்தவாறு அவன் உட்கார்ந்திருந்தான்.

நீலா வெளியே வரும்போது உடை மாற்றிக்கொண்டு வந்தாள். வெளியே எங்கோ போகிறவள் போல் காணப்பட்டாள்.

''நீலா! எங்கே புறப்பட்டு விட்டாய்?''

''ராமச்சந்திரன் மனைவியைப் பார்க்கப் போகிறேன். ஜவுளிக் கடைக்குப் போகிறாளாம். என்னையும் அழைத்தாள்'' என்று சொல்லிவிட்டு நாற்காலியின் ஓர் ஓரத்தில் உட்கார்ந்தாள். சுந்தரம் எழுந்து போவதற்காகக் காத்திருப்பவள்போல் இருந்தது அவள் உட்கார்ந்திருந்த நிலை.

குறிப்பறிந்து சுந்தரம் எழுந்து, ''நானும் ரயிலுக்குப் போக வேண்டும். போய் வரட்டுமா?'' என்று எல்லோரையும் பார்த்துச் சொன்னான்.

''உட்காருங்கள்'' என்றாள் நீலா.

அவன் திகைத்தான்.

''காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்று சொன்னாள்.

சுந்தரம் அளவிட முடியாத ஒரு மகிழ்ச்சியோடு உட்கார்ந்தான்.

''காப்பி போடத்தான் அவ்வளவு அவசரமாக உள்ளே எழுந்து போனாயோ?'' என்று சொல்லிவிட்டு அந்த அம்மாள் வீட்டினுள்

முக்தி வழியிலே...

விஷ்ணு

இப்பிறவியில் நமக்கு முக்தி கிடைக்குமா? — காவிரிக் கரையில் யோக சாதனையில் ஈடுபட்டிருந்த தவயோகி ஒருவரின் மனத்தில் இந்தக் கேள்வி எழுந்தது.

அவர் பெரிய சித்த புருஷர் என்று பேசிக் கொண்டார்கள். மணம் மிகுந்த மலரின் நறுமணம் நாற்புறமும் விரிந்து பரவுவது போல அவரது யோக சாதனை தனது கீர்த்தி என்னும் மணத்தை நாடெங்கும் பரப்பியிருந்தது. வெகு தொலைவிலிருந்தெல்லாம் அவரைக் கண்டு தரிசித்துக் கண் பெற்ற பயனைப் பெறுவதற்காக மக்கள் வந்த வண்ணம் இருந்தனர்.

பத்மாசனமிட்டு அவர் யோக சாதனையில் அமர்ந்துவிட்டாரானால் அவரது முகத்திலிருந்து ஒரு திவ்விய தேஜஸ் ஒளிரும். அதைக் கண்ணுற்று நாஸ்திகத்தில் ஊறிக் கிடக்கும் மனிதன்கூட பக்தி சிரத்தையுடன் தலைகுனிந்து மெய் சிலிர்ப்பான் என்றால் அந்த அருட் பிரகாசத்தை என்னவென்பது?

இப்பிறவியில் நமக்கு முக்தி கிடைக்குமா, கிடைக்காதா? — இந்தக் கேள்வி அத்தகைய தேசு பொருந்திய மகாத்மாவின் மனத்தில் தலை எடுப்பானேன்?

சம்சாரமா விருக்ஷம் என்னும் பேருண்மையை உணர்ந்திருந்தபொழுதிலும் அந்தத் தவயோகியினால் தம் மனத்தில் கிளர்ந்துவிட்ட அந்தச் சந்தேகத்தைக் கிள்ளி எறிய முடியவில்லை.

நாளடைவில் அந்தச் சந்தேகம் அவர் மனத்தில் வேரூன்றிச் சிறு வித்திலிருந்து எழும் ஆலமரமெனத் தழைத்து வளர்ந்துவிட்டது. அதைப் போக்கிக் கொள்ள என்ன வழி என்று யோசித்த பொழுது, அவருக்கு ஓர் இல்லறத்தாரின் நினைவு வந்தது. அவர் தமது இல்லற வாழ்வை எவ்வித மறுவுமின்றிப் போற்றிப் பாதுகாத்து வந்தவர். இல்லறம் என்னும் நல்லறம் அவரைப் போன்று அறம் வழுவாதவரை அடைந்து பொருளும்புகழும்பெற்றது என்று கூறினால் மிகையாகாது. அவர் ஆசார விசாரங்களில் ராஜரிஷி ஜனகருக்கு நிகராக விளங்கினார். அவரது நல்லொழுக்கம் நாடு முழுவதையும் தன்பால் கவர்ந்திருந்தது.

அதனால் யாருக்காவது எப்பொழுதாவது ஏதாகிலும் சந்தேகம் எழுந்தால் உடனே அந்தக் கிருகஸ்தரை நாடித் தங்கள் சந்தேகத்தைத் தீர்த்துக்கொண்டு மனநிறைவு எய்தி வந்தார்கள். அவரைத் தரிசித்த மாத்திரத்திலேயேகூடச் சிலரது சந்தேகங்கள் பனிபோல விலகிவிடும். அப்புறம் என்ன? தூய மனத்துடன் அவரைத் தரிசித்ததே பெரும் பாக்கியம் என்ற மன அமைதியுடன் திரும்புவார்கள் மக்கள்.

அவர் நினைவு வந்ததுதான் தாமதம், தவயோகி அவரைக் காணப் புறப்பட்டுவிட்டார். அவர் உள்ளத்தின் வேகத்துக்கேற்ப அவரது கால்களும் ஈடு கொடுத்து நடந்தன.

கிருகஸ்தரின் கிராமத்தை அவர் அடைந்தபொழுது நண்பகல் நேரமாகிவிட்டது. கிருகஸ்தர் நியமப்படி மாத்தியான்னிகம், பிரும்மயக்ஞம் முதலான தமது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு — தினம் போல வாசலுக்கு வந்தார், யாராவது பசித்தவர்கள் வாசலில் இருக்கிறார்களா என்று பார்ப்பதற்காக.

அதே நேரத்தில் அந்தத் தவயோகி அவரது வீட்டு வாசலில் வந்து நின்றார். கிருகஸ்தர் தம் வீட்டு வாசலில் துறவியொருவர் வந்து நிற்பதைக் கண்டதும் உள்ளே ஓடினார். அவரது கால்களைக் கழுவி வரவேற்பதற்காகச் செம்பில் நீரை எடுத்து வந்தார். சிறிது நேரத்தில் அவருக்கு விளங்கி விட்டது. சந்நியாசி கரபாத்ரி - அதாவது 'மதுகரம்' பெற்று உண்பவர் என்று! கரபாத்ரிகள் கையேந்திப் புசிப்பார்களே ஒழிய வீட்டிற்குள் வந்து பிக்ஷை ஏற்க மாட்டார்கள். ஆகையால் கிருகஸ்தர் உள்ளே சென்று ஒரு பாத்திரத்தில் அவருக்காக உணவுப் பொருள்களை எடுத்து வந்தார்.



துறவி கை நீட்டினார். அவர் கையில் ஒரு பிடி அன்னத்தை வைத்தார் கிருகஸ்தர். அதை ஏற்ற பின் மீண்டும் கை நீட்டினார் துறவி. கிருகஸ்தர் மற்றுமொரு கவளத்தை அவர் கையில் வைத்தார். இது மாதிரி மூன்று முறைகள் அன்னத்தை வாங்கிக் கொண்ட பின் துறவி அடுத்த பிடிக்காகக் கைநீட்டவில்லை.

சில கர பாத்ரிகளின் நியமம் இது. மூன்று கவளங்களுக்கு மேல் வாங்கிக் கொள்ள மாட்டார்கள். கிருகஸ்தருக்கு அவரது நியமம் என்ன என்பது புரிந்துவிட்டது. ஆயினும் நான்காம் முறையும் தம் கையில் உணவை எடுத்தார். துறவியின் கையில் கொடுப்பதற்காக நீட்டினார். ஆனால் துறவி அதைப் பெறக் கையை நீட்டவில்லை. கிருகஸ்தர் புன்முறுவலுடன் கூறலுற்றார்: சுவாமிகளே! கரபாத்ரிகளின் நியமங்கள் எனக்கும் கொஞ்சம் தெரியும். இருந்தாலும் நீங்கள் வெகு தொலைவிலிருந்து வந்திருக்கிறீர்கள். மிகவும் களைப்பாகவும் காணப்படுகிறீர்கள். அதனால் என் வேண்டுகோளை நிராகரிக்காதீர்கள். இன்று மாத்திரம் கருணை கூர்ந்து எனக்காக இன்னுமொரு கவளத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கிருகஸ்தரின் வினயமான வேண்டுகோளைக் கேட்டுத் துறவி

சென்றாள். அவளைத் தொடர்ந்து நீலாவின் கடைசித் தங்கை சாந்தியும் எழுந்து போனாள்.

''ஒருவன் வீடு தேடி வந்திருக்கும்போது இப்படி நடுவே எழுந்து அவசரமாக வெளியே போக உனக்கு எப்படித்தான் தோன்றுகிறதோ, நீலா! நீ என்ன செய்யப் போகிறாய் என்பதை அந்த ஒரு நிமிஷம் வரையிலும் கூட யாராலும் யூகிக்க முடியாது.''

''நீங்கள் ஏன் எங்களைக் கலியாணத்துக்கு அழைக்கவில்லை? ஒரு வார்த்தை கூட 'வாருங்கள்' என்று சொல்லவில்லையே!''

''முகூர்த்தம் வைத்ததும் முதல் அழைப்பு உங்களுக்கு அனுப்பாமல் வேறு யாருக்கு அனுப்பப் போகிறேன்? இதைச் சொல்லியா தெரிந்து கொள்ள வேண்டும்?'' என்றான்.

''ஐயோ! உங்களுக்குத்தான் எங்கள் மேல் எவ்வளவு அன்பு!'' என்று சொல்லிவிட்டு நிலா சிரித்தாள். அவளுடைய வார்த்தைகள் அவன் உள்ளத்தில் ஆழமாகத் தைத்தன.

''ஏன் இப்படிச் சொல்கிறாய் நீலா?''

''உண்மையைத்தான் சொல்கிறேன். உங்களுடைய அன்பு எங்களைப் பிரமிக்கும்படி செய்கிறது! இவ்வளவு அன்பாக நீங்கள் இருப்பது இதுவரையிலும் எங்களுக்குத் தெரியாமல் போய் விட்டதே என்றுதான் வருத்தப்படுகிறேன்'' என்றாள் நீலா. உடனே பக்கத்தில் உட்கார்ந்திருந்த தன் தங்கையைப் பார்த்து, ''போய்க் காப்பி போட்டாகிவிட்டதா என்று பார். நான் அவசரமாகப் போக வேண்டும்'' என்றாள்.

வேதாந்தக் கதை

சிறிது தயங்கினார். ஆயினும் கிருகஸ்தரின் அன்பு மனம் நோகக் கூடாது என்பதற்காக நான்காவது கவளத்தையும் பெறுவதற்காகக் கையை நீட்டினார்.

கிருகஸ்தர் நான்காவது கவளத்தைக் கொடுக்கும்பொழுது மனத்துள் சிரித்துக் கொண்டார். பிறகு துறவியைப் பார்த்துச் சொன்னார்: சுவாமி, தாங்கள் வெகு தொலைவிலிருந்து எதற்காக வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். இப்பிறவியில் தங்களுக்கு முக்தி கிடைக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.

இதைக் கேட்டதும் துறவிக்குக் கிருகஸ்தரின் மீது கோபம் ஏற்படவில்லை. புலனடக்கம் பேணும் சாதுக்கள் எதற்காகக் கோபித்துக் கொள்ளப் போகிறார்கள்? ஆனால் அவருக்குச் சொல்லொணாத ஓர் ஆச்சரியம் மட்டும் ஏற்பட்டது. எனவே கிருகஸ்தரை நோக்கிக் கேட்டார்:

ஐயா! நான் எந்த நோக்கத்துடன் இங்கே வந்திருக்கிறேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது? எதை ஆதாரமாகக் கொண்டு எனக்கு இப்பிறவியில் முக்தி இல்லை என்று கூறுகிறீர்கள்?

இந்தக் கிராமத்தில் எத்தனையோ வீடுகள் இருக்கின்றன. எத்தனையோ பேர் துறவியான தங்களுக்கு பிட்சை அளித்துத் தங்களைக் கடைத்தேற்றிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது தாங்கள் வெகுதூரம் நடந்து என் வீடு தேடி வந்துள்ளீர்கள். காரணமில்லாமல் இராது என்று முடிவு கட்டினேன். அசந்தைபோடு நான் சொல்வதாக நீங்கள் எண்ணாமலிருந்தால் கூறுகிறேன். உங்கள் மனத்திலும் ஏதோ ஐயம் புகுந்திருக்க வேண்டும். அதை நிவர்த்தி செய்துகொள்ளவே தாங்கள் என் வீடு தேடி வந்திருக்கிறீர்கள் என்று நான் ஊகித்தேன். தங்கள் மனத்தில் உள்ளதைத் தெரிந்து கொள்வதற்காக அதிகப்பிரசங்கித்தனமான ஒரு காரியம் செய்தேன். நான் மூன்று முறைகள் தங்களுக்கு அன்னம் அளித்த பிறகும், எனக்காக இன்னுமொரு கவளம் ஏற்கக்கூடாதா? என்று கேட்டேன், அது தங்கள் உள்ளக் கிடக்கையைப் புரிந்து கொள்வதற்காகத்தான். தாங்கள் எதும் மறுத்துச் சொல்லாமல் கைநீட்டிவிட்டீர்கள். புலனடக்கம் கொண்ட தங்களைப் போன்ற துறவிகளின் சந்தேகம் சாதாரணமாயிராது. மகத்துவம் வாய்ந்ததாகத் தான் இருக்கும் என்று முடிவு கட்டினேன். என்னை அறிவாளி என்றுஎண்ணி நான் உங்களுடைய கேள்வியை ஊகித்து அதற்கான பதிலைக் கூறவில்லை. தங்களைப் போன்ற மேலோர்களின் நிலைக்கு உயர்ந்து இப்படி ஒரு கருத்தை மனத்தில் கொண்டு பதிலளித்தேன்! - கிருகஸ்தர் வினயமே உருவாகக் கூறினார்.

சந்நியாசி பதில் கூறவில்லை. அவர் பேச்சில் உள்ள உண்மையை ஆமோதிப்பவர் போல் அமைதியாக நின்றார்.

கிருகஸ்தர் மேலும் தொடர்ந்தார்: வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர முற்படுவோர் மனத்திலே ஓர் உறுதி வேண்டும். பொறிவாயில் ஐந்தவித்துப் பொய்தீர் ஒழுக்க நெறி கொள்ள வேண்டும். ஆசைக்கும் அன்புக்கும் பரிவுக்கும் வசப்படக் கூடாது. பற்றையும் - பற்றின்மையையும் ஒன்றாய்ப் பாவிக்க வேண்டும். தாங்கள் அந்த நிலையை அடைந்துவிட்டீர்களா என்பதை அறியத்தான் நான் எனக்காக இன்னொரு பிடி என்றேன். தாங்கள் என் மனம் கோணக் கூடாது என்பதற்காகக் கைநீட்டி விட்டீர்கள். இதைக் கொண்டு தங்கள் மனம் இன்னும் பக்குவம் அடையவில்லை என்று முடிவு கட்டினேன். பக்குவப்பட்டிருந்தால் என் பொருட்டுத் தாங்கள் இன்னுமொரு கவளம் ஏற்க முன்வந்திருப்பீர்களா? அதனால் தான் இப்பிறவியில் தங்களுக்கு முக்தி இல்லை என்று நான் கூறினேன். என்னையறியாமல் ஏதாவது நான் தவறு செய்திருந்தால் என்னை மன்னித்தருள வேண்டும்!



கிருகஸ்தர் பேச்சை முடித்தார். துறவியின் மனக் கடலிலே ஓர் அலை எழுந்தது.

''அன்பின் வழி அது உயிர்நிலை ஆயிற்றே! தங்கள் அன்புக்குப் பணிந்து....''

கிருகஸ்தரிடம் தமது இந்தக் கேள்வியைக் கேட்கலாமோ என்று எண்ணினார் துறவி. அதற்குள்ளாகக் கிருகஸ்தரே கூறினார்:

சிவமான அன்புக்கு அடைக்கும் தாழ் கிடையாது. உயிரோடு உயிராகக் கலந்திருக்கும் அந்த அன்பு தான் தங்களுக்கு இப்படி ஒரு வினையைக் கூறத் தூண்டியது.

கிருகஸ்தரின் அறிவாற்றலையும் மனப் பக்குவத்தையும் மனத்துள் பாராட்டிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டு விட்டார் தவயோகி.

துறவியின் நடையில் முக்தி பெற்றே தீருவது என்னும் உறுதி நடை போடுவதைக் கண்ட கிருகஸ்தரும் தமது வருங்கால ஆசிரமத்துக்குத் தம் மனத்திலேயே வித்திட்டுக் கொண்டார்.



முறை தவறிய காதலை எடுத்துக் கொண்டு சித்திரிப்பது எளிது. கதையும் கவர்ச்சியாக அமையும். ஆனால் அது மக்களுக்குப் பயன்படாது. காரண காரிய விதி வாழ்க்கையில் எவ்வாறு வேலை செய்கிறது என்பதை விளக்குவதற்காக நெறி தவறிய காதலைப் பற்றிக் கதைகள் எழுதப் பெறலாம். ஆனால், விஷம் கலந்த மருந்துகளைப் போல், அது மிக்க ஜாக்கிரதையாகவே கையாளப்பட வேண்டும்.

— ராஜாஜி

''உன் அவசரத்துக்கு நான் குறுக்கே நிற்கவில்லை. காப்பி சாப்பிடாவிட்டால் என்ன? இன்னொரு முறை சாப்பிட்டுக் கொண்டால் போகிறது. நீ எனக்காக ஏன் காத்திருக்கிறாய்?'' என்றான் சுந்தரம்.

பக்கத்தில் வேறு யாரும் இல்லை என்பதை ஒரு முறை திரும்பிப் பார்த்து நிச்சயப்படுத்திக்கொண்டு, ''இவ்வளவு அன்போடு தேடி வந்திருக்கும் உங்களுக்குக் காப்பி கூடக் கொடுக்காமல் நான் எழுந்து போகலாமா?'' என்றாள். மறு நிமிஷமே, ''நீங்கள் எதற்காக இப்போது இங்கே வந்தீர்கள்?'' என்று கடுமையான குரலில் கேட்டாள் நிலா.

சுந்தரத்துக்கு ரத்த ஓட்டமே நின்றுவிட்டது. எதிர்பாராதவாறு வந்து தன்னை ஒரு சுட்டி தாக்கியது போல் இருந்தது.

''நிலா! ஏன் இப்படிக் கேட்கிறாய்? நீ பேசுவது எதுவுமே எனக்குப் புரியவில்லை.''

''புரியவே வேண்டாம்...'' என்று சொல்லிவிட்டு உள்ளே திரும்பித் தங்கையை அழைத்தாள்.

''சாந்தி! சீக்கிரம் காப்பியை எடுத்துக் கொண்டு வா. எவ்வளவு நேரம்?'' என்று குரல் கொடுத்தாள்.

காப்பி வந்தது. அவனும் அதை எடுத்துக் குடித்தான். ஆனால் அவன் எதிர்பார்த்தபடி நிலா வெளியே போக எழுந்திருக்கவில்லை. அவனுக்கு எதிரே அவனைப் பார்த்தவாறு உட்கார்ந்துகொண்டுதான் இருந்தாள்.

''நான் வந்ததால் உனக்கு மனக் கஷ்டமா நிலா? சொல்! உண்மையைச் சொல்.''

அவள் பேசவில்லை.

சுந்தரம் தன்னை அறியாமலே அவள் கையைப் பிடித்தான்.

அவன் கையை அவள் முரட்டுத்தனமாக உதறிவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தாள். முகத்தில் ரத்தம் குபீரென்று பாய்ந்தது. முகமெல்லாம் கனலாகச் சிவந்துவிட்டது.

''யார் நீ?... அயோக்கியன்! மரியாதையாக எழுந்து போய்விடு'' என்று சீறினாள்.

''நிலா! என்னை... என்னை... மன்னிக்க வேண்டும்...''—அவனுக்கு வாய் குழறியது.

தெருவைப் பார்த்துக் கையை நீட்டிக் கொண்டு, ''வெளியே போ'' என்றாள்.

சுந்தரம் தயங்கினான்.

''போய் விடு!'' என்று கண்டிப்போடு சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

ஒன்றும் தோன்றாமல் உட்கார்ந்திருந்தான் சுந்தரம். அவன் உடம்பெல்லாம் மரத்து விட்டது. உள்ளேயிருந்து யாருமே வெளி வரவில்லை.

தன்னுணர்வு சிறிது மீண்டதும் அந்த இடத்தை விட்டு எழுந்தான். அதி வேகமாக வீட்டை விட்டு வெளியேறினான்.

சுந்தரம் அன்றிரவு ரயிலுக்குப் போகவில்லை. ராமச்சந்திரனைப் பார்த்துத் தன் கல்யாணச் செய்தியைச் சொல்லாமல் ஊருக்குப் போகக் கூடாது என்பது வேண்டுமென்று கற்பித்துக் கொண்ட ஒரு போலிக் காரணம். மனநிம்மதியை அடியோடு இழந்துவிட்ட அவனால் அன்று ஊருக்குப் போக முடியவில்லை என்பதுதான் உண்மை. நேரிலோ போன் மூலமோ நிலாவிடம் ஒரு வார்த்தைபேசாமல் அவனால் ஊருக்குப் போக முடியாது என்பது தெளிவாகி விட்டது.

இரவில் சாப்பிட்டும் சாப்பிடாமலும் தோட்டம் அறையில் படுத்து விட்டான்.

'நிலா தன் தாயிடமும் தங்கையிடமும் என்ன சொல்லியிருப்பாள்? ராமச்சந்திரனின் மனைவியிடம் போய் என்ன கூறியிருப்பாள்? அவர்கள் இனிமேல் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்?...'

இரவெல்லாம் அவனுக்கு இதே கவலை.

'என்றுமில்லாத வகையில் என்னை உபசரித்தாள்; என்னோடு பேசி விளையாடினாள். என் அன்பைப் பறிக்கும்போது அவளுடைய அன்பு முழுவதுமே பிரவகித்ததைப் பார்த்தேன். அவளுடைய ஏமாற்றத்தையும் கூடக் கண்டுகொண்டேன். அவளா என்னை இப்படி அவமானப்படுத்தி விரட்டினாள்? ஏன்? நான் கையைத் தொட்ட மாத்திரத்தில் விம்மி அழுவாள் என்று நினைத்தேன். ஆனால் வெறு வெட்டப் பூகம் புறப்பட்ட கதையாகி விட்டது. ஏன் இந்தச் சீற்றம்? எவ்வளவு அவமானகரமான வார்த்தைகள்? என் முட்டாள்தனம்தான் காரணம். அவளுடைய அன்பிலும் அழகிலும் என் மனதைப் பறி கொடுத்து நிதானத்தை இழந்துவிட்டேன். நம்பியவளை மோசம் செய்துவிட்டு வேறொருத்தியை மணக்கப்போகிறவன் என்று நினைத்துத்தான் என் மீது ஆத்திரத்தைக் கொட்டினாளா? இல்லை என்றால், எவளையோ மணந்துகொள்ளப் போகிறவன் தன்னைத் தொடுவதா என்று சீறி விழுந்தாளா? என் இஷ்டத்துக்கெல்லாம் இணங்கக் கூடியவள் என்று அவளை நான் கீழ்த்தரமாகக் கருதி விட்டதாகவே அவள் நினைத்துவிட்டாள். அந்த அவமானத்தை அவளால் தாங்க முடியவில்லை. உண்மையும் அதுதானே? நான் யாரோ ஒருத்திக்குக் கணவனாகப் போகிறவன். ஒரு கன்னிப் பெண்ணைத் தொடுவது அயோக்கியத்தனம் என்று அவள் நினைத்ததில் என்ன தவறு?'

மறுநாள் அவளிடம் மன்னிப்புக் கேட்காமல் ஊர் திரும்புவதில்லை என்று முடிவு செய்தான் சுந்தரம். இந்த முடிவுதான் அவனுடைய மனக் கலவரங்களைப் போக்கி, அவனுக்குச் சில மணி நேரத் தூக்கத்தையாவது அளித்தது.

மறுநாள் பகல் பதினொன்றரை மணி அடித்தது. அதற்காகக் காத்துக் கொண்டிருந்த சுந்தரம் நிலாவின் ஆபீசுக்குப் போன் பண்ணி அவளை அழைத்தான்.

"நான் சுந்தரம் பேசுகிறேன். ஒரு முக்கியமான விஷயம். போனை வைத்து விடாதே, நிலா!" என்ற வேண்டுகோளுடன் சுந்தரம் பேச ஆரம்பித்தான்.

"நிலா! நீ என்னை மன்னிக்க வேண்டும்."

ஆபீசில் பத்துப் பேருக்கு நடுவில் நின்று போனில் பேசும் நிலாவுக்கு மிகவும் தர்ம சங்கடமாக இருந்தது. கோபத்தைக் காட்ட அது இடமல்ல. மனதில் நினைத்ததை அங்கே பேசவே முடியாது. வேண்டுமானாலும் போனை அப்படியே வைத்துவிட்டு வந்துவிடலாம்.. அவன் திரும்பவும் அழைத்தால்...? நிலைமை இன்னும் மோசமாகும். டெலிபோன் ஆபரேட்டர் பொல்லாத வாயாடி. ஒன்றை ஒன்பதாக்கிப் பேசுவாள். ஓர் ஆண் குரல் திரும்பத் திரும்ப அழைப்பது, அவள் பதில் பேசாமல் கோபத்தோடு போனை வைத்து விட்டு வருவது... இது பயங்கரமான நாடகமாகிவிடும்.

"என்னை மன்னிப்பாயா நிலா?" சுந்தரம் இதே வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான்.

நிலைமையைச் சமாளிக்க, "என்ன விஷயம்?" என்று கேட்டாள் நிலா. அவள் ஆபீஸில் உள்ளவர்களுக்காகப் பேசிய வார்த்தைகள் இவை. ஆனால் அவளுடைய குரலில் கோபமோ, ஆத்திரமோ இல்லாததைக் கண்டு சுந்தரம் அங்கே மகத்தான ஆறுதலும் ஊக்கமும் அடைந்தான்.

"நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன், நிலா! என்னை நீ மனப்பூர்வமாக வாழ்த்த வேண்டும். வாழ்த்துவாயா?" என்று கொஞ்சம் தெளிவுடனேயே பேசத் தொடங்கினான்.

"வாழ்த்துக்கள்!"

"என்மேல் உனக்கு இன்னமும் கோபம் இருக்கிறதா?"

பதில் இல்லை.

"என்னைத் துரோகி என்று நினைக்கிறாயா?"

பதில் இல்லை.

"என்னை இப்பொழுதும் அயோக்கியன் என்றுதான் நினைக்கிறாயா?"

"சந்தேகமில்லாமல். வேறு என்ன விஷயம்?" — நிலா அவசரப்பட்டாள்.

"என் தவறுதான். நான் அயோக்கியன் தான். என்னை மன்னித்துவிடு. என்னை வாயார வாழ்த்து. நம் இருவரிடையிலும் ஏற்பட்டிருக்கும் இந்தத் தீராத பிரச்னையை உன் மன்னிப்புதான் தீர்க்க முடியும் நிலா!"

நிலா மௌனமாக இருந்தாள்.

"உன்னைப் பொறுத்தவரையிலும் பிரச்னை தீர்ந்துவிடாது என்பதை ஒப்புக் கொள்கிறேன். பம்பாயிலிருந்து வந்து நான் ஒரு பெரும் பிரச்னையையே உண்டுபண்ணி விட்டேன். உனக்கு நான் செய்த இந்தத் தீங்கை நினைந்து வருந்துகிறேன் நிலா!"

அவள் எதுவும் பேசவில்லை.

அவனும் பேசவில்லை.

அமர இலக்கியம்

நான் எழுதுகிற கதைகள் அமர இலக்கியங்கள் என்பது அடியேனுடைய தாழ்மையான அபிப்பிராயம். (தாழ்மையான அபிப்பிராயமே இப்படியிருந்தால் உயர்வான அபிப்பிராயம் எப்படியிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா?)

'அமர இலக்கியம்' என்பது என்ன? பச்சைத் தமிழில் 'சாகாத இலக்கியம்' என்று சொல்லலாம். நல்லது! இந்தப் 'பொய் மான் கரடு' என்னும் கதையில் ஒரு பயங்கரமான கொலை நடக்கிறது. ஆனாலும் யாரும் சாகவில்லை. ஒரு பயங்கரமான தீ விபத்து நேரிடுகிறது. அதிலும் ஒருவராவது சாகவில்லை. ஒரு பெரிய கேணி வாயை 'ஆ' வென்று திறந்து கொண்டிருக்கிறது. அதுவும் ஏமாந்து போகிறது. கதாபாத்திரங்கள் அனைவரும் கதை முடிவில் நன்றாகப் பிழைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கதையை அமர இலக்கியம் என்று சொல்லாவிட்டால் வேறு எதைச் சொல்வது?



மேனாட்டுக் கீழ்நாட்டுப் பிரபல கதை ஆசிரியர்கள் 'நான் கதை எழுதுவது எப்படி' என்பது பற்றி எழுதியிருக்கிறார்கள். என்னையும் அப்படிப்பட்ட பிரபல ஆசிரியராகிவிட வேண்டுமென்று சதியாலோசனை செய்த சில நண்பர்கள் 'நீர் கதை எழுதுவது எப்படி?' என்று கேட்பதுண்டு. 'நான் கதையே எழுதுவதில்லையே. என் கையில் பிடித்த பவுண்டன் பேனாவல்லவோ எழுதுகிறது!' என்று பதில் சொல்லிச் சமாளிப்பேன். அதைக் கூடச் சிலர் நம்புவதில்லை. "நீர் உண்மையில் பவுண்டன் பேனாவைக் கொண்டு தானா எழுதுகிறீர்? சில சமயங்களில் நீர் போடுகிற போட்டைப் பார்த்தால் கடப்பாரை பிடித்துக் கொண்டு எழுதுவது போலத் தோன்றுகிறதே" என்பார்கள்.

—கல்கி

போன் ரிசீவரை இருவரும் மௌனமாகப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். அவள் ரிசீவரை வைக்கட்டும் என்று அவன் காத்திருந்தான். அவளும் அப்படியே காத்திருந்தாள். மௌனம் எல்லையில்லாமல் நீண்டது.

"நிலா! விட்ட குறையை நான் தொட்ட குறை இது. மன்னித்துவிடு. மனப்பூர்வமாக என்னை மன்னித்துவிடு. மன்னிக்கிறாயா? 'மன்னிக்கிறேன்' என்று ஒரு வார்த்தை சொல். சொல் சீக்கிரம்."

நிலா அவனை மன்னிக்கவேயில்லை. அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டு மௌனமாகவே நின்றாள். ஒரு நிமிஷம் கழிந்தது.

ஆபீசில் தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்காகவே கடைசி வார்த்தைகளைப் பேசினாள்.


"ஓஹோ!... அப்படியா?... பரவாயில்லை. அது ரொம்பப் பழைய வீடு. எதற்கும் அம்மாவிடம் சொல்கிறேன். அப்புறம் பார்ப்போம்!"

போன் ரிசீவரை அதன் யதாஸ்தானத்தில் வைத்துவிட்டு, தன் இருப்பிடத்துக்கு வந்து அமர்ந்தாள் நிலா.


அமிர்தாஞ்சனம்
தடவி விரைவில்
நிவாரணம்
பெறுங்கள்
உடலில் ஒரு பகுதியை மட்டும் பாதிக்கும் வலிக்காக உள்ளுக்கு மருந்து சாப்பிடுவானேன்? வலிக்கும் இடத்தின் மேல் மட்டும் அமிர்தாஞ்சனம் தடவி விரைவாக வலி நிவாரணம் அடையுங்கள். பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அமிர்தாஞ்சனம் சுளுக்கு, தசைவலி, தலைவலி மற்றும் மூட்டு வலிகளுக்கு சிறந்த வகையில் நல்ல நிவாரணமளிக்கும். மற்றும் மார்புச்சளி, ஜலதோஷம் போன்றவைக்கும் ஏற்ற மருந்து அமிர்தாஞ்சனம். ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால், ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக்கணக்கில் வரும். • அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில்பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி.
பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி.
சுளுக்கு
எவ்வளவு
அசௌகரியமாக
இருப்பினும் உபாதை
வலிக்கும் பகுதியில்
மட்டுமே
AMRUTANJAN
Pain Balm
அமிர்தாஞ்சன் லிமிடெட், மதராஸ்
பம்பாய் - கல்கத்தா - டெல்லி

கிளவு போன கிருமிகள்

எச். ஜி. வெல்ஸ்



அவர் கிருமிகளைப் பரிசோதிக்கும் விஞ்ஞான நிபுணர்.

அவருடைய ஆராய்ச்சி சாலைக்கு ஒருவர் வந்தார். பரிசோதனையில் மூழ்கியிருந்த விஞ்ஞானி, வந்தவர் யார் என்றுகூடக் கேட்டுக்கொள்ளாமல், "இதோ பார்த்தாயா காலராக் கிருமிகள்" என்று எக்களிப்போடு சொன்னார்.

"அப்படியா?" என்றார். வந்தவரையும் அந்த விஞ்ஞானி மைக்ராஸ்கோப் மூலம் சிறு கண்ணாடித் துண்டிலிருந்த கிருமிகளைப் பார்க்கச்செய்தார்.

வந்தவர், "இவையென்ன இறந்து போனவைதானே?" என்றார் சற்று அலட்சியமாகவே. "யார் சொன்னது? என்னிடம் உயிருடன் உள்ள கிருமிகள் இல்லை என்று நினைத்துக் கொண்டு விட்டீர்களா?" என்று சொல்லிக் கொண்டே தமது பரிசோதனைச் சாலையில் வைக்கப்பட்டிருந்த நூற்றுக் கணக்கான குழல்களுக்கிடையி லின்று ஒரு குழலை எடுத்தார்.

"இதோ, பாருங்கள், உயிருள்ள காலராக் கிருமிகள்! இந்தச் சோதனைச் சாலையில் பயிர்செய்து விளைவித்தது. ஆம், உற்பாதத்தைச் சிறைப் படுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இச்சிறு குழாயைக் இறந்து நகரக் குடிநீர் விநியோகிக்கும் தொட்டிக்குள் கொட்டி, 'ஏ! கண்ணுக்கும், மிகச் சக்தி வாய்ந்த மைக்ராஸ்கோப்புக்கும் தெரியாத நுண்ணிய கிருமிகளே. நீங்கள் நூற்றுக் கணக்கில் பெருகுங்கள்! மக்கள் குடிநீரில், குளிக்கும் நீரில் எங்கும் பரவுங்கள்!' என்று சொல்லி ஏவிவிட்டால் போதும். மரணம், இந்த நகரை அப்படியே ஆக்கிரமித்துக் கொள்ளும். மக்கள் சொல்லி முடியாத வேதனைக்கும் நோவுக்கும் உள்ளாவார்கள். கணவன் மனைவியை இழப்பான், குழந்தை தாயை இழப்பதும், அரசியல் வாதி கடமையை இழப்பதும் — அப்பப்பா — எத்தனை பிரிவுத் துயரங்கள் ஏற்படும், தெரியுமா?

"வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்பார்கள். சிறு கதை, நவீனம் எழுதும் நல்ல எழுத்தாளனுக்கு வறட்டு விஞ்ஞானம் கூட சுவைமிக்கதாகிவிடும் என்று நிரூபித்தவர் ஆங்கில ஆசிரியர் எச். ஜி. வெல்ஸ். (1866-1946) விஞ்ஞான வளர்ச்சி நம்மை எங்கெங்கெல்லாம் இட்டுச்செல்லக்கூடும் என்று கற்பனை செய்து எழுதியவர் வெல்ஸ். அவருடைய கற்பனைகள் நனவாகி வருகின்றன. இப்படி விஞ்ஞானக் கதைகளுக்கு முன்னோடியாக விளங்கிய எச்.ஜி. வெல்ஸின் சிறுகதையொன்றின் மணத்தை மட்டும் இச் சிறு கதை மலரை நுகரும் வாசகர்களுக்கு அளிக்கிறோம். அவர் கதையின் நேர் மொழிபெயர்ப்பல்ல இது- அதை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட சுருக்கம்தான்.



ஆம், மீண்டும் இதைக் கட்டுப் படுத்துவதற்குள் நகரமே சூன்யமாகி விடும். அவ்வளவு சக்தி வாய்ந்ததாக்கும் இந்தச் சிறு குழலிலுள்ள கிருமிகள்!" என்று விஞ்ஞானி சொல்லிக் கொண்டே போனார்.

"இவ்வளவு சக்தி வாய்ந்த தாக இது இருக்கும் போது இந்த அராஜகவாதிகள், புரட்சிக்காரர்கள் ஏன்தான் நாட்டு வெடிகளையும், குண்டுகளையும் கண்டுபிடிப்பதிலும் உபயோகிப்பதிலும் காலத்தை வீணாக்கு கிறார்களோ, தெரியவில்லை!" என்றார் வந்தவர்.

இந்தச் சமயம் விஞ்ஞானியின் பின்புறமிருந்த கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. ஓர் அம்மையார் எட்டிப் பார்த்து, "ஒரு நிமிஷம் உள்ளே வருகிறீர்களா?" என்று அழைத்தார். அவர்தான் விஞ்ஞானியின் மனைவியார்.

"இதோ, வருகிறேன்!" என்று கூறி உள்ளே நுழைந்தார் விஞ்ஞானி.

இரண்டு நிமிடங்கள் கழித்து மீண்டும் வெளியே வந்தார்.

விஞ்ஞானியைப் பார்க்க வந்தவர், "நான் வந்து வெகுநேரமாகிவிட்டது. உங்களோடு பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. எனக்குச் சரியாக நாலு மணிக்கு மற்றொரு அலுவல் இருக்கிறது. இப்போதே மணி மூன்றே முக்கால் ஆகிவிட்டது. இன்னும் பதினைந்து நிமிடங்களில் அவ்விடத்துக்குப் போய்ச் சேர வேண்டும். நான் வரட்டுமா?" என்று சொல்லிக் கொண்டு புறப்பட்டார்.

விஞ்ஞானியும் அவரை வாசல் வரை கொண்டு போய் விட்டு விட்டுத் திரும்பினார்.

அவருக்குத் திடுக்கிட்டது. மேஜையைத் துழாவிப் பார்த்தார். தமது சட்டைப்பைகளைத் துழாவிப் பார்த்தார். மேஜை டிராயர்களை இழுத்துப் பார்த்தார். பரிசோதனைக் குழல்கள் வைக்கும் இடத்தில் தேடிப்

பார்த்தார். எங்கும் கிடைக்கவில்லை. மனைவியைக் கூப்பிட்டார். அவளுடன் சற்று முன் பேசிக் கொண்டிருந்த போது,தம் கையில் ஏதாகிலும் குழல் இருந்ததா என்று விசாரித்தார். அவளும் இல்லை என்று பதில் சொல்லி விட்டாள்.

விஞ்ஞானிக்கு ஒன்று ஞாபகம் வந்தது. அந்தக் காலராக் கிருமிகளின் நாசகர சக்தியை விளக்கிக் கொண்டு வந்தபோது, வந்தவரின் முகம் எப்படி ஒளிமயமாகப் பிரகாசித்தது என்பதை நினைவுகூர்ந்தார். அவ்வளவுதான்! வந்தவர்தான் திருடிக்கொண்டு போயிருக்க வேண்டும் என்று நிச்சயம் ஏற்பட்டு விட்டது.

வந்தவர் புரட்சிக்காரராகத்தான் இருக்க வேண்டும். 'எவ்வளவு பெரிய ஆபத்து நேரவிருக்கிறது. இதை உடனே தடுக்க வேண்டும். அதற்கு ஒரே வழி அவரைத் துரத்திச் சென்று பிடிக்க வேண்டும்.'


இந்த எண்ணம் மனத்தில் உதித்த மாத்திரத்தில் தாம் இருந்த நிலையிலேயே ஓட ஆரம்பித்தார் விஞ்ஞானி.

கதவு படார் என்று அடிக்கும் சத்தம் கேட்டது விஞ்ஞானியின் மனைவிக்கு. என்ன என்று வெளியில் எட்டிப் பார்த்தாள். விஞ்ஞானி அறைக்குள் நடக்கப் போட்டுக் கொள்ளும் ஸ்லிப்பர் செருப்புக்களுடன், தலையில் ஒன்றுமில்லாமல் ஓடுவதைப் பார்த்தாள். அப்படி ஓடும் போது, ஒரு கால் செருப்பு நழுவிச் சென்று விட்டதையும் பொருட்படுத்தாமல், மேல் ஜோடு அணிந்த காலுடனேயே ஓடுவதைப் பார்த்தாள்.

"ஐயோ! இந்த விஞ்ஞானம்தான் என்ன பைத்தியமாக்குகிறது!" என்று தன் மனத்துக்குள் நொந்து கொண்டாள் விஞ்ஞானியின் மனைவி. பிறகு, விஞ்ஞானியின் கால் பூட்சுகள், தலை தொப்பி யாவற்றையும் எடுத்துக் கொண்டு தானும் புறப்பட்டாள்.

விஞ்ஞானி பின்னால் வருவதைப் பார்த்து விட்ட அந்த ஆசாமி, வாடகைக் குதிரை வண்டியைக் (கோச்) கூப்பிட்டு அதில் ஏறிக் கொண்டார். "வேகமாகப் போ" என்று கட்டளையிட்டார்.

அந்த மனிதர் வாடகை வண்டியில் ஏறிவிட்டதைப் பார்த்த விஞ்ஞானி அவரைத் துரத்தத் தானும் ஓர் வாடகைக் கோச்சில் ஏறிக் கொண்டார்.



முன்னும் சென்று கொண்டிருந்தவர் மனத்தில் பலவித எண்ணங்கள் எழுந்தன. 'என்னை ஏதோ சாதாரணப் புரட்சிக்காரன், எதற்கும் உதவாதவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்போது தெரியும். இவர்கள் யாரும் சாதிக்க முடியாததை நான் சாதிக்கப் போகிறேன் எப்படி! சாவு! என்னும் சாவு! அப்போது தெரிந்து கொள்ளுவார்கள் என்னுடைய முக்கியத்துவத்தை!' இப்படிப் பலப் பல எண்ணிக் கொண்டே திரும்பிப் பார்த்த போது, விஞ்ஞானி இருக்கும் கோச் வண்டி, தமக்கு ஐம்பது கஜ தூரத்தில் நெருங்கி விட்டதைக் கண்டார்.

உடனே தம் இருப்பிடத்தை விட்டு எழுந்திருந்து, வண்டியோட்டியிடம் ஒரு வெள்ளி நாணயத்தை நீட்டி, "எங்கே, இன்னும் கொஞ்சம் வேகமாக ஓட்டு, பார்க்கலாம். நான் அந்த மனிதன் பார்வையிலிருந்து தப்பி விட்டேனானால் இன்னும் நிறைய இனாம் தருகிறேன்" என்றார். "சரிதானுங்க!" என்று சொல்லிக் கொண்டே சாட்டையை ஓங்கி வீசினான் வண்டிக்காரன். குதிரை நாலு கால் பாய்ச்சலில் ஓட ஆரம்பித்தது. நின்று கொண்டிருந்த மனிதர் வண்டி குலுங்கவே தள்ளாடிப் போய், பக்கத்திலிருந்த கதவைப் பிடிக்கப் போனார். அந்த வேகத்தில் கையிலிருந்த பாட்டில் கதவின் மேல் பட்டு உடைந்து, அந்தக் கிருமிகளுடன் கலந்த நீர் அவர்மேல் எல்லாம் சிந்தியது!

இத்தனை நேரம், இவ்வளவு பாடுபட்டதெல்லாம் வீணாகி விட்டதே என்று அங்கலாய்த்தார் அந்த மனிதர். தம் ஆடையில் பட்டு நனைந்த பகுதிகளையும், கிருமிகளையும் பார்த்தார். கண்ணாடி பாட்டிலின் அடிப் பகுதித் துண்டில் சிறிது நீர் மிஞ்சியிருப்பதைப் பார்த்தார். இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது? "நானே தியாகி ஆகிறேன்!" என்று சொல்லி அதைக் குடித்தார். காலரா தம் உடல் முழுவதும் பரவித் தாம் இன்னும் சில மணி நேரத்தில் இறந்துவிடுவோம் என்ற உறுதி ஏற்பட்டவுடன் மனத்தில் ஒரு துணிவு பிறந்தது. வாடகை கோச் வண்டியை அனுப்பிவிட்டு விஞ்ஞானியின் வருகையை எதிர்நோக்கிக் கொண்டு நின்றார் கம்பீரமாக.

விஞ்ஞானியின் வண்டி வந்தது.

"புரட்சி ஓங்குக! விஞ்ஞானியாரே, நீர் நேரம் கழித்து வந்தீர். காலரா பரவிவிட்டது. என் உடலிலேயே இருக்கிறது. நானே குடித்து விட்டேன்! இனிமேல் ஒன்றும் செய்வதற்கில்லை!" என்றார்.

விஞ்ஞானி, "என்ன, குடித்து விட்டீரா? நீர் புரட்சிக்காரரா? இப்போதுதான் விளங்குகிறது!" என்று சொல்லிக் கொண்டே இன்னும் ஏதோ சொல்ல வாயெடுத்தார். ஆனால் சொல்லாமல் நிறுத்திக் கொண்டார். அவர் முகத்தில் மட்டும் ஒரு புன்னகை இழையோடியது.

புரட்சிக்காரர், "சென்று வருகிறேன் !" என்று சொல்லிக் கொள்ளும் பாவனையில் கைகளை அசைத்துவிட்டு, மேலே நடந்து சென்றார். அப்படி நடந்து செல்லும் போது எதிரில் வருவோர் மீது இடித்துக் கொண்டே போனார். தம்மேல் உள்ள காலராக் கிருமிகள் தெருவில் வருவோர் போவோர் மீதும் ஒட்டிக் கொண்டு அவர்களுக்கும் காலரா வரட்டுமே என்ற எண்ணம்தான் !

இதற்குள் விஞ்ஞானியின் மனைவி அங்கு வந்து சேர்ந்தாள். "காலில் பூட்ஸ்கூட இல்லாமல் இப்படிப் புறப்பட்டு விட்டீர்களே! இந்தாருங்கள்!" என்றாள். மனைவி கொடுத்த பூட்ஸ், கோட் முதலிய அணிகளையெல்லாம் அணிந்து கொண்டே மனைவியிடம் சொன்னார் விஞ்ஞானி.

"அதோ போகிறாரே, அந்த மனிதர் நம்ம வீட்டுக்கு வந்தார். அவர் ஒரு புரட்சிக்காரர். ஆம், ஆனால் நீ மயக்கம் போட்டு விழாதே. மிச்சம் நான் சொல்வதைக் கேள். எனக்கு அவர் புரட்சிக்காரர் என்று தெரியாது. அவரை வியப்பில் ஆழ்த்த வேண்டும் என்று நினைத்து ஒரு காரியம் செய்தேன். குரங்குகளின் மேனியில் நீல நிறத் திட்டுக்கள் ஏற்படுத்துவது ஒருவித கிருமி என்று நான் கருதுகிறேன் என்று சொல்லி வருகிறேன் அல்லவா? அந்தக் கிருமிகளைப் பயிர் செய்து வைத்துள்ள பாட்டிலை எடுத்து, இதுதான் ஆசியாவில் பிரபலமாக இருக்கும் காலராக் கிருமி என்று சொல்லி வைத்தேன். அவன் இந்த லண்டன் நகர்க் குடிநீரை விஷமாக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அதைத் திருடிக் கொண்டு போனான். அவன் நினைத்தபடி செய்திருந்தானானால் லண்டன் மக்கள் நீல நிறத்தினராக மாறி இருப்பார்கள். ஆனால் அவன் அதைத் தானே குடித்து விட்டான். அவனுக்கு என்ன நேரும் என்று சொல்ல முடியாது! பூனைக் குட்டிக்குக் கொடுத்தேன்— அது நீலமாயிற்று. மூன்று நாய்க் குட்டிகளுக்குக் கொடுத்தேன். அவற்றின் உடலில் அங்கங்கே நீல நிறத் திட்டுக்கள் தோன்றின. சிட்டுக் குருவிக்குக் கொடுத்ததில் அது நல்ல நீல நிறத்தோடு காணப்பட்டது. இப்பொழுது எனக்குத்தான் தொல்லை — மீண்டும் அந்தக் கிருமிகளையெல்லாம் அரும்பாடு பட்டு வளர்க்க வேண்டும்!" என்று அங்கலாய்த்தார்.


தருமத்துக்கு அபாயம் !

இப்போது சில சிறுகதைகளைப் பார்த்தால், நண்பர்கள் தங்கள் மனைவிமார்களைக் கோஷாவில் தான் வைத்துக் காப்பாற்ற வேண்டும் போல் இருக்கிறது. ஆணும் பெண்ணும் சேர்ந்து பேசவே அபாயம் என்று இப்போது வெளியாகி வரும் கதைகளினால் ஏற்படும் போலிருக்கிறது. கதையில், ஒருத்தியை ஒருவன் சந்தித்ததுமே தருமத்திற்கு அபாயம் நேரிட்டு விடுகிறது. இத்தகைய இலக்கியத்தை உண்டாக்குவது எளிது; விற்பதும் எளிது. ஆனால் அப்படிச் செய்த சாமானில் உறுதியில்லை, பயனும் இல்லை. வழி புரண்ட காதலைக்கொண்டு அவசரமாகத் தோற்றுவிக்கும் சிறுகதைகளும் இவ்வாறே பயனற்றவை என்பதோடு நிற்பதில்லை. இலக்கியம் என்று ஏமாற்றிச் சமூகத்துக்கு விஷம் ஊட்டுவது போலாகும். —ராஜாஜி

ASP/GM-23 TM



தொல்லை
பல் முளைக்கும்போதா?
காற்று பிரியும்போதா?
வயிற்றுவலியாலா?



மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்

கொடுத்து மீண்டும் புன்னகை தோன்றக் காணுங்கள்

இக்காலத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் தருகின்றனர். அது இனிய சுவையுள்ளது; சுகாதார முறைப்படி 'பேக்' செய்யப்பட்டுள்ளது.

அதிர்ஷ்டக் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப மிக்ஸ்சர் கிடைக்கிறது



இப்பொழுது
அழகான, புதிய சிவப்பு நீல நிறங்களில் 'பேக்' செய்யப்பட்டு கிடைக்கிறது

சீன நாட்டிலும் ஆண்டவன் இருக்கிறான். ஆனால் அங்கே அவன் தன் பெயரைக் கேட்க முடியாது. அவன் மக்களின் மனத்தில் ஒரு மூலையில் பயமும் தாகமும் கொண்ட ஒரு சிறைக் கைதியைப்போல் அடைபட்டுக் கிடக்கிறான். சீன நாட்டின் பகைப் புலனில் ஸ்ரீராம் பிரகாச் பாண்டே பின்னிய கதையை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கதை.

விடுதலை

ரா. வீழிநாதன்



போர்முனைக் கதை

சீனர்களிடம் நான் சிறைப்பட்டு இருபத்தொரு நாட்களாகிவிட்டன. இந்த இருபத்தொரு நாட்களும் நான் சரியாகக் கண் மூடவில்லை. உடற்காயங்களும் புண்களும் எனக்கு என்ன கஷ்டத்தைக் கொடுத்துவிட முடியும்? நானோ பிறவிப் போர் வீரன். அதுவும் மறவர் குலத்தில் பிறந்தவன். உயிர் போனாலும் என் வீரம் போகாது. அப்படியே செத்தாலும் ஊரும் உலகும் பேசும்படியாகத்தான் சாவேன். இந்தச் சீனக் குள்ளர்கள் எனக்கு எம் மாத்திரம்? என் உடலில் உள்ள ஒரு காயம்கூட ஓர் அங்குலத்துக்கு மேல் ஆழம் இல்லை.

ஆனால்....

அந்த நர்ஸ் சொன்ன வார்த்தைதான் என்னைத் தின்று விட்டது. "கருமி காசைக் காப்பாற்றக் கண் கொட்டாமல் விழித்திருப்பானே, அப்படி எதற்காக விழித்திருக்கிறாய்? நீ உன் சுதந்திரத்தைப் பாதுகாப்பதாவது, மண்ணாவது? நீ தான் எங்கள் பாதுகாப்பிலே வந்து விட்டாயே!"

இப்படிக் கூறியவள் உதடுகளில் ஒரு குறுநகை ஓட, ஒய்யார நடை போட்டு என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அங்கிருந்து அகன்றாள். அவள் பேச்சும் நடையும் குறுநகையும் என் ஆண்மைக்கு ஒரு சவால் விடுவதுபோல் இருந்தன. ஆண்டவன் மீது ஆணையாகச் சொல்கிறேன். ஒரு மூட்டை உப்பைக் கொட்டிக் காயங்களில் கொட்டினாற் போலிருந்தது எனக்கு.

"கயவர்கள்! மோசக்காரர்கள்! சீனர்கள்!"

நான் தொண்டை கிழியக் கூச்சலிட்டேன். ஆனால் அங்கே என் ஓசையைக் கேட்க யார் இருந்தார்கள்? அந்தக் கூடாரம் முழுவதும் என்னைப் போல் காயம் பட்ட கைதிகள்தான் கிடந்தார்கள். ஒரு சீனன்கூட அங்கு இல்லை. இரவு மலைப் பாம்பாகச் சீறிக் கொண்டிருந்தது. நான் பொழுது விடியும் வரை புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தேன்.

பொழுது புலர்ந்தது. அதே அருவருப்பான நான்கைந்து மஞ்சள் முகங்கள்! பொய்ச் சிரிப்பு உதடுகளில் தாண்டவமாட எதிரே வந்து நின்றன. 'இவற்றின் கழுத்தைத் திருகிப் போட்டால் என்ன?' என்று எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனால் எழுந்திருக்கத் திராணி இருந்தால் அல்லவா?

நர்ஸ் தனக்குத் தெரிந்த அரைகுறை ஹிந்தியில் இருபத்தொரு நாட்களாகக் கேட்கும் அதே பழைய கேள்வியைக் கேட்டாள். நானும் சொல்லிச் சொல்லி அலுத்துப்போன அதே பழைய பதிலைச் சொன்னேன்.

"உன் பெயர்?" நர்ஸ் மேனகா சீ கேட்டாள். நான் அவளை 'மேனகாஜி' என்றுதான் கூப்பிடுவேன்.

"கைதி!"

"தந்தையின் பெயர்?"

"சுதந்திரம்!"

"போர்ப் படையில் என்ன வேலை?"

"பாரத சுதந்திரத்தைப் பாதுகாப்பது!"

"சரியான முகவரியைக் கொடு. உன் பெயரை உங்கள் நாட்டு அரசாங்கத்துக்கு அனுப்ப விருக்கிறோம். இப்போது போர் முடிந்துவிட்டது. சிறுகச் சிறுக நீங்கள் அனைவருமே விடுதலை பெறுவீர்கள்!" மேனகா மிகுந்த அனுதாபத்துடன் முறுவலித்துக் கொண்டே கூறினாள்.

"ஆமாம், நீங்கள் சூறையாடிக் கொண்டிருக்கிறீர்களே, அந்த நிலத்தின் கதி என்ன?" என்று கேலிக் குரலில் கேட்டேன்.

நர்ஸ் சிரித்துவிட்டாள். அவளைப் பார்த்து அந்த ஐந்து சீனர்களும் தங்கள் அழுக்கேறிய மஞ்சள் நிறப் பற்களைக் காட்டி, 'ஹி ஹி ஹி' என்று சிரித்தார்கள்.

ஒருவேளை அவர்களுக்கு நான் சொன்னது புரியவில்லையோ, என்னவோ? நர்ஸின் இயந்திரச் சிரிப்புக்கு ஒத்துப் போவது தான் தங்கள் காரியம் என்று எண்ணி அவர்கள் அப்படி அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்கள் போலும்!

மேனகா இளநகை புரிந்தாள். என் முதுகில் கையை வைத்து, "நீ வீரன்தான். உன் வீரத்தை மெச்சுகிறேன். நீ இங்கும் சாகப் பயப்படவில்லை. கேள், நீ எங்கள் நிலமேறி வந்திருக்கிறாய். நாங்கள் எங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உன்னை எதிர்த்துச் சிறைப்படுத்தியிருக்கிறோம். உன் அரசாங்கம் இப்பொழுது சரியாக விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டது. நாங்கள் போரை நிறுத்துகிறோம். அதுவும் போர் நிறுத்தம் செய்தது. நீயும் உன் பிடிவாதத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துச் சமர்த்துப் பிள்ளையாக இலட்சணமாக இரு. எதையும் ஒளிவு மறைவின்றிக் கூறு. இல்லாவிட்டால், நாங்கள் உன்னை விடமாட்டோம். தெரிந்ததா?" என்றான். அப்பொழுது அவள் சிரித்த சிரிப்பின் ஒலியில் ஆயிரம் மணிகள் ஏககாலத்தில் 'கிண் கிணி' நாதமாக ஒலித்தன.

நாளடைவில் பகைக்கும் குளிர் விட்டுப் போயிருந்தது. பழகப் பழகப் பேச்சில் அவள் தலைமீதே ஏறி உட்காரத் தொடங்கியிருந்தேன். "மேனகா! நானும் உன்னை விட்டு விட்டுப் போகப் போவதில்லை. ஏன் தெரியுமா? நீ நன்றாகச் சிரிக்கிறாய்!" என்று சொல்லிச் சிரித்தேன் நானும்.

"நீ ரொம்பப் பொல்லாதவன்!" என்று சிரித்தபடி கூறியவாறே அவளும் திரும்பினாள். தினம் போல மடித்து மக்கின அரிசிச் சோற்றையும் வேகாத கீரையையும் வைத்து கொண்டே அன்றையப் பகல் பொழுது போயிற்று. இரவு வந்தது. இருபத்திரண்டாம் நாள். என்றும் போலவே அன்றும் தூக்கம் வரவில்லை.

கூட இருந்த காயம்பட்ட போர்வீரர்கள் முனகிப் பொருமிக் கொண்டு கண் அயர்ந்து விட்டார்கள். முன்னிரவு ஊர்ந்து கொண்டிருந்தது. என் உள்ளம் எரிந்துகொண்டிருந்தது. புஜங்கள் துடித்தன. உடல் வலி கண்டது. மனம் போரில் பொழிந்த குண்டு மாரியை எண்ணிக்கொண்டிருந்தது. சிற்சில சமயம் வீட்டு நினைவுகூட வந்தது. இன்று ஏனோ ஒரு சம்பவம் விடாமல் எல்லாமே நினைவு வந்தன. அன்றொரு நாள் போர் புரிந்து கொண்டிருக்கும் போது குண்டுகள் தீர்ந்து விட்டன. நான் அருகிலிருந்த தோழன் சேத்ராமிடம் கேட்டேன், 'இப்பொழுது என்ன செய்வது?' என்று!

அவன் சட்டென்று தன் மார்பைத் திறந்து காட்டினான். "எண்ணிப் பார்! என் மார்பில் எத்தனை குண்டுகள் பாய்ந்திருக்கின்றனவென்று!" என்றான் அவன்.

நான் நடுநடுங்கி விட்டேன். அவன் மார்பில்தான் எத்தனை காயங்கள்?

மீண்டும் அவன் குனிந்தான். கடைசிக் குண்டைக் குறி வைத்தான். மறுமுறை அவன் எழுந்திருக்கவில்லை.

ஆனால் ஒன்று. அவன் வீரனாகவே உயிர் துறந்திருந்தான். முதுகுப்புறமாக ஒரு குண்டுகூடப் பாய்ந்திருக்கவில்லை.

நான் அவனைத் தாங்குவதற்காகக் குனிந்தேன். அதற்குள் என் தலையில் ஏதோ ஒன்று கர்ணமாகத் தைத்தது.



அப்புறம் கண் திறந்தபொழுது சீனர்களின் கூடாரத்தில் கிடப்பதை உணர்ந்தேன். உலகமே உருமாறித் தோன்றியது. நான்கைந்து சீன வீரர்கள் கைதூக்கி 'ஹிந்தி சீனி பாயி பாயி' என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தார்கள். என் கண்கள் வெறுப்புத் தீயை உமிழ்ந்தன. இரத்தம் கொதித்தது. புருவங்கள் நெரிந்தன. எழுந்திருக்க முயன்றேன். முடியவில்லை.

சிறிது தொலைவில் சேத்ராமின் சவம் கிடந்தது. அந்த நிலையிலும் அவனது குத்திட்ட கேசங்களும் முறுக்கிய மீசைகளும் சிறிதும் அடிபணியாமல் நிமிர்ந்தே நின்றன. இறந்த கண்கள் திறந்தபடியே கிடந்தன. 'இறந்த பின்னரும் நான் எப்படிக் கண்ணும் கருத்துமாக எல்லைக் காவல் புரிந்து கொண்டிருக்கிறேன், பார்!' என்று இடித்துரைப்பது போலத் தோன்றியது எனக்கு.

என் தொண்டைக்குள் ஏதோ உப்புக் கரிப்பது போலிருந்தது. நான் உரத்த குரலில், ''ஏ, சேது அண்ணே! கவலைப் படாதே. பாரதத் தாய்க்கு நிச்சயம் வெற்றி கிட்டும்! இன்று இல்லாவிட்டால் என்ன, நாளைக்குப் பழிவாங்கியே தீருவேன், இந்தக் கொடியவர்களை. நானும் ஒரு வீர மறவன் மகன்தான்!'' என்று கூவினேன்.

தொண்டைக்குள் அப்பொழுது ஏதோ உப்பான திரவம் இறங்கியது. அது இரத்தம். அன்னை பாரதத் தாயின் உப்பைத் தின்று ஊறிய இரத்தம். என் இதயத்துள் அடங்கியிராமல் பீறிட்டுக் கொண்டு புறப்பட்ட இரத்தம். சேத்ராமின் குருதியோடு குருதியாகக் கலக்க முற்பட்டது.

எனக்கு இரத்த வாந்தி எடுத்தது. இருமல் அடக்க முடியாமல் எழுந்தது. குலை நடுங்கும் குளிரிலும் உடல் வியர்த்து விறுவிறுத்து விட்டது.

சீனர்கள் என் சட்டைப் பொத்தான்களை அவிழ்த்தார்கள். நர்ஸ் குடிக்க நீர் கொடுத்தாள். என் அன்புக்கன்பான ராசியம்மா நினைவுக்கு வந்தாள். கற்கண்டு இட்டுக் காய்ச்சிய பாலை இப்படித்தானே அவள் அன்போடு குடிக்கத் தருவாள்! இன்றுதான் இந்த



மறவர்குலச் சிங்கம் போரில் தோற்றிருக்கிறது! உள்ளம் வெடித்துச் சிதறும்படியான தோல்வியைக் கண்டிருக்கிறது!

''இதோ பாரு! வெற்றியோடு வந்தால் என்னண்டை வா. இல்லாவிட்டால், நீ உயிரோடு இருக்கிற பொழுதே இந்தக் கைவளையல்களை உடைத்துக் கொண்டு, பூவையும் பொட்டையும் அழித்துக்கொண்டு விடுவேன்!''

ராசியம்மாவின் இந்த வீர வாக்கியங்களைக் கேட்டு என் வீரத்துக்கு உரமேற்றிக் கொண்டு புறப்பட்ட நான் இன்று எதிரிடம் சிறைப்பட்டுக் கிடக்கிறேனே! இந்த நினைத்த பொழுது மண்டையைத் தரையில் மோதி உடைத்துக் கொண்டுவிட்டால் என்ன என்று தோன்றியது.

இலேசாகக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. வீட்டு வாசற்படியில் நின்று கொண்டு ராசியம்மா என்னை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். அருகில் போனபோது அப்படியே அணைத்துக் கொள்ளவும் முன் வந்தாள். பாவம், அவளுக்கு என்ன தெரியும், நான் வெற்றி கொள்ளாமல் திரும்பி வந்திருக்கிறேன் என்று!

ராசியம்மா என் நெற்றியில் இலேசாகச் சுடும் தன் மென்மையான உள்ளங்கையை வைத்தாள். நான் சட்டென்று விழித்துக் கொண்டேன்.

மேனகாவின் கை என் நெற்றியின் மீது இருந்தது. அவள் சிரித்துக் கொண்டிருந்தாள். மங்கலான விளக்கொளியில் அவள் எனக்கு ராசியம்மாவாகவே தோன்றினாள். அவளை அந்த நிலையில் காண எனக்கு வியப்பாயிருந்தது. ஏனென்றால், அவள் என்னிடம் பல முறை, 'சீன நாட்டில் யாருமே அழுவதில்லை!' என்று சொல்லியிருக்கிறாள்.

நான் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன். எனக்குக் காயத்தின் வலியே மறந்து விட்டது. அவள் கைகளை என் கையில் ஏந்தியவண்ணம், அநுதாபம் ததும்ப, ''என்ன என்ன சமாசாரம்?'' என்று கேட்டேன்.

''ஆண்டவனுக்காக மெதுவாகப்பேசுங்கள். இல்லாவிட்டால் என்னைக் கொன்று போட்டு விடுவார்கள்!'' என்றாள் அவள்.

நான் குரலைக் குறைத்துக் கொண்டேன். இருந்தாலும் ஆவலோடு அவளைக் கேட்டேன், ''ஆமாம், சீன நாட்டவர்களும் அழுவதுண்டா? ஆண்டவன் பெயரையும் கூறுவதுண்டா?'' என்று.

அவள் சிறிது நேரம் தனது உள்ளத்தில் குமுறும் புயலை அடக்க முயல்பவளைப்போல் உட்கார்ந்திருந்தாள். பிறகு நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழலானாள். குரலைச் சிறைப்படுத்த முடிந்ததே யொழிய அவளால் கண்ணீரை அணை கட்டித் தேக்க முடியவில்லை.

என் ஆவல் சிறுகச் சிறுக உள்ளப் புழுக்கமாக உருமாறியது. ஆனால் தேச, காலத்தை உத்தேசித்து ஏது செய்வதென்று அறியாமல் உட்கார்ந்திருந்தேன், பிரமை பிடித்தவன் போல. ஏனோ எப்படியோ எனக்கும் மேனகைக்கும் ஒரு சொந்தம், ஓர் உறவு இருப்பது போலத் தோன்றியது. ஒருவேளை மனிதர்களுக்கிடையே எழும் அபாரமே ஒன்று சேர்க்கும், உறவுமுறை கூட்டும் ஒரு தர்மமோ, என்னவோ! அவள் துயரத்தை என் துயராக உணர்ந்து மருகினேன் உள்ளத்துள்.

அவள் நிலையிருந்த அமைதியைக் கலைத்து, ''என் சிரிப்பு உனக்குப் பிடித்திருக்கிறதா? சொல்லு. என் அழுகை உனக்கு எப்படிப் படுகிறது?'' என்று கேட்டாள்.

என் வாழ்க்கையில் பின்னைப் பிராயம் திரும்பி வந்தது போல் இருந்தது. நான் அவளைக் குழந்தை மாதிரி பார்த்துக் கொண்டிருந்தேன். ஆம்! பார்த்துக் கொண்டே இருந்தேன்.

அவள் சற்றுத் தெளிவான குரலில் மீண்டும் கூறினாள்.


''உனக்குத் தூக்கம் வரவில்லை அல்லவா? இன்று உனக்கு நான் ஒரு கதை கூறப் போகிறேன். ஏனென்றால் நாளைக்கு என்னை என் கம்பூனுக்கு அனுப்பப் போகிறார்கள். அப்புறம் உன்னைச் சந்திக்க முடியாது. ஒருவேளை எப்பொழுதுமே முடியாதோ, என்னவோ? சீன நாட்டிலும் ஆண்டவன் இருக்கிறானா? சீன நாட்டு மக்களும் அழுவதுண்டா என்று இப்பொழுதுதானே நீ என்னிடம் கேட்டாய்? அந்தக் கதையை உனக்குச் சொல்ல வேண்டும், சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் என்று எனக்கு ஆவலாயிருக்கிறது. நான் சொல்வதை யெல்லாம் நன்றாக நினைவு வைத்துக் கொண்டு நீ உன் நாட்டுக்குப் போ. புத்த பகவான் அவதரித்த நாடு உன் நாடு. உன் நாட்டின் ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த நாட்டின் நிலையைச் சொல்லு!'' — பெருகி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் மேலும் தொடர்ந்தாள்:

''சீன நாட்டிலும் ஆண்டவன் இருக்கிறான். ஆனால் அங்கே அவன் தன் பெயரைக் கேட்க முடியாது. அவன் மக்களின் மனத்தில் ஒரு மூலையில் பசியும் தாகமும் கொண்ட ஒரு சிறைக் கைதியைப் போல் அடைபட்டுக் கிடக்கிறான். மக்களின் கதறலைக் கேட்கிறான். ஆனால் வாய் மூடி மௌனியாகக் கிடக்கிறான். உள்ளப் புயலையும் புழுக்கத்தையும் மக்களைப் போலவே அவனும் வெளியிட முடியாது. பசி பொறுக்காமல் உணவுக்காக வாயசைக்க நேரும் பொழுது புரட்சிப் படைகளின் கூரிய சக்திகளுக்கு அவனே இரையாகும்படியாகி விடுகிறது. இன்னும் கேளு. சீன மக்கள் அழுவதைக் காணும் பொழுது காலதேவன்கூட வெறுப்பால் வெம்பிச் சாகிறான். காலதேவனே செத்துச் சருகாகி விட்டால் அப்புறம் மக்களைச் சாவு எங்கிருந்து தீண்டப் போகிறது? விழிகள் நீரைப் பெருக்குவதில்லை இங்கே. நெடுமூச்சுகள் நீராவியை வெளித் தள்ளுகின்றன. தொண்டையிலிருந்து சத்தம் எழும்புவதில்லை. இதயத் துடிப்பு ஓலமிடுகிறது. இத்தனை சங்கடங்களுக்கும் மத்தியில் மக்கள் வேலை செய்கிறார்கள். செய்யாவிட்டால் சாகாமல் சாகடிக்கப்படுகிறார்கள், அதனால்



சென்னை ஸிம்ஸன் குரூப் ஸ்தாபனத்தின் டைரக்டர் ஸ்ரீ எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் குமாரத்தி சௌ. **தேவகிக்கும்** ஸிம்ஸன் குரூப் ஸ்தாபனத்தின் முன்னாள் தொழிலாளர் சட்ட அதிகாரி ஸ்ரீ வி. ராமலிங்க அய்யர் அவர்களின் குமாரர் சிரஞ்சீவி **கிருஷ்ணனுக்கும்** சமீபத்தில் திருமணம் நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



பம்பாய், ஏர் இந்தியா ஸ்தாபனத்தைச் சார்ந்த ஸ்ரீ கே. எல். காந்தம் அவர்களின் புதல்வி சௌபாக்யவதி **பத்மினிக்கும்** ஸ்ரீ டி. என். வெங்கடராமன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **வி. ராகவன்** அவர்களுக்கும் சமீபத்தில், பம்பாயில் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும் உறவினர்களும் வருகை தந்து மணமக்களை வாழ்த்திச் சென்றனர்.

தான் அரைவயிறு நிரம்பாத அடிமை வாழ்வு வாழ்வதைக் காட்டிலும் போரில் குண்டடிபட்டுச் சாவது அவர்களுக்கு எவ்வளவோ இன்பம் தருவதாகத் தோன்றுகிறது. எனவே, மக்கள் போருக்குச் சென்று சென்று உயிரை விடுகிறார்கள். ஏனெனில், இந்நாட்டவர்களுக்கு முன்னே இரண்டே இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று மிருகமாக வாயில்லாப் பிராணியாக உழைத்து உழைத்து ஓடாக வேண்டும், உள்ளுக்குள்ளேயே புழுங்கிப் புழுங்கிச் சாக வேண்டும் அல்லது வீரோபடியாகக் களத்தில் சென்று குண்டடிபட்டுத் துடித்து மீளா உறக்கத்தை மேற்கொள்ள வேண்டும். உனக்கு ஒரு வேளை ஒரு விஷயம் தெரிந்திருக்காது. காயமுறும் சிலப் போர் வீரர்களை அந்த நிலையிலேயே போட்டு விடுகிறார்கள் அல்லது அவர்கள் மீது கொஞ்சம் இரக்கம் ஏற்பட்டால் கற்களால் நசுக்கிக் கொன்று விடுகிறார்கள். காரணம் என்ன தெரியுமா? ஒரு போர் வீரனின் உயிரைக் காட்டிலும் ஒரு குண்டின் மதிப்பு இங்கு அதிகமாகக் கணக்கிடப்படுவதுதான். இவ்வளவு இன்னல்களுக்கு ஆளான போதிலும் இந்நாட்டு மக்கள் புரட்சி செய்ய முடியாது. ஒவ்வொருவனுக்கும் தன் அருகில் இருப்பவன் அரசாங்கத்தின் உளவாளியாக இருப்பானோ என்ற சந்தேகம். எனவே, சும்மா இருப்பதே சுகம் என்று வாளாவிருக்கிறான். எங்கேயாவது புரட்சிக் காற்று அடிக்குமென்று தோன்றினால், மக்களை நிர்த்தாட்சிண்யமாகக் கொன்று போட்டு விடுகிறார்கள். அந்த அவலக் காட்சியைக் கண்ணுற்றால் சாத்தானே கூடக் கதறிப் புலம்பிக் கண்ணை மூடிக் கொண்டு விடுவான். அத்தனை கோரக் காட்சிகளாக இருக்கும்!''

மூச்சு விடுவதற்காக அவள் சற்று நிறுத்தினாள். பிறகு கேலிக் குரலில் மெதுவாகக் கூறினாள் :

''விடுதலைப் படையைக் கொண்டிருக்கும் இந்த நாடு இப்படிப்பட்டதாக்கும்! இங்கே ஒவ்வொரு சொல்லுக்கும் பொருள், அரசாங்கச் சொல்லகராதியில் என்ன போட்டிருக்கிறதோ, அதுதான்! இங்கு ஆயுதங்களுக்கும் யுத்த தளவாடங்களுக்கும் அடிமையாகிக் கிடப்பதையே விடுதலையென்றும் அமைதி என்றும் கூறுகிறார்கள். உண்மையும் ஆதரிசமும் இங்கே பத்தாம் பசலி அடிமைத்தனமாகக் கருதப்படுகின்றன.... கணவன் மனைவியிடம், தங்கை தமயனிடம் மனம் விட்டுப் பேசி மகிழ்வதற்கு இங்கு அனுமதி கிடையாது. இந்நாட்டுக் காற்றில் சந்தேகம் என்னும் பேய் மனிதன் மனிதனை நம்ப முடியாத அளவுக்குக் கலந்து போயிருக்கிறது. இப்படியிருக்கும் பொழுது எதிரியான உன்னிடம் இவ்வளவு கருணை காட்டப்படுவானேன் என்று நீ கேட்கலாம். இதற்கும் காரணம் இருக்கிறது. 'நீ சீனாவுடன் நேசக் கரம் நீட்டுவாய். அப்படி நீட்டும் பொழுது உங்கள் ராணுவ ஒழுக்க முறை சீர்கெடும். இரண்டாவதாக, உலகத்தில், குறிப்பாகச் சீனாவைச் சார்ந்திருக்கும் சிறு சிறு நாடுகளில், சில மக்களும் மனிதத் தன்மையை மதித்து நடக்கிறார்கள் என்ற நல்லெண்ணம் உதிக்கும்' என்பதுதான்.''

ஸினிமாக் கதை

கல்கி

எழுத்தாளர்கள் ஜாக்கிரதை - ௩



அப்போது நான் அற்புதமான ஸினிமாக் கதை ஒன்று எழுதிக் கொண்டிருந்தேன்......இந்தக் கதையை மாத்திரம் ஸினிமாப் படமாகப் பிடித்துவிட்டால் தமிழ் நாட்டையே ஒரு கலக்குக் கலக்கிவிடாதா? எல்லாரும் அப்படியே பிரமித்துப் போய்விட மாட்டார்களா? என்னுடைய வறுமைப் பிணியும் அடியோடு நீங்கிவிடலாமல்லவா?

......இந்த மாதிரி நிர்மாணத்துடன்தான் அந்த ஸினிமாக் கதையை எழுதிக் கொண்டிருந்தேன். (கீழ்க் கட்டில் குடியிருந்த) அப்பாத்துரை ஐயரும் அவர் சம்சாரமும் தினசரி யுத்தம் நடத்தாமலிருந்தால் (மாடியில் குடியிருந்த நான்) இத்தனை நாளைக்குள் முழுதும் எழுதி முடித்திருப்பேன். ஆனால் இவர்களுடைய இடைவிடாத் தொந்தரவின் காரணமாகக் கதை இருபத்திரண்டாவது காட்சிக்கு மேல் நகர்ந்தபாடில்லை. மாலை வேளையில் மட்டுமே எழுதுவதற்கு எனக்கு அவகாசம். அதே சமயத்தில்தான் எனக்குக் கீழ் வீட்டிலும் தாம்பத்தியக் கலகங்கள் நடந்து கொண்டிருக்கும். என்றைக்காவது அந்தத் தம்பதிகள் வெளியில் தொலைந்து போனால் நிம்மதியாக இரண்டு மூன்று காட்சிகள் எழுதிவிடுவேன்.

''எல்லா அலங்காரங்களும் பண்ணிக் கொண்டிருந்தால் என்ன? நீங்கள் ஸினிமாவுக்கும் டிராமாவுக்கும் அழைத்துக் கொண்டு போகிறது தட்டுக் கெட்டுப் போகிறதாக்கும்? வீட்டிலேயே அடைந்து கிடக்கிறதுக்கு அலங்காரம் என்ன வேண்டியிருக்கிறது.''

''நான் வருகிற போதே நீ தயாராக இருந்தால்தானே எங்கேயாவது அழைத்துக் கொண்டு போகலாம்.''

''இப்போ சொல்லுங்கோ, ஸினிமாவுக்கும் போகலாம்னு. அரை நிமிஷத்திலே எல்லாம் பண்ணிண்டு தயாராய் வந்துடறேனா இல்லையா பாருங்கோ.''

''நல்ல காலந்தான்'' என்று எண்ணி நானும் குதூகலித்தேன். அவர்கள் போய் விட்டால் கதையில் இன்னும் நாலு காட்சிகளாவது இன்றைக்கு எழுதி முடிக்கலாமென்று சந்தோஷப்பட்டேன். மேலும் எனக்கு ஸினிமாக் கதை எழுதுவது

அவன் சிறிது நிறுத்தினான். பிறகு எதையோ ஞாபகப்படுத்திக் கொண்டவன் போல், ''பன்னிரண்டு ஆண்டுகளாக நாங்கள் எங்கள் உள்ளத்தில் இதை யெல்லாம் மூடி மறைத்துக் கொண்டு வாழ்கிறோம். திபெத்தில் கம்யூனிஸ்டுகளின் சூழ்ச்சி தொடங்கிய போது சந்தேகச் சூழ்நிலையைத்தான் முதலாவதாக உருவாக்கினார்கள். லாமாக்களிடமும் தர்மத்தினிடமும் வெறுப்பை உண்டாக்கினார்கள். அதற்குப் பின்னர் கள்ளங்கபடமற்ற திபெத் மக்களைச் சீனச் செருப்பால் ஈவிரக்கமின்றி நசுக்கினார்கள். திபெத்திய நாகரிகமும் வரலாறும் என்றென்றைக்கும் தலை காட்ட முடியாமல் அழிக்கப்பட்டன. அப்பொழுதுதான் என்னையும் என் அன்னையையும் என் தந்தையிடமிருந்து பலவந்தமாகப் பிரித்தார்கள். அப்பொழுது எனக்குப் பத்து வயது இருக்கும். என் அன்னையை என் கண்ணெதிரே உயிரோடு கொளுத்தினார்கள். ஏனென்றால், அவள் கடைசி மூச்சுவரை அவர்கள் கொடுத்த வேலையைச் செய்ய முடியாது என்று மறுத்தாள். என்னை விடுதலைப் படையில் உள்ள கொடும் நெஞ்சர்களின் மகிழ்ச்சிக்குப் பொதுவுடைமையாக்கினார்கள். என் மானத்தையும் மரியாதையையும் கொடுமையாகப் பறித்தார்கள். என் சுயமரியாதையைத் தரை மட்டமாக்க முயன்றார்கள். காயமுற்ற இந்திய, சீனப் போர் வீரர்களைக் காணும் வாய்ப்பு மட்டும் எனக்குக் கிட்டாமலிருந்தால், ஒருவேளை அவர்கள் கருத்து ஈடேறியிருக்கலாம். பாரதப் போர் வீரனின் வீரத்தை என் கண்களால் கண்டேன். நாட்டின் பெயராலும் தர்மத்தின் பெயராலும் அவன் உயிரைவிட அஞ்சவில்லை. ஆனால் சீனப் போர் வீரன்.....? அவன் சாகாமல் அவனுக்கு விடுதலை கிடையாது. உணர்ச்சி ஏதுமின்றி இயந்திரமாக அவன் போர் புரியவேண்டும். ஒடித் தேய்ந்த இயந்திரத்தின் பாகத்தைப் போலவே அவன் விழுந்து விடுகிறான். நேற்று இன்னொரு முகாமில் ஓர் இந்திய வீரனைப் பார்த்து, 'நீ ஏன் போரிடுகிறாய்?' என்று கேட்டார்கள். 'உலகத்தில் சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்காக!' என்று அவன் பதில் சொன்னான். அப்பொழுது எனக்கு என் திபெத் நாட்டின் நினைவு வந்தது. சீனாவைக் காட்டிலும் அது வலுக் குறைவாக இருக்கிறது என்பதனாலேயே திபெத்தின் சுதந்திரம் பறிக்கப்பட்டது. காயமுற்றுச் சிறைப்பட்டபின்னரும் இந்திய வீரனின் அஞ்சாத குரலைக் கேட்ட பொழுது எனக்குக் 'சம்பா'க்களின் போர்வீரம் நினைவுக்குவந்தது. இந்தியா திபெத்தையும் சுதந்திரம் பெறச் செய்யும் என்று சம்பாக்கள் பேசிக் கொள்வதாகக் கேள்விப்பட்டேன். கேட்கும்பொழுது மெய் சிலிர்க்கிறது. இன்று நாமும் நாட்டுக்காக உயிரை விட்டால் என்ன என்றுதோன்றுகிறது. நீங்கள் பாக்கியசாலிகள், கொடுத்து வைத்தவர்கள். வயிற்றுத் தீயைச் சமனப்படுத்துவதற்காக நீங்கள் போர் புரியவில்லை. நாட்டுக்கும் தர்மத்துக்குமாக உயிரைத் தியாகம் செய்யும் வல்லமை பெற்றிருக்கும் நாட்டிலே பிறந்துள்ள உங்களை நினைத்தால் பொறாமையாயிருக்கிறது.

''நான் உன்னிடம் ஒரு விஷயம் சொல்லட்டுமா? இப்பொழுதுகூட என்னைப் பற்றி

பற்றிப் புதிய பெருமை உண்டாயிற்று. எப்பேர்ப்பட்ட குடும்பச் சண்டை சச்சரவுகளை யெல்லாம் ஸினிமா தீர்த்து வைக்கிறது? எரிச்சலும் விரஸமும் நிறைந்த இல்லற வாழ்க்கையில்கூட எவ்வளவு இன்பத்தையும் திருப்தியையும் அளிக்கிறது? சிலபேர் எல்லாம் ஏதோ ஸினிமா என்றால் ஒரு மாதிரி முகத்தைச் சுளித்துக் கொண்டு பேசுகிறார்களே, அவர்கள் எவ்வளவு அறியாதவர்கள் ?

இந்த மாதிரி எண்ணமிடுவதிலேயே வெகு நேரம் போய் விட்டது. இன்றையப் பொழுதுக்கு ஏதாவது எழுதிவிட வேண்டுமென்று அவசர அவசரமாக எழுதி இரண்டு காட்சி முடித்து விட்டேன். மூன்றாவது காட்சி எழுதிக் கொண்டிருக்கையில் வாசலில் குதிரை வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

''ஸினிமாவாம், ஸினிமா! போயும் போயும் பொறுக்கி எடுத்து அழைச்சிண்டு போனேனே! சவரணைதான்! யாரோ கட்டேலே போறவளும் கட்டேலே போறவளும் நின்னுண்டு வாயிலே வந்ததைக் கன்னாபின்னான்னு பேசறதாம். உங்களுக்குத்தான் புத்தி போச்சே!''

''சீ! வாயை மூடு! ஸினிமாவுக்குப் போகணும்னு என் பிராணனை வாங்கினதில் குறைச்சல் இல்லே. இப்போது என் மேலே குற்றம் சொல்றியே !''

''உங்க வாயை நீங்க மூடிக்குங்க! ஸினிமாவுக்குப் போகணும்னு இந்த மாதிரி கழிசடை ஸினிமாவுக்கா நான் போகணும் என்று அழுதேன்?''

....

....

''உன்னைப் போன்ற இளிச்சவாய் கப்பிகள் பத்துப் பேர் பார்க்க வருவார்கள் என்றுதான்.''

''நான் ஒண்ணும் இளிச்சவாய்க்கப்பி இல்லே! உங்கம்மா இளிச்சவாய் கப்பி......! உங்க பாட்டி இளிச்சவாய் கப்பி......''

மறு நாளே அந்த வீட்டை விட்டு ஜாகை மாற்றி விட்டேன்.

ஆனால் என்னுடைய ஸினிமாக் கதை மட்டும் நாளது வரை பூர்த்தியாகவில்லை. அந்தத் தம்பதிகளின் இரண்டாவது சம்பாஷணையைக் கேட்டதும் எனக்குண்டான அதிர்ச்சி இன்னும் நீங்கியபாடில்லை.



வேவு பார்த்துக் கொண்டிருப்பார்கள். நாளைக்கேகூட என்னை எங்கேயாவது இனந் தெரியாத ஓர் இடத்துக்கு இட்டுச் சென்று கொன்று போட்டு விடலாம். ஆனால் எனக்கு ஒரு திருப்தி என்ன வென்றால், பல ஆண்டுகளாக நான் என் இதயத்தில் மூடி மறைத்து வைத்திருந்த இந்த விஷயத்தைச் சரியான நபரிடத்தில் சொல்லிக் கொண் டிருக்கிறேன் என்பதே ஆகும். நீ விடுதலை பெற்று இங்கிருந்து போகும் பொழுது இதை நினைவு வைத்துக் கொள். திப்பெத் தில் என்னைப் போல் இலட்சக்கணக்கான மேனகைகள் தங்கள் சுதந்திரத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒருமுறை நீ அறைகூவி அழைத்தால் போதும், லட்சக் கணக்கான குரல்கள் எரிமலையைப் போன்று தீ கக்கிக் கொண்டு எழும். ஒரு முறை புத்தர் எங்களைக் காத்தருளினார். இப்பொழுது புத்தரின் புதல்வர்களான நீங்கள் காப்பாற்றப் போகிறீர்கள். நான் உயிரோடு இருந்தால் அந்த நாளை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்; கொலை செய்யப்பட்டால், என் ஆத்மா உன்னையே சுற்றிக்கொண்டிருக்கும். 'மேனகா, உன் சிரிப்பு மிக நன்றாயிருக்கிறது!' என்று நீ மறுபடியும் எப்பொழுது சொல்லுவாய் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். 'என் அழகு எப்படி இருக்கிறது!' என்று நான் உன்னைக் கேட்பேனுக்கும்!''

இதைக் கூறிய அவள் ஒரேயடியாக மௌனம் சாதித்து விட்டாள்.

இனி எப்படித் தூக்கம் வரமுடியும்? திடீரென்று இதென்ன நடந்து விட்டது? யோசித்தேன், யோசித்தேன். அப்படி யோசித் தேன். பொழுது விடியும் வரை யோசித்துக் கொண்டேயிருந்தேன்.

* * *

அன்று இருபத்துமூன்றும் நாள். மேனகா மீண்டும் வந்தாள். ஆனால் இன்று அவளோடு நேற்று வந்தவர்கள் வரவில்லை. வந்தவை இரண்டும் புது முகங்கள். அவற்றின் முறுவ லில் கொடுமையும் வெற்றியும் எக்களித்துக் கொண்டிருந்தன. மேனகாவின் உதடுகள் இளநகை புரிந்து கொண்டிருந்தன. ஆனால் இமைகள் நீராடிக் கொண்டிருந்தன. அவள் எனக்குக் கட்டுக் கட்டிய வண்ணம் தன் னோடு வந்தவர்களுக்குத் தெரியாமல் ஒரு சிறு காகிதத்தை என் இடுப்பில் செருகி மறைத்தாள்.

அப்புறம் கடந்த இருபத்திரண்டு நாட்களாகக் கேட்கப்பட்ட கேள்விகளே மீண்டும் கேட்கப்பட்டன. இன்று நான் சரியாகப் பதில் சொன்னேன். ஏனென்றால், நான் நாட்டுக்குத் திரும்பிப் போகத் தயார் ஆகி விட்டேன். மேனகாவின் முகத்தில் ஓர் ஒளி பளிச்சிட்டது. அடுத்தகணமே அவள் கண்கள் சலக்கலை பெற்று உணர்ச்சி பொழிந்து காட்சி தந்தன. இன்றைக்குப் பின் அவளைக் காண முடியாது என்று ஏனோ எனக்குத் தோன்றியது. முதல் முறையாக இதயத் தில் ஏதோ ஒன்று நெருடியது. பிறகு எல்லாம் சரியாகிவிட்டது. மனத்துள் நானே கூறிக் கொண்டேன்: 'போர் வீரன் நான்; காதலன் அல்ல.'

மேனகா எழுந்தாள். ஒன்றும் கூறாமலே அறையை விட்டு வெளியேறினாள். நான் இடுப்பிலிருந்து காகிதத்தை எடுத்துப் படித் தேன். அதில் எழுதியிருந்தது:

''இந்திய வீரனே!

என்னிடமிருந்து நர்ஸ் வேலையைப் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள். இன்று முதல் சாலை செப்பனிடும் வேலை எனக்குத் தரப்படும். என் உயிருள்ளவரை இனி எனக்கு இந்த வேலைதானே. என்னமோ! நேற்று இரவு காவலில் உன்னோடு இருந் தார்களே, அவர்களைக் கழுத்தை நெரித்துக் கொன்று போட்டாகி விட்டது. இன்று நீ எல்லாவற்றையும் சொல்லாவிட்டால் உன்னை யும் கொன்று போட்டிருப்பார்கள். கொல்லப் பட்டவர்கள் அனைவரும் திப்பெத்தியர்கள். எனக்கு உதவியாகவும் எதிரிகளோடு ஒத்துழைத்ததாகவும் குற்றம் சாட்டி அவர்கள் கொல்லப்பட்டார்கள். இம்மாதிரி தினமும் இங்கு எத்தனையோ பேர் கொல்லப் படுகிறார்கள்.''

* * *

இதே போலச் சிறையில் இரண்டு மாதங் களும் பதினோரு நாட்களும் ஓடின. என்னை விடுதலை செய்யத் தீர்மானித்துவிட்டார்கள். ஒரு கண் சிரிக்கிறது. ஒரு கண் அழுகிறது. வழி நெடுகச் சாலையமைப்பதைக் கண்டேன். கூலியாட்களின் வாயிலிருந்து நுரையும் நெற்றியிலிருந்து வியர்வையும் சொட்டிக் கொண்டிருந்தன. ஆணும் பெண்ணும் இந்த வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். சீனப் புரட்சி பற்றிய பாடல் டிரான்ஸிஸ்ட ரில் கேட்டுக் கொண்டிருந்தது. ஆயிரக் கணக்கான மேனகைகள் கதறுவது போலத் தோன்றியது எனக்கு. உயிர்ப்புச் சக்தியே அவர்களிடமிருந்து விடைபெற்றிருந்தது. உயிர் வாழ்வதே அவர்களுக்குப் பிடிக்க வில்லை போலும்! ஆம், கல் நாட்டைச் சேர்ந்தவர்கள்தானே! கல்லாகி விட்டார்கள் போலும்! பார்வையோடும் இடம் எல்லாம் கற்களாகவே காட்சியளித்தன. ஓரிடத்திலா வது ஒரு சிறு அருகம்புல்லாவது தலைகாட்ட வேண்டுமே! அதுதான் இல்லை!

நான்.....

என் நாட்டு மண்ணிலே, சுதந்திர பாரதத்தின் ஆகாசவாணி நிலையத்தின் ஒலிபரப்பைக் கேட்கிறேன் இப்பொழுது! ''திப்பெத் விடுதலை என்பது ஒரு பிதற்றல். கம்யூனிஸ்டுகளின் நாட்டுப் பற்றைச் சிறிதும் சந்தேகிக்கக் கூடாது.''

என் காயங்கள் மீண்டும் வலி கண்டன. பார்வை வானை நோக்கியது. திடீரென்று ஒரு நட்சத்திரம் உதிர்ந்தது. ஒருவேளை இன்று மேனகை களைத்துப் போய் விழுந்து விட்டாளோ? என்றென்றும் எழுந்திருக்க முடியாமலே சாய்ந்து விட்டாளோ?



உயிர்ச் சேவை

கோமதி சுப்ரமணியம்



தொழிற் கதை

★

பெண்களின் மன இயல்புகளைத் தெரிக்கும் ஆற்றல் பெண்களுக்குத்தான் அதிகம் உண்டு. தொழில்துறை பற்றிய இந்தக் கதையிலே, ஒரு பெண்ணின் இலட்சியத்தைக் கலை படத் தீட்டியிருக்கும் ஸ்ரீமதி கோமதி சுப்ரமணியம், அந்தகைய சிறந்த பெண் எழுத்தாளர்களிலே ஒருவர்.



மதியச் சாப்பாட்டு நேரத்தையும்கூட, நெருக்கடி கேஸ்களுக்காக அர்ப்பணித்து விட்டு, டை டயத்துக்குக் குவார்ட்டர்ஸுக்குத் திரும்புகிறாள் சாவித்திரி.

மகள் வந்ததும் சேர்ந்து சாப்பிடுவதற்காகக் காத்திருக்கும் அன்னை பார்வதம் தன் பசி தெரியாதிருக்கச் சித்திரத்தோடு ஐக்கியமாகி விடுகிறாள். எதிரே இருக்கும் அட்டையில், எதிரிகளுக்கு எச்சரிக்கையாய் எல்லையைக் காத்து நிற்கும் இமயச் சிகரத்தை வரைந்து முடித்து, அதன் மீது படர்ந்துள்ள வெண்பனி மூட்டத்தைத் தத்ரூபமாய்த் தீட்டிக் கொண்டிருந்த வேளையில்தான் சாவித்திரி வந்து கொண்டிருந்தாள்.

கலகலவென்னும் சிரிப்பொலி கட்டியம் கூறியது சாவித்திரியின் வரவுக்கு.

தாயார் பார்வதத்தின் மனம் அலைபாய்கிறது.

'சாவித்திரி! நீ ஊருக்கு டாக்டராக இருக்கலாம்; எனக்கு நீ மகளில்லையா? உன் சௌக்கியத்தில் எனக்கு அக்கறையில்லையா? உன் வரவுக்காக ஓர் ஆத்மா அன்னை என்ற பெயரால் துடித்துக் கொண்டிருக்குமே என்பதைக் கூட உணரவொட்டாத ஒரு நிலையை உன்னத சேவையாக உயர்த்துகிறாயே' என்று கேட்க நினைத்ததைக் கேட்கவில்லை.

'சாப்பிடக்கூட வர முடியாமல் அப்படி என்ன உத்தியோகம்?' என்று பார்வதத்தின் மகளாக மட்டும் இருந்த காலத்தில் கேட்டிருந்தால் அந்தக் கேள்விக்குப் பொருளுண்டு.

இப்போது அவள் ஒரு டாக்டர்!

தான், தனது என்ற நிலையைத் தாண்டிப் பிறருக்காகத் தன்னை, தன் சுகத்தை அர்ப்பணித்துவிட்ட மேன்மையான நிலையில் இருப்பவள்.

பார்வதத்திடமிருந்து பெருமூச்சுப் பிறக்கிறது.

''அம்மா, என்னம்மா இது? ஓவியம் நன்றாக அமைய வில்லையா? பெருமூச்சு விடுகிறாயே...!'' என்று கேலியாகச் சிரித்துக் கேட்டபடியே, தாயார் வரைந்து கொண்டிருந்த ஓவிய அட்டையைப் பறித்து இப்படியும் அப்படியும் பிடித்து ரசிக்கிறாள்.

ஆஸ்பத்திரியில் நூற்றுக் கணக்கான — குழந்தைகளோடு உறவாடுவதால் பாளுகச் சாவித்திரியும் குழந்தையாகி விட்டாளா?

''நன்றாகத்தானே அம்மா, வரைந்திருக்கிறாய். அம்மா, உன் தங்கக் கைக்கு...''

''எதுவும் செய்து போட வேண்டாம். இப்போது சாப்பாடு போடு. உனக்காக எத்தனை நேரம் காத்திருப்பது?'' என்று கேட்டுக் கொண்டே இருக்கையை விட்டு எழுந்தாள்.

''ப்ளீஸ்...ப்ளீஸ் மம்மி.... இன்று ஒருபோது நீயாகச் சாப்பிட்டு விடு. எனக்கு வெறும் டீ மட்டும் போதும். சற்று ஓய்வெடுத்துக் கொண்டு வருகிறேன்.....''

செந்தாமரையின் சிரிப்பாகப் பேச்சு இருந்தாலும் மகளது முகம் களைப்பின் இறுக்கத்தில் வாடித் துவண்டிருப்பதைக் காணும்போது பெற்ற மனம் சங்கடப்படுகிறது. மகளைக் கடிந்து கொள்ளவும் முடியாது அவள் மீது கழிவிரக்கம் கொள்ளவும் முடியாது தடுமாறுகிறாள்.

தான் சாப்பிடாத போது அன்னை சாப்பிட மாட்டாள் என்பது தெரியும்; இருந்தும் அப்போதைய அலுப்பு அவளை அறைக்குள் தள்ளியது.

பால்காரன் வரும் வரையில் பொழுது போக்காக அரைகுறையில் விட்ட ஓவியத்தைத் தொடர்கிறாள் பார்வதம்.

டெலிபோன் மணி கிணுகிணுக்கிறது.

களைத்துப் படுத்திருக்கும் மகளது ஓய்வுக்கு முறிவு நேர்வதைக் கண்டு எதற்காகத் தாயின் மனம் வேதனைப்படுகிறது?

பார்வதத்துக்கு வந்த ஆத்திரத்தில் ரிஸீவரைப் பிடுங்கி எறிந்துவிட்டு மகளைக் கட்டிலில் தள்ளித் தாலாட்ட வேண்டும் போலிருந்தது.

சாவித்திரி குழந்தையாக இல்லையே....

"நான் ஒன்றும் குழந்தையில்லை, என்னை நீங்கள் ஏமாற்றுவதற்கு..... உங்கள் குரலில் உள்ள குழைவுதான் காட்டிக் கொடுத்து விட்டதே......"

சாவித்திரி யாருடன் பேசுகிறாள்...?

சம்பாஷணையின் தொடர்பிலிருந்து அவள் எதிர்பார்த்துப் பயந்ததுபோல் ஆஸ்பத்திரியிலிருந்து அழைப்பு வரவில்லை; எதிர்பார்த்துக் காத்திருந்த இடத்திலிருந்து—டாக்டர் மனோகரிடமிருந்து என்பது தெரிந்து மனத்தில் சற்று மலர்ச்சி பிறக்கிறது.

பிணி பற்றிய ஆராய்ச்சி, பிணியாளர்களின் அவல முகமும், அழுகைக் குரலும் இவற்றை மட்டுமே கண்டு கேட்டு அதுவே உலகமாய் வைத்திய நிலையத்துக்குள்ளேயே வட்டமடித்துக் கொண்டிருந்த சாவித்திரிக்கு உல்லாசம், உற்சாகம், ஓய்வு என்றெல்லாம் மனத்தால் அநுபவிக்க வேண்டிய உலகம் ஒன்று இருக்கிறதென்பதை மெதுவாய் உணர்த்திக் கொண்டிருக்கும் டாக்டர் மனோகர் பார்வதத்தைப் பொறுத்த வரை மகளை வாழ வைக்க வரும் கண் கண்ட தெய்வமாகவே உருவாகி நின்றார்.

இருதய ஸ்பெஷலிஸ்டு மனோகர் பெயருக்குள்ள மதிப்பு அவரால் நோய் தெளியும் பல்லாயிரக்கணக்கான மக்களின் மனத்திலே கோபுரமாய் வளர்ந்திருக்கிறது. அவருக்குள்ள நுண்ணறிவும் திறமையும் அவரைக் கைராசிக்காரராக உயர்த்தியிருக்கிறது. சக டாக்டர்கள் அவரது ஆலோசனை கிடைப்பதே தங்களுக்குப் பெருமையும் வெற்றியும் தேடித் தரும் என்னும் நம்பிக்கையிலிருப்பவர்கள். அப்படிப்பட்ட உயர்ந்த நிலையிலே இருப்பவர் தன் வீட்டைத் தேடி-தன் மகளின் நட்பைத் தேடி வந்ததே பெரும் பாக்கியம் என நினைக்கிறாள் பார்வதம்.

தொழில் முறையில் அவர்களுக்குள் தொடங்கிய நட்பு வெகு சீக்கிரத்திலேயே குடும்ப உறவாக மாறி வந்ததின் விளைவாகத்தான் டாக்டர் மனோகர் இன்று உரிமையுடன் சாவித்திரியை வெளியே அழைத்துப் போக வருவதாக போன் மூலம் அறிவிப்புக் கொடுத்திருந்தார்.

தன்னை நோக்கும் நோயாளியின் மனத்திலே தெம்பும் திடமும் பிறக்க வேண்டுமென்பதற்காக 'மேக்'காக டிரஸ் செய்து கொண்டு புறப்படுவாளே, அந்தத் துடிப்பு இப்போது இல்லை. தன் சக உழைப்பாளியின் அன்பைத் தட்டமாட்டாது. புறப்படத் தயாரானாள் சாவித்திரி.

வெளியே காரின் ஹாரன் எழுகிறது.

பார்வதம் டீ செட்டைத் தயாராகக் கொண்டு வந்து மேஜையில் வைக்கிறாள். சாவித்திரி ஓடிப்போய் எதிர்கொண்டழைக்கவில்லை. மாடியில் நின்றபடியே, அறை ஜன்னலின் திரையை விலக்கி இலேசான புன்னகையுடன் கையை அசைக்கிறாள்.

இதே மனோகர், டாக்டர் என்ற முறையில் ஆஸ்பத்திரிப் பணிக்காக வருவதாக இருந்திருந்தால் சாவித்திரி ஓடிப் போய் எதிர்கொண்டு அழைத்திருப்பாள். இப்பொழுது அவர் அப்படி வரவில்லையே!

"ஹலோ, ரெடியா?" என்று கேட்டபடியே மாடியேறி வந்து விட்டார் மனோகர்.

"நான் எப்பொழுதும் தயார்தான்..."

"ஒரு திருத்தம். டியூட்டிக்கென்றும் நீங்கள் எப்பொழுதும் தயார். அப்படித்தானே......?"

"ஆமாம்! இப்படி உங்களோடு பேசிக் கொண்டிருக்கும் அவசியம் இருந்திருக்கவில்லை



யானால் இதே மாலை நேரத்தில் இந்தச் சாவித்திரி நர்ஸிங்ஹோமுக்குள் டாக்டராக உலவிக் கொண்டிருப்பாள்...'' பேசிக் கொண்டே மதுவைக் கலந்து இரு கோப்பைகளில் நிரப்புகிறான்.

''என் நட்பால் நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறீர்கள். இல்லையா?''

'ஆமாம்' என்று சொல்லி விடப் போகிறாளே என்ற துடிப்பு பார்வதத்தின் நெஞ்சுக்குள். சொல்லி விடாதே என்று எச்சரிக்க வருபவளைப் போல அவ்வறைக்கு வருகிறாள் பார்வதம்.

டாக்டர் எழுந்து மரியாதை கொடுத்துப் பார்வதத்தை உட்காரச் சொல்லுகிறார்.

''சுவாரசியமான சம்பாஷணையின் நடுவே நான் குறுக்கிட்டு விட்டேன்'' என்று சொல்லியபடியே, மேஜையைச் சுற்றிக் கிடந்த மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளுகிறாள் பார்வதம். கலந்து வைத்திருக்கும் மதுவை மூன்றாவது கோப்பையில் ஊற்றித் தாயாரின் முன் வைக்கிறாள் சாவித்திரி.

பெருமூச்சுடன் பேசுகிறார் டாக்டர்.

''என்னால் பல நோயாளிகள் பெற வேண்டிய நன்மை பாதிக்கப்படுகிறது என்பது தெரியும்போது மனத்தில் சஞ்சலமேற்படுகிறது......'' மீண்டும் அந்தச் சொல்லைக் குறையோடு டாக்டர் கூறுவதைக் கேட்டுத் துடித்து விடுகிறாள் சாவித்திரி.

''அப்படி ஒன்றுமில்லை, டாக்டர்!''



இருமலை நிறுத்த

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சாப்பிடுங்கள் சிவப்பு லேபில்






விடாது தொடர்ந்து தொல்லை கொடுக்கும் இருமலைப் பற்றி அசிரத்தையாக இருக்கக் கூடாது. அது உடலைப் பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பீடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் இருமலை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்ப்ரீன் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வராமல் தடுக்கும் சக்தியை ஊட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.





வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால், சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை இளக்கி வெளியேற்றி சுவாசப்பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் மீண்டும் வராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர் இந்துஸ்தான் லிமிடெட், பம்பாய்

"சாவித்திரியை நீங்கள் அப்படி நினைப்பது தவறு: நீங்கள் அப்படி நினைக்கும்படியாக அவள் பேசியதும் தவறு....."

கலகலவெனச் சிரித்தார் டாக்டர்.

"இந்தச் சாதாரண விஷயத்தை சீரியஸாக எடுத்துக் கொண்டு நீங்கள் வருத்தப்பட வேண்டிய அவசியமே இல்லை. சாவித்திரி என்னை இங்கு வரவேண்டாமென்று சொன்னாலும்கூட நான் வராமல் நிற்கப் போவதில்லை. ஏனென்றால் சாவித்திரிக்குச் சில 'பிரின்ஸிபிள்ஸ்' சொல்லித் தர வேண்டும் என்பதற்காகவே வந்து கொண்டிருப்பேன். சாவித்திரி! நாம் பலருக்குச் சேவை செய்யும் தொழிலை மேற்கொண்டிருந்தாலும் நாமும் மனிதர்கள்தானே...... நமது தொழிலில் நாம் சிறப்புடன் பணி புரிய வேண்டுமானால் அதற்கு முன் நம்மை நாமே உற்சாகமுள்ளவர்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதற்காகவாவது வெளியுலக உறவு நமக்கு நிச்சயம் வேண்டும். சாவித்திரி....."

"இதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன் டாக்டர்! நம்மைப் போன்று உயிர்ச் சேவை செய்பவர்கள் தங்கள் முழு நேர உழைப்பையும் நோயாளிகளுக்காகவே அர்ப்பணித்து விட்டால், அதனால் பல உயிர்கள் நன்மை பெற வாய்ப்பாக இருக்குமல்லவா?"

"ஒப்புக் கொள்ளுகிறேன் சாவித்திரி. முழு நேரமும் உழைப்பதென்றால் நமக்கு அதற்குரிய தெம்பு வேண்டுமல்லவா? ஒவ்வொருவருக்கும் திறமை நிறைய இருக்கலாம். அதற்குரிய தெம்பு வேண்டும். மனம் உற்சாகமாக இருந்தால் உடம்பிலே தெம்பு தானாக வரும். அதைப் பெறுவதற்காகவாவது வெளியுலக உறவு வேண்டும். இப்பொழுது புரிகிறதா?" என்று கேட்டுவிட்டு மோரைப் பருகுகிறார்.

மோரை அருந்தி முடித்த சாவித்திரியும் எழுந்து, "போகலாமல்லவா? எங்கே என்று கேட்டு விடாதீர்கள். வெளியே சற்று உலவி விட்டு வரத்தான்..... ஆனால் ஒரு கண்டிஷன். கரெக்டாக ஆறு மணிக்கு நான் நர்ஸிங் ஹோமில் இருக்க வேண்டும்" என்றாள்.

"சரி! ..... சரி!......"

டாக்டர் எழுந்து நடந்தார். சாவித்திரியும் பின்தொடர்ந்தாள்.

பர்வதம் வராந்தாவுக்கு வந்து முன்பு அரைகுறையாக நிறுத்தி வைத்திருக்கும் ஓவிய அட்டையைக் கையில் எடுக்கிறாள். திட்டுத் திட்டாகப் பனி மூட்டம் வெறுவெறுவென உருவாகிக் கொண்டிருக்கிறது.

மாடிப் படியில் யாரோ வரும் காலடிஓசை.

யாராக இருக்கலாம்?

திரும்பிப் பார்க்கிறாள் பர்வதம்.

சப்பென்ற அலட்சிய உணர்வு. வந்தவள் முகத்திலோ அசாத்திய பரபரப்பு. அலட்சியமாக ஏறிட்டு நோக்கிய பர்வதத்திடம், "டாக்டரம்மாவை உடனே பார்க்க வேண்டும்" என்று பதறினாள்.

அவளது பதற்றத்தைச் சற்றும் பொருட்படுத்தாதவளாய் எரிந்து விழுந்தாள் பர்வதம்.

"டாக்டரம்மாவுக்கு உங்கள் ஆஸ்பத்திரி மட்டும் உலகமல்ல: அதற்கு அப்பாலும் ஓர் உலகம் இருக்கிறதென்பதை உங்கள் சூப்பரின்டெண்டுக்குப் போய்ச் சொல்."

"அம்மா......"

"போ..... போ என்றால் போய்விடு."

விதிர்த்துப் போகிறாள் நர்ஸ். பர்வதத்தை அறிந்த நாளாய் என்றுமே இந்தளவு கோபமாக இருந்து பார்த்ததில்லை. அதிசயமான இத்தகைய மாறுதலை ஏற்கமாட்டாத வேணி "ஒரு நிமிஷம் என் பேச்சுக்கு அனுமதி தாருங்கள் அம்மா. ரூம்லே ஒரு கேஸ் மிகவும் சீரியஸான நிலை ஆகிக் கொண்டிருக்கிறதம்மா. டாக்டர் பிரபா, சாவித்திரி அம்மாவை உடனே அழைத்து வரச் சொன்னார்களம்மா. அவர்களது திறமையை, உதவியை அவசரமாக அவசியமாக எதிர்பார்க்கிறார்களம்மா. தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஓர் உயிர் மெல்ல மெல்லக் கைநழுவிக் கொண்டிருக்கிறதம்மா....." என்றாள்.

"டாக்டர் வெளியே போயிருக்கிறாள் எப்போ வருவாளோ, தெரியாது" என்றாள் எரிச்சலுடன்!

"நல்லதம்மா..... அவர்கள் எந்த நிமிடம் வந்தாலும் உடனே நர்ஸிங்ஹோமுக்கு அனுப்புங்கள் அம்மா. நம்மால் உருவாக்க முடியாத ஓர் உயிர் சாவுக்கும் வாழ்வுக்கும் இடையில் துடித்துக் கொண்டிருக்கிறதம்மா. பாவம், அந்த ஜீவனுக்கு அதிர்ஷ்டக் கட்டை..... இல்லையானால் இந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டரம்மா இல்லாதிருக்க மாட்டார்கள்."

கடமையை வெறும் கடமையாக மட்டும் கருதாமல் அதனூடாக மனிதாபிமானமென்னும் அன்பு நிலையும் பின்னிப் பிணைந்துள்ள நிலை பர்வதத்தின் நெஞ்சிலும் எதிரொலிப்பை எழுப்பியிருக்க வேண்டும். அது வரையில் விரிந்து கட்டிக் கொண்டிருந்த கடுமையைச் சற்றுத் தளர்த்தி, "பார்க்கலாம்" என்று சொல்லி வைத்தாள்.

நர்ஸ் வேணி போய் விட்டாள். ஆனால் அவள் உதிர்த்துச் சென்ற சொல் நெடு நேரம் நெஞ்சில் அலைமோதிக் கொண்டிருக்கிறது. மகள் குறிப்பிட்ட நேரத்தையும் தாண்டி வராதிருக்கவே பயம் பந்து பந்தாகப் புரண்டெழுகிறது.

'டாக்டரம்மா தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஓர் உயிரின் இழப்புக்கு அனுமதி தரும் பொழுதாகக் கரைந்து கொண்டிருக்கிறதே' என்னும் பொருளை நினைத்து வதைபடுகிறது மனம்.

'சாவித்திரி! உன்னை என்றும்போல் உயரிய பணிக்காகவே அர்ப்பணித்திருந்திருக்கலாமே! அதிலுள்ள நிம்மதி. அதிலுள்ள இன்பம்.... உன் சேவையால் பிழைத்தெழுந்திருக்கும், அந்த ஜீவனின் நன்றிக் குளிப்பில் நீ மூழ்கி மூழ்கும் பெருமிதம் இப்பொழுதில்லையே....'

சாவித்திரியின் கம்பீரச் சிரிப்போடு, டாக்டரின் கலகலத்த பேச்சுக் குரலும் 'கேட்'டுக்குள் நுழைகிறது. சாவித்திரியை இறக்கிவிட்டு, காரிலிருந்தபடியே விடை பெற்றுச் செல்லுகிறார் டாக்டர் மனோகர்.

துள்ளிக் குதித்துச் சிட்டுப் போல் படியேறி வரும் மகளிடம் எப்படிச் செய்தியைச் சொல்

வது? அல்லது சொல்லாமல் இருப்பது? என்று குழம்பி நின்ற நிலையிலேயே மகள் வந்து விட்டாள்.

முந்திய சாவித்திரியாக இருந்திருந்தால் வந்ததும் உடை மாற்றிக் கொண்டு நர்ஸிங் ஹோமுக்கு ஓடியிருப்பாள்.

இப்போது அவள்....!

அவள் மனம் சற்று முன்பு அனுபவித்த உல்லாசக் களிப்பின் நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்தது. அதன் துள்ளல் மனம் முழுவதும் நிறைந்து வழிகிறது. வெகு சீக்கிரத்தில் சாவித்திரியைத் தன் உடைமையாக்கிக்கொள்ளும் உரிமையைக் கேட்டு அவளது பதிலைக் கேட்டிருந்தார் டாக்டர் மனோகர். சாவித்திரி மட்டும் என்ன சொல்லிவிடப் போகிறாள். 'எதற்கும் அவகாசம் வேண்டும்' என்று கேட்டுக் கொண்டிருந்தாள். அந்த யோசனைக்குள் நர்ஸிங் ஹோமின் நினைவுகள்.. அதனுள் அவளது சேவையை நாடி வந்து காத்துக் கிடக்கும் நோயாளிகளின் முகங்கள்! அவர்களுக்காகத் தனது முழு நேர உழைப்பையும் அர்ப்பணிக்கத் திட்டமிட்ட தனது லட்சியம். இத்தனைக்கும் மேலாக, 'எப்பொழுது திருமணத்துக்குத் தேதி குறிக்கலாம்' என்ற டாக்டரின் கேள்வி. இத்தனைக்குள்ளாகவும் சாவித்திரியின் மனம் புரண்டு தெளிவு பெற முடியாது தடுமாறிக்கொண்டிருக்கிற வேளையில்தான் பார்வதம் சொன்னாள், "சாவித்திரி மணி ஏழாகப் போகிறதே" —கடமையை நினைவூட்டுபவள் போல் நேரத்தைக் குறிப்பிடுகிறாள்.

"இன்னும் ஏழு நிமிடங்கள் இருக்கின்றனவே அம்மா, நர்ஸிங் ஹோமுக்குப் போக மூன்று நிமிடங்கள் போதுமென்று நீதானேயம்மா அடிக்கடி சொல்லுவாய்."

"டாக்டர் பிரபா உடனே உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறாளாம்."

"டாக்டர் பிரபா... ஏன்... ஏதாவது சீரியஸ் கேஸ் வந்திருக்கிறதா?..."

"உன்னைத் தேடி வந்த நர்ஸ் அப்படித்தான் சொன்னாள்."

சாவித்திரியின் நெஞ்சினுள்ளே தீப்பொறி கட்டது போன்ற ஓர் உணர்வு.

"முன்பே ஏனம்மா இதை என்னிடம் சொல்லவில்லை?" என்று அர்த்தமில்லாது பதறியவள் தன் நினைவுக்கு வந்தவளைப் போன்று, "ஸாரி மம்மி! நான்தான் வீட்டிலில்லையே....!" என்றாள்.

அறைக்குள் புகுந்த சாவித்திரி கண் சிமிட்டும் நேரத்தில் தன்னை டாக்டராக மாற்றிக் கொண்டு வெளியே வந்தாள்.

விடுவிடெனப் படியிறங்கி வேகத்துடன் சென்றவள் கைசொடுக்கும் நேரத்துக்குள் நர்ஸிங் ஹோமை எட்டி விட்டாள்.

இருட்டி வெகு நேரமாகி விட்டது. சாவித்திரியிடமிருந்து எந்த விதத் தகவலும் இல்லை. எந்த நிமிடமும் ஏதாவது தகவல் வரலாமென்பதற்காகத் தொலைபேசி அடியிலேயே காத்துக் கிடந்து அலுத்துப் போன பார்வதம் அப்படியே கண்ணயர்ந்து போகிறாள்.

வைகறைப் பொழுது பால்காரன் அழைக்கும் காலிங் பெல்லின் அலறலோடு கண் விழிக்கிறாள் பார்வதம்.

மகள் இன்னும் வரவில்லை.

மனத்தில் ஏதோ ஒரு நினைவின் நிரடல் அவளுக்குள்ள தெம்பைக் குறைக்கிறது. பாலை வாங்கி வைத்துவிட்டு மீண்டும் படுத்துவிடலாமா என்ற ஆசையோடு திரும்பியபோது எதிரே சாவித்திரி வந்து நிற்கிறாள்.

என்ன இது? தன் எதிரே நிற்பது தன் மகள் சாவித்திரிதானா? களைப்பென்பதே உணராது கடமையின் சிறப்பிலே கண்ணாகப் பணி புரியும் அந்தச் செந்தாமரை முகத்தில் ஏன் உலகத்துச் சோகமெல்லாம் ஒருங்கே குவிந்து கிடக்கின்றன?

சோகம் தோய்ந்த அந்த முகம் ஆஸ்பத்திரியில் என்ன நடந்திருக்குமென்பதைத் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டிவிடுகிறது. தன்னிடம் எதுவும் பேசாது தாண்டிச் செல்லும் மகளுக்கு வழி விட்டு நின்ற பார்வதத்தின் மனம் வேதனையால் பிழிபடுகிறது.

மனத்தான் இருள் சூழ்ந்த நிலையிலேயே அன்றைய பகல் பொழுது தேய்கிறது.

மாலைப் பொழுது —

வழக்கம்போல் டெலிபோன் மணி கிணுகிணுக்கிறது.

கட்டிலில் படுத்திருந்த சாவித்திரி தாயாரை அழைத்து, டாக்டர் சாவித்திரி வெளியே போயிருப்பதாகச் சொல்லச் சொல்கிறாள்.

தாயார் பேசி முடித்ததும் சாவித்திரி கட்டிலை விட்டிறங்கி அவசரம் அவசரமாக உடை மாற்றிக் கொள்கிறாள். 'டியூட்டிக்குப் புறப்பட்ட மகளிடம், 'டாக்டர் மனோகர் வந்தால் என்ன சொல்ல வேண்டும்?' என்று கேட்ட பார்வதத்திடம் ஒரு கடிதத்தைக் கொடுக்கிறாள்.

வெளியே காரின் ஹாரன் சப்தம் கேட்கிறது.

டாக்டர் மனோகர் வந்து கொண்டிருக்கிறார். சாவித்திரி வழக்கமான பாதையை விட்டு எதிர்ப்புறத்துப் படி வழியாக இறங்கி நர்ஸிங் ஹோமை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறாள்.


"ஹலோ சாவித்திரி..." என்ற செல்லக் குரலுடன் உற்சாகமாக வந்து நின்ற மனோகரிடம் மகள் கொடுத்த கடிதத்தைக் கொடுக்கிறாள் பார்வதம்.

பரபரப்புடன் பிரித்துப் படித்த டாக்டர் பிரமித்து நிற்கிறார்.

"மதிப்புக்குரிய டாக்டர் மனோகருக்கு,

தங்களை டாக்டராக மதித்துப் போற்றவே விரும்புகிறேன். தங்கள் விருப்பப்படி தங்கள் வாழ்க்கையில் பங்கு கொண்டு தங்களை மகிழ வைக்கும் தகுதி எனக்கில்லை. என்னிலும் தகுதி வாய்ந்த வேறொரு பெண் தங்களுக்குக் கிடைக்கலாம்.. என்னை எதிர் நோக்கிக் காத்து நிற்கும் நோயாளிகளுக்கு என் முழு நேர உழைப்பும் தேவை. இதை நேற்றைய சம்பவம் உணர்த்தியதன் விளைவாகவே இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். வழக்கம்போல் சக டாக்டர் என்ற முறையில் நமது நட்பு தொடரும்..."

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10


ஸ்வஸ்திக்
பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்
படியாத கேசத்தையும் படியச்
செய்கிறது—நாள் முழுவதும்
மழமழப்பாய் வைக்கிறது
நேர்த்தியாக வாரிவிடப்பட்ட
கவர்ச்சி மிக்க கேசம்...
கண்ணைக் கவரும் பளபளப்
புள்ள கரும் கேசம்—நாள்
முழுவதும் மழமழப்புடன்
திகழச் செய்வது ஸ்வஸ்திக்
பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்.
Shilpi SOM 24 Tam
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

